# A HISTORY OF ARAMBOLY

AND

# MEENAKSHISUNTHARER

TEMPLE.


BY

R. PADMANABHA PILLAI,

LECTURER IN HINDUISM.



*Published by*

SRI CHITRA VILAS LIBRARY.

1943



*Copyright to the publishers.*


**Price Rs. 2—0—0.**

# ஆரைவாய்மொழி வரலாறும், மீனாக்ஷி சுந்தரர் கோயிலும்.

ஆசிரியர்:

**ஆர். பத்மநாப பிள்ளை,**

இந்துமதப் பிரசங்கியார்.

ஸ்ரீ சித்திரை விலாச நூலக வெளியீடு.

No. 1.

1943.

பதிப்புரிமை நூலகத்தார்க்கு]

[விலை ரூ. 2-0-0



ஸ்ரீ சித்திரைத்திருநாள் பாலராமவர்ம மன்னர்பிரான் 32-ாவது பிறந்த நாள் விழாவில் இந்நூல் அரங்கேற்றி வெளியிடப்பட்டது.

---

28-10-1943.] [11-3-1119

## பொருளடக்கம்.


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பெயர் | 1 |
| 2. | அமைப்பு | 5 |
| 3. | பழமையும் படையெடுப்பும் | 9 |
| 4. | கோட்டை | 18 |
| 5. | விசேடங்கள் | 22 |
| 6. | தருமங்கள் | 35 |
| 7. | கோயில்கள் | 48 |
| 8. | மக்கள் | 54 |
| 9. | முப்பந்தல் | 68 |
| 10. | மார்த்தாண்டப்பிள்ளை வலிய எஜமான் | 79 |
| 11. | அகலிகையூற்று ஆதிமுத்தானந்தசுவாமிகள் | 85 |
| 12. | சித்தர்கிரி (செக்கர்கிரி) | 90 |
| 13. | பக்த தேவசகாயம்பிள்ளை | 94 |
| 14. | பெருமைக்குரிய பிரமாணங்கள் | 108 |
| 15. | ஆலவாய்ப் பெருமை | 122 |
| 16. | சிவபெருமான் | 127 |
| 17. | மீனாக்ஷி திரு அவதாரம் | 131 |
| 18. | பராசக்தி | 141 |
| 19. | விநாயகர் | 147 |
| 20. | சாஸ்தா | 151 |
| 21. | முருகன் | 159 |
| 22. | தற்கால மத அபிவிருத்தி | 165 |
| | அநுபந்தம் | 191 |

# சமர்ப்பணம்.

நேரிசை வெண்பா.

பாதம் பணிந்தேன் பலகாலும் பூசித்தேன்
ஏதமகற்றி யெமைக் காப்பாய்—மாதங்கி!
ஞானதி நல்கியதால் நான் வரைந்தேன் இந் நூலை
மீனாக்ஷி சுந்தரனார் மீது.

## ஆசிரிய விருத்தம்.

ஆரை நகரில் அழகாக
அமைந்த எங்கள் தெய்வங்காள்!
சீரை யெல்லாம் தெரிந்தவரை
செய்தேன் நுந்தம் அருளாலே
நேரை மறந்தேன்; நெறி தப்பி
நின்றேன் அடியேன் தொழுகின்றேன்;
உனைக் குறித்த சரிதமிதை
உங்கள் திருமுன் வைக்கின்றேன்.

மீனாக்ஷி சுந்தரர் அடிமை.
ரா. பதுமநாப பிள்ளை.

# மதிப்புரை.

ஆரைப் பதியின் அரிய சரிதமிதை
யாருமே கற்க இனிதுரைத்தான்—சீரிய
தண்டமி ழாசிரியன் சைவசம யத்தொண்டன்
பண்டிதன் பத்மநா பன்.

புத்தேரி }
24-8-1943 }

கவிமணி
**எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை.**

---

கோட்டாறு
**மகாமதி சதாவதானி**
**கா. ப. செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள்**
இயற்றியது.

---

தாய்மொழிக்கே யார்வந் ததும்பத் தமிழாரை
வாய்மொழிக்கே தொன்னூல் வகுத்தனன்காண்—
[ஆய்மொழிக்கே
சான்றோரு மெச்சுதகை சால்பதும நாபனெனும்
வான்றோய் புகழோன் மதித்து.

"Sapere Aude"
"உயர்வுள்க"

**S. S. Bharati** M. A. B L.
Advocate.

MALAYAGAM
Pasumalai
South India

திருவாளர் பத்மநாபபிள்ளை அவர்கள் எழுதிய "ஆரைவாய் மொழி" வரலாற்றைப்படித்தேன். ஆரும்புழை எனவும் ஆரும் பொழி எனவும் வழங்கும் ஊரின் இலக்கியப்பெயர் "ஆரைவாய் மொழி" அல்லது "ஆலவாய்மொழி" என்றிருத்தல் வேண்டு மெனக் காட்டப்படுகிறது.

இது தென்பாண்டிக்கும் தெற்குத் திருவாங்கூருக்கும் இடை எல்லையாகவும் சுங்கசோதனைத் தலமாகவும் இருந்து வருகிறது. இவ்வூர் பழைய சமய சாத்திரங்களும் புராணக்கதைகளும் தனக்கு உரியனவாகப்பெற்று தமிழ் சைவம் இரண்டிற்கும் சிறந்த தொடர் புடைய பழைய ஊராகத்தெரிகிறது. நல்ல அருஞ்செயலாற்றிய பெருந்திறலோர் பெருந்தகையினர் பலருக்குத் தாயகமாகவும், தங்குதலமாகவும் இருந்திருக்கிறது. இன்னும் தமிழ் இயக்கங்கள் முன்னேற்ற முயற்சிகளுக்கு ஊக்கமூட்டிவரும் சிறப்புடையதா யிருந்து வருகிறது. இவ்வூர்ப்பழைய வரலாறுகளை எல்லாம் கல் வெட்டு, அரசாங்க ஆவணங்கள், பழம்பாட்டுக்கள் போன்ற தக்க ஆதாரங்களைத் துருவித் தொகுத்து ஆராய்ச்சி முறையில் தெளிவாகஎழுதியுள்ள இந்தநூலை அவ்வூர்ச் **சித்திரைவிலாசப் புத்தகசாலைக் கழகத்தார்** வெளியிட்டது மிகவும் பொருத்த முடைத்து. இதைத் திருவாங்கூர் அரசாங்க அதிகாரிகள் பள்ளி **மாணவருக்குப் பாடம் வைத்தும்** அரசியல் புத்தகசாலைக ளுக்குவாங்கியும், தமிழ்மக்கள் வாங்கிப்படித்தும், ஆக்கிய பத்மநாப பிள்ளை அவர்களை ஊக்கி, இன்னும் பலநூல்களை எழுதி உபகரிக்கத் தூண்டுவார்களென நம்புகிறேன். அவர்களுக்குப் பல்லாண்டு கூறுகிறேன். நூல் நிலயத்தையும் வாழ்த்துகிறேன்.

S. S. Bharati.

Vidwan R. Padmanabha Pillai, the author of the present book is well known as an ardent preacher of the Saiva Siddantha system of religion and philosophy. He is an able speaker, as well as writer in Tamil and his prose style is simple, chaste and elegant. It is remarkable that he can command the Malayalam language also with equal facility, vide, his highly useful compendium, called "A Text Book on Hinduism" which has won the approbation of some eminent authorities.

The opening pages of this book deal with stone inscriptions that probably escaped the view of the archaeological department or were not yet dealt with by it, and therefore their publication reflects much credit on the author for his deligence in collecting and interpreting them for the benefit of the public. It goes without saying that they, as well as the old Ola records to which he adverts later on, are all informative and throw a flood of light on the state of society and customs and manners of the times to which they have reference.

The chapter on Vellalas is full and interesting as far as it goes, and it gives a graphic description of the habits, customs and manners of the Vellalas, and of their original settlement in the country. Then follow the legends regarding Muppandal, Kali, Marthanda Pillai (Valia Yajamanan), Adi Muthananda Swamigal, Siddargiri, Meenakshi Amman, Parasakthi etc., which are all told with prestine simplicity and faithfulness, and would certainly be interesting to the general reader. The terrible and pathetic story of the

christian martyr, Bhaktha Devasagayam Pillai, which finds some parallel in the persecution and martyrdom of Christ, is here narrated in all its sombre detail, and if true, cannot but deeply stir the heart of every reader.

Finally, his observations on the present condition of the Hindu religion, and the urgent need for its spread and expansion on proper and methodical lines, are all pertinent and useful. His treatment of the subjects of idols, temple worship, Bhakthi, etc., contain valuable hints and suggetions that will please and satisfy the thoughtful reader.

I may be permitted to remark here that the correct, original form of the word "Aruvamozhi" or "Araivaymozhy" seems to have been "Aralvaimozhi" gradually corrupted into its present form as the word "Aral" in Tamil means a chain of mountains. The word thus originally meant "A way in the midst of a chain of mountains", in other words, a pass in the Ghats. No other interpretation is so appropriate, and it is quite conceivable that the word 'Aral', in common parlance must have easily passed into its colloqual form of 'Arai' or "Aru".

On the whole, there is no doubt, and it is gratifying to find that Mr, R. Padmanabha Pillai has turned his long stay in 'Aramboly' to very good account and has given us a mass of valuable information on the historic village of Aramboly and also incidentally on the early history and condition of Nanjinad itself, which is likely to

prove interesting to the common reader and important to the general history of Travancore, for which he deserves the genuine thanks of all Travancoreans.

**T. Lakshmana Pillai, B. A.**
Isai Tamil Chelvar
Major Treasury Officer (Retd.)

Trivandrum,
27—8—1943.

---

# முகவுரை.

---

எனது நண்பர் ஆர். பத்மநாபபிள்ளை அவர்கள் வெளியிட்டிருக்கும் ஆராய்ச்சிநூல் தமிழர்கள் அனைவரும் கற்றறிந்து இன்புறவேண்டிய நூலாகும். ஏனெனில் இது "ஆரைவாய்மொழி" என்னும் ஒரு சிற்றூரின் சரித்திரம், என்று கருதுவதற்கு இடமில்லை. நானும் இத்துறையில் இறங்கிக்கொஞ்சம் வேலை செய்தவனானபடியால் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தென்கிழக்கு மூலையில் ஒதுங்கிக் கிடக்கும் ஒரு சிற்றூரின் சரித்திரம் மாத்திரந்தான் என்று எண்ணுவதற்கிடமில்லை. இந்நூலில் நாஞ்சிநாட்டின் சரித்திரமும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் சரித்திரமும் கலந்து வந்திருக்கின்றது. இதோடு மாத்திரமல்ல; தென்திருவிதாங்கூர் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள் அவர்களது பண்டை உயர்நிலை இவைகளையெல்லாம் விரிவாகவும் அழகாகவும் இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.

சரித்திர ஆராய்ச்சிக்கு இம்மாதிரி நூல்கள் இன்றியமையாதனவாகும். ஏனெனில் இருக்கக்கூடிய ஓலைகளை நாம் பார்வையிட்டு ஆராய்ச்சி செய்து விளக்கிக்காட்டி வெளிப்படுத்தாது போவோமாகில், தமிழர்கள் திருவிதாங்கூரில் இருந்தவர்கள் இந்த சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கும் ஏனையோரைப் போன்ற உரிமைகள் உண்டு என்று சொல்வதற்கோ, நிலைநாட்டு

வதற்கோ தக்க சான்றுகள் இல்லாமல் போய்விடும். இருக்கும் கல்வெட்டுக்களை விளக்கிக்காட்ட முடியாமலும் போக நேரும். ஓலைகளும் அழிந்துபோய் விடக்கூடும். ஆகையினால் இந்நூலானது சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு இன்றியமையாத ஆதாரம் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

மேலும் "ஆராம்பொழி" என்று இதுகாறும் வழங்கிவந்த ஒரு சிற்றூரிலிருப்பவர்கள், முதன்முதலாக தமது ஊரின் புராணத்தையும் சரித்திரத்தையும் இப் புதியமாதிரியில் வெளியிட வேண்டுமென்று எண்ணம் கொண்டது மெச்சத்தக்கதாகும்; வியக்கத்தக்கதாகும். வழங்கிவந்த பெயரை மாற்றுவதில் நான் விருப்பங்கொண்டவனல்லேனாயினும், அது நாகரீகம் என்று கருதுகிறவனல்ல என்றிருந்தாலும், அப் பெயரின் உற்பத்தி என்ன என்பதை அறிய ஆவலுண்டு. எனக்கு மாத்திரமல்ல; பல நண்பர்களுக்கும் அது ஏற்பட்டிருக்கக்கூடும். அதைக் குறித்து மிக நுட்பமாக ஆசிரியர் ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள். ஆயினும் இனிமேல் இந்த நூலைப்படித்த பிற்பாடு, பழைய ஆராமொளிக்காரரைக்கண்டால், அவர்கள் எந்த ஊர்க்காரரென்று இந்த நூலைப்பார்த்துத்தான், சொல்லவேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டிருக்கின்றது; எப்படிச்சொன்னாலும் சரியாக இருக்குமென்றும் தோன்றுகிறது. அதுபோகட்டும்.

இதுவரையிலும் எனக்குத்தெரியாததும் பலவித ருசிகரமான செய்திகளும் இந்நூலில் அடங்கிக்கிடக்கின்றன. நான் இதற்கு முன்னால் இந்நூலானது சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு முக்கியமான நூல் எனக்கூறினேன். ஆனால், நான் சமீபகாலத்தில் அந்த ஊருக்குச் சென்றிருந்தபோது பல இடங்களையும் சுற்றிப்பார்க்க நேரிட்டது. அப்பொழுது திடீரென கன்னியாகுமரிக்கும் மேல் என்று எனக்கு ஒரு தோற்றம் ஏற்பட்டது. அப்பொழுது என்னுடன் இருந்த நண்பர்களிடம் நான் நினைத்ததை வெளியிட்டேன். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள்; அவர்கள் அந்தஊர்க்காரர்களல்ல. ஆகையினால் அந்த ஊரின் வளங்களையும், அதன் அழகையும், அதன் அமைப்பையும் குறித்துக் கூறியிருப்பது மிகையாகாது.

அதுமட்டுமல்ல; நாஞ்சிநாட்டைச்சேர்ந்த அதிலும் ஆரைவாய் மொழி ஊருடன் பலவிதத் தொடர்பும் உள்ள எனக்கே அந்த ஊரின் அருமை பெருமைகளைக்குறித்து இந்நூலைப் படிக்கும்வரை யிலும் தெரியாமல் இருந்தது. அதிலும் உண்மையிலே பல காரியங்கள் ஒற்றுமைப்படுத்திப்பார்க்கும்போது கன்னியாகுமரிக் கும் மேல் என்று கருதலாம். இவ்வித உண்மைகளையெல்லாம் ஊரார் வெளிப்படுத்த முயன்றது ஒரு உயர்ந்த பணியாகும். இம்மாதிரி வேறு எந்த ஊரிலும் இவ்வித அழகான வேலையில் ஈடுபட்டிருப்பதை நான் அறிந்ததில்லை. ஆயினும் இவ்வளவு அமைப்புடன் சிறந்து வாய்ப்புற்றிருக்கின்ற ஒரு ஊரைக்குறித்து என்போன்றவர்களுக்குக் கூடத் தெரியாமல் இருக்கக் காரணம் என்னவென்றால், அங்கு அமைந்த சுங்கம் (Customs) வாங்கும் ஏற்பாடாகும். வருகிறவர்களும், போகிறவர்களும் எப்பொழுது ஊரைவிட்டுப் போகலாம் என்ற எண்ணங்கொண்டவர்களாகவும் அதன் அழகை இருந்து அனுபவிக்கக்கூடிய எண்ணம் இல்லாத வர்களாகவும் பொதுவாக இருக்கலாமோ எனத் தோற்றுகிறது. ஆயினும், ஊரின் பெயரை மறந்துவிடமாட்டார்கள். ஆகையினால் ஊரார் சுங்கமட்டுமல்ல, வேறு அநேக விதத்தில் தங்களூர் சிறப்புற்றிருக்கின்றது என்று காட்டமுயன்றது போற்றத்தக்கதே.

ஆக்கியோன் முயற்சியைக்குறித்து இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியவில்லை. முதலாவது, இந்நூலானது பழைய காலபுராணங்கள்போல் அல்லாது, புதுமாதிரியில் அமைக்கப் பெற்றதாகும். அதுவே கஷ்டமான காரியமாகும். முன்மாதிரி இல்லாது புதிதாக ஒரு வழி கண்டுபிடித்து ஒரு நூலை இயற்று வது மிகவும் கடுமையான வேலையென்று சொல்லவேண்டியதில்லை.

இரண்டாவது இவ்வூரைப்பற்றி எவ்வெவ்விடங்களிலெல்லாம் மேற்கோள் காணுகின்றதோ, அவைகளையெல்லாம் தேடிப்பிடித்து ஒரு நூலுக்குள் சுருக்கமாக அமைப்பது அருமையான வேலையன்றோ?

மற்றொன்று, ஆசிரியரது நடுநிலைமை. இம்மாதிரி நூல் எழுதப் பலவிதத் திறமை வேண்டும். முதலில் உதவிசெய்யக் கூடிய ஊராரைப்புண்படுத்தக் கூடாது; அன்றியும் ஊருக்கு

வேண்டிய காரியங்களையும் ஊரார் செய்யவேண்டிய காரியங்களையும் சொல்லவேண்டிய முறையில் சொல்லவேண்டும்; அவைகளையெல்லாம் அந்தந்த இடங்களில் ஆசிரியர் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அதோடு பொதுமக்கள் அறியவேண்டியதையும் மிகைபடாமல் நியாயமான முறையில் அழகுபட எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

அரசாங்கத்தார் ஊரைக்குறித்து அறியவேண்டியவைகளையும், குறைகளையும் அவ்வப்போது இடையிடையே எடுத்தாண்டிருக்கிறார்கள்.

இந்துமதப் பற்றுடையவர் ஆதலாலும், அதிலும் மதசம்பந்தமாக மிக ஆராய்ச்சியுடையவர் ஆதலாலும் ஊரில் இருக்கும் விசேடங்களையும் விரிவுபட எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள்.

ஆகையினால் இந்நூலை வெளியிட்ட ஊரார்க்கும் அந்தப் பணியை மிகத்திறமையுடன் வியக்கத்தக்க விதத்தில் இயற்றி முடித்த ஆசிரியர் ஆர். பத்மநாபபிள்ளை அவர்கட்கும் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்நூல் பள்ளிக்கூட மாணவ மாணவிகள், முதிர்ந்தோர், இளையோர், தமிழ்மக்கள் அனைவரும் போற்ற வேண்டியதாகும். மேலும் ஒவ்வொரு ஊரிலும் இம்மாதிரி நூல் வெளிவருமென விரும்புகிறேன்; எதிர்பார்க்கிறேன்.

**பி. சிதம்பரம் பிள்ளை, B. A. B.L.**
Advocate Ex. M. L. C.
சைவசித்தாந்தக் கழகத்தலைவர்.

நாகர்கோவில்
30-8-1943.

# பதிப்புரை.

வஞ்சி நாட்டின் தென்பால், குமரிமுனைக்குப் பத்துக்கல் தொலைவில், மேற்குமலைத் தொடரின் தென் அற்ற, கணவாயில் அமைந்தது இவ்வூர். பலபொழுதும் நேர்ந்த, படையெடுப்புகளின் பயனால் இவ்வூர் மக்கள் கல்வி, செல்வ நிலைகளில் வளங்குன்றியே வாழலாயினர். அந்நிலை போக்கும் நோக்கொடு நமது காருண்ய மன்னர்பெருமான் முடிசூட்டுவிழாவின்போது இவண் இந்நூல் நிலயம் காணப்பட்டது. நிலய வாயிலாய்பபல சீர்திருத்தத்தொண் டுகளும் நடைபெறலாயின. "சரித்திரம் மக்கள் மனதை மாற்றும் ஓர் சக்கரம்" எனும் அறிஞர் மொழி உளம் கொண்டு ஆரைவாய் மொழி சரித்திரம் ஒன்று வெளியிட நினைந்தோம்.

அதனை எங்கள் ஊர் பாடசாலைத் தலைவரும், தென் இந்திய இந்துமத சொற்பொழிவாளரும்; "சுயோதனன்" இந்துமத பாட புத்தகம்" இந்நூற்களின் ஆசிரியருமாகிய, உயர்திரு R. பத்மநாப பிள்ளை அவர்களிடம் வேண்டிக் கொண்டோம். அவர்களும் அன்புடன் எங்கள் வேண்டுகோட்கு இயைந்தனர். ஓராண்டாகப் பல்லிடமும் சென்று தேன் சேர்க்கும் வண்டினைப்போல் வரலாற் றினைத் தொகுத்து இனிய தமிழில் விழுமிய நூலாக யாத்து உதவினர். இந்தியாவிற்கு கைபர் கணவாயும் இற்றாலிக்கு பென்னர் கணவாயும்போல் திருவிதாங்கூருக்கு ஆரைவாய்மொழிக்கணவாய் அமைந்தது, என அரிய சான்றுகளுடன் எடுத்துக் காட்டிய அன்னாருக்கு, எழுமையும் எங்கள் அன்பெனும் அணியை அணி யாக அணிவதல்லால், வேறு யாது செய்யவல்லோம். அவர்கள், உலகுவப்ப இன்னும் பல நூற்களை இயற்ற அளவற்ற ஆயுளையும் குறைவற்ற செல்வத்தினையும் அளிக்க மீனாக்ஷிசுந்தரரைப் பன் முறை வேண்டுகின்றோம்.

போர் நிகழும்காலம் என்பதையும் தம் உள்ளத்தில் கொள் ளாது, ஊர்நலம் ஒன்றினையே உயர்வெனக்கொண்டு, இவ்வெளி யீட்டிற்கு வேண்டிய பொருள் அளித்து, உதவிய சமுதாயத்தார்க் கும், மற்றவர்கட்கும் எங்கள் நன்றி என்றும் உரித்தாகும்.

நூலினை அழகு செய்யும் அழகிய புகைப்படங்கள் எடுத்து தவிய அன்பர் N. C. குற்ருலம் அவர்கட்கும், குறித்த காலத்தில் கண்கவர் வனப்புடன் அச்சாக்கித்தந்த எம். எஸ். எம் அச்சகத் தலைவர் அவர்கட்கும் மனமார்ந்த நன்றி கூறுகின்ரேம்.

இந்நூற்பொருளை எடுத்தாளும் உரிமை, இந்நூலாசிரியர்க்கு மாத்திரமே அளிக்கப்பட்டுள்ளது.

நூலின் பெயர் ஆரைவாய்மொழி வரலாறெனினும், பொதிந்த பொருள் தென்னிந்திய சரித்திர வரலாறுகும். ஆகவே தென்னிந்தியர் யாவரும் சிறப்பாக திருவிதாங்கூர் மக்கள் ஒவ்வொருவரும் தம் தம் இல்லங்களில் அமைக்கவேண்டிய சரித்திர நூலாகும். ஆயின் ஆரைவாய்மொழி மக்களோ எனின் ஆண்பெண் இருபாலாரும் மனப்பாடம் செய்து தம் உரிமைப்பொருளென உவகை உறல் வேண்டும். ஆகவே அன்பர்கள் யாவரும் இந்நூல் தரும் பயன் பெற்று எங்கள் உழைப்பிற்கு ஊக்கமளிப்பார்களாக.

ஆரைவாய்மொழி 15—1—119 } ஸ்ரீ சித்திரைவிலாஸ் நூல் நிலயத்தினர்,

ஓம்

# முன்னுரை.

மீனாட்சியம்மன் கோயிலின்கண் யாதேனும் ஓர் தொண்டியற்ற வேண்டுமென்றெண்ணினேன். எண்ணியபோது ஆலயத்தையும் அதனால் சிறப்புறும் ஊரையும் பற்றியநூல் ஒன்று வெளியிட வாய்ப்பு நேர்ந்தது. சரித்திர சம்பந்தமாயும், சமய சம்பந்தமாயும் நாஞ்சிநாட்டில் ஓர் சிறந்த ஸ்தானம் இவ்வாரை நகர்க்குளது. மிகப்பழைய ஊராதலால் வெளிவந்ததும் வராததாயுமுள்ள பற்பல கல்வெட்டுக்களும், ஓலைப்பத்திரங்களும் கிடைத்தன. ஆரையூர்ச் சரிதம் நாஞ்சிநாட்டுச் சரித்திரமே, மட்டுமல்ல திருவாங்கூர் சரித்திரம் என்று கூறுதற்குந் தடையில்லை. மீனாக்ஷி சுந்தரர்

கோயிலோ சேர சோழ பாண்டிய நாட்டிற்குச் சொந்தம். ஆகவே இந்நூலானது திருவிதாங்கூருக்கும், சென்னை இராஜதானி மக்கட்கும் பொது நூலாகும்.

நம் பாரத நாட்டிலே ஓர் ஊரின் சரித்திரம் எழுதுவது எளிதல்ல. ஏனெனில் நம்முன்னோர் தத்தம் சரிதம் எழுதிவைக்கும் வழக்கமில்லை. தங்கள் முப்பாட்டன் பெயர்கூடப் பலருக்கும் தெரியாது. கன்னியாகுமரியில் உவாநாட்களில் தர்ப்பணம் செய்யும்போது குருக்கள், பாட்டனார் முப்பாட்டனார் பெயரைச்சொல்லி நீர்வார்க்கச்சொன்னால் இந்துக்கள் பலரும் பெயர் தெரியாதென்பர். இத்தகை தமிழ்நாட்டு மக்கள்வசிக்கும் ஊரைப்பற்றி எவ்விதம் சரிதம் எழுதவியலும்? பல கர்ணபரம்பரை வரலாறுகளையும் பழைய நூற்களில் உள்ளவற்றையும் கிடைத்த கல்வெட்டு ஓலைப்பிரமாணங்கள் முதலிய ரிக்கார்டுகளையும் வைத்து ஒருவாறு எழுதலானேன். முற்றிலும் சரியென்று கூறவியலாது. சிலர் சரித்திரம் மட்டும் அவசியம் என்பர். சிலர் சமயப்பகுதி மட்டும் அவசியமென்பர். இரண்டும் சரியல்ல, இருபொருளையும் கலந்தெழுதலே தகுதி.

இது புதிய முறையிலுள்ள நூலாகும். சில செய்யுட்களும் உரை நடையும் விரவப்பெற்றது. பல்லாயிரம் ரூபா செலவு செய்து தமிழ் மக்கள் கோயில் கட்டியிருக்கின்றனர். எப்படிக் கும்பிட வேண்டும்? என்ன மந்திரம் சொல்ல வேண்டும்? அக்கோயிலிலுள்ள தெய்வங்களின் விசேடங்கள் என்ன? பக்தி என்றால் என்ன? விக்கிரகங்களின் பெருமை என்ன? இவையைப் பற்றி ஒன்றும் தெரியாது. தெரிய முயற்சிப்பதும் இல்லை. சிறப்பாக நம் தாய்மார்களுக்கு இத்தகைய அறிவே இல்லை.

பெண்தெய்வம், திருக்கலியாணம் முதலியவைகளைப்பற்றி இக்காலத்தில் பலர் குறைகூறினால் பதில் சொல்லத்தெரியாமல் நம்மவர் விழிப்பார்கள். பொதுமக்களும் இதனைப்படித்து நம் சமய அறிவைப்பெறவே இந்நூல் எழுதலானேன், நாளடைவில் இவ்வாராதனையில் மாற்றம் செய்ய வரும்போது இவ்வறிவு மிக்க பயனளிக்கும்.

பலவூர்களுக்கும் தலபுராணங்கள் உண்டு. அவை கடின செய்யுள் நடையிலானவைகளே. சரித்திர ஆதாரங்களையும் மக்

களையும் பற்றிக் கூறுவதில்லை. மூர்த்தி தலம் தீர்த்தங்களை மட்டும் விளக்குவர்.

இவ்வூரார் அனைவருக்கும் இந்நூல் வெளியிடுவதில் உற்சாக முண்டு, அவ்வுற்சாகம் சிறந்த தேசாபிமானத்தைக் காட்டுகின்றது.

ஸ்ரீ சித்திரைவிலாச நூலகத்தாருக்கு இதன் பதிப்புரிமை அளிக்கப்பட்டது. பொறுப்பேற்ற நூலகத்தாருக்கு எனது வணக்கம் உரித்தாகுக.

பிரமாணங்கள் தந்த பெரியார்களுக்கும், பொருளுதவிசெய்த பெரியார்களுக்கும் முகவுரை எழுதிய நாஞ்சிநாட்டின் திலகம், ஆராய்ச்சி வல்லார், வழக்கறிஞர் உயர் திரு பி. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கும் மதிப்புரையளித்த கவிமணிகளிலும் சிறந்த சிந்தாமணியாம் உயர் திரு எஸ். தேசிகவிநாயகம் பிள்ளையவர் களுக்கும், கல்லையும் உருக்கும் இசைத்தமிழ்ச் செல்வர் உயர் திரு தி. லக்ஷ்மணன்பிள்ளை யவர்களுக்கும், தமிழ்ப்பணியே தலை யெனக்கொண்டு அல்லும் பகலும் ஆராய்ச்சித் துறையிலுழைக்கும் தமிழ்ப் பேராசிரியர், வழக்கறிஞர் உயர் திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கட்கும், சதாவதானி, மகாமதியன், தேவாமிர்தப் பிரசங்கக்களஞ்சியம் உயர் திரு செய்குத்தம்பிப் பாவலர் அவர்கட்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆரைவாய்மொழி
15-8-1943

R. பதுமனுப பிள்ளை.

# கடவுள் வணக்கம்.

### 1. கணபதி

மெய்நின்ற விநாயகனே மேன்மையைச்
செய்தவனும் மேலாம் தெய்வம்;
பொய்கையார் விநாயகனே புகழீந்து
வினைநீக்கிப் போதம் நல்கும்;
செய்வனவும் சிறப்பாக்கி திவியகுல
சேகரனார் செம்மை சேர்ப்பார்;
உய்வழியாம் நாமெல்லாம் ஒன்றுசேர்ந்து
உயர்பாதம் உள்க வேண்டும்.

### 2. மீனாக்ஷி சுந்தரர்

ஆறாத செல்வமெல்லாம் அருளுடனே அளித்திடுவாய்
வாறாளும் போகமதும் வழிபடுவோர்க் கருளுவையே
தேனார்பூங் காநிறைந்த திருவாரைப் பதிவிரும்பும்
மீனாக்ஷி சுந்தரரை மிகுமனபால் வணங்கிடுவோம்.

சோம சுந்தரன் மீனக் கண்ணியள்
காமன் வென்றவன் ஞான வடிவள்
நாமம் நவில்க தானம் தந்தவள்
சேமம் சேரலாம். ஊனம் தீர்ப்பளே.

### 3. ஐயனார்

என்பாட்டை வினவிடிலோ எவ்வளவோ குறைகளுண்டு
உன்பாட்டை உரைத்துவிட்டால் உலகமெங்கும் புகழாமே
அன்பார்ந்த திருவுள்ளத் தையனவன் மலரடிகள்
வன்பாலே மறந்தடியேன் வழிதப்பிக் கிடந்தேனே.

### 4. மாடன் தம்பிரான்

வடைமாலை போட்டு வணங்குகின்ற மக்கள்
கிடையாத எப்பொருளும் கிட்டும் — நடையதிலே
சீடன்போல் சாத்தாவின் சேனைத் தலைவராம்
மாடன் தம்பிரானை வாழ்த்து.

### 5. அகலிகை பூற்று ஆதிமூத்தானந்தர்

மழைவிழவே தவம் கிடந்து மருதநிலம் விளைவித்தார்
குழவிகளின் பிணிகளையே குறைத்துவிட்டார் குருநாதன்
பிழைகளெலாம் பொறுத்தருளி பெருநெறியாம் சிவனெ
[றியை
விழைந்திடவே தமிழகத்தார் விரும்புவன இனிதமைத்தார்.

அகலிகை யூற்றின்கண் ஆனந்தம் கொண்டீர்
நிகரிலா யோகநெறி நேயம் — மிகவே
மருந்தளித்தீர் மக்களுக்கு மாட்சியுரை யீன்றீர்.
அருந்தவனும் ஆதிமுத்தா! ஆள்.

**6. செக்கர் கிரி முருகன்**

சித்தர்கள் சங்கமுடன் செம்மையாய்த்
தாள்வணக்கம் செய்த கோயில்
பத்தர்கள் வெள்ளிதொறும் பாங்குடனே
காவடிப்பா பாடும் கோயில்
இத்தரையில் யோகநெறி ஏகாந்தம்
கூடுவோர்கட் கின்பக் கோயில்
பெத்தநிலை நீக்கியருள் முத்திநிலைப்
பேறளிக்கும் செக்கர் கோயில்.

**7. தோவாளைக் கிருஷ்ணன்**

நாவாரக் குறைபலவும் நவின்றபெரும் சிசுபாலன்
பாவாணர் பழித்துரைத்த படுபாவிக் கஞ்சனொடு
மேவாரை யழித்துவிட்டான் மிகுமாற்றல் கண்ணபிரான்
தோவாளை நகரின்கண் துலங்கியருள் செய்தவனே.

**8. முப்பந்தல் இசக்கியம்மன்**

முப்பந்தலில் வீற்றிருந்தாள் முத்தமிழார் ஒளவையார்
வெப்பந்தான் தீர்த்தருளும் மெய்யுடையாள் — இப்பதியார்
எண்ணும் பொருளளிப்பாள் ஏற்ற புகழளிப்பாள்
திண்ணம் இதனையே தேறு.

வீறுடைய இசக்கியம்மன் வினைகளையே அறுத்திடுவாள்
மாறுபடும் மனிதர்களின் மமதையை வகிர்ந்திடுவாள்
ஆறிவரம் அளித்திடுவாள் அகந்தூய அடியவர்க்கு
தேறுங்கள் கருணையுள்ள தெய்வமிவள் தொழுதிடுவோம்.

**9. தேவசகாயம் பிள்ளை.**

சத்தியமாம் வேதத்தைச் சார்ந்துநின்ற காரணத்தால்
எத்தனையோ இன்னல்கள் ஏசுவைப்போல் நீர் பொறுத்தீர்
உத்தியோகம் வேண்டாமல் உயர்ஞானி யானவரே
நித்தியமாம் வாழ்வெல்லாம் நேயமுடன் தந்திடுவீர்.

**10. மார்த்தாண்டபிள்ளை வலிய யஜமான்.**

உலகுபுகழ் மார்த்தாண்ட உயர்ந்தகுண மன்னவரும்
நலமுடைய போர்த்தலைவர் நயமெல்லாம் மெச்சிவிட்டார்
பலமுறுகல் கோட்டையும் பல வாகக் கட்டிவைத்தார்
வலிய யஜ மான்பாதம் வரிசையுடன் வாழ்த்திடுவோம்.

ஆசிரியன்.

# ஆரைவாய்மொழி வரலாறும் மீனாக்ஷி சுந்தரர் கோயிலும்.

"மீனாக்ஷி சுந்தரர் மெல்லடி போற்றி"

## ஆரைவாய்மொழி வரலாறு

### அத்தியாயம் 1.

### பெயர்.

ஆரல்வாய்மொழியெனும் பெயர்:— இவ்வூருக்குப் பல பெயர் கூறுவர். அவற்றை ஆராய்வோம். ஆரல் = மதில், கோட்டை வாயிலிலிருக்குமிடம். அரன்வாழ்மொழி—சிவபெருமான், சாத்தா முதலிய தெய்வங்கள் வீாழ்கின்ற இடமென்பர். அரண்வாய்மொழி அரண் = கோட்டை, மதில், மலை எனப் பலபொருள் படும். கோட்டைவாயிலின் வழியென்றும் கூறலாம். மலைவாய் (கணவாய்) வழியிலிருக்கும் ஊர் என்றும் சொல்லலாம்.

ஆரல்வாய்மொழி:— பண்டு பாண்டியிலுள்ள படைவந்த காலத்துத் தீர்வைத்தலமாதலாலும், கோட்டைவாயிலாதலாலும் வெளிநாட்டாரை அறிய ஓர் வாய்மொழி வாக்கியம் சொல்ல வேண்டுமாம். "ஆரைவாய்மொழிக் கோட்டையிலே உழக்காழாக்கு நெல்லுக்கு ஏழு வாழைப்பழம்" என்று வரக்கூடியவர்களை சொல்லச் செய்வதில் அவர்கள் 'ழ' சரியாகச் சொல்லாமல் "ஆறுவாமொளிக் கோட்டையிலே உளக்காளாக்கு நெல்லுக்கு ஏளு வாளைப்பளம்" என்று கூறுவதில் வெளிநாட்டாரென்றறிந்து கோட்டைக்கு உள்ளே விடாமலிருந்தார்களாம். இது சுங்கத் தலமாகும். அப்போது படைகள் பலவந்து குழப்பம் உண்டுபண்ணும் காலமாயிருந்ததால் இவ்வாறு சோதித்தனர் போலும். இது எவ்வளவு உண்மையென்று நிச்சயிக்க வியலவில்லை. பகைவர்களையறிய இதுவும் ஓர் வழிதான்.

ஆலவாய்மொழி:— மதுரை மீனுக்ஷியும் சோமசுந்தரமூர்த்தியும் முப்பந்தலிலும் பின்னர் இவ்வூரிலும் எழுந்தருளியிருப்பதாலும், ஆதியிடமாகிய மதுரைக்கு ஆலவாயென்ற பெயரே பிரசித்தமானதாலும் இங்கும் அப்பெயரே நிலைத்தது. மதுரையாகிய இவ்வூருக்கும் பெயர் அமைந்தது நியாயமே. சிதம்பரம் மேலைச் சிதம்பரம் என்பதுபோல் வட மதுரை, தென் மதுரை, மேற்கு மதுரை என மூன்ருயிற்று.

மதுரையூரை அமைக்கப் பாண்டியன் சிவபிரானிடம் வேண்டவே, அவர்தம் உடம்பிலணிந்திருந்த பாம்பை ஏவி நான்கு எல்லைகளும் காட்டிக்கொடுக்கச் செய்ததால் ஆலவாயாகிய பாம்பு காட்டிய ஊர் ஆலவாய் என்ருயிற்று,

இவ்வூருக்கு ஆலவாய் என்பதும் பொருந்தும். ஆரையென்று சுருக்கிக் கூறுவாருமுளர். எப்படியாயினும் தற்காலம் சர்க்கார் ரிக்கார்டுகளில் ஆரல்வாய்மொழி யென்று பெயர் காணப்படுவதால் அப் பெயரை மாற்ற முயலவேண்டும். இன்னும் பல வாருகவும் கூறலாம். இடச்சுருக்கத்தால் விட்டுவிட்டேன். ஒவ்வொரு ஊருக்கும் பல காரணங்களாலும் பெயர் உண்டாகும். தஞ்சன் எனும்அசுரன்இருந்தவூர் தஞ்சாவூர். இராமன் ஈசுவரனைப் பூசித்த ஊர் இராமேசுவரம். கன்னி தவஞ்செய்யும் ஊர் கன்னிமாகுமரி. இந்திரனைச் சுத்தப்படுத்திய வூர் சுசீந்திரம். இவ்வாறு பற்பல காரணங்களால் ஊர்களுக்குப் பெயர் விளங்கும். எல்லாவற்றிலும் தெய்வப் பெயர் இலங்குமூர் விசேடமன்ரே! அவ்வாறே ஆரைவாய் மொழிக்கு ஆலவாய்என்ற பெயர்தான் மிக்க விசேடம். இதனைப் பிரசாரத்திற்குக் கொண்டுவரவேண்டும். மதுரையில் வந்து தரிசித்துத் தேவாரம் பாடிய சம்பந்தரும், அப்பரும் அவ்வூருக்குரிய பல பெயர்களிலும் ஆலவாய் என்ற பெயரையேபெரிதும் போற்றினர்.

"அந்தமில் புகழ் எந்தை யாலவாய்
பந்தியார் கழல் சிந்தை செய்மினே."
"அம்பொன் ஆலவாய் நம்பனுர் கழல்
நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே."
"ஆலவாயாவது மிதுவே"

"திருஆலவா யான் திருநீறே"
"தென்னாலவாயில் உறையும் எம்மாதியே"

என்று ஞானசம்பந்த சுவாமிகள் பல விடங்களிலும் பாடினர். அப்பர்சுவாமிகளும்"ஐயனே ஆலவாயிலப்பனே அருள்செய்வாயே" "தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே" எனமனமுருகி நவின்றனர். ஆதலால், நாமும் ஆலவாய் என்னும்பெயரை வழக்காற்றில் கொண்டுவருவோமாக.

சாதாரணமாக ஊர்களுக்கு மலை, ஆறு, கடல், பூமி, முதலிய இயற்கையமைப்பினாலும், அரசர்கள், முனிவர்கள், தேவர்கள், தெய்வங்கள் முதலியவர்களின் பெயர்களாலும் பெயர் இடுவர். அதில் தெய்வங்களின் பெயர்தான் மிக்க சிறப்பாகும்.

ஆரைவாய்மொழியெனும் பெயரே பண்டைக்காலம் முதற் கொண்டு வழங்கி வருகின்றது.

கொல்லம் 985-ரமாண்டு வைகாசி மாதம் 32-ரம்தேதி நாஞ்சில் நாட்டு ஆரைவாயமொழியில் வனமூர்த்தி ஆறுமுகத்திற்கு(ஓர் ஓலைப் பிரமாணம் ஸர்க்கார் முத்திரையுள்ளது.)

கொல்லம் 944- ஆவணி 24-ரம் தேதியில் ஆரைவாய்மொழியில் (ஓலைப் பிரமாணம்)

கொல்லம் 926-ல் ஆவணி 31-ல் ஆரைவாய்மொழி (ஓலைப் பிரமாணம்)

தேவஸ்தானப் பழைய ஓலைப் பிரமாணங்களிலும் ஆரைவாய் மொழியென்று காணப்படுகின்றது.

1021-ரமாண்டு வைகாசி 29-ல் ஆரைவாய்மொழியில் நம்பியாருக்கு அகரம் கட்டிக் கொடுத்தனர். (ஓலைப் பிரமாணம்)

அகலிகை யூற்றுக்கல்வெட்டு:— திருவாங்கூர் ஆர்க்கியாலஜிக்கல் ஸீரியஸ் வால்யம் 6-பக்கம் 97-முதல் 99-வரை.

கொல்லம் 872-ரமாண்டு தை மீ 17-ரம் தேதி இரவிவர்மர் மகாராஜாகாலத்திலுள்ளது.

அகலிகையூற்றுக் கல்வெட்டு.

1. நாஞ்சிநாட்டு ஆரைவாய்மொழியில்
2. நல்லகுட்டி ஆண்டாரேன் அகலி
3. கையூற்றங் கரையில் தம்பிரான்
4. இரவிவர்மரான சிறைவாய் மூத்ததம்
5. பிரான் தாணுவுக்குச் சோமவாரம்—

என்று காணும் கல் வெட்டிலும் இவ்வூருக்கு ஆரைவாய்மொழியெனும் பெயர் காணப்படுகின்றது.

ஆரைவாய்மொழி:— ஆரை-மதில், அரண், "ஆரை சுற்று முற்று பாரெலாம்" கம்பர். ஆரை = ஆரல் (மதில்) "ஆரலோங்கிய அயோத்திமாநகர்" மொழி—வழியாகத் திரியலாம். பொழில் என்றதும் மொழியாகத் திரியலாம். (ஈத்தாமொழி)

அரண்—ஆரை—ஆரல் மூன்று சொற்களும் ஒரே பொருளைக் குறிப்பதால் ஆரைவாய்மொழியென்றே சொல்லவேண்டும். முன்னோர் பழைய ஓலைப் பிரமாணங்களிலும், தேவஸ்தான ரிக்கார்டுகளிலும் கல்வெட்டுகளிலும் ஆரைவாய்மொழியென்றே வழங்கி வந்ததாலும், மலைவாயில், கணவாய், கோட்டைவாயில் முதலிய எல்லா அர்த்தமும் தருவதாலும் இப் பெயரை உறுதிப்படுத்துக. ஆலவாய் என்றும் சுருக்கி அழைக்கலாம்.

சோமசுந்தரமூர்த்தி இங்குவந்தபின் இவ்வூரை ஆலவாய்மொழி யென்று சொல்லுதல் சிறப்பென்று ஓர் பரம்பரை விடுகவி வழங்கி வருகின்றதாய் இவ்வூரில் முக்கிய குடும்பத்தினராயிருந்த காலஞ் சென்ற தாமரைக்குளம் மெம்பர் சிவதாணுபிள்ளையவர்கள்வழி யறிய நேர்ந்ததாய்க் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள் கூறுகின்றனர்.

"ஆலவாய்ச் சோமசுந்தரக்கடவுள் அம்மை
மீனாக்ஷியோடெழுந்து
சோலைசூழ்ப் பொய்கைச் சாரலின் தென்பால்
தோன்றி வீற்றிருத்தலினாலே

.................................................

..........................................

ஆலவாய்மொழி யென்றப்பதி தனக்கு
அமைந்தது பண்டைநாட் பெயரே"

## அத்தியாயம் 2.

## அமைப்பு.

சகியமலையின் தென் கிழக்கு மூலையில் ஆரைவாய்மொழி ஊர் இருக்கின்றது. திருவாங்கூர் சமஸ்தானத்தின் கிழக்கெல்லையில் இவ்வூர் அமையப்பெற்றது. இது ஓர் முக்கிய கணவாய். பாண்டி நாட்டிற்கு இதன் வழியாய்ச் செல்லலாம். இமயமலை எவ்வளவு பழமையானதோ அதனினும் மிகப் பழமை ஸகியமலை என்று அறிஞர் கூறுகின்றனர். தென்னாடு உலகில் மிகப் பழமையான பூமி என்று மேல் நாட்டறிஞரும் ஒத்துக்கொள்ளுகின்றனர். தென் னிந்தியப் பாறைகள் மிகப் பழையனவென்று ஸ்காட்எலியட் கூறு கின்றார். இந்தியநாட்டிற்குக் கைபர்க்கணவாய் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு ஆரைக்கணவாயும் திருவாங்கூருக்கு முக்கியமாகும். மூன்று பக்கமும் மலைகளால் சூழப்பட்டிருக்கின்றது. கணவாயி வில் நீண்ட கோட்டையும் உளது. செக்கர்கிரியும் காற்றுடி மலையும் வடக்கு மூலையும் சிறந்த அரண்களாம். ஆரைவாய்மொழி நாஞ்சி நாட்டைச் சேர்ந்தது. பழைய பன்னிரு பிடாகையில் தோவாளைப் பிடாகையைச் சார்ந்தது. தோவாளைப் பிடாகையில் ஆரை அரைப் பிடாகையாம். தோவாளை, செண்பகராமன்புதூர், சோழபுரம் மூன்றும சேர்ந்து அரைப்பிடாகை, ஆரை வடக்கூர், தாணுமால யன்புதூர், பெருமாள்புரம் மூன்றும் சேர்ந்து அரைப்பிடாகை. முப்பந்தல், மிஷியன் குடியிருப்பு, பொய்கைச்சேரி, அழகியசேரி, குருசடியும் இவ்வூரைச் சார்ந்த இடங்களாம்.

> "வஞ்சி நாடதனில் நன்செய் நாடெனச்
> செந்தமிழ் வழங்குந் தேயமொன்றுளது அதன்
> அந்தமில் பெருவளம் அறியார் யாரே
> மருதமும் நெய்தலும் மயங்கி அங்கெங்கும்
> புரையறு செல்வம் நிலைபெற வளரும்" (மனோன்மணீயம்)

குறிஞ்சி நிலம்:— மலையும் மலைசார்ந்த இடமுமாம். மலைகளிற் பல மரங்களுண்டு.

> "நரங்கு கோங்கசினியா நாறுவிதத் தருவும்
> ஓங்கும் பொதும்பர் உடையாகப்— பாங்கர்

வடமேற் பனித்துவலை வார் கொடியும் முத்து
வடமாகப் பூண்டாள் மலை'' (நாஞ்சில் வெண்பா)

முல்லை நிலம்:—காடும் காடுசார்ந்த இடமுமாம். மிருகங்கள் பலவுள.

''மான் கூட்டத்தூடு முல்லை மாக்கள் மேய்க்கின்ற பல
ஆன் கூட்டமோடடு புலியும்— தீன் கூட்டத்
தேடிவிழ ஆயர் சிறுதடியோசித் தொழித்துச்
சாடி யெழலாய தடம்.'' (நாஞ்சில் வெண்பா)

வாய்ந்த மலையும், வருபுனலும், வல்லரணும் நாட்டிற் குறுப் பென்றார் வள்ளுவனார்.

''பிணியின்மை செல்வம் விளைவின்பமேமம்
அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து'' (திருக்குறள்)

இவ்வைந்தும் இங்கே அமையப்பெற்றிருக்கின்றன.

பூமியின் கிடப்பு, பூமியின் நிலைமை, நீர் நிலைகள், மண், உலோகங்கள், கால நிலை, தாவரம், ஜந்துக்கள் ஆகியவற்றைப் பொறுத்து மனித வாழ்க்கையும் தொழிலும் இருக்கின்றன. பூமி மக்கள் வசிப்பதற்கேற்றது. ஏனைய வசதிகளும் உள. வடக்கு அக்ஷரேகை 8°—10′ டிக்ரியிலும் தீர்க்க ரேகை 77°—30′ டிக்ரியிலும் இவ்வூர் அமைந்திருக்கின்றது. 1 சதுரமைல் விஸ்தீர்ண முண்டு.

பசுக்களும், ஆடுகளும், காளைகளும் ஏராளம். மேயும் வசதி யுளது. தண்ணீர்க்குறைவால் மருதநிலச் செழிப்புக்குன்றியது. மலையும் மலைசார்ந்த இடமும், காடும் காடுசார்ந்த இடமும், நாடும் நாடுசார்ந்த இடமும், கடலும் கடல் சார்ந்த இடமும், ஆகிய நால் வகை நிலங்களும் இங்கு அமையப்பெற்றிருக்கின்றன. கடல் நேரே 10 மைல் தெற்கே இருக்கின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்கள் மயங்கியிருக்கின்றன. கடலுக்கும் மலைக் கும் அதிக தூரமில்லாததால் திணைமயக்கம் வருவதியல்பு. மலைப் பொருள் கடலோரத்திலும், நாட்டுப்பொருள் மலையோரத்திலும் மாறிமாறி வருதல் நெறியே. பூமிசாஸ்திர நூலார் இதனை மலை நாடென்பர். உண்மையில் நால்வகை நிலங்களும் கலந்த பூமிதான். தண்ணீர் வசதிவந்தால் மருத நிலம் செழிப்புற்றோங்கும். பற்பல

பயிர்களும் செய்யத்தக்க சிறந்த பூமி. ஒரே நிரப்பான தரை மற்றிடங்களில் இதுபோலில்லை. ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமி கோட்டையின் கிழக்கே உளது. மலையடிப்பாகங்களிலும், பூமி நிரப்பானது.

பூமி நல்ல வளமுள்ளது. வறட்சிமிக்கது. நஞ்செயும், புஞ்செயும் நன்கு பயிராகும். அறுகு நாலைந்தடி நீளத்தில் படரும். நெல், சோளம், கேழ்வரகு, உளுந்து, துவரை, மொச்சை, கம்பு, எள் முதலிய தானியங்களும் பருத்தி, மிளகு, சீனியவரை, வெள்ளரி, கத்தரி, வெண்டை, அறைச்கீரை முதலிய பயிர்களும் செழிப்பாய் வளர்கின்றன. ஏராளம் மிளகுவற்றல் தானியங்கள் ஏற்றுமதியாகின்றன. "கன்னியிளம் பருத்திக்கார் காலம் காய்க்குமூர்". இவ்வூரில் விளையும் கம்பு, சோளம், அறைக்கீரை இவைகளைப்பற்றிக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் பாடியது காண்க.

"கம்பனையும் சோழனையும் காத்திடுவோம் காற்றரசின்
வம்பினுக்கும் அஞ்சாது வாழ்ந்திடுவோம்— உம்பர்கோன்
வானமழை பெய்ய மறுத்திடினும் மற்றெங்கள்
கூனை மழைக்குண்டோ குறை"
"பச்சடியும் தீண்டேன் பருப்பினிலும் கைவையேன்
கிச்சடியும் தீண்டேன் கிழங்குமெடேன்— மெச்சுபுகழ்
ஆரைப்பதியில் அவித்துக் கடைந்து வைத்த
கீரைக்கறி கிடைக்குமே மேல்"

மலைவளம் மிக்கவூர். மலைப்பொருள்களும் இங்குள. மருந்துக்குரிய பற்பல செடிகளும் வளர்கின்றன. மலையில் தேனும், கொம்பரக்கும் ஏராளம் காட்டுப் பொருள்களும் செழிப்பாயுண்டு. 60 ஆண்டுகளுக்குமுன் காப்பிப் பயிர் செய்தனர். இன்னும் செய்யலாம்.

பரசுராமன் காலத்தில் இவ்வூர் உளது. கணவாயிலிருப்பதால் மிகப் பழைய காலம் தொட்டே இவ்வூர் அமைந்திருக்கின்றது. ஏனென்றால் மக்கள் போக்குவரவு இதன் வழியாய் இருப்பதாலும், கணவாயும் கோட்டை வாயிலும் சுங்கத்தலமாயு மிருப்பதாலும் இங்கே ஊர் உண்டாகக் காரணமுண்டு. இவ்வூர் ஆதியில் கோட்

டையின் கிழக்கில் தானிருந்தது. அங்கு கோயில்களும் தெருக்களும் இருந்தன. இன்று அது குடியிருப்புக்காடு எனும் பெயரோடு வழங்குகின்றது. கட்டிடங்கள் இருந்தனவென்பதற்கு இன்றும் அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆண்டான் கவிராயன் இவ்வூரைப்பற்றிப் பாடினபோது

"முப்பந்தலுக்கு மேலவூர்" என்றார்.

பெரியகுளம், பொய்கைக்குளம், வைகைக்குளம், கரும்பாட்டுக்குளம் ஆகிய குளங்களும் சுங்காமேனுடையும் உள.

மலைவளமுள்ள இவ்வூரில் இப்போதுள்ள மீனுக்ஷியம்மன் கோயில் எல்லாம் ஆதியில் காடாகத் தானிருந்தது. பின்னர் கோட்டை முதலியன ஏற்பட்டபின் வடக்கும் தெற்கும் ஊர்கள் வந்தன. நான்கு வீதிகளும் உண்டாயின. கொல்லம் 400-ம் ஆண்டுக்கு முன்னமே கோட்டைக்குள் ஊர் வந்தாயிற்று. கொல்லம் 872-ம ஆண்டு அகலிகை யூற்றுத் தெப்பக் குளத்தினருகிலுள்ள கல்வெட்டில் அய்யன்கோயிலுக்கு வழிபாட்டிற்கும், சுசீந்திரத்திற்கு வழிபாட்டிற்கும் சொதனுவிட்டதாய்த் தெரிகிறது. கொல்லம 887—மாண்டு வடக்கூர் மேலத்தெருவிலிருந்த சாத்தா உடையான்பிள்ளை பல கோயில்களுக்கும் மாலைக்கட்டு தர்மம்விட்ட பட்டயமிருப்பதால் அதற்கு முன்னமே ஆரையூர் வந்தாயிற்று. 831—ாமாண்டிலுள்ள கல்வெட்டினுல் ஆரையூர் முந்தியது. 761-ாமாண்டு இராமப்பணிக்கர் ஓலைப்பிரமாணம்உள்ளது.

ஓலைப்பிரமாணம். (மூத்தபிள்ளை) கொல்லம் 966—ாமாண்டு தாணுவைப் பண்டாரம் வகை மனை ஒற்றியாயிற்று. தெற்குத் தெருவில் மனைக்கு எல்கை:— தென் வடல் தெருவுக்கும் மேற்கு, கிழமேல் தெருவுக்கும் வடக்கு .................... இதனுல் 966-க்கு முன்னமே தெரு வீதிகளும் திருவிழாவும் உண்டென்றறிக.

## அத்தியாயம் 3.

## பழமையும் படையெடுப்பும்.

ஔவையார் சேர சோழ பாண்டியமன்னர்களை வரவழைத்து மூப்பந்தலில் வைத்து ஓர் திருமணம் செய்வித்த வரலாறு வழங்கி வருவதாலும், அவர் சங்க காலத்திலிருந்ததாலும், புறநானூறு முதலிய நூற்களில் பாடியிருப்பதாலும், பரணர் காலத்திலிருந்ததாலும் பரணர் காலமாகிய கி. பி. முதல் நூற்றாண்டிலும் மூப்பந்தலிலும், ஆரைவாய்மொழியிலும் ஊர் இருந்திருக்க வேண்டும். அது இற்றைக்குச் சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்னராகும். சங்க காலத்தில் நாஞ்சில் வள்ளுவன் காலத்தும் எல்லையில் இவ்வூர் உளது.

சேர வம்சத்தின் இரண்டு கிளைகளில் ஒரு கிளையானது பத்மநாபபுரத்தில் இராஜதானியை அமைத்துக் கொண்டு ஆரைவாய்மொழி வழியாக இவ்விடத்திற்கு வர முயன்றுகொண்டிருந்த பாண்டியர்களையும், சோழர்களையும் மறுத்துத் திரும்பச் செய்து கொண்டிருந்தது. இதனால் பண்டைக்காலம் தொட்டே அன்னியர் படையைத் தடுக்கும் இடமாகவும் இவ்வூர் இலங்கிற்று.

சகியமலையின் கீழ்த்திசையிலிருந்த தென்னாடுகளைப் பாண்டியர் ஆண்டு வந்தனர். ஆய்வேள் அரசர்களுடைய நாடு வேணாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையிலிருந்தது. நாஞ்சிநாடும் ஓர் காலத்தில் ஆய் வேள் நாட்டைச் சார்ந்ததே. திருவாங்கூர் அரசர் ஆய்வேள் அரசர்க்கு உதவி செய்ததால் பாண்டியர் தருணம் நோக்கி கி. பி. ஆறும் நூற்றாண்டில் ஆரைவாய்மொழி வழி படையெடுத்து ஜடில பராந்தகன் விழிஞம் பிடித்தான். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அரிகேசரிமாறவர்மன் எனும் பாண்டியன் ஆரைவழி சென்று கோட்டாற்றைப் பிடித்தான். பிறகு ஆய்வேள் நாடான நாஞ்சிநாடும் பாண்டியர்க்குக் கீழ் அடங்கிற்று. வேணாட்டுச் சேனை பாண்டியன் படையை ஆரைவாய்மொழிக் கரைக்கோட்டை வரையிலும் ஓட்டிற்று.

## மாறன் சடையன் கல்வெட்டு.

காலஞ்சென்ற பேராசிரியர் S. சுந்தரம் பிள்ளை அவர்கள் M. A. இக் கல்வெட்டை ஆரைவாய்மொழி பக்கத்திலிருந்து கண்டெடுத்

து திருவனந்தபுரம் பொருட்காட்சி சாலையில் வைத்திருந்தார். இப்பொழுது அதனை பத்மநாபபுரம் அரண்மனைப் பொருட்காட்சி சாலையில் வைத்திருக்கின்றனர். வட்டெழுத்திலிருப்பதால் காலத்தால் முந்தியதே. சரித்திரப்பிரதானமானது. கி. பி, 770ல் உள்ளது. அது கி. பி. 8ம் நூற்றாண்டாகும்.

ஆர்க்கியாலஜிக்கல் ஸீரியஸ் வால்யம் I பக்கம் 153-159 வரை.

1. ஸ்ரீ கோமறன் சடையற்குஇ
2. ருபத் தேழா மாண்டு சேர மா
3. ஞர் படை விழி ஞத்து ப்புறத்து
4. விட்டுழக்கக் கரைக்கோட்டை அழி—
5. ப்பான் வர...............................

இதில் கரைக்கோட்டை அழிப்பான் வர என்றதால் ஆரைவாய் மொழிக் கரைக்கோட்டையே ஆகும். இன்றும் கரைக்கோட்டையை கோட்டைக்கரை யென்று கூறுகின்றனர், கோட்டைக்கரைச் சாத்தா, கோட்டைக்கரைப் பூதத்தானென்று அத் தெய்வங்களின் பெயரும் கவண்மென்று ரிக்கார்டுகளில் காணப்படுகின்றன. பழைய கோட்டை இவ் ஊரிலிருந்தது, அந்த இடத்திலேயே பின்னர் ஸ்ரீ மார்த்தாண்டவர்ம மன்னன் உறுதியான கற்கோட்டை கட்டினார். கரைக்கோட்டைவரையிலும் படைகள் வந்ததைத் தப்பாகக் காரைக்குடியென்று சரித்திரப் புத்தகத்தில் எழுதினர். புதிய ஸ்டேட் மானுவல் எழுதிய சரித்திர ஆராய்ச்சியில் வல்லுனரான ஸ்ரீமான் T. K. வேலுப்பிள்ளையவர்கள் மட்டும் கரைக்கோட்டை வரையிலும் துரத்தியதாகக் கூறினர்.

"A hundred years after this another Pandiyan king Jatila Paranthaka pushed on his arms up to Vilinjam and obtained some temporary success. But a few years later the resistance offered by the Venad king, forced him to retire to Karaikotta, pursued by the Travancore forces."

கொல்லம் 6ஆம் நூற்றூண்டு முற்பகுதியில் எழுதப்பட்ட உண்ணிநீலி சந்தேசம் என்னும் மலையாளமும் தமிழும் கலந்த மணிப் பிரவாள நூலில் தோவாளைவழி (ஆரைவழி) படையில் எழுந்தருளு வதாய்க் கூறுவது காண்க.

"எண்ணிக் கொள்ளாம் படையிலெழு நள்ளத்து
கொல்லத்து நின்றே
கண்ணில கூடாதடைய ருடல் கூறுளி தோவாளை
நின்றே
வர்ணிச் சேற்றம் புஜக சயனம் கண்டு
கைகூப்புவானே
புண்ணியத்தின்றே பெருமனவரம் நின்வாத்தென்று
மென்னியே"

ஆரைக் கோட்டையை தோவாளைக் கோட்டையென்றும் சிலர் கூறினர்.

ஆரைவாய்மொழி வழிவருகையைத் தான் தோவாளை வழியெனப்பட்டது. ஆரை தோவாளைப் பிடாகையைச் சேர்ந்ததாலும் அதிக தூரமில்லாததாலும் தோவாளை வழியென்றார். பழைய சாலை, ஆரைக்குச்சற்று தெற்கே தோவாளை வழிசெல்லும். ஆரை வாய்மொழிக் கோட்டையை சுசீந்திரம் தேவஸ்தான ரிக்கார்டில் தோவாளைக் கோட்டைப்படி வாயில் காவல் என்று எழுதப்பெற்ற தால் இருஊர்களும் ஒன்றெனக் கூறினர். இந்த தேவஸ்தான ரிக் கார்டு எழுதின காலத்திற்கு முன்னரே ஆரைவாய்மொழி ஊரைப் பற்றிய பல கல்வெட்டுக்களும் ஓலைப்பிரமாணங்களும் உள. ஆரையூர் அப்போதேயிருந்தும் தோவாளைக் கோட்டையென்றது மேற் கூறிய காரணங்களால்த் தான்.

திருவாங்கூர் நாட்டை மார்த்தாண்டவர்ம மன்னவன் பத்மநாப சுவாமிக்குத் திருப்படி தானம செய்யும்போது "தோவாளை முதல் கவணாறு" வரையிலுமுள்ள தேசம் என்று சமர்ப்பித்தார். அது 925-ஆமாண்டு தை மாதம் 25-ஆம் தேதியாகும். அதற்கு முன்னரே ஆரையூரில் அவாது கட்டளைக் கல்வெட்டுளது. என்றாலும் தோவாளைப் பிடாகை முதல் என்னும் நோக்கத்தோடு கூறினர்.

## மலையிலுள்ள கல்வெட்டு.

கொல்லம் 923-ல் பாலமார்த்தாண்டவர்மன் தேன் தூங்கிப் பூதத்தான் கோயில் பாறையில் எழுதக்கட்டளையிட்டார். பாறையில் வேலும் மயிலும் எழுதப்பட்டிருக்கின்றன. (முருகன் துணை) அகஸ்தீசுவரம் கோயிலுக்கும், குமார கோயிலுக்கும் சொத்துக்கள் தானமாய் விடப்பட்டிருக்கின்றன.

1. கூா௨௰௩௲
2. அல்பசி மீ ௩௰௨
3. நயினார் வாலமாத்தாண்ட
4. வர்மாராய சிறவாய் மூத்த
5. பண்டாரத்தில் நின்றும்
6. கல்பனை வருகையில் செய்தவோ
7. லை முன்னாள் ௨௰௩௲ கார்த்திகை மீ ௨ தியதி முதல்
8. அகத்தீசுவரம் கோயில் குமாரகோயில்
9. ..............................................................

(வீரகேரளப் பெரிரிக் குளங்கரை)

நாட்டின் எல்லையில் எழுதிய நோக்கம் யாதோ?

T. A. S. Vol. VI.

## ஆரைவாய்மொழிக் கல்வெட்டு.

ஆரைவாய்மொழிக் கோட்டையின் பக்கம் அலத்துறையாற்றின் கரையில் கடுக்கரையின் சமீபம் எழுதப்பெற்றிருக்கின்றது.

கொல்லம் 949-ம் ஆண்டுள்ளது. கல்வேலைகளின் அளவுகளைப் பற்றிக்கூறும். T. A. S. Vol. VII Page 112. கடுக்கரையிலிருந்து ஆரைக்கோட்டை ஆரம்பமல்லவா. 949-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் தியதி முதல் ஆனி மாதம் 20-ம் தியதி வரைக்கும் இந்நாட்டுக்கல் வரைக்கும் மாசி மாதம் 30-ம் தியதி வரை நாட்டுக் கல்லிலும் தெற்கு இருவாய் பிறிகனம் முளம் எட்டு. இம்மடையும் உள்பட நீளம் முளம் 342½-க்கு பல (உத்திர) த்தின்படி அளவு சதிரம் 2095 இ.

ஏழாம் நூற்றாண்டினிறுதியில் பூதல வீரமார்த்தாண்டவர்மன் களக்காட்டிலிருந்து வந்தான். விஜய நகரப் படைகளை தாம்பிர வர்ணிக் கரையில் வைத்து வென்றான். இப்போருக்கும் ஆரைவாய் மொழி பயன்பட்டது. விஜயநகரப் படைகள் வித்தலன் தலைமையில் கோட்டாற்றில் வைத்து எதிர்த்துத் தோற்றன. கோட்டாறு பிரான்ஸிஸ் சவேரியார் எனும் பெரியார் கையில் சிலுவை வைத்துக் கொண்டு சேனைகளின் முன்னின்று உதவினார் என்றும், ஆரைவாய் மொழி வரையிலும் வந்து படைகளை எதிர்த்தாரென்றும் சில சரித் திரங்கள் கூறும். சவேரியார் இங்கு தங்கிச்சென்றார். விஜயநகரப் படைகள் நாஞ்சிநாட்டில் வந்து கொள்ளை நடத்தக்கூடாதென்று உடம்படிக்கையாயிற்று. இது உண்ணிக் கேரளவர்மன் காலம் என்பர்.

இரவிவர்மன் கொல்லம் 859—893 ஆரைவாய்மொழியில் பகைளை வைத்துப் பிறர் பிரவேசிக்காமல் தடுத்தான். இதனாலும் இவ்வூரில்மக்கள் அதிகமாய்த் தங்கக் காரணமாயிற்று.

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இராச இராச சோழனும் அவன் மைந்தன் இராசேந்திரச் சோழனும் சேரநாட்டை வென்றதாகக் கூறும் கல்வெட்டுகள் சுசீந்திரம, கன்னியாகுமரி கோயில்களில் காணப்படுகின்றன. நாஞ்சினாடு அப்போது வெளி நாடாக விருந் தது. படைகள் ஆரைவழியாகத்தான் போயின.

கி. பி. 12-ாம் நூற்றாண்டில் வேணாட்டரசன் களந்தையை (களக்காடு) தலைநகராக வைத்தான். அப்போதும் ஆரைவாய்மொழி வழியைப் பயன்படுத்தியிருக்கலாம். கி. பி.'13'ாம் நூற்றாண்டு முடி வில் '14'ாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் (1307-ல்) அல்லாவுதீனது படைத்தலைவன் மாலிக்காபர் மதுரைக்குப் படையெடுத்துவந்து மீனாட்சி சுந்தரேசர் கோயிலில் பல பாகங்களையும் இடித்தான். அப்போது கோயில் பூசாரிகள் மீனாட்சி சுந்தரேசர் தங்க விம்பங் களை எடுத்துக்கொண்டுவந்து நாஞ்சிநாட்டில் கிலுகிலுப்பைக் காட் டில் (ஆரைவாய்மொழியில்) வைத்து பூசித்ததாய்த் தெளிவுகள் இருப்பனவால் ஆரையூரின் பழமையும் பெருமையும் அறியலாம் (இது மதுரைக் கோயில் தாலிப் புத்தகத்திலுள்ளது) கிலுகிலுப் பைக்காடு ஆரையூரின் பக்கத்திலுள்ளது.

இரவிவர்மச் சக்கிரவர்த்தி கொல்லம் 471-ல் சஹ்யமலையைக் கடந்து இவ்வூர் வழியாகப் பாண்டியர்களையும் சோழர்களையும் வென்றான். சேர உதய மார்த்தாண்டவர்மன் சாந்தமுடையவன். அக்காலத்தில் ரெட்டையாபுரம் ஜமீன்தார் வள்ளியூர் முதலிய இடங்களைப்|பிடிக்கமுயன்றான்.

இளவரசன் இரவிவர்மன் சேனைகளுடன் திருநெல்வேலிக்குச் சென்று கருவேலம் குளம் போரில் வென்றான்.

திருமலை நாயக்கன் வேணாட்டைப் பிடிக்க வேண்டுமென்று பேராசைகொண்டு பணகுடியில் வந்து பாளயமடித்தான். இராமப்பையன் என்பவன் தலைமையின்கீழ் பெரும் படையை அனுப்பலானான். இராமப் பையன் ஆரைவாய்மொழி வழிபுகுந்து ஜனங்களுக்குச் செய்த தீமைகள் கணக்கில்லை. படைகள் வீடுகளைத் தீ வைத்தன; பயிர்களைப் பாழாக்கின; கொள்ளையடித்தன; நாஞ்சிநாட்டிற்குப் பெரும் கேடுண்டாயிற்று. நாஞ்சிநாடு அப்போது வேணாட்டில் இல்லை. இப் படையெடுப்பில் முதலில் கஷ்டமனுபவித்தவர் யார்? ஆரையூர் மக்களன்றோ?

கொல்லம் 810-ம் ஆண்டு கணியாகுளத்தில் இரவிக்குட்டிப் பிள்ளைப் போரில் பல துன்பங்கள் வந்தாலும் இறுதியில் நாயக்கர் படை தோற்றது. திருவாங்கூர் படை வெற்றிபெற்றது. திருவாங்கூரின் பழைய இராஜதானி பத்மநாபபுர மன்றோ. இரவிவர்மன் 859 முதல் 893 வரை ஆண்டான். இக்காலத்தில் வடுகர்படை ஆரைவாய்மொழியில் வந்தது. அவ்வழி நாஞ்சிநாட்டிற் புகுந்து கல்குளம் வரையிலும் சென்றது. அரசன் கூட்டத்தோடே படைகளைக் கொன்றான். இத்துன்ப மொழிகளைக் கேள்விப்பட்ட மகாராணி மங்கம்மாள் பழிவாங்க எண்ணி நரசப்பையன் தலைமையில் ஓர் பெரும் படையை அனுப்பலானாள். நாஞ்சிநாட்டை அழித்துப் பெண்களின் நகைகளைப் பறித்தார்கள். கொடும்போர் நடத்தப்பட்டது. நாட்டிற்குத் துன்பங்கள் பலநேர்ந்தன. இவனையும் தோற்கச் செய்தார்கள். தோற்றாலும் போகும்போது எல்லைப் பக்கங்களில் கொள்ளையடித்துச் சென்றான். ஆதித்தியவர்மன் காலத்தில் தோவாளையின் கிழக்குள்ள கள்வர்களால் கொள்ளைநடத்தப்பட்டது. ஆரைபோன்ற பலவூர் ஜனங்களும் பயந்து மலைகளில் ஒளித்தனர்.

ஆற்காட்டு நவாபினுடைய உத்தியோகஸ்தன் சந்தா சாகிப் ஆரை வழி உள்புகுந்து நாகர்கோயிலின் சமீப இடங்களில் கொள்ளையிட முயன்றனன். இந்நாளில் ஆலவாயின் நிலையென்ன? தளவாய் இராமையன் இவனைச் சமாதானமாய் அனுப்பினான்.

சகாத்தம் 1293-ல் பராக்கிரம பாண்டியன் ஆரைவழி வந்து சோழபுரம் கோயில் பழுது பார்த்தான்.

மலை இடைவிட்டிருந்ததாலும், கணவாயானதாலும், ரஸ்தா மேடு பள்ளமில்லாமல் நிரப்பாயிருந்ததாலும் பாண்டியர்களும், சோழர்களும் படையெடுத்து நம்நாட்டிற் புகநேர்ந்தது. பக்கத்தில் கோட்டாறு செழிப்பான முக்கிய வியாபாரப்பட்டணமாயிருந்ததும் ஓர் காரணமென்று சிலா சாஸன சூப்பிரண்டன்று திரு. இராமநாதையர் கூறுகின்றார்.

ஓர் படையெடுப்பில் பதினாயிரம் படைவீரர்கள் ஆயுதங்களேந்திப் பகைவர் நாட்டில் ஓர் ஊர் வழிவருவரென்றால் அவ்வூரின் நிலையை எளிதில் வர்ணிக்க வியலுமோ? தற்கால யுத்தத்தில் நம் ஐக்கியபடைகளே சிங்கப்பூர், ரங்கூன் முதலிய பட்டணங்களை தம் வசதிக்காகக் காலிசெய்தனர். பின்னர் ஜப்பானியப்படைகள் வந்து பாம்புகளிட்டும் பீரங்கிவைத்தும் டாங்குகளைக்கொண்டும் அழித்தமை நமக்குத் தெரியுமன்றோ? இச்செயலை முன்னிறுத்தி ஆரைவாய்மொழிக்கும் நாஞ்சிநாட்டிற்கும் உற்ற படையெடுப்புக்களை எண்ணிப்பார்த்தால் அந்தோ! கண்ணீர் பெருகும். இத்துணைத் துன்பத்திற்குள்ளான நம்முன்னோர்கள் என்னினைந்தனரோ? யாது செய்தனரோ? படைவந்த காலத்தில் வீடுகளிலுள்ள பெண்களை முதலில் காத்தனராம். சிலர் மானத்திற்கஞ்சி மலையில் ஒளித்தனர். சிலர் வீரத்துடன் போர்புரிந்தனர்.

## ஆரையூரின் துயரம்.

(கிளிக்கண்ணி மெட்டு)

ஆதிபராசக்தி அம்மை உமை மீனாக்ஷி
பாதிப்பரசிவையே — அன்னையே
பாலித்திடு மக்களையே ஆதி

நாயக்கர் படையெடுப்பில் நாட்டைக்காக்கப் பாடுபட்டோம்
தீயதொழில் புரிந்தேசேனை — அன்னையே
தீயைவைத்தார் ஊரையெல்லாம் ஆதி

வடுகர்படை வந்தபோது வாள்கொண்டு வெட்டிவிட்டோம்
நடுக்கமுற்ற பகைவரெல்லாம் — அன்னையே
நாட்டைவிட்டு ஓடிவிட்டார் ஆதி

மங்கம்மாள் மகாராணி மாபெருங் கோபங்கொண்டு
தங்கள் படையெல்லாமே — அன்னையே
தலைவருடன் அனுப்பிவைத்தார் ஆதி

வந்துஎங்கள் மாபாவிப் படைகளெல்லாம் ஊரைச்சுற்றி வந்து
கோட்டை கொத்தளங்களை — அன்னையே [எங்கள்
குலைத்துவிட்டார் கொடியவரும் ஆதி

நாஞ்சிநாட்டிற் புகுந்தவர்கள் நாசவேலை செய்தாரந்தோ
நாட்டைக்காக்கும் மன்னவரே — அன்னையே
நாரம் தந்து நன்மை செய்வீர் ஆதி

குடிக்கத்தண்ணீர் இல்லாமல் குளங்களெல்லாம் வறண்டு
குழாய்த்தண்ணீர் தந்தாலும் — அன்னையே [போச்சே
கும்பியைக் குளிரவைப்பீர் ஆதி

## உதையமார்த்தாண்டன் புதூர்.

பரக்கோடி ஐயன் கோயிலுக்கு வடபாலுள்ள இடங்களை உதய மார்த்தாண்டன் புதூர்க் காடென்று (கொல்லம் 1012 ஸெற்றில்மென்றில்) கவண்மென்று ரிக்கார்டுகளில் காணப்படுகின்றது, பொய்கைக் குளத்தின் பக்கத்திலுள்ள புதூர் என்பது உதயமார்த்தாண்டன் புதூராகும். இதனைப் பழைய ஆரைவாய்மொழி யென்பர். அங்கே ஓர் பிள்ளையார் கோயில் இருக்கின்றது. ஊர் இருந்ததற்கு வேறு அறிகுறிகளும் உள. இது உதயமார்த்தாண்டவர்ம மன்னனது பெயரால் விளங்குகின்றது. கொல்லம் 700-ாமாண்டு தோவாளை, தாழக்குடி, நாகர்கோயில், வடிவீசுவரம் முதலிய கோயில்களுக்குச் சொத்துக்கள் விட்டு களக்காட்டையாண்ட ஜயதுங்கநாட்டு உதயமார்த்தாண்ட மன்னன் ஆரையூரில் வந்தபோது அவர் மீதுள்ள அன்பினல்

இப்பெயர் இட்டனர்போலும். இவர்காலம் சற்றுப்பிந்தியது. அல்லது கி. பி. 825-ல் கொல்லம் ஆண்டை நிறுவிப் புகழ்பெற்ற உதயமார்த்தாண்டவன்மனது பெயராலும் வழங்கலாம். இவர் புகழ் பாண்டி நாட்டிலும் பரவிற்று. உதயமார்த்தாண்டன் பூசைக்குவிட்ட இடமெனவும் கூறுகின்றனர். எப்படியும் அரசர் பெயரால் இட்டபெயர் தான். சுசீந்திரம் கோயிலில் உதயமார்த்தாண்டன் பூசையுளது. திருவட்டாற்றில் உதயமார்த்தாண்ட மண்டபம் உளது. சேரன்மாதேவியில் கொல்லம் 558—610 வரையாண்ட உதயமார்த்தாண்டன் பெயராலும் நிறுவப்பெற்றிருக்கலாம்.

## சொக்கநாத பூபால சமுத்திரம்.

மங்கம்மாள் தன் நாயகன் சொக்கநாத நாயக்கன் பெயரால் ஆரைமைச்சேர்ந்த சொக்கநாத பூபால சமுத்திரத்தைப் பிராமணர்களுக்கு தானம் செய்தனர். குமரியில் பிராமணர்களைக் குடியேறச் செய்தாள். வரியில் சதுர்ப்பாகமிருந்தது. பின்னர் தாழக்குடி பௌஸ்தார் ஸ்ரீ சௌந்திரபாண்டியன் பிள்ளையவர்கள் அப்பூமி 5000 ஏக்கா புஞ்செய்க்காடும் விலைக்கு வாங்கினர். தர்ம ராஜா காலத்தில் அதிலுள்ள கரம்பிரித்து $\frac{1}{3}$ பாகத்தைத் தனக்கெடுத்துக்கொண்டு $\frac{2}{3}$ பாகமும் ஸர்க்காருக்குக் கொடுத்துவந்தார். மீனாக்ஷி சுந்தரேசர் கோயிலிலும் வைத்துத் துவாதசி தர்மம் நடைபெற்றதுண்டு. நிலம் கண்டெழுத்துக் காலத்தில் இப்பூமியை கவண்மென்றுக்கு எடுத்துக்கொண்டார்கள். தாழக்குடி ஸ்ரீ அம்பலத்தாடுவார் பிள்ளையவர்கள் காலத்தில் திருவாங்கூர் ஸர்க்காரிலிருந்து அக்குடும்பத்திலுள்ள ஒராண்பிள்ளைக்கு மாதம் 30 ரூ வீதம் ஆசந்திரதாரம் நன்கொடையளித்து வருகிறார்கள். மூப்பந்தல் தண்ணீர் மடத்திற்கும் சொத்துளது.

இராமசமுத்திரம், அம்பாசமுத்திரம்போல் சொக்கநாத பூபால சமுத்திரம் பெயரும் உளது. படையெடுப்பினுல் சொக்கநாத பூபால சமுத்திரமும் பழமையால் உதய மார்த்தாண்டன் புதூரும் அமைந்தன.

# அத்தியாயம் 4.

## கோட்டை.

கோட்டை:— முற்காலத்தில் ஓர் கோட்டை இருந்த தென்று முன் படித்தோம். (கரைக்கோட்டை இடிப்பான்வா கல்வெட்டு) திருவாங்கூர் இராச்சியத்தின் தென்கிழக்கு மூலை மலையில்லாமல் திறந்திருந்ததால் அவ்வழியாக எக்காலத்திலும் படையெடுப்பு நிகழுமென்றும் அதைத்தடுக்கக் கடுக்கரை முதல் ஆரைமலைவழி தெற்குமலையைத் தாண்டி கன்னியாகுமரிவரை ஓர் கோட்டை கட்டினார்கள். இக் கற்கோட்டை பலமானது. வடக்கு மலையிலிருந்து இவ்வூர் தெற்குமலைவரை சுமார் 2½ மைல் நீளம் உண்டு. பழைய கோட்டையிருந்த இடத்தில் நல்ல பலமான கற்கோட்டை டிலனாயின் உதவியோடு 920-ல் மார்த்தாண்டவர்மன் கட்டினார். வலிய யஜமானும் முன்னின்றுதவினர். கிழக்கும் தெற்கும் பாகங்கள் பலப்படுத்தப்பட்டன. இம்மன்னன் காலத்தில் இங்கே 2000 படைகள் ஸ்திரமாய்த் தங்கின. பலர் தங்கிய தால் இவ்வூர்ச் சிறப்புற்றது. கோட்டையின் நடுவில் மண்ணாக இருந்தது. கோட்டை நல்ல அகலம் உண்டு. 65 வருடந்தான் இருந்தது. கடுக்கரையிலிருந்து ஆரைவாய்மொழி வடக்குமலை வழி தெற்குமலையைக் கடந்து குமரிவரையிலும் செல்கின்றது. இங்கு இரண்டு ஓரத்திலும் கொத்தளங்கள் கட்டி பீரங்கிகளும் வைத்தனர். இடையிடையே மருந்துப்புரைகளும் இருந்தன. அவையெல்லாம் இப்போதும் காணலாம். கோட்டையின் வெளி யில் பெரிய அகழ்க்கிடங்கு இருந்தது. அதன் அறிகுறி வடக்கே இன்றும் காணலாம். கோட்டைகள் காவலுக்காக படைவீரர்கள் ஆரைவாய்மொழியில் தங்கினரன்றோ? அவர்கள் வசதிக்காகப் பெரியகுளம் மைதானம் பயன்பட்டது. முத்தாரம்மன் கோயி லுக்கு வடக்கு 80 அடி நீளம் 40 அடி வீதியில் பெரியமருந் துப்புரை இருந்தது. அங்கே மருந்தும் செய்தனர். பலவிடங் களுக்கும் அனுப்பினர். பட்டாளக்காரர் உபயோகத்திற்காக 50 குடம் தண்ணீர்கொள்ளும் எட்டு கல்தொட்டிகள் ஆங்காங்கே இன்றும் காணப்படுகின்றன. $7 \times 3\frac{1}{2} \times 3$ தொட்டியின் அளவு. நிலப்பாறைக்கண்டன் சாத்தா, கோட்டை வாயிலின் நேராகவிருக்



Fort of Aramboly

கிறது. கோட்டையின் மருங்கில் படைகள் தங்க பல சிறுகட்டிடங்கள் காணப்படுகின்றன. கோட்டையைக் காத்துக்கொள்ள படைகளை வைத்ததோடு பல தெய்வங்களையும் பிரதிட்டித்தனர். அவைக்கு கவண்மென்றிலிருந்து பூஜையும் பதிவும் ஏற்படுத்தி இன்றளவும் நடந்துவருகின்றன. கோட்டைக்கரைச் சாத்தா விசேடமானது.

கோட்டக்கரைப் பூதத்தான்:— அழகிய கற்சிலை சுமார் 700 ரூபாய் விலைபெறும். தெய்வம் இரவு பெரிய தோற்றத்தில் சங்கிலியோடு கோட்டையைக் காக்க கோட்டையின் தெற்கோரத்திலிருந்து வடக்கு மலைக்குச் செல்வதைச் சிலர் கண்டதாகக் கூறுகின்றனர். பகைவர்கள் கோட்டையைப் பிடிக்க முடியாமல் வருந்தவே பூதத்தான் சுவாமிக்கு வெளியில் பூசைசெய்ய, ஆவேசமுண்டாகி 3¾ நாழிகை மாறிநின்ற காலத்தில் கோட்டை பிடித்ததாக ஓர் வதந்தியும் உலவுகின்றது. அக்கோயிலுக்குச் சிறந்த வழிபாடு நடத்த வேண்டுவதவசியம். கோட்டையில் பல சாத்தான்கோயில்களும், பூதத்தான் கோயில்களும், மருந்துப் புரைகளும், இயக்கியம்மன்களும் இன்றுமுள. இது நல்லமுறை. வீரர்களும் தெய்வங்களும், மந்திரவாதிகளும் எல்லாம் வைத்தல் பண்டைக்கால வழக்கம்போலும். இக்கோட்டை இவ்வூருக்கும் திருவாங்கூருக்கும் பெரிய பாதுகாப்பும், சரித்திரப் பிரதானமும் ஆகும். காற்றுடிமலையின் தெற்கே கோட்டை நடுவில் ஓர் பூதத்தான் பீடத்தில் கல்வெட்டிருக்கின்றது. தற்போது அழிந்துவிட்டது.

இராமசமுத்திரம் கோட்டை:— கொல்லம் 944–ஆமாண்டு தை மாதம் 1-உ கட்டப்பட்டது.

புன்னகுளம் சவுக்கை:— கொல்லம் 998–ஆமாண்டு மார்கழியில் கட்டினர். மலையாளப் பட்டாளம் காவலுக்கு வைத்தனர்.

வேலுத்தம்பி தளவாயின் பகையை அடக்குவதற்காக திருச்சிறுப்பள்ளியிலிருந்து கேணல் ஸெண்டு லீகர் என்பவனை லார்டு மின்ரோவின் கட்டளைப்படி சென்னைக்கவர்ணர் ஆரைவாய்மொழி வழி திருவாங்கூருக்கு அனுப்பினர். அவர்கள் வாராமலிருக்க தன்னுலியன்றமட்டும் பலம் பிரயோகிக்க வேண்டுமென்று வேலுத்தம்பியும் தீர்மானித்தார். ஆரைவாய்மொழியில் ஏராளமான படை

களைவைத்து எதிர்த்தார்கள். யுத்தமுறையில் நன்கு பயிற்சி பெற்ற பிரிட்டிஷ் படைகள் கோட்டையினுள் தந்திரமாய்ப் புகுந்து பின்னர் கோட்டையை இடித்துவிட்டு உதயகிரியும் பத்மநாபபுரமும் பிடித்துச்சென்றன. ஆரைவாய்மொழிக் கோட்டையைப் பீரங்கிவைத்து இடித்தது அவர்கள் தானென்று இவ்வூரார் பலரும் கூறுகின்றனர். இடிந்த கற்கோட்டையின் பாகங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. 30 அடி நீளம் 25 அடி உயரம் 18 அடி கனமுள்ள கற்கோட்டை வடக்கே இடியாமலிருக்கின்றது. அதன் பக்கம் அகழும் பார்க்கலாம். கோட்டை பிடிக்கவந்தபொழுது பல கதைகளும் கூறுகின்றனர். ஆங்கிலப்படைகள் காவற்கிணறு மண்குன்றில் பாளயமடித்துக் குழல் கண்ணாடி வைத்துப் பார்த்தனர். கோட்டையின் பாதுகாப்பைச் சிலரிடம் கேட்டறிந்தனர். கோட்டைக் காவலான இரு பூதத்தான்களையும் பூசை நடத்தி ஆவாகித்து விட்டார்களாம். இதையெல்லாம் எப்படிநம்புவது? இவ்வூர் ஜனங்களில் தைரியமுள்ளவர்கள் இங்கு தங்கினராம். சிலர் பெண்கள் பிள்ளைகளோடு பக்கத்து மலையில் 3 நாள் தங்கினராம். விமானக்கிரமணம் வந்தாலும் ஆரையூர் மலையில் தங்கவசதியுண்டு. தோசைப் பானையைக்கூட மலைக்கு எடுத்துச் சென்றதாய்க் கூறுவர். தெற்கு மலையிலும் சிலர் சென்றனர்.

## அழகியபாண்டியபுரம் நகரம் பெரியவீட்டு முதலியார் ஓலை.

"கொல்லம் 920-ல் இராமசமுத்திரம் கோட்டை அகிழ் வெட்டுகிற வகைக்கும், தோவாளைக் கோட்டை அகிழ்வெட்டுகிற வகைக்கும் 919-ாம் வருஷம் பிசானம்மேல்வாரம் உபயம் பலிசை வகைக்கும் 920-ாமாண்டு கார்வகைக்கு அஞ்சாலி கோட்டைக்குக் கால்கழிவு பிடிச்சு" என்பது ஓலைப்பிரமாணம். நாஞ்சிநாடு முழுவதும் இரண்டு கோட்டைகளிலும் அகழ்க்கிடங்கு வெட்ட புரவுகார் வந்ததால் அவர்களுக்கு கிஸ்தியில் காரில் கோட்டைக்குக் கால்கோட்டை நெல் குறைத்துக் கொடுத்தனர். ஆரைக்கோட்டை நாஞ்சி நாட்டிற்கும் பொதுவென்று இதனாலறிக. அஞ்சாலியென்பது அஞ்சலியளவு நெல். இருகைகளும் குவித்து வாரியெடுக்கும் நெல்லின் அளவு.

இப்போது ஆனைக்கிடங்கு என்று சொல்வது அந்த அகிழைத்தான். அகிழ் தூர்ந்து அதிக நாள் ஆகவில்லை. சிலகாலம் வண்ணார் சீலையடித்து வந்தனர்.

## மன்னர்பிரான் கட்டளை.
## 984—9—24.

இவிடத்தே செய்தியாவது. 984 மாசி 1-ாம் தேதி ஆரை வாய்மொழிக் கோட்டையில் கொம்பஞ்சியாருகள் கேறியதின்றே சேஷம் முதலியாருடே சாதனம் கொண்டு ஒரு கறுத்தகுட்டி திருவட்டாறு இளையதம்பிரான் திருமனதுகொண்டு எழுந்தருளியிரிக்குந்ந இடத்து செந்நாறே பலகூட்டவும் காரியவும் நீலகண்டப்பிள்ளை விசாரிப்புகாறரோடு பறஞ்ஞு திருமனதறியிக்கும் போள் ஆருவாமொழி வெடிப்புரைக்கு அகத்திருந்நதில் ஏதானும் பணம் எடுத்து வழிமேல் கொண்டுவச்சு வீதம் வச்சு கொண்டு போய பிரகாரம் ஈவகைப் பணம் வீதம்வச்சது இன்னுமொன்று வரியோலை யெழுதியிட்டுண்டென்னும் முதலியாருடே சாதனம் கொண்டுவந்த குட்டி அறிய பங்குவைத்த ஆளுகளேயும் இக்காரியம் எத்திறையும் தாத்பரியமாய் முதலியார் பணம் எடுத்தவரை விசாரிப்பான். இது அழகியபாண்டியபுரம் முதலியாரே கேள்பிக்கயும். சாதனம் எழுதிய குமாரன் செண்பகராமன் ஒப்பு. பாலராமவர்மா குலசேகரப்பெருமாள். (இதில் குட்டி பிராமணப்பிள்ளை) மருந்துப்புரையில் கஜனு இருந்தது. பண்டையாளிகள் பாதுகாத்துவந்தனர். படையெடுப்பில் பலவூரார்களும் இங்குவந்தனர். சிலர் அதையெடுத்துச் சென்று வழியில் பங்குவைத்தனர். அப்போது நாஞ்சிநாட்டின் காரியம் பார்த்துவந்த பெரியவீட்டு முதலியார் விவரம் மகாராஜாவை அறிவித்தார். அதற்கு அரசர் பெருமான் இட்ட கட்டளையாகும். வேலுத்தம்பி தளவாயின் கட்டளைப்படி இவ்வூரில் பலவூர் வீரர்களும் கூடினர் என்பது நினைவிருக்குமே. இதற்கு ஆரையூரார் பொறுப்பாளிகளல்லர். ஆரையில் வைத்து பிரிட்டீஷ் படைகளை எதிர்ப்பது கடைசி எதிர்ப்பென்று பலவூரார்களையும் இங்குவரச் செய்தனர்.

வட்டக்கோட்டை:— கல்லும் சுண்ணும்பும் சேர்த்துக் கட்டப்பட்டது. 1809-ல் பிரிட்டீஷ் படைகள் ஆரைவழிச்செல்லும்

கோட்டையை அழித்தன. குமரிக்கு முக்கால் மைல் மேற்கே இருக்கின்றது. செவரைக்கோட்டை இதற்கு வடக்கே ஒன்றரை மைல் தூரத்திலிருக்கிறது. இதனோடு சேருகின்றது. செவரைக் கோட்டை பழைய கோட்டையுடன் சேருகிறது. அது இரா மேஸ்வரம் கோட்டையோடு சேருகிறது. அதிலிருந்து காற்முடி மலைவரையிலும் இரண்டு மைல் தூரம் செல்லுகின்றது. இரா மேஸ்வரம் கோட்டையினருகே ஒரு மருந்துப்புரையும், களஞ் சியமுமிருந்தன. வட்டக்கோட்டை இன்றும் அழிக்கப்படவில்லை. ஆரைக்கோட்டை 17 மைல்நீளமுடையதும், மிகுந்தபணம் செலவு செய்து கட்டப்பட்டதும் குமரியிலும் மற்ற பாதை வழியும் பகைவர் வராமல் தடுக்கக்கூடியதுமாகும்.

---

## அத்தியாயம் 5.

## விசேடங்கள்.

சுங்கத்தலம்:— (சவுக்கை customs) வெளிநாட்டிலிருந்தும், உள் நாட்டிலிருந்தும் வரும் சில சாமான்களுக்கு வரிவாங்குமிடம். திருட்டுத்தனமாகச் சாமான்களைப் பிறநாட்டிற்குக் கொண்டுபோ வதைத் தடைசெய்வதற்குக் காவல்புரையையும் ஆரையில் கர்னல் மன்றோ துரையவர்கள் ஏற்படுத்தினார். சவுக்கையை அவர் சீர்திருத் தினார். அதற்குமுன் மார்த்தாண்டவர்மன் மன்னர் பிரான் காலத் தில் இப்புதிய சவுக்கை ஸ்தாபிக்கப்பட்டது. அதற்குச் சில நூற் றாண்டுகளுக்கு முன்னமே இக்கணவாயில் சுங்கம் வாங்கியிருத்தல் கூடும். சங்ககால நூலாகிய பட்டினப்பாலையில் சுங்கம் வாங்கி வந்ததாய்க் காணப்படுகின்றது. அவ்வாறே ஆரைக்கணவாய் பாண் டியோடுசேர்ந்தும், பிரிந்தும் இருந்ததால் அக்காலம் முதற்கொண்டு சுங்கத்தலமும், அதனால் நாகரீகமும்பெற்றது. சுமார் 3 லக்ஷம் ரூபாய் வரையிலும் ஆண்டுதோறும் வருமானம் உண்டு. சுங்கம் வாங்கும் இடத்தைப்பற்றிப் பட்டினப்பாலை நூலில் கூறுவது காண்க.

“நல்லிறைவன் பொருள் காக்கும்
தொல்லிசைத் தொழின் மாக்கள்

அளந்தறியாப் பல பண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி"

காவிரிப்பூம் பட்டினத்தில் பண்டைக் காலத்திலேயே இவ் வழக்கம் கூறப்படுகின்றது.

## ஆரைவாய்மொழி நாஞ்சினுட்டாரை அன்புடன் ஏற்றுக்கொண்ட வரலாறு.

அரசர் நீட்டு. 4.

கொல்லம் 26—6—832 நாஞ்சிநாட்டு ஜனங்களுக்கு அறிக்கை.

தாங்கமுடியாத சங்கடத்தால் நாஞ்சிநாட்டு மக்கள் தங்கள் ஊர்களைவிட்டு ஆரைவாய்மொழியில் வந்து தங்கினர். (இரவிவர்மா அரசர்காலம் 786 முதல் 838 வரை) மன்னர்பிரான் பூதப்பாண்டியில் எழுந்தருளி தூதனுப்பி அவர்களது உரிமைகளை முன் போல் அளித்தனர். திருவட்டாற்று மடத்தார் நாஞ்சிநாட்டார் பிடாகைக்கூட்டம் இடும் முரசை உடைத்தனர். அதற்கு அம் மடத்தைத் தீவைக்க அரசர் கட்டளை பிறந்தது. இரண்டு வெண்கல முரசுகளும், 4 வெள்ளி வெண்டையங்களும், கொம்புகளும் பரிசாய் அளிக்கப்பட்டன.

## பெரியவீட்டு முதலியார் ஓலைப்பிரமாணம். 4.

1. நாஞ்சிநாட்டு மங்கலம் முதல் மணக்குடிவரைக்கு ஒள்ள நாடு ஒக்க பலபல உபத்திரங்களும்.

2. பலபல தங்கடங்களும் கொண்டு ஆரவாயிமுழியில் நீங்ஙி இரிக்ககொண்டு நாம் பூதப்பாண்டியில் வந்நு.

3. இருந்நு (பேரகத்து) சிறிகுமரன் நாராயணனேயும் இளம்பேல மார்த்தாண்டன் இரவியேயும் விளித்நி?

4. இராமனி ராமனேடும் பிள்ளமாரேயும் சாத்திருக்கி காட்டின்றே 'தங்கடங்களும் தீத்து.

5. திருவட்டாற்று மாத்தாண்டவன்மன் மடத்தில் நின்று நாட்டின்றே முரசு வெட்டிக் கீறியதினெ (சாத்திருக்கி = யாத்திரையாக்கி).

6. கொண்டு மேல்படி இல்லத்து மடம் நாடுகேறி சுடுக கொண்டு நாம் மேல்படி மடத்திலேக்கு.

7. கழிவும் செய்துகொடுத்து நாட்டிலேக்கு இரண்டு வெண்கல முரசும் வெள்ளியினால் நாலு வெண்டையமும் (கொம்பும்).

8. கொடுத்து நாட்டாரேயும் பூதப்பாண்டியில் வருத்திச்சு நாடு நம்மே வந்து கண்டதின்றே சேழம் புருஷாந்திரப் பருக்கைக்கும்.

9. தனித்தெண்டமும் வேண்டிச்சால் நாட்டினு தங்கடமுண்டென்று நம்மோடு சொல்லுகயால் எண்ணூற்று முப்பத்திரண்டாமாண்டு தை மாதம்.

10. இருபத்திரண்டாம் தியதி முதல்க்கு புருஷாந்திரப் பருக்கையும் தனித்தெண்டமும் வேண்டிக்க இல்ல என்றும்.

11. செய்க இவ மேல்படி ஆண்டு மேல்படி மாதம் இருபத்து இரண்டாம் தியதி கல்பித்தமைக்கு.

12. இச்செய்தி சொல்லி வடவகை தென்வீதி நாடமைந்தபேர்க்கு நீட்டு எழுதி வீடு என்று திருவுள்ளமாய நீட்டு.

தங்கடம் = சங்கடம்.
சாத்திராக்கி = யாத்திரையாக்கி.

## நீட்டு 5.

ஷை 836-ாமாண்டு நாம் பூதப்பாண்டியில் வந்நதின்றே சேழம் நிங்ஙள் ஒக்கக்கூட நாட்டின்றே தங்கடம் பலதும் நம்மோடு புருஷாந்தரப் பருக்கை தனித்தெண்டம் வகைக்கு முன்பில் ஒழிஞ்ஞு நாம் நிங்ஙள்க்கு நீட்டுதந்நதின் மண்ணம் நடந்நுகொள்ளுமாறும் சங்கேதம் இடப்பட்ட மடங்களில் உள்ளவர்கள் முன்பில் அம்மாவன்றே நேரத்தே நடந்நவண்ணம் அல்லாதே அதிக்கிரமம் உண்டெங்கில் நிங்ஙள் தன்னே சோதிச்சு கொள்ளுமாறும்....... நீட்டு எழுதிவிடு என்று திருவுள்ளமாய நீட்டு.

ஆரையிலிருந்து ஜனங்கள் சென்றபின் பூதப்பாண்டியில் வைத்துக் கிடைத்த அனுகூலங்கள் மேற்கூறியவைகளாம்.

## மேற்படி Document 6.

## அரசர் நினைவு.

(கொல்லம் 892—894-வரை)

அனந்தோசி நாயக்கன் நாஞ்சிநாட்டில் படையெடுக்கையில் அவனை எதிர்க்கத்தக்கவரில்லை. பெருந்துன்பம் விளைந்தது.

1. தென்வீதி நாட்டார் கண்டு 2. அனந்தோசி நாயக்கர் முப்பந்தலில் வந்து பாளயம் செய்து தாழக்குடிக்குக் கிழக்கொக்கயும் கொள்ளயிடுகையும் 3. நால்தாலி பறிக்கையும் ஆடுமோட்டிச்சுக்கொண்டு போகயும் இங்ஙனேயுள்ள அக்கிரமங்ஙள் காட்டிய தொக்கேயும் 4. நம்முடே மனத்தோடு காட்டியெந்நும் அவலேசம் நிருவிக்கேண்டா. இப்போள் நாம் 5 நிருவிச்சால் உள்ள செய்தி நிங்ஙள்க்கு அறியாமல்லோ. அதறிஞ்ஞு நாட்டாராயிட்டு ஒழிக்கத்தக்கவண்ணம் மனது 6. செலுத்திக் கொள்ளுகயும் வேணம். அதினொத்தபோலே நாமிரிக்குந்நதும் ஒண்டெந்நும் 7. இப்படிக்குத் திருவுள்ளத்தின்படி நினைவு எழுதின கணக்கு தம்பி இராமன் இராமன் எழுத்து. இக் கடுஞ்செயல் ஆரையூரிலிருந்து தொடங்கி தாழக்குடி வரையிலும் பரவிற்று. மக்கள் என்னபாடு பட்டனரோ? யாது செய்தனரோ? உய்த்துணர்க.

## T. A. S. Vol V. P. 219. வரி 5—7.

"சிவிந்திரத்தில் சுவாமியுடே சங்கேதமானபடியினாலே அவிடமொரு ஓதுக்கிடமென்று சொல்லி நாட்டிலுண்டான பெட்டிப் பிரமாணமும், பொன் வெள்ளி வெங்கலபாத்திரமும், சீலை பிடவையளும் நெல்லும் வித்தும் படை கடத்திக்கொண்டு போட்டவகை எல்லாம் கொள்ளையாடினபடியினாலேயும்" படையெடுப்புக் காலத்தில் ஜனங்கள் பணம் முதலியனவைத்த பெட்டி முதலிய சாமான்களெல்லாம் பாதுகாப்பிடமாகிய சுசீந்திரம் தேவஸ்தானத்தில் கொண்டு வைத்திருக்கின்றனர். அவற்றையும் பகைவர் படைகள் சூறையாடின.

அரண்மனை:— தெக்கூரில் அரசர் தங்கியிருக்கும் பெரிய அரண்மனையொன்றிருந்தது. அவர்கள் குளிக்கும் அழகிய நீராழி இன்றும் உளது. நாழிக்கிணறும் மண்மூடிக் கிடக்கின்றது. அரண்மனையிடிந்துவிட்டது. அதற்குப் பவதிகொட்டாரம் என்று பெயர் வழங்கிவந்தார்கள். அதன் காவல் தெய்வமாகிய கொட்டாரத் திலைக்கியம்மன் கோயில் இன்றும் காணலாம். கொட்டாரத்திலுள்ள பகவதிதேவியின் ஆலயம் இடிந்துகிடக்கின்றது. கற்கோட்டை இடிபட்ட காலத்திற்கு முந்தியே இது இடிந்துவிட்டது. பார்வையிலும் பழையகாலக் கட்டிடமாய்த் தெரிகின்றது.

மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு நெடுங்காலமிருந்தது. சுமார் 25 ஆண்டுகளுக்குமுன் மாற்றினர்.

## சர்க்கார் ஸ்தாபனங்கள்.

பாரஸ்ட் ஆப்பீஸ் (வனம் இலாகா காரியாலயம்) மலைகளின் மேற்பார்வைக்காக அமைக்கப்பட்டிருக்கின்றது.

சவுக்கை எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர் ஆப்பீஸ்:- தீர்வைச் சாமான்களின் வரிவசூலித்து ஆண்டுதோறும் மூன்றுலட்ச ரூபாய் சர்க்காருக்கு வருமானம் கிடைக்கின்றது. பிரயாணிகளும், வண்டியோட்டிகளும் கொடும் வெயிலினால் கஷ்டப்படுகின்றனர். தண்ணீர் குடிக்கக் குழாய்கள் மிக அவசியம். யாத்திரை செய்யும் பெண் பாலர்க்கு மலஜலங் கழிக்குமிடம் வேண்டும். சவுக்கையின் முன்பாக தகரக்கொட்டகை போடுதல் மிகவும் நலமாகும்.

பள்ளிக்கூடம்:— தமிழ் நடுத்தரப் பாடசாலையில் 500-க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்விபயின்று வருகின்றனர். தாய்மொழிப் பயிற்சி வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. பாடசாலைக்குக் கிணறும், தேகாப்பியாசக் கட்டிடமும் மிகவும் அவசியமாம்.

கன்ஸர்வென்ஸி ஆப்பீஸ்:— சுகாதாரமும், ஜனன மரணக் கணக்கும் கவனிக்க ஏற்பட்டுளது.

அஞ்சல் ஆப்பீஸ்— திருவாங்கூருக்கும், கோச்சிக்கும் கடிதப்போக்குவரவும், ஸேவிங்ஸ் பாங்கும் உண்டு. ஸேவிங்ஸில் இன்னும் கூடுதல் பணம் போடலாம்.



ஸ்ரீ சித்திரை விலாஸ் நூல் நிலையம்.

*Photo by: N. C. Kuttalam.*

## ஸ்ரீ சித்திரை விலாஸ் நூல் நிலையம்.

அண்மையிலமைக்கப் பெற்றது நம் சித்திரை விலாஸ் நூல் நிலையம். சுமார் 2500 ரூபாய் வரையிலும் செலவாயிற்று. நூற்கள் ஏராளம் வந்துகொண்டிருக்கின்றன. அதன் அமைப்பு மிகவும் செம்மையானது. தக்க தலைவர்: ஏற்ற அமைச்சர்.: மிக்க பொறுப்பாளர் அமைந்ததாகும். அதற்கு ஒருவயதாகு முன்னரே இந்நாட்டில் எந்தநூல் நிலையத்தாரும் தலையிடாத புத்தக வெளியீட்டிலிறங்கியிருக்கின்றனர். இதுபற்றி வடக்கூரார் அனைவரையும், விசேடமாக உயர்திரு, தலைவர் ந. அகஸ்தியலிங்கம் பிள்ளையவர்களையும் நன்குபாராட்ட வேண்டும்.

மக்கள் முதலில தாயையும், பின்னர் தந்தையையும் அறிவர். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்றூர் நம்மூர் ஔவைப் பிராட்டியார். அவ்வாறே—நம்மைப் பெற்றுவளர்த்து தங்க இடமீந்த ஆரைவாய்மொழியெனும் தாயையும்,( Mother Land தாய்நாடு) இம்மையிலும், மறுமையிலும் இன்பமளிக்கும் மீனுட்சிசுந்தரேசர் எனும் தாய் தந்தையரையும் பற்றிய "ஆரைவாய் மொழி வரலாறும் மீனுட்சிசுந்தரேசர் கோயிலும்" எனும்பொருத்தமான நூலை வெளியிட்டது மெச்சத்தக்கதே.

நூல் நிலையத்தார் பெருமைக்கு இது போதிய சான்றாகும். முதலிற் செய்யவேண்டிய கடமையைச் செய்துவிட்டனர். இன்னும் கைத்தொழிற்சாலை, கிருஷித்தோட்டம் முதலியன விரைவிலமைப்பர்.

சானல் தண்ணீர் கிடைக்கப் பெறுதவிடங்களில் புஞ்செய்யப் பயிர் எவ்வாறு செய்யவேண்டு மென்பதை முன்மாதிரியாய்க்காட்ட ஆரைவாய்மொழியின் பக்கத்தில் கவணமென்றிலிருந்து ஓர்பண்ணை அமைத்திருக்கின்றனர். இதைவிடவும் மழைகுறைவான இடங்களில் உள்ள வித்துக்களைக் கொண்டுவந்து காட்டுகின்றனர். சோளம், பருத்தி, எள், கம்பு, கேழ்வரகு முதலியன முக்கியமானவை. களைபறித்தல், நடுதல், வரம்பு கோலுதல், பாத்திசெய்தல் போன்றவைகளுக்கு ஆட்செலவு இல்லாது கிருஷி உபகரணங்களால் செய்யப்படுகின்றன. சிறு பாத்திகளாய் அமைத்து மழையீரத்தை நீண்டநாள் விடாமற் பாதுகாக்க வசதி

கள் செய்யப்படுகின்றன. எல்லோரும் எப்போதும் சென்று பார்த்து மிகுந்த ஊதியத்தைப் பெறுவார்களாக.

ஆரையில் அவசியம் பருத்தியை நூலாக்கும் மில் (Spinning Mills) ஏற்படுத்துக. அரைவயிற்றுப் பட்டினிகிடக்கும் மக்கள் பலரும் ஆயிரக்கணக்கான ஜனங்களும், வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கி, நல்ல பிழைப்புபெற்று மக்கள் பசிப்பிணி யாற்றுவர். பருத்திப் பயிருக்கு இவ்வூர் மிகவும் ஏற்ற வளப்ப முடையது. நூல் நூற்கவேண்டிய வசதிகளும் இங்கு உண்டு.

## ஐக்கிய சங்கம்.

சரியாய் வேலைசெய்து தொழிலாளருக்கும், விவ்சாயிகளுக்கும் பற்பலதுறையிலும் முன்னேற்றத்திற்குத் தகுந்தவாறு முயற்சிக்க. பணக்கஷ்டம் நீங்கவேண்டும். கடன்காரர்களாயிருக்கலாகாது. ஒற்றுமையுடனும், உண்மையுடனும் உழைக்கவேண்டும். எல்லாப்பொருள்களும் இதன் வழியாய்க் கொடுக்கலாம். இலாப முண்டு.

8 மைல் கிழக்கேயானாலும் நாஞ்சினாட்டில் இவ்வூர் பிரத்தியேக சீதோஷ்ண நிலைமையையுடையது. உஷ்ணம் கூடுதலான பூமி. ஆதலால் தான் சோளம், பருத்தி, எள் முதலியன பயிராகின்றன. ஆடுகள் ஏராளம்; காளைகளும், பசுக்களும் மிகுதி. இவை புஷ்டியாய் வளரும். ஆனால் பால் குறைவு. நல்ல சத்துள்ளதும், நோயாளிகளுக்குத் தக்க ஔடதமுமாகும்.

## பசு மடம்.

வித்துக்காளைகள் அரசாங்கத்திலிருந்து அவசியம் வளர்க்க வேண்டிய ஏற்பாடுகள் செய்தல் நலம். நூற்றுக்கணக்கான பசுக்களை வளர்த்திச் சுத்தமான பால் தயாரித்து பட்டணங்களுக்கு மோட்டார் முதலிய வாகனங்கள் வாயிலாக வியாபாரம் செய்யலாம். விரைவில் இதை ஆரம்பித்தல் மிகவும் நலமாகும். இவற்றின் வாயிலாகப் பால் கூடுதல் ஆக்கவேண்டும்.

தபாலாப்பீஸ்:— வெளிநாட்டிற்கும், உள்நாட்டிற்கும் கடிதப் போக்குவரவுள்ளது.

பொது மராமத்து கியாம்பு ஷெட்:— இஞ்சினீயர் இலாகாவைச் சேர்ந்தது.

தேவசுவம் ஆப்பீஸ்:— சொக்கலிங்க சுவாமி கோயிலிலுளது.

சகாயதன பாடசாலைகள்:— குருசடி, ஹிந்துமிஷன், லூதர் மிஷன், லண்டன் மிஷன் ஆகிய பிரைமரிப் பாடசாலைகளும் உள்ளன.

சந்தை:— தோவாளைத் தாலுகாவில் உள்ள இருசந்தைகளில் முதன்மையானது. பற்பல காய்கறிகளும், பயிறு, கேழ்வரகு, சோளம், கம்பு, உளுந்து முதலிய தானியங்களும், வெங்காயம், மிளகுவற்றல், மாதுளம்பழம், தூதுளை, சுண்டைக்காய், மிளகாய், மீன் முதலியனவும் ஏராளம் விற்பனையாகும். பாண்டியிலிருந்து பலரும் வியாபாரத்திற்கு வருவர். திங்களும் வியாழனும் சந்தை கூடும்.

ஆசுபத்திரி:— இரட்சணிய சேனை ஆசுபத்திரி ஒன்றுளது. நோயாளிகள் தங்கிச் சிகித்சைசெய்ய ஏற்றது. இத்தகைய ஆசுபத்திரி இத்தாலுகாவில் இதுபோன்று பூதப்பாண்டியிலுமுண்டு.
ஆரையூரார் ஒன்றுசேர்ந்து விரைவில் இதனினும் மிக்கவசதியுடன் ஓர் ஆசுபத்திரி அமைக்கப்போவதாய்க் கூறுகின்றனர். பெண்கள் டாக்டர்களும் வரக்கூடுமாம்.

போலீஸ் ஸ்டேஷன்:— திருவாங்கூருக்கும் பாண்டிக்கும் எல்லையில் நாட்டின் பாதுகாப்பிற்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. போலீஸ் இலாகா பாதுகாப்புப் படைகளும் இன்ஸ்பெக்டரும் ஹெட் காண்ஸ்டபிள்களும் உளர்.

வியாபாரம்:— பண்டைக்காலம் தொட்டே இவ்வூர் சிறந்த வியாபாரத்தலம். 400 ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த வியாபாரம் உளது. நாஞ்சிநாட்டில் பலவூரார்களும் இங்குவந்து உளுந்து, பருப்பு, மிளகுவற்றல் முதலியன நயமாய் வாங்கிச் செல்வர். சவுக்கையும் புஞ்செய்ப் பயிரும் பாண்டிக்கு அண்மையிலிருப்பதும் இதற்குக் காரணமாகும். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான நல்லெண்ணெய் டப்பாக்களும் மிளகுவற்றல் சாக்குகளும் ஏற்றுமதியாகின்றன. பலபொருள்களும் பிண்ணாக்கு மூடைகளும்

இவ்வாறு போகின்றன. பலசரக்குக்கடைகள் பேர்பெற்றவை. காசுக்கடைகள், ஜவுளிக்கடைகள், எண்ணெய்க் கடைகள் பல. மேனாட்டுப் பொருள்கள் விற்கும் கடைகளும் உள.

*காற்று:—* தென்மேற்கு, வடகிழக்கு இரண்டு பருவக்காற்றுகளும் வீசும். வடகிழக்குப் பருவக்காற்றினால் அதிகமழை பெய்கின்றது. வைகாசி, ஆனி, ஆடி மாதங்களிலும் கொடுங்காற்று அடிக்கும். இவ்வூரிலடிக்கும் காற்று உடம்பிற்கு ஏற்றது. பார்வைக்கு அச்சத்தையுண்டுபண்ணும். கோடைக்காலத்தில் நல்ல தென்றல் வீசும். "சித்திரை பத்தில் சிறந்த மேல்காற்று" என்பர். பகலில் நல்லவெயில் அடித்தாலும் இரவில் இன்பமான காற்று வீசும். மற்றவூர்களில் தென்மேற்குப் பருவக்காற்றினால் மழை பெய்யும்போது இங்கே குறுக்காய்த் தடுக்கும் மலை இல்லாததாலும் கணவாயானதாலும் மேகங்கள் தூரத்தப்பட்டு மழை குறைந்துவிடுகிறது. ஆனி ஆடி மாதக்காற்று 30 – 40 மைல் வேகத்திலடிக்கும்.

*சுகாதாரம்:—* சிறந்தகாற்று எப்போதும் வீசுவதால் இரத்தசுத்தம் உண்டாகிறது. க்ஷயம், இளைப்பிருமல் (ஆஸ்மா) முதலிய நோய்கள் இங்குவாரா. பெரிய டாக்டர்கள் அந்நோயாளிகளை இவ்வூருக்கு அனுப்புகின்றனர். மண்ணும் உடம்பிற்கு நல்லது. பொதுவாக இங்கே நோய்கள் குறைவு. ஆண்களும் பெண்களும் நல்ல உயரத்துடனும், உடம்பின் வலியுடனும் வாழ்கின்றனர். வறுமையாலும் மற்று காரணங்களாலும் சிலர்க்கு நோய்களுமுண்டு. சுகாதாரத்திற்கு முக்கியமான ஓர் இடையூறு தண்ணீர்க் குறைவாம். குளிக்க அவ்வளவு வசதியில்லை. நீர்ச்செழிப்பிருந்தால் இது சிறந்த சுகவாச ஸ்தலமாயிருக்கும். தொத்து நோய்கள் குறைவு. திருவாங்கூரில் சராசரிவயது 43·8 ஆண்களுக்கும், 44·5 பெண்களுக்குமாகும். 20% பேர் ஆண்டுதோறும் அகால மரணமடைகின்றனர். (1931லே ஸென்ஸ்ஸ்படி)

## மழை.

1883—1902 வரையிலும் 20 வருட மழையளவில் முக்கியமான பலவூர்களிலும் எடுத்த கணக்கில் மிகக் குறைந்த இடம்

ஆரையாம். 28.15" மொத்த மழையாம் வாரியூர் தாமரை குளம், அகஸ்தீசுவரம் முதலான ஊர்களை விடவும் குறைவு. ஏப்ரில் மாதம் 3.11" மழையும் இடவப்பாதியில் 3.72"ம் துலா வருடம் அக்டோபர் மாதம் 6.9"ம் நவம்பர் மாதம் 6.3"ம் ஆகும். மண்ஸூனைத் தடுத்து மழை பெய்விக்க ஆரை மலைக்கு உயரம் குறைவு. ஆனி, ஆடி மாதக் காற்று கணவாய்வழி இங்கு மழையை நன்றாய் பெய்விக்காது. விரைவாய் அடித்து கணவாய் வழி கிழக்கே செல்லும். பங்குனி, சித்திரை மாதங்களிலும் சிறந்த காற்று வீசும். கன்னியாகுமரியைப்போல் ஆரோக்கியமானது. உலர்ந்ததென்றற் காற்றுவீசும். வெயில் கடுமையாய் இருந்தாலும் காற்று மெதுவாக வீசிக்கொண்டே இருக்கும். இதனால் சூடும் குறையும். 1883 முதல் 1937 வரை ஆரையூரில் 54 ஆண்டுகளின் சராசரி மழை 35·9 இஞ்சு ஆகும். கழிந்த 3 ஆண்டுகளின் சரா சரி 42·2 இஞ்சு தான். நவம்பர் மாதம் 8·1 இஞ்சும், பெப்ரவரி யில் மிகக்குறைவும் ஆம். சூரியோதயம் சரியாய்த் தெரியும். மழைகுறைவாயினும் அதற்கேற்றவாறு கிருஷி செய்கின்றனர். புதிய ஸ்டேட்மானுவலில் 60 இஞ்சு மழை மலையிலுளதென்றார்.

## கல் வெட்டு

ஆரைவாய்மொழி கோட்டைச்சருகிலிருந்த கல்வெட்டு பிரபஸர் சுந்தரம்பிள்ளை அவர்கள் வெளியிட்டது. வட்டெழுத்தாலானது.

ஸ்ரீ கோமாறன் சடையற்கு இருபத்தேழாமாண்டு சேரமானார் படைவிழிஞத்து யுத்தத்து விட்டுழக் கக்கரைக்கோட்டை அழிப் பான்வர பெருமானடிகளன்பு மீக்குள இ ர ண கீ ர் த் தி யு ம் அமர்க்கழிஉம் உள் வீட்டிஞெற்றைச் சேவகர் கோட்டை அழி யாமைக் காத்தெதிர்ந்து பலரும் பட்ட இடத்து இரணகீர்த்தி உள்வீட்டுச் சேவகன் கொழுவூர்க் கூற்றத்துப் பெருமூர்த்தி தம் பெருங்கிளை ஆத்திரத்தாற் பலரோடுங்குத்திப்பட்டான். இரண துங்க மௌளி........... கி. பி. 7-ம் நூற்றாண்டில் உள்ளது. கோமா றன் சடையன் ஆட்சியில் 27-வது ஆண்டில் அரசாண்டுவந்த சேர அரசன் விழிஞத்தைத் தாக்கிக்கரைக் கோட்டையை (ஆரைக் கோட்டை) அழிக்க முயற்சித்தான். அப்போது இரணகீர்த்தி, அமர்க்கழி என்ற இரு வீரர்கள் கோட்டையைக்காவல் புரிந்தனர்.

இவர்களுள் இரணகீர்த்தி மிகவும் சிறந்த வீரன். அவன் பலரைக் கொன்றான். கொழுவூர்க் கூற்றத்துப் பெருமூர்த்தியால் இவன் கொல்லப்பட்டான்.

பாண்டியன் படையெடுத்து வந்தது. கரைக்கோட்டை அக் காலத்துள்ளது.

ஆரையில் அரிய மருந்துகள் உள:— தூதுளை, கண்டங்கத் தரி, மருந்துப்புல், கிலவாகை சுண்டை, குறுந்தட்டி முதலியன. தெரிந்ததும் தெரியாததுமான மருந்துப் பொருள்கள் அளவிறந்தன பார்க்கலாம்.

ஈஞ்சத்தடி மலையில் மிகுதி. அரளி, பிச்சி, செவந்தி முத லிய பூக்கள் ஏராளமுண்டு.

காடை முதலிய பறவைகள் நன்கு வாழ்கின்றன. நீர்ப் பறவைகள் சுருக்கம்.

இவ்வூரில் சங்கீதக் கலையும் பாகவதர்களும் மிகுதிப்பட வேண்டும்.

மருந்துப்பொருள் மிக்கிருப்பதால் சித்த வைத்தியத்திலும் ஆயுர்வேத வைத்தியத்திலும் ஓர் ரஸாயன தொழிற்சாலை ஏற்ப டுத்தி திராவகங்கள், செந்தூரங்கள், லேகியங்கள், தைலங்கள் முதலியன செய்து அனுப்பலாம்.

986 ஆனி 22 சமேகாதர பாவத்தில் இரிக்குந்ந கர்ணல் ஸாகிபினு (மகாராஜா கற்பனை)

தோவாளை முகத்து சர்வாதிகாரம் விசாரிக்குந்ந ராமன்பிள்ள குடியானவன்மாரோடு ஏறிய உபத்திரவம் செய்து கைக்கூலியும் பற்றுந்ந பிறகாரம் ஆவலாதி உண்டாக கொண்டு அவனே வரத் தக்க வண்ணம் எழுதி அயச்சிரிக்குந்நு. ஆமுகம் விசாரிக்குந்ந தினு ஆகஸ்தீசுவரம் முகம் விசாரிக்குந்ந ஹரிஹர அய்யனேயும் அகஸ்தீசுவரம் முகம் விசாரிக்குந்நதினு சங்கரநாராயணனேயும் நிச்சயிச்ச பிறகாரமெல்லாம் எழுதி வந்நிரிக்குந்நு. தோவாளை முகத்து இராமன் பிள்ளயே வருத்த விசாரிச்சு ஆ அவஸ்தைக்கு எழுதி வரிகயும் வேணம்.

பெருமாள்புரத்திலிருந்த கஸ்தூரி ராஜு என்ற பிரபு ஓர் வெள்ளாளனையும், ஓர் வெள்ளாட்டியையும் அடிமையாகக்கொண்டவர்களை நன்மைக்கிருத்துவதுபற்றி அழகியபாண்டியபுரம் பெரிய வீட்டு முதலியார்க்கும் (நாஞ்சிக்குறவன் மந்திரிகுலத்தார்) இவருக்கும் வழக்கு நடந்தது. மகாராஜாவின் *கட்டளைப்படி ஸர்வாதி இராமன் என்பவர் சமாதானமாக வழக்கைத் தீர்த்து வைத்தார். (பெரிய வீட்டு முதலியார் ஓலைப் பிரமாணம்) கஸ்தூரி ராஜுவின் சொத்துக்கள் தெற்கூரில் இன்றுமுள.

## திருப்படி தானம்.

திருப்படிதானத்தில் ஸ்ரீ பத்மநாப சுவாமிக்கு ஆரையூரைச் சேர்ந்த தோவாளைப்பிடாகை முதற்கொண்டு காத்துக் கொள்ள விண்ணப்பித்ததால் ஸ்ரீ பத்மநாபனுக்கு முதன்முதல் ஆரைவாய் மொழியைப்பற்றிய நினைவே இருக்கிறது, அவர் கடைக்கண்ணும் படியாமலில்லை. அவர் எல்லா ஊர்களையும் காத்து வந்தாலும் மகாவிஷ்ணுவும் மன்னர்பிரானும் செய்த உடன்படிக்கையின்படி திருவாங்கூர் அரசர்களுக்கும் சுவாமிக்கும் ஆரையூரைக் காத்துக் கொள்ளும் பொறுப்பு முதன்மையானது.

சுண்ணும்புக்கல் நீற்றல்:— திருவாங்கூரில் மிகவும் சுருங்கிய இடத்தில்தான் இக்கல் உளது. இக்கல் பூமியின் விசேடத்தால் கிடைக்கின்றது. லெப்டினேட் என்ற கல்லைப்போன்றது. லேசான வெள்ளைநிறம். இதனால் சீதோஷ்ணநிலை மாறும். சுண்ணாம்புக் களி, கார்ன்ட், குவார்ட்ஸ், மாகினேட், இல்மனேட் போன்றவையுள. இதனை நன்குபரிசோதித்து அபிவிருத்தியாக்கவேண்டும். இங்கு பாறைகளிலுள்ள பொருள்களை ஆராய்ச்சி செய்திருக்கின்றனர்.

## இரும்பு.

இவ்வூரில் 15 அல்லது 16 அடி ஆழத்தில் தோண்டினால் இரும்புத் தாதுப்பொருள் காணப்படுவதாய்த் தெரிகின்றது. ஒரு காலத்தில் இரும்புத்தொழில் சிறப்பாகச் செய்யலாம். ஏற்றுமதியும் ஆகும். (S. M. 116-ாம் பக்கம்) இங்கே இரும்புத் தொழிலாளர் பலருளர்.

கட்டிடங்கள்:— திராவிடர்களின் பழைய நாகரீகத்தையொட்டிய கட்டிடங்கள் தென் திருவாங்கூரில் மிகுதியென ஸ்டேட்ஸ் மானுவல் கூறுகின்றது. ஆலயங்கள், மடங்கள், வீடுகள் இவ்வூரின் பழைய நாகரீகத்தைக் காட்டுகின்றன. பனையோலை வீடுகள் மிக்கிருந்தன. நாளடைவில் அவையெல்லாம் மாற்றி ஓடிட்டார்கள். தற்போது காணும் கட்டிடங்கள் திருநெல்வேலி மதுரை முதலிய பாண்டிநாட்டு ஊர்களின் மாதிரியான காரைவீடுகளே. பார்க்க அழகாயிருக்கின்றன. நாஞ்சிநாட்டில் இம்மாதிரியில்லை.

பெருமாள்குட்டிக் கரையாளர் என்பார் பெயரால் பெருமாள்புரம் என்று வழங்கினர். அவர் ஓர் பிரபு. அவர் காலம் முந்தியது. முதலில் கோட்டைக்குக் கிழக்கே இருந்தனர். பின்னர் இங்கு குடியேறினர். அவரது வீடு தெற்குப் பள்ளிக்கூடத்தின் கீழ்பால் வண்டிப்பேட்டையின் அருகிலிருந்ததாம். அவரது மனைகளில் இறை ஒழிவான 12 மனைகள் இன்றும் காணப்படுகின்றன. 920-ல் கோட்டை கட்டிய சிற்பி பெருமாள்குட்டிக் கரையாளனது குலத்தைச்சேர்ந்த ஆண்டார்பிள்ளை கரையாளனுக்கு ஓர் விசித்திர வேலைப்பாடமைந்த திரிகைக்கல் பரிசாகக் கொடுத்திருக்கின்றான். அத்திரிகையில் கரையாளனது பெயரும், குமாரனுசாரியென்ற சிற்பியின் பெயரும் எழுதப்பட்டிருக்கின்றன. இன்றும் அத்திரிகைக்கல்லைக் காணலாம்.

## தாணுமாலயன் புதூர்.

தாணுமாலயன் என்ற ஒருவரால் இப்பெயர் ஏற்பட்டது. 328 ஆண்டுகளுக்குமுன் இவ்வூரில் ஊர்க்கணக்காயிருந்தவர் வீட்டுப் பிரமாணங்களின் குறிப்பினால் இது தெரியலுற்றேன்.

கிருஷ்ணபிள்ளை பௌஸ்தார் இங்கே பிரதானியாயிருந்திருக்கின்றனர். அவர் மனைவிக்கு அம்மச்சியெனும் பட்டம் இருந்ததாம். மிக்க செல்வம் படைத்தவர். அவர்கள் வீடும் உளது.

இராமப்பணிக்கர் என்பார் பெரிய பணக்காரர். இவ்வூரில் இன்று காணப்படும் எல்லாக்கட்டிடங்களிலும் பழமையும் உறுதியும் உடையது அவர் கட்டிடமாகும்.

கொல்லம் 914-ல் ஆரையூரில் முதற் கண்டெழுத்தும் 978-ல் மீண்டும் கண்டெழுத்தும் நடப்பாயிற்று.

தோவாளைத் தாலுகாவில் 277 ஆட்கள் வீதம் ஒருசதுர மைலுக்குள் தங்குகின்றனர். இத்தாலூகாவில் 1112-ல் 14165 ஏக்கர் நெல், 498 ஏக்கர் தென்னை, 834 ஏக்கர் மரச்சீனி, 7 ஏக்கர் கரும்பு, 387 ஏக்கர் தேயிலை, 60 ஏக்கர் காப்பி இவை பயிராயின. 141·84 ச. மைல் உளது. 43324 ஜனங்களுளர்.

தோவாளைப் பகுதி 19·57 ச. மைல். நனைவுள்ள பூமி 1771 ஏக்கர். புதுவல் பூமி 46·79.

தோவாளைச் சானல்:— நீளம் 52½-மைல். பழைய நிலம் 4639 ஏக்கர். புதிய நிலம் 7111 ஏக்கர். குளங்களும் புறம் போக்கும் திருத்திய நிலங்கள் 1688 ஏக்கர். திருத்தவேண்டிய பூமி 871 ஏக்கருமாகும்.

"காம்புவிட்டுக் கன்றுண்ணும் தோவாளைக்கால்"

நாஞ்சில் வெண்பா.

பாங்குகள் சுருக்கம், லைப் இன்ஷூரன்ஸில் பலரும் சேரவேண்டும், சவண்மென்று பப்ளிக் பிராஞ்சு நலம், ஸேவிங்ஸ் பாங்கில் பணம் மிகுதியாய்ப் போடவேண்டும்.

---

## அத்தியாயம் 6.

## தருமங்கள்.

### மடு மரணக்கல் வெட்டு,

ஆரைவாய்மொழியில் தெற்கே நாவற்சாலையின் கீழ்பால் "மடத்துவிளை" எனும் பெயருள்ள ஓர் விளையின்கண் இம்மடு மரணக் கல்வெட்டுளது. இதுவரையிலும் வெளியாகாத கல்வெட்டு. குளத்தின் தண்ணீரில் வீழ்ந்திறந்த ஒருவன் நற்பேறு பெற அவன் பின்னோர்கள்விட்ட தருமமாகும். இத்தகைய கல்வெட்டு மிகச் சுருக்கமே. இக்கற்றூணை இப்போது ஓர் இசக்கியம்மனாக வழிபடுகின்றனர். அதன் நாற்புறங்களிலும் எழுதப்படிருக்கின்றது. 270 ஆண்டுகளுக்குமுன் உள்ளது.

| வரி. | முதற் பக்கம். |
|---|---|
| 1. | ஹரி ஸ்ரீ: சகாத்தம் |
| 2. | கதுருநாகூ'டுரு ன் மேல் |
| 3. | ஞுல் செல்லா நி |
| 4. | ன்ற கொல்லம் |
| 5. | ஆாசமகூ ஞு புரட்டாதி |
| 6. | மாதம்உமஎஊஎழுதினமடு |
| 7. | ம்ரண பத்திரமா |
| 8. | வது வட வாத்து |
| 9. | காட்டூர் இராமன் |
| 10. | இராமன் வகையா |
| 11. | ன புதூர் நாஞ்சி |
| 12. | ஞட்டு ராமன்பு |
| 13 | து வூரில் வக்க |
| 14 | ஞ விளையில் கி |
| 15 | ணறும் வெட்டி ம |
| 16 | டமுங் கட்டுகை |
| 17 | யில அந்த மட |
| 18 | த்துக்கு நம்முட |
| 19 | கணக்காக வி |
| 20. | ட்ட சுவாதியமா |
| 21. | வது ஷி புது வூரி |
| 22. | ல் வக்கஞவிளை |
| 23. | க்கு எல்லை யா |
| 24. | து கிள எல்லை ம |
| 25. | ஞ்சஞ விளக்கு மேற் |
| 26. | கு தென் எல்லை |
| 27. | இராச பாதைக்கு |
| 28. | வடக்கு மேலெல் |
| 29. | கை புளியன் விளை |
| 30. | க்கு கிழக்கு வட எல் |
| 31 | கை சடையஞ உ |
| 32 | டைப்புக்குளத்து ம |
| 33 | று காக்கலைக்கு தெ |
| 34 | ற்கு ஆக இன்னுங் |
| 35 | கெல் கைக்குள்ப |
| 36 | ட்ட விளை பன்னிர |
| 37 | ண்டு ஏர் த்தரையி |
| 38 | ல் மடங் கட்டினது |
| 39 | ம் கிணறு வெட்டி |
| 40 | னதும் இரண இய |
| 41 | ாத்தறை போக நீ |

| வரி. | இரண்டாவது பக்கம். |
|---|---|
| 1 | க்கிப்பத்தே |
| 2 | ர்த்தரையு |
| 3. | ம் இதுவு |
| 4. | ம் இதன் |
| 5. | மேற்கு க |
| 6. | ணியான் |
| 7. | விளையெ |
| 8. | ன்று பெயர் |
| 9. | பெத்த வி |
| 10. | ளைக்கு எல் |
| 11. | கையா |
| 12. | வது கிள |
| 13. | எல்லை |
| 14. | மறவன் |
| 15. | துண்ட |
| 16. | த்துக்கு |
| 17. | மேற்கு தெ |
| 18. | ன் எல்லை |
| 19. | க இராச பா |
| 20. | தைக்கு |

| வரி. | இரண்டாவது பக்கம். |
|---|---|
| 21 | வடக்கு மே |
| 22 | லெல்லை |
| 23 | க தோவா |
| 24 | ளை மேல் எ |
| 25 | ல் கைக்கு |
| 26 | கிழக்கு வட |
| 27 | எல்கை |
| 28 | தோவா |
| 29 | ளைக்குளத் |
| 30 | து மாரி |
| 31 | வாய்க்கு |
| 32 | தெற்கு ஆ |
| 33 | க இன்று |
| 34 | ங்கெல் |
| 35 | கைக்குள் |
| 36 | பட்டவிளை |
| 37 | பதினஞ் |
| 38 | சேர்த்தறை |

| வரி. | மூன்றாவது பக்கம். |
|---|---|
| 1 | யும் ஆக வகையி |
| 2 | னால் இரண்டு |
| 3 | ம் மண்ணடங்க |
| 4 | மரமடங்க நாம் |
| 5 | இந்த தன்மத்துக்கு |
| 6 | நம்முட கணக்காக |
| 7 | விட்டு பட்டயமும் |
| 8 | எழுதிக்கொடுக்கை |
| 9 | யில் இந்த மடத்தி |
| 10 | ல் இருக்கிற பேர் |
| 11 | இந்த விளை இரண் |
| 12. | டு உழுது யாவி |
| 13 | ச்சுக்கொண்டு |
| 14 | தன்மத்தண்ணீ |
| 15 | ரும் வாத்து சித்தி |
| 16 | ரைத் தீத்தத்துக்குத |
| 17 | ன்மக்கஞ்சியும் |
| 18 | வாத்து வந்த பா |
| 19 | தேசிக்கு உப்பு |
| 20 | ஊறு காயுங் |
| 21 | கொடுத்து இருந்து |
| 22 | இந்த பிறகாரம் |
| 23 | தன்மம் நடத்தி |
| 24 | கொள்வார |
| 25 | ாகவும் இந்த |
| 26 | படி ஆதி சந்த |
| 27. | திராவ பெற |
| 28. | கேசமே இந்த |
| 29 | தன்மமு ந |
| 30 | டத்தியா விச்சு |
| 31 | க் கொள்வாரா. |

| வரி. | நான்காவது பக்கம். |
|---|---|
| 1 | கவும் இ |
| 2. | ந்தபடி |
| 3. | க்கு வட |
| 4. | வாத்து |
| 5. | காட்டூர் |
| 6. | இ ரா மன் |
| 7. | இந்த தன் |
| 8. | மத்துக்கு |

| வரி. | நான்காவது பக்கம். | வரி. | நான்காவது பக்கம். |
|---|---|---|---|
| 9. | விட்ட சுவா | 22 | ரா கவும் |
| 10. | தியத்துக்கு | 23 | இ ந்த தன் |
| 11. | அ கிதம் செ | 24 | மத்தை |
| 12. | சய்த பேர் | 25 | பரிபால |
| 13. | கள் கெ | 26. | ணம் செய் |
| 14. | ங்கை க | 27 | த பேர்க |
| 15. | ரையில் | 28 | ள் அசுப |
| 16. | கா ரா ம்ப | 29 | தியாக |
| 17. | சுவை | 30 | ம் செய் |
| 18 | கொண் | 31 | த பலம் |
| 19 | ண தோஷ | 32 | பெறுவா |
| 20 | முங்கை | 33 | ராகவும் |
| 21 | யேப்பா | | |

வைகைக் குளத்தைத்தான் இராமன்புதூர் குளம் என்பர். வரிகள் 11-13 இராமன்புதூர் ஆரையைச் சேர்ந்தவூர். குருசடிக்கு மேற்கே இருக்கின்றது.

வரிகள் 36—37 அங்காளில் விளைகளுக்கு ஏக்கர் லேன்று என்றில்லாததால் 12 ஏர்த் தரையென்று எழுதினர். சுமார் ஆறு ஏக்கர் இருக்கும்.

2-ாம் பக்கம், 15—16 சித்திரைத் தீர்த்தம்:— சித்திரை மாதப்பிறப்புத் தீர்த்தம் என்றும், சித்திரை மாதம் சித்திரை நாள் தீர்த்தம் என்றும் கூறலாம்.

4-ாம் பக்கம் 9—10 சுவாத்தியம்:— பாக்கியம், சுகம்.

11- அகிதம்:— பகை (இதமின்மை).

28—29 அசுபதியாகம்:— அசுவமேத யாகம்.

தருமங்கள் பல செய்திருக்கின்றனர். பற்பல கோயில்களுக்கும் பூசைக்கும், மாலைகட்டவும், மண்டபங்கள் செய்யவும் சொத்துக்கள் விட்டிருக்கின்றனர். கல்வெட்டுகளும் ஓலைப்பிரமாணங்களும் பார்க்க.

## தருமங்கள்.

கர்ப்பத்துடன் குழந்தை பெறுமல் இறந்துபோன பெண் களுக்குச் சுமைதாங்கித் தருமங்கள் பலர் செய்திருக்கின்றனர். பெரிய ரஸ்தாக்களின் பக்கத்தில் காணலாம். கல்லிலும் எழு துவர். இது சாத்திர விதிப்படி செய்வதாகும்.

முப்பந்தலின் சமீபமுள்ள சுமைதாங்கிக் கல்வெட்டு 1005-ாம் ஹூ தை மாதம் 8-ாம் தேதி பூச நட்சத்திரம் சிவணைணந்தபெரு மாள் உபயம். பற்பல தருமங்களும் பற்பல நோக்கங்களோடு செய்திருக்கின்றனர்.

வணிகர் தெருவில் கரடிமாடன் கோயிலின் வடக்குச்சுமை தாங்கியில் காண்பது.

1009-ம் ஹூ தையி மீ 19-ம் தேதி ஆரைவாய்மொழி விடுமாடன் செட்டியாற் மகன் சுடலைமுத்து செட்டியார் வைச்ச சிமைதாங்கி வயினுர்துணை.

காணியாளன் அம்மன்கோயில் சுமைதாங்கி

| | |
|---|---|
| 1. உ கூாடும | 6. பிள்ளைம |
| 2. எளு ஆவ | 7. கன் சித |
| 3. ணி மாதம் | 8. ம்பரம்பி |
| 4. மரு உ பண் | 9. ள்ளைக்கு ரா |
| 5. டாரம் | 10. மசுவாமி |
| | 11. துணை. |

இது செண்பகராமன் புதூருக்குப் போகும் ரோட்டின் வட பாகத்திலிருக்கிறது. அந்த ரோடு 1050 ல் வந்தது. அதற்கு முன் ஒற்றையடிப்பாதை உளது. அதில் சுமைதாங்கி அமைத்தனர்.

ஆரையூரில் பழையகாலங்களில் குதிரைகள் பல இருந்தன. மாடுகளும் ஏராளம். குதிரைகளிலும் மாடுகளிலும் பொதிக ளேற்றிப் பணகுடி, பூதப்பாண்டி முதலிய இடங்களுக்குச் செல்வர். சிலர் தலையிலும் சுமை தூக்கிச்செல்வர். தலைச்சுமடு தாங்குவோர் சுமைதாங்கிகளில் இறக்குவர்.

கோயில்களும் ஏராளமுள. பக்தி நெறி வளர இவை அவசியமே. காலத்திற்கேற்றவாறு சீர் திருத்தத்துடன் பரிபாலனம் செய்யவேண்டும். பலரும் பூசைக்குச் சொத்து எழுதி வைத்திருக்கின்றனர். பல கோயில்களும் சமூகத்தார் மேற்பார்வையிலிருக்கின்றன.

## கோயில்களும் தருமங்களும்.

வடக்கூர் தென்மேற்கு மூலையில் இருக்கும் கன்னிவிநாயகர் கோயிலில் புதியகோட்டைகட்டிய ஆசாரிமார்கள் திருப்பணிசெய்ததால் 920-ல் கல் மண்டபம் அமைந்தது. அதில் மூத்த பிள்ளை வீட்டாரின் உருவச்சிலை இருப்பதால் கொல்லம் 9-ம் நூற்றாண்டில் கோயில் கட்டியிருக்கலாம். (ஓலைப்பிரமாணத்தாலறிக)

## கிணறுகள்.

பற்பல ஜாதியாரும் பற்பல கிணறுகள் வெட்டியிருக்கின்றனர். தண்ணீர் வசதி குறைந்ததால் கிணறுகள் ஏராளமுண்டு. பெரிய குளத்தில் வேளார், வணிகர், ஈழவர் முதலிய ஒவ்வொரு ஜாதியார்க்கும் ஒவ்வொரு கிணறு வெட்டப்பட்டிருக்கின்றது. ஒரு கிணற்றில் கல் வெட்டுமுளது.

1061-ம் ௵ வைகாசி ௴ 8 ௳ ஆரைவாய்மொழி பணிக்கமாராகுந்த ஊருகாறர் சுடலைமுத்து மாடசுவாமிப்பணிக்கர் முதல் பேர்கூடி கெட்டிய கிணறு. கடவுள் துணை. (கல்வெட்டு)

தண்ணீர் மடம் கட்டியிருக்கின்றனர். முப்பந்தல் மடம் பேர்பெற்றது. சொத்து ஏராளமுண்டு. யாத்திரைவாசிகளுக்கு இரவில் உணவளிக்கும் தர்மம் உளது.

ரோமன் கத்தோலிக்கர், இரட்சணிய சேனை, லூதரன்மிஷன், லண்டன் மிஷன்களுக்கும் தனித்தனி தேவாலயங்களும் உண்டு. லண்டன்மிஷ்ன் தேவாலயம் மிகவும் பெரியது. பெருமாள்புரம் நாடார் சமூகத்திற்கும் சில கோயில்கள் உள.

## பெருமாள்புரம் மயானத்திலுள்ளது.

1. கூாகூமெஉ ளுசித்
2. திரை மீ மெஅ ஊ ஆரை
3. வாய் மொளியிலிருக்கும்
4. வண்ணான்முத்து மகன்
5. மாத்தாண்ட மூப்பன்
6. வைச்ச சிமடுதாங்கி
7. மூப்பனுக்கு நயினார்
8. துணை.

சுபேதார் கிணறு:— பெரிய குளத்தில் காணப்படுகின்றது. பட்டாள வீரர் பெயரால் விளங்குகின்றது. படையெடுப்புக் காலத்தில் சிலர் சாமான் பெட்டிகளை இக்கிணற்றில் இட்டனர். இவ்வூராரில் சிலர் பட்டாளத்தில் சுபேதார் முதலிய உத்தியோகத்தில் இருந்தனர்போலும். புள்ளிப் பட்டாளத்தார்க்கிது பயன்பட்டது. படையெடுப்புக் காலங்களில் நகையும் பணமும் வைத்திருக்கும் பெட்டிகளை இக்கிணற்றில் போடுவார்களென்பது வழங்குமொழியாம்.

## அகலிகையூற்றுக் கல்வெட்டு

ஆண்டார் பல தருமங்கள் செய்திருக்கின்றனர். ஆர்க்கியாலஜிக்கல் ஸீரியஸில் வெளியாக்கினது.

13. நாஞ்சிநாட்டு ஆரைவாய்
14. மொழியில் நல்லகு
15. ட்டி ஆண்டாரேன் அக
16. லிகை யூற்றங்கரையி
17. ல் எங்கள் மாமனூர் உடை
18. யவனடியான் ஞானி
19. யார் கட்டிவைத்த கல்
20. மடத்து நல்ல விநாயக
21. பிள்ளையார் ஸ்ரீ பண்டார
22. த்துக்கு உதகபூறுவத
23. ன்மதானப் பிறமாண
24, ம் எழுதிக்கொடுத்த பரி
25. சாயது ஷெடி மடத்து
26. க்கு விட்டுக்கொடுத்த நி
27. லமாவது ஷெடி யூரில்

நல்ல குட்டி ஆண்டார் என்பவர் பெரிய பணக்காரர். அவருக்குப் புத்தேரி, பூதப்பாண்டி, அழகியபாண்டியபுரம், ஆரை இவ்வூர்களில் எல்லாம் நிலங்கள் இருந்தன.

117. மடத்திலிருக்கிற பண்டா
118. ரத்துக்கு————
120. பாக்கோடி அய்யன்
121. கோவில் துவாதசிக்கு
123. திருப்பள்ளிச் செக்கும்
124. பங்குனி உத்தர திரு

125. நாளுக்குமயேசுரபூசைக்கும்
126. தூரக்காறர் அம்பலக்காற
127. ருக்கு சோறு கொடுக்க
128. சித்திரை பரணிக்குமயே
129. சுரபூசைக்கு
130. சிவன் ராத்திரி பூசைக்கு
131. திருக்கார்த்திகைக்கு
132. திருக்கண்சார்த்துக்கு
133. தாணுவுக்கு சோம
134. வாரம்தோறும் மாலைகொ
135. ண்டு போறதுக்கு

பிள்ளையார் பூசைக்கும் மடம் ஓலை கட்டவும் மண் வைக்க கல்லில் எழுதி வைத்தனர். ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களை அக்காலத்திலே பெரிதும் மதித்திருக்கின்றனர். வரி வசூலிக்கும் அம்பலக்காரருக்கும் தூரக்காரருக்கும் திருவிழாவில் விருந்தளித்திருக்கின்றனர். மகேசுவர பூசை சிவனடியார்களுக்கு உணவளித்தலாம். சைவ பற்றிற்கு தக்க சான்று. பரணித்திருநாள் சிறுத்தொண்டர் திருநாளாம்.

கொல்லம் 887 ல் இவ்வூர் சாத்தா உடையான் பிள்ளை எழுதி வைத்த தருமத்தில் சுசீந்தை, செந்தூர், நாகை, பூதை முதலிய ஊர்க்கோயில்களுக்கு மாலைகட்ட மான்மியம் விட்ட பிரமாணத்தில் ஆரையில் பரக்கோடி அய்யனுக்குத்தான் தர்மம் எழுதினர். மீனாட்சி, சொக்கலிங்கத்தின் பெயர் கல்வெட்டிலும் இவ்வோலையிலும் குறிக்கப்படவில்லை. இதனால் இதற்குச் சிறிது பிந்தி புதிய கோட்டை கட்டின காலத்தில் முப்பந்தலில் நின்றும் சுவாமியையும் அம்மனையும் கொண்டு வந்து பிரதிட்டித்தனர் என்று சிலர் கூறுவதற்கு இவையும் ஆதாரங்களாம். ஆதியில் பரக்கோடி அய்யன் பெயரால் உள்ள தேவஸ்தான ரிக்கார்டுகள் பின்னர் சொக்கலிங்கத்தின் பெயரால் மாறியிருப்பனவும் சந்தேகத்திற்கு இடனாம். மூத்தபிள்ளை வீட்டார் தருமங்களை ஓலைப்பிரமாணங்களில் பார்க்க.

## தோவாளைக் கல்வெட்டு. நம்பர் I.

### காக்கும் விநாயகர் கோயில் பாறையிலுள்ளது.

1. அருளிச்செயல் கொல்லம் எூஅ ளு கார்த்திகை மீ அ உ பூறுவ
2. பக்கிழத்து திறையே தெசியும் நாயருட்சையும் பெற்ற அசுவதி நாளில்

3. சயதுங்க நாட்டுச் சங்கரநாராயணவென்று மண்கொண்ட பூதல வீரச்

4. சிறிவீர உதய மாத்தாண்ட (வர்மர்) திருப்பாப்பூர் மூத்தவராய நாம் நாஞ்சி

5. ஞட்டு சுசீந்திரத்து கோதுகுல சபையாரில் (ஆரியன்) சொக்கன் பெரிய பெருமாள்

6. மார்த்தாண்டப்பிரமாதி ரயனுக்கு நாஞ்சிநாட்டு தோவா ளையில் நயிஞர் யிவையாவஞு

7. கோயிலுக்கு சீ பண்டாரகணக்கும் எழுதிய பழையப படிக்கு உடமையும் பற்றிக்கொண்.

8. டு ஆசந்திரதாரவர் சந்ததிப்பிறவேசமும் கல்லிலும் செம்பிலும் வெட்டிவிச்சுக் கணக்

9. க்கும் எழுதிய பொதும் படி. களக்காடான சோழ குல வல்லிபுரத்து விர

10. மாத்தாண்ட சதுர்வ வெதிமங்கலம் என்று நம்பொரால் வைய்த்த

11. அகரச்சிமெயில் புதிய வீட்டில் நாம் விடாயிருந்து கற் பித்தமைக்கு

12. தானுப இன்ஞள் முதல் இததரகுபிடி பாடாக கணக் கும் எழுதிக்கெ

13. ரண்டு உடைமையும் பற்றிப் பொதும்படி பாற்க இவை இப்படிக்கு இராமன் இரா

14. மன் எழுதது (மண)

சரித்திரப்பிரதானமானது. உதய மார்த்தாண்ட மன்னன் சுசீந்திரத்திலிருந்த ஆரியன் சொக்கன் பெரிய பெருமாளுக்கு சி பண்டாரக்கணக்கு முதலியன அளித்தது. ஆர்க்கியாலஜிக்கல் ஸீரியஸில் வெளியிட்டிருக்கின்றனர்.

## தோவாளைக் கல்வெட்டு. நம்பர் II

### காக்கும் விநாயகர் கோயில் கல்வெட்டு.

1. அருளிச் செய்தல் நாஞ்சிநாட்டுத் தோவாளையில் நயினார் ஆதித்த விண்ணகர் எம்பெருமானுக்கு உச்சி பூசை

2. யொடு கூட வைச்சு நிவேதிக்குமாறு கற்பித்த வகைக்கு நாள் ஒன்றுக்கு அமுது படி மடை இருநாளிக்கு நெல்லு அஞ்ஞாழியும்

3. மேற்படி கோயிலில் பிராமணர் ஊட்டுக்குவா இருபத்து நாலுக்கு நாள் ஒன்றுக்கு அ தூணி பதக்கு அறு

4. நாழிக்கு நெல்லு கலனெ முக்குறுணியும் மூரம்பின்னும் உப்பின்னும் நெல்லு எழுநாழியும் கூட நாள் ஒன்றுக்கு

5. நெல்லு கலனே தூணி நாஞழியாக ஆண்டு ஒன்றுக்கு அதிகம் உட்பட நாள் முன்னூற்றறுபத்தஞ்சுக்கு கோட்டை

6. (முன்னூற்றைம்) பத்தாறே முக்கால் நெல்லு அறுநாழி யும் உடமை பெறும் பெற்று ஆண்டு ஒன்றுக்கு கோட்டை தொண்ணூறும் கூட கோட்டை

7. முன்னூற்றைம்பத்தாறே முக்கால் நெல்லு அறுநாழி யும் வெஞ்சனவகைக்கு ஆண்டு ஒன்றுக்கு பணம் அஞ் ஞூற்றெழுபத்

8. தொன்றையரைக்காலும் இவ்வவக உள்படும் பூசையும் நடந்து பொருமிடத்து முடக்கம் வருதலாகாது நடத்திக் குடுக்குமாறு கற்பிக்கை

9. கயில் பெருமாள்ளுக்குக் குடுக்கவும் பெருமாளுக்கு எதிர்த்தப்பூசை யொடு கூட காஞ்சிபுரம் கொண்டான் மடத்தில் நின்று மங்கதி பெருமாறு கர்ப்பி

10. த்த நாள் ஒன்றுக்கு அதிகம் கொண்ட நாஞழிக்கு நெல்லு குறுணி யிருநாழியும் மெற்படி மடத்தில் மனிச்சம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு நெல்லு

11. குறுணி யிருநாழியுமாக ஆண்டு ஒன்றுக்குக் கோட்டை நாற்பத்து மூன்றே எட்டு மா முக்காணி நெல்லு இரு நாவுரியும் சிவதத்துக்கும் சுவாத்திகமு

12. ம் திருவட்டாற்றில் அமுதுபடி நெல்லிலெடுக்க சத்தக் கூலிக்கும் பணம் எழுபத்தொன்றரையுங்கூட கோட்டை நானூற்றிருபத்தி மூ

13. ன்று மாமுக்காணி நெல்லுக் குறுணி யுரி பணம் அறு நூற்று நாற்பத்திரண்டேயரைக்காற்கும் கூடி விட்டுக் குடுத்த வகை

14. தோவாளைப்பற்றில் வில்லிச் சோக்குளம் நிலம் நாற்பத் தொரு முக்காணியரைக்காணியின் அரையே மாகாணி யும் மேற்படி பற்றில் புறத்தா

15. ல் நிலம் பத்து மாவரையரைக்காணி முந்திரிகையும் நம்பி குளம் நிலம் ஒன்பதுமாவும் நங்கைக்குளம் நிலம் ஆறுமாவும் தாழ

16. க்குடி பற்றில் தாமரைகுளத்தில் கீழ முதல் கண்ணாறு முதல் இரண்டாங் கண்ணாறு வரை நிலம் பதினாறுமா வரைக்காணியி

17. ன் மூன்றுமா முக்காணியும் மேல் கரை பதின்மூன்றாங் கண்ணாறு நிலம் பதின்மூன்று மாவரைக்காணி முந்தி ரிகையின் மாகா

18. ணியும் கூட நிலம் தொண்ணூற்றாறு மாமுக்காணியரைக் காணியின் முக்காலே மாகாணியும் தோ

19. வாளைப்பற்றில் குலசேகரப் பெரேரி பெருமாள்க் குளத் தின் கீழ் அகரப்பற்றில் வாடா கடமையும் ஆண்டு ஒன்று

20. க்கு பணம் இருபத்திரண்டும் கூட நயினார் ஆதித்த வின் ணகர் எம்பெருமான் ஸ்ரீ பண்டாரம் கையாண்

21: டு கொண்டு இந்தப்படிக்கு பூசையும் ஊட்டும் நடத்தி பெருமாள் ஆதிகேசவப் பெருமாளுக்கு பூசைக்கும் மணிச்சு

22. த்திஹு வக சிவிதத்திஹும் இவ்வகையில் குறியும் கொடுக் கபோக மாறும் கொல்லம் அறுநூற்று எழுபதாமாண்

23. டு கும்ப ஞாயிறு இரண்டு சென்ற நாள்விட்டுத் தங்கெம் இது மேல்ப்படி நாள் முத்தலைக்குறுச்சியில் சிறி வீர கேரளே

24. சசரத்து புதியயெடத்து நாம் விடாயிருக்க இம்மார்க்கமே இன்னுள் முதல் கையாண்டு கொண்டு கல்லிலும் செம்

25. பிலும் வெட்டி மேல்படி சொல்லில் தானத்தாரும் பட்ட களும் கூட சந்திரா.

9-ம் வரியில் எதிர்த்தபூசை யென்பதை ஆர்க்கியாலஜிக்கல் வெளியீட்டில் தார்த்த பூசையென்று எழுதியிருக்கின்றனர். அது பிழை. எதிர்த்தபூசைதான் சாஸ்திரத்தில் உள்ளது. கல்லில் எதிர்த்த பூசையென்று தானிருக்கின்றது.

## தோவாளை கிருஷ்ணசுவாமி கோயில் கல்வெட்டு. III.

1. அருளிச்செயல் கொல்லம் எளஅ ளு காத்திகையும் ௰உ வ பூறுவ பக்கிழத்து திறை யொதெசியு

2. ம் நாயருட்சையும் பெற்ற அச்சுவதி நாள் செயதுங்க நாட்டு சங்கரநாராயண வென்று மண்கொ

3. ண்ட பூதல விர சிறி விர உதய மாத்தாண்டவர்மர் திருப்பாப்பூர் முத்த வாரய நாம் நாஞ்சிநாட்டு சுசீந்தி ரத்து

4. கொதுகுல சவையாரில் ஆரியன் சொக்கன் பெரியபெரு மாள் மாத்தாண்டப்பிரமாதி ராயனுக்கு நாஞ்சிநா

5. ட்டுதோவாளையில் நயிஞர் கிரி சீ கிட்டிணன்கோயிலுக்கு நாளது முதலுக்கு சீ பண்டாரக்க

6. ணக்கும் எழுதிய பழையபடி உடைமையும் நாள் ஒன்று சொறு மஞ் நாழியும்

7. ஆசந்திரதாரவர் சந்ததிப்பிற வெசமெ கல்லிலும் செம் பிலும் வெட்டிவிச்சு க்கொண்டு

8. பொதும்படி களக்காடான சோழகுலவல்லிபுரத்து விர மாத்தாண்ட சதுர்வ வெதி மங்கலம் என்று நம் பேரால்

9. வைய்த்த அகரச்சிமையில் புதிய வீட்டில் நாம் விடாயி ருந்து கற்பித்தமைக்கு தானும் இந்நாள் முதல் இத்த ரகுபிடிப

10. ரடாகணக்கும் எழுதிக்கொண்டு உடைமையும் பற்றிப் பொதும்படி பாற்க இவை இப்படிக்கு இராமன் இராமன் எழுதது

உதயமார்த்தாண்ட மன்னனது உருவச்சிலை சுசீந்திரம் கோயிலில் மணியடிக்கும் மண்டபத்தின் பக்கம் இருக்கின்றது. திருவாங்கூரில் இதுபோல் அழகிய கற்சிலை காண்பதரிது.

கல்வெட்டுகளில் எழுத்துக்களைத் திருத்தலாகாது. அது போல் இருந்தால்தான் நமபுவார்கள். சில குறிலெழுத்துக்களை நெடிலாய் வாசிக்கவேண்டும்.

பெருமாள்புரம் மாரியம்மன் கோயில் பாலத்தின் கிழக்கு ஆலமரத்தடியில் உள்ள சுமைதாங்கிக் கல்வெட்டு.

1. வ கசூஉ௰ஞ
2. சித்திரை மீ உ௰ரு வ
3. அரண்வாயி
4. மொழி சவுக்
5. கைக்கணக்கு சு
6. ந்தரமய்ய
7. ரவர்கட்கும்
8. ார × விசு
9. வனுதய்ய
10. ரவர் கழுக்கு
11. ம் மீனுட்சி
12. அம்மன்
13. துணை.

இவ்வூருக்கு அரண்வாய்மொழி என்ற பெயர் இக்கல்லில் மட்டும் தான் காணப்படுகின்றது.

4—5 சவுக்கைக் கணக்கு.

## அத்தியாயம் 7.

## கோயில்கள்.

ஆதிக்கோயில் வடக்கூரிலுள்ள சாஸ்தாங்கோயில் என்று அதன் அமைப்பால் அறியலாம். கொடிமரமும் பலிபீடமும் சாஸ்தாவின் நேரே உள. திருவிழாவும் சாஸ்தாவுக்குரிய பங்குனி உத்திர நாளிலாகும். பின்னர் கி. பி. 1310 ல் மதுரைப் பூசகர் மீனாக்ஷி சுந்தரேசரை இங்கு வைத்துப் பூசித்தனர். சிலகாலம் சென்றபின் முப்பந்தலில் ஔவைப்பிராட்டியால் பிரதிட்டிக்கப் பட்ட மீனாக்ஷியம்மன் சோமசுந்தரமூர்த்தி ஆகிய இரு விம்பங்களையும் கொண்டுவந்து இவ்வூரார் சாத்தாங்கோயிலின் வடபக்கம் பிராகாரத்தில சிறப்பாக பிரதிட்டித்தனர். பின்னர் அம்மையும் அப்பனும் முதன்மையாயினர். அதையொட்டி முருகன், நடேசர் தக்ஷிணாமூர்த்தி சண்டேசர் முதலிய மூர்த்திகளையும் பிரதிட்டித் தனர்.

மதுரையில் திருக்கல்யாணம் நடைபெறும் நாளில் இங்கும் திருக்கல்யாணம் நடைபெறும். மதுரையைப்போல் மீனாக்ஷி யன்னை சிறந்து விளங்குகின்றனர். மீனாக்ஷிகோயில் அமைந்த பின் இவ்வூரில் ஆண்களும் பெண்களும் மீனாக்ஷி சோமசுந்தரத் தின் பெயரிட்டு வழங்கினர். ஐயனார் பெயரும் வழக்கத்திலுளது.

மதுரையின் சம்பந்தம் ஏற்பட்டபின் இவ்வூரின் தெற்குள்ள குளத்தை வைகைக்குளமென்று அழைத்தனர். (கவண்மென்று ரிக்கார்டு) வைகைக்குளம் புரவிலுள்ள நிலங்கள் யாவும் மீனாக்ஷி சுந்தரேசர் பூசைக்கு விடப்பட்டன.

கி. பி. 1310-ஈமாண்டு மகமதியர் படையெழுச்சியில் மாலிக் காபர் கர்ப்பக்கிரகம் நீங்கலாக பல பாகங்களையும் மதுரைக்கோ யிலில் இடித்துவிட்டான். பராக்கிரம பாண்டியன் காளையார் கோயிலுக்குப் போய்விட்டான். பூஜை செய்யும் பட்டர்கள்பயந்து சுவாமியையும் அம்மனையும் பெயர்த்து வேறிடத்தில் வைத்து விட்டு அந்தத் தானங்களில் வேறு விம்பங்களை வைத்துவிட்டு சிறு தங்க விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு நாஞ்சில் நாட்டில் கிலுகிலுப்பைக் காட்டில் வந்து சேர்ந்தனர். புறப்படும்முன் குலசேகரப்பெருமாள் என்ற சோழனிடம் கருவூலம் இருக்

குமிடமும் சுவாமி வைத்த அறையும் கூறிச் சாவியும் கொடுத்து விட்டு பட்டர் குலத்தில யார்வந்து கேட்டாலும் அளிக்கவேண்டு மென்று செப்பேட்டில் எழுதி வாங்கிச் சென்றனர். (இது மதுரைக் கோயில் தால புத்தகத்திலுள்ளது) இங்கு வந்து ஆலவாய்மொழிக் கோயிலில் தான் தங்கியிருக்க வேண்டும். ஆரைவாய்மொழி ஊருக்கு மேற்கே போகவில்லை. முன்னரே மீனாக்ஷி சுந்தரேசரை முப்பந்தலில் பிரதிட்டித்திருப்பதை அறிந்து சுவாமியையும், அம்மனையும் இங்கே வைத்துத் தவறாமல் சிலகாலம் பூஜை செய்தனர். கிலுகிலுப்பைக் காடு என்பது ஆரைவாய் மொழி முப்பந்தல் காடுதான். காற்று விரைவாய் அடிப்பதால் கிலுகிலுவென்று மரங்களினுடையவும் மற்றும் சத்தமாயிருக்க லாம். காற்றூடி மலையென்று வந்ததும் இதுபோலவே. ஆகவே ஆலவாய்மொழி மீனாக்ஷி சுந்தரேசர் பெரும்பத்தர்களான மதுரைப் பூசகர்களாலும் பூசிக்கப்பட்டனர். பின்னர்ச் சிலகாலம் கழிந்து அவர்கள் மதுரை சென்றனர்.

இவ்வூரில் திருவாவடுதுறைமடம் அமைந்திருக்கின்றது. அகலிகை யூற்று தெப்பக்குளத்தின் மேற்கும் வடக்கும் பக்கங் களில் மண்டபம் கட்டி பல கற்பீடங்கள் இட்டிருப்பதால் பலர் தினமும் சிவபூசை செய்துவந்தனர் என்று தெரிகிறது. இது சைவ சமயத்தின் சிறந்த அறிகுறியாகும். அக்காலத்தில் சிவனெறி இங்கு வளர்ந்தோங்கியிருந்தது. திருவாவடு துறைமடத்தை ஒட் டிய கல்லவிநாயகர் கோயிலும் இருக்கின்றது. அதற்குப் பூசைக்கு இவ்வூர் பிரபல குடும்பத்தினரான உயர்திரு அகஸ்தியலிங்கம் பிள்ளையவர்களின் முன்னோர்கள் மானமியம் விட்டிருக்கின்றனர். கொல்லம் 872-ாம் ஆண்டு அகலிகையூற்றுக் கல்வெட்டுளது. சுசீந்திரத்தில் திருவாவடு துறைமடம் கட்டினபின்னர் தான் இங்கு மடம் கட்டினர். 300 வருடங்களுக்கு முன்னிருக்கலாம். ஐயக் தியப்ப நாயக்கர் ஒருமடத்திற்கு 8 மடம் கட்டினர். அதில் ஒன்று சுசீந்திர மடம். அதன்பின் இங்கும் அமைந்தது. நாஞ்சிநாட் டில் இன்றும் இவ்வூர் சைவப்பற்றிலும், தமிழ்ப்பற்றிலும் சிறந்து விளங்குகின்றது. தெற்கு ஊரிலும், வடக்கூரிலும், நடுவூரிலும் வள்ளன்மை மிக்க வெள்ளாளர் முதலியோர் வசித்து வருகின் றனர்.

இங்குள்ள பாறைகள் கற்பணிக்கு விசேடமானவை. கல் விம்பங்கள் செய்யும் அரும் சிற்பிகள் இங்கு வசித்து வருகின்றனர். கற்கோட்டை கட்டினவர்களும் இவர்கள் முன்னோர்கள் தான். அவர்கள் வடக்கூரில் ஓர் தெருவில் தங்குகின்றனர். தெற்கூர் பிள்ளையார் கோயிலும் கால ஆராய்ச்சியில் 350 ஆண்டுகளுக்கு முன்னர் என்று திட்டமாய்க் கூறலாம்.

வடக்கூர் முத்தாரம்மன்கோயில்:— மிகப் பழையது. கொல்லம் 997-ஆமாண்டு வைகாசி மாதம் 26-ஆம் உ நல்லமாடன் ஒளி முத்து என்ற வண்ணாரப் பக்தன் இக்கோயிலுக்கு மணி மண்டபம் செய்துவைத்திருக்கும் கல்வெட்டுக் கோயிலின் முன் பார்க்கலாம். அம்மனது மூலஸ்தானம் அதற்கு முன்னாலமைந்திருக்கும். பட்டாளக்கார் வழிபட்ட கோயில் என்பதற்கு 4 படை வீரர்களின் உருவச்சிலை நாட்டியிருப்பது தக்க சான்றாகும். வெடி மருந்துப்புரையும் அதன் சமீபத்தில் தான் உளது. அம்மனும் சுவாமியும் விசேட மூர்த்தங்களாம். இப்போது நல்லமாதிரியாய்ப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

மாரியம்மன் கோயில்:— கொடுங்கல்லூர்க்காரி ஓர் நாயர்ப் பெண்மணி 9 வயதிலே துறவியாகி பல இடங்களிலும் சென்று விட்டு இறுதியில் இங்குவந்து சேர்ந்தாள். அவள் பெயர் ஐயனப் பிள்ளை. முதலில் வடக்கூர் முத்தாரம்மன் கோயிலில் தான் தங்கியிருந்தனள். பின்னர் புதியகோட்டை கட்டி புள்ளிப்பட்டாளம் வந்தபின் வலிய யஜமான் காலத்தில் புள்ளிப்பட்டாளக்காரரிடமும் மற்றும் யாசகம்பிரித்து தெற்கூர் பெருமாள்புரத்தில் மாரியம்மன் கோயிலைக் கட்டினர். அப்பொழுது பெருமாள்குட்டிக் கரையாளரின் சந்ததியார் முதன்மையாயிருந்தனர். கொல்லம் 972-ல் இக்கோயிலுக்குச் சொத்துவாங்கிப் பூசைசெய்ய புத்திரன் கொண்டான்பிள்ளை என்பவரை அழைத்து ஏற்பாடு செய்திருக்கிறாள். (ஓலைப்பிரமாணம்) ஐயனப்பிள்ளை சன்னியாசினி 120 வயதுவரை வாழ்ந்து கார்த்திகை மாதம் அஷ்டமியிற் சமாதியானாள். சக்தி பூஜை செய்துவந்தாள். இன்றும் அவர்களுக்குக் குருபூசை நடைபெறுகிறது. அவர்கள் சமாதிமடமும் உளது. அப்பூசாரி குடும்பத்தினர் தான் பாரம்பரையாக இன்றும் பூசை செய்கின்றனர்.

ஆதியில் கோயிலின் பக்கம் எல்லாம் பருத்திகாடென்பர். அம்மன் மழை பெய்விக்கும் தெய்வமும் மாரி நோயைத் தடுப்பவளுமாம்.

## ஆலவாய் விற்பாட்டு.

கரைக்கோட்டை எல்லைவிட்டுக் காரணியே வாருமம்மா
ஆரையூர் எல்லையெல்லாம் ஆட்சிகொண்ட மாரிமுத்தே
வடக்கூர் முத்தாரம்மா வாய்ப்பாகக் காத்திடுவாய்
வடக்கு வாசல் செல்வியே மன்னர் போற்றும் காளியம்மா
கோட்டைக்கரை காவல்கொண்ட குணமருளும் பூதத்தானே
நாட்டைக் காக்கும் தேவதைகள் நான் வேறு கண்டதில்லை,
முப்பந்தலில் வீற்றிருக்கும் முன்னவளே என்தாயே
சத்தியம் பார்த்தருளும் தயவுடைய இசக்கியம்மா
கிருஸ்தவரும் கும்பிடும் கீர்த்திபெற்ற காளியம்மன்
தண்டமிழ்ப் பாவையவள் தாழ்விலாச் செல்வியவள்
கொண்டதொரு தோஷமெல்லாம் குணமாகச் செய்வாளவள்
என்குறையைத் தீர்த்தருளும் இசக்கியெனும் மாதாவே
அவ்வையெனும் பெயருடனே அன்பாக வீற்றிருந்தீர்
ஆடு கோழியறுக்கவரும அறிவிலா மக்களுக்கு
தேறுமொழி சொல்லுவது தேவியரே உன்பாரந்தான்
ஊறு செய்யும் பிள்ளைகளை உத்தமியே காத்தருள்வாய்
முஸல் மானும் வந்து நின்று முன்னின்று கும்பிட்டதை
பிசகாமல் பார்த்தேனம்மா பிடாரியரே உன்பெருமை
மோட்டாறில் வந்தவர்கள் மோகினியைக்கண்டவுடன்
கேட்டாரும் வியப்புறவே கீழிறங்கிப் பணமிடுவர்
நெற்றியிலே நீறு பூசி நின் மலராய்ச் செல்வாரன்றோ
வெற்றியெல்லாமிது போலே வேறிடத்திற் காணேனே
நாடார்கள் கும்பிடும் நாயகியார் கோயிலிலும்
வாடாமற் சென்று வழி பாடுசெய்ய வேண்டும்
உன்பெருமை சொல்லாமல் உன்னருளைத் தேடாமல்
என்பெருமை சொல்லி இசைத்தேனே ஈசுவரியே
என்சிறுமை தீர்ப்பதுவே இசக்கியம்மன் பொறுப்பாமே.

நூலாசிரியன்.

சாத்தாவிற்குத் தான் ஆதியில் திருநாள் ஏற்பட்டது. திருவிழா ஏற்படும் முன் தெரு வீதிகள் அமைந்திருக்கலாம்.

கன்னிவிநாயகர்:— இக்கோயில் மண்டபம் கட்டியது புதிய கோட்டை கட்டின சிற்பிகளே. (920-ல்) அதற்கு முன்னரே பிள்ளையாருக்குச் சிறுகோயில் உளது. கொல்லம் 900-க்கு முந்தியது. கோட்டை வந்தபிறகு ஊர் நாகரீகப்பட்டிருக்கலாம்.

பரக்கோடியன் கண்ட சாத்தா:— ஆதியில் இவ்வூரில் சாஸ்தாங்கோயில்தானிருந்தது. தொண்டமான் பரவர்கள் முயல் வேட்டைக்குச் சென்றபோது முயலொன்று இசங்குச் செடிக் காட்டில் ஒளித்ததாகவும், அவர்கள் வேலால் குத்தவே அங்கு சுயம்புவாய் முளைத்திருந்த சாஸ்தாவின் மேற்பட்டு இரத்தம் வந்ததாகவும், செடிகளை வெட்டிப் பார்த்தவுடன் சாஸ்தாவின் இரண்டு சுயம்பு லிங்கங்கள் காணப்பட்டனவாயும் கூறுவர். தெற்குப்பக்கம் இருக்கும் மூர்த்தியின் தலையிலோர் அடையாளம் இன்றும் காணப்படுகின்றது. சிலையைப்பார்த்தால் தானே முளைத்ததென்று எளிதில் அறியலாம். பரவர்கள் கண்டுபிடித்ததால் பரக்கோடியன் கண்ட சாஸ்தாவென்று பெயர்வந்தது. அவர்களுக்குத் திருவிழாக் காலங்களில் பிரசாதம் பதிவுண்டு. பூதப்பாண்டி முதலிய கோயில் களைப்போல் இங்கு முளது. ஓர் ரிஷி சமாதியான இடமென்றும், ஆதலால்தான் திவ்விய அருள் நிறைந்த இடமென்றும், வெட்டும்போது இரத்தம் வந்ததென்றும் கூறுவர்.

சாஸ்தாங்கோயில் மிகவும் சிறியதாயிருந்தது. ஆதியில் கட்டியிருந்த கற்கள் மிகப்பழமையானவை. ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆண்டுகளாயிருக்கலாமென்பர். ஆரம்பகாலத்தில் குலாலர்கள் பூசைசெய்து வந்தனர். நாகரீகப்பட்டபின் ஆதி சைவர்கள் பூஜை நடத்தலானார்கள். பூஜை சம்பந்தமாக இரு பக்கத்தாருக்கும் வழக்கிருந்தது. குலாலர்கள் சில தேவதைகளை ஏவினர். அவைகளை நம்பியார்கள் கோயிலின் கிழக்குப்பக்கம ஸ்தாபித்தனர். ஆதி சைவர்கள் சில தெய்வங்களை ஏவினர். அவற்றை வேளார் தங்கள் தெருவில் ஸ்தாபித்தனர். பின்னர் சாஸ்தாங் கோயில் பெரிதாக்கப்பட்டது. சுவாமி மிக்க அனுக்கிரகமூர்த்தி. சான்னித்தியம் நிறைந்தது. மீனாக்ஷியம்மனும் சுவாமியும் மதுரையைப்போல் மிக்க விசேடமாய் அருள் நிறைந்து விளங்குகின்றனர்.

"தொழுத கைத் துன்பம் துடைப்பர்"
"பத்திவலையிற் படுவோன் காண்க"

அடியவர்க்கருளும் ஆதிமூர்த்தியாய் இலங்குகின்றனர்.

அம்மன் சந்நிதியை நெடுந்தூரத்தில் நின்றும் கும்பிடலாம். சந்நிதித்தெரு பின்னர் ஏற்பட்டது. இப்பொழுது மீனாக்ஷி கோயில் திருவாங்கூரிலும் வெளியிலுமுள்ள நல்ல கோயில்களில் ஒன்றாக விளங்குகின்றது. மதுரையில் முதலில் மீனாக்ஷியைக் கும்பிட்டு அனுக்கிரகம் பெற்று பின் சோமசுந்தரமூர்த்தியை தரிசிப்பர். "தாயைக்கண்டு பின் தாதையைக்கூடி" என ஆன்றோர் நவில்வர். அவ்வாறே இங்கும் மீனாக்ஷி அன்னையை வணங்கிவிட்டு பின்னர் அம்மையப்பரை கும்பிடுவது வழக்கம். மக்கள் முதலில் தாயைத்தான் அறிவர். பின் தாய் அறிவிக்கத் தந்தையைக் காண்பர். இங்ஙனமே சோம சுந்தரனை வணங்கினோம். "சக்தியாய்ச் சிவமாகி" என்றார் பரஞ்சோதி முனிவர்.

மீனாக்ஷியம்மன் கோயில் திருப்பணி, பிள்ளையில்லாதிருந்த திருநெல்வேலியார் ஒருவர் குழந்தை பெற்று ஓர் மண்டபம் கட்டி வைத்தாராம். கிழத்தெரு ஸ்ரீமான் முத்தையா பிள்ளை அவர்கள் ஐயன்கோயில், மாடன் தம்பிரான்கோயில் முதலிய திருப்பணிகளும் செய்து வைத்தனர். அன்னாரது உருவச்சிலை கோயிலிற் காணலாம்.

வடக்கூர் கிழத்தெரு குலசேகரவிநாயகர்:— குலசேகரப் பெருமாள் மன்னர்பிரான் பெயரால் கட்டப்பட்டிருக்கலாம். அழகிய கோயில் பெரியவூர் சமூகத்தைச் சார்ந்தது. ஊர் நடுவிலிருப்பதுவே அதற்கழகு. மக்கள்தொழ வசதியுள்ளது. நன்கு பரிபாலிக்கப்படுகின்றது. இனிமேல் ஆலயங்கள் ஒதுங்கி இராமல் இதுபோல் மத்தியிலமைத்தல் நன்மை பயக்கும்.

பெருமாள்புரத்தில் நிலப்பாறைக்கண்டன் சாத்தான்கோயில் மிகப் பழமையானது. கோட்டை கட்டுமுன்னரே உள்ளது. வடக்கூர் சாத்தான்கோயில் வந்தகாலத்திலிதுவும் உளதென்பர். முகப்பு மண்டபத்தில் திருக்கைவேல் பொன்னா ஆண்டிச்செட்டியார் உருவம் கொத்திக் கல்லிலும் எழுதிவைத்தனர். அதன் எதிராக நாகுட்டி ஆனைக்குஞ்சன் வேளான் உருவமும் தூணில் கொத்திப் பெயரும் எழுதப்பட்டிருக்கின்றது.

மெய்கண்ட விநாயகர் கோயில்:— பழமையானது. 1091 சித்திரையில் மதில் கட்டப்பட்டது. 1114-ல் விமானம், மண்டபம் முதலிய திருப்பணிகள் செய்யப்பட்டன. மீனாக்ஷியம்மன் திருக்கலியாணத்தில் தவமியற்ற இங்கு எழுந்தருளுவார். சோமசுந்தரமூர்த்தி மாலையில் மாலையிடுதலும் இங்கு நடைபெறும். மதுரையைப்போல் இங்கு நடைபெறுகிறது.

கன்னியர் எழுவர் கோயில்:— மலையடிவாரத்தில் ஓர்கோயில் உளது. இவ்வூரில் மற்றவிடங்களில் தண்ணீரில்லாதிருந்தும் இத்தெய்வங்களினருளால் ஆடி, தை அமாவாசையை யொட்டி தண்ணீர்பொங்கி ஊற்றாகப்பாயும். இங்கு பலரும் வனபோசனத்திற்குச் செல்வர்.

ஆரைவாய்மொழியின் கீழ்ப்பக்கம் முப்பந்தல் இசக்கியம்மனும், கோட்டையில் பல தெய்வங்களும், வடக்கு மலையில் ஐயன் கோயில்களும், அகஸ்தியர் கோயிலும், மேற்கே பொய்கை விநாயகரும், அகலிகையூற்றுக் கோயிலும், லண்டன்மிஷன் தேவாலயமும், தென்மேற்கில் செக்கர்கிரியும் மெய்கண்ட விநாயகரும், தெற்கு சாத்தான்கோயிலும், நாடார்கள் பெருமாள் கோயிலும், தேவசகாயம் பிள்ளை கோயிலும், இன்னும் ஆங்காங்கு பற்பல கோயில்களுமாக இவ்வூருக்குப் பாதுகாப்பாகவமைந்திருக்கின்றன.

## அத்தியாயம் 8.

### மக்கள்.

ஆரைவாய்மொழி மீனாக்ஷியம்மன் கோயிலிற் கிடந்த கல்வெட்டுத் தூண் இதுவரையிலும் சிலா சாஸன இலாகாவிலிருந்து வெளியாகாதது. புதிதாய்க் கண்டுபிடித்தது. இவ்வூரில் பல பட்டடையாரையும் இறையும், ஊழியமும் இல்லாது சந்தோஷமாய்க் குடியேறச்செய்த முக்கிய விஷயத்தை விளக்கிக்காட்டுவது. திருமலைநாயக்கன் காலத்திலுள்ளது. திருமலைநாயக்கருடனிருந்த வடமலையப்பபிள்ளையைப்பற்றி இதில் கூறப்பட்டிருக்கின்றது. அவருக்குப் புண்ணியமாகக் கல்வெட்டி நாட்டிக் கொடுக்கப்பட்டது. பணகுடி நாட்டில் மாணிக்கவாசகம் பிள்ளையின் பெயர் வருதல் பாண்டி

நாட்டின் சம்பந்தத்தைக் குறிக்கும். நாஞ்சில்நாடு அக்காலத்தில் வேணாட்டில் இல்லையன்றோ? கொல்லம் 831-ல் எழுதப்பட்டது. ஆண்டு எழுதின இடம் 4 இஞ்சு அகலத்தில் தலைப்பில் கல் உடைந்ததென்றாலும் வேறு தெளிவுகளால் காலமறியலாம். முதற்பக்கம் சில வரிகள் அழிந்துவிட்டன. திருமலைநாயக்கனது உடனிருந்த வடமலையப்ப பிள்ளையால் இதன் காலமறியலாம்.

## மீனாக்ஷியம்மன் கோயில் கல் வெட்டு.

### முதற் பக்கம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | உ-சகாத்தம் (கதுருளஎம) | 18. | காட்டின ........................ |
| 2. | எ-ன்மேல் செல்லாநி | 19. | துக்கு கள(க்காடு) |
| 3. | ன்ற கொல்லம் (அா) | 20. | வடமலையப்ப பிள் |
| 4. | ஙமகளு மார்கழி மா | 21. | ளை அய்யன் பாத............ |
| 5. | தம் மருஉ (பூர்வ) பட் | 22, | தகு புண்ணிய மா |
| 6. | சத்து........................சோ | 23. | கவும் தெய்வு கன் |
| 7. | ம வாரமும்........................ | 24. | ணியாபிள்ளைய |
| 8. | கமும் கோ........................ | 25. | வர்களுக்குப்புண் |
| 9. | பெற்ற உத........................ | 26. | ணியமாகவும் |
| 10. | ளுள் முதல் (முறத்தா)நாட் | 27. | கல் வெட்டி நா |
| 11. | டுபணகுடி........................ | 28. | ட்டிக்குடுத்தபடி |
| 12. | ருல்கள........................ | 29. | கள் ஆரவாய்டு |
| 13. | மாமு...................குடியெ | 30. | மாழியில் குடி |
| 14. | றுகிற பெர்கள் | 31. | யேறுகிறநாஞ்சிந |
| 15. | கு கல்வெட்டி நாட் | 32. | ாட்டார் மதக |
| 16. | டிக்குடுத்த பத்தி | 33. | சந்திரமணி உதிரமா |
| 17. | ரம் தரும........................ | 34. | டஆசாரி............... ளுசாரி |

### இரண்டாம் பக்கம்.

| | | | |
|---|---|---|---|
| 35. | செட்டி | 40. | யர் கை |
| 36. | யள் அ | 41. | க்கொள |
| 37. | ள் பண | 42. | ர் இழுவ |
| 38. | காற | 43. | ர் சாணு |
| 39. | ர் சாலி | 44. | ர் வாணி |

## இரண்டாம் பக்கம்.

45. யர் சவ
46. ளக்கார
47. ர் கொல்
48. லியர் யி
49. து முதல
50. ரண குடி
51. யளெல்ல
52. ரம் வங்
53. து குடி
54. ஏறிக்க
55. ட்டளேயி
56. ட்டபடி
57. யினுலே
58. தங்களு
59. க்கு கட்
60. டளேயி
61. ட்டு நம்

## மூன்ரும் பக்கம்.

62. ................................த
63. ...........................யிலெங்
64. ஞ்சி காட்டு பிறக்கு
65. டிக்கற்ற படி அடைஓ
66. லேப்படி உண்டானக
67. டமை படியுமிறுத்து ப
68. லபட்டடையார் வ
69. ந்து குடி ஏறுகிற பெ
70. ரது தலத்திலேயி
71. ருக்கிற மணியகார
72. ன் கட்டளேயிட்டு
73. ஓலேகுடுத்த படிக்கு
74. உண்டான இறை
75. யுமிறுத்துக் கொண்
76. டுசுகத்திலே வந்து
77. குடியெறுவாராகவும்
78. இதுக்கு மெல் வெடி
79. விராம் ஊழிய
80. ம் ஆள் வெலேயிதுமு
81. தலான தெல்லாம்
82. வேண்டாமென்று
83. கட்டளேயிட்டோம்
84. இந்தக்கல்வெட்டும்
85. படியாதாமொரு
86. வர் பரிபாலனமாக
87. நடத்தி வருகிற
88. பெர் சாலொகசா
89. ருப சாமீப சாயு
90. ட்சியபதவியைப்
91. பெறுவாராகவும்
92. இதுக்கு அகிதம்ப
93. ண்ணின பேர்கெங்
94. கைக்கரையிலே
95. காராம் பசுவை
96. கொன்ற தோஷ
97. த்திலே போவாருகவும்

## நான்காம் பக்கம்.

98. இந்தப
99. டிக்கு
100. சுவா
101. மிநாய

நான்காம் பக்கம்.

102. க்கரய்
103. யன்ப
104. ரதத்தா
105. ணையே
106. பிள்ளை
107. அய்யன்
108. பாதத்த
109. ரணையு
110. ம் தப்ப
111. ரதுஇங்
112. தப்படி
113. க்கு மணி
114. ரம் நல்
115. லசிவ
116. ம் பிள்
117. ளை அவ
118. ர்கள்
119. அத்த
120. ந்திரம்
121. அழக
122, ப்பமுத
123. லியார்
124. பணகு
125. டி நாட்
126. டில் மா
127. ணிக்க
128. வாசக
129. ன்பிள்ளை
130. ஆரைவா
131. ய் மொழி
132. ஊரில்
133. மாடன்
134. பிள்ளை.

**குறிப்பு:—** இதுபோல் கொல்லம் 661-ல் ஜயசிம்மன் இரண்டாமன் காலத்தில் இடலாக்குடி பரசுராமப் பெருந்தெருவில் சாயக்காரர்களுக்குப் பிராமணுள், பிள்ளைமார்களுடன் தண்ணீர் கோரலாம். வரிகளில்லை. கல் நாட்டிக்கொடுக்க மன்னர் கட்டளை.

பூதப்பாண்டியில் இரு முடுக்குகளின் சந்தியில் கொல்லம் 867-ல் சாலியர்க்கு வடக்குத்தெருவில் தங்க மன்னர் கட்டளையிட்ட கல் வெட்டு காணப்படுகிறது.

1—2 சாலிவாகன வருடம் 1577

3 கொல்லம் 831 தான். திருமலைநாயக்கனும் வடமலையப்பபிள்ளையும் இருந்தகாலம் 1623-59 கொல்லம் 798-834 வரை,

A. D. சொக்கநாத நாயக்கர் காலம் (1569—78 A. D.)

T. A. S. VOL. V. 199—201

6—7 சோமவாரமும்

**10—11** முறத்தா நாட்டுப் பணகுடி என்றூர். திருமலைநாயக்கன் மதுரை திருநெல்வேலி ஜில்லா அரசனுயிருந்தான். பணகுடியில் வந்து தங்கித்தான் முதலில் நாஞ்சிநாட்டைப் பிடித்தனன். மதுரை ராஜ்யத்திற்குத் திருவாங்கூர் அரசன் கப்பம் கட்டினன். (மங்கம்மாள் சரித்திரம் கூறும்) விஜய நகரத்தார் திருவாங்கூரை வென்றதாகத் தாம்பிரவர்ணிக்கரையில் திருநெல்வேலியில் ஜயஸ்தம்பம் நாட்டியிருக்கின்றனர். (திருவாங்கூர் சரித்திரம் ஒப்பவில்லை.) ஸ்டேட் மானுவலிலும் பார்க்கலாம்.

**19—20** களக்காடு என்றிருக்கலாம். வடமலையப்பபிள்ளை அப்போது களக்காட்டில் இருக்கவும் கூடும். இவர் திருநெல்வேலியில் சேனுபதியாக விளங்கினர். அய்யன் என்றது உயர்ந்தோர் (அரசர்).

**23—24.** தெய்வுகன்னியா பிள்ளையும் பணகுடியில் பாண்டியில் உத்தியோகப் பிரதானியாக விருக்கலாம். இவர்கள் பேரால் கல் நாட்டப்பட்டது.

**33.** கல் எழுதின ஆசாரியின் இரட்டைப் பெயராகலாம்.

**37.** பணகாரர்—ஓர் தொழிலாளர்

**42.** ஈழவர்

**47.** கொல்லியர்—கொல்லர்

**65—67** அடையோலைப்படி பல ஜாதியாரும் கடமை அரசிறை (குடிகள் அரசர்க்குச் செய்யுமுரிமை) இறுத்து=செலுத்தி, படி=ஆள்வீதம், ஸர்க்காருக்கு இறைசெலுத்தினர்.

**68.** பட்டடையார்—முதல் வேலைக்காரர். பலபட்டடையார்—பலஜாதியார் (பல தொழிலாளர்)

**70–71** ஆரைவாய்மொழியில் மணியக்காரன் இருந்துவந்தான். நிலவரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களில் கள்ளர், மறவர் நாட்டில் அம்பலக்காரர் என்றும், மற்றையிடங்களில் மணியக்காரர் என்றும் அழைக்கப்படுவர். (திருமலைநாயக்கர் சரிதம் 17-ம் பக்கம்) மணியக்காரன்—விசாரணைக்காரன்.

**74.** இறை—குடியிறை

78—80 இனிமேல் வெடிவீராம் விட்டுவிடுங்கள் (ஊழியம்)

92. அகிதம்=இதமில்லாமை (பகை) விபரீதம்செய்வோர்.

100—105 சுவாமி நாயக்கரய்யன் பாதத்தாணையே.

சுவாமி=எஜமான், சுவாமி—திருமலைநாயக்கர். அய்யன் பாதத் தாணை என்றது நாட்டிற்கு அரசனுனதுபற்றியே.

106—111 பிள்ளை அய்யன் பாதத்தாணையும் தப்பாது—வடமலையப்பபிள்ளை, தெய்வகன்னியாபிள்ளை, ஆகிய இரு உத்தியோகஸ்தர்கள் பாதக்கட்டளையும் தவருமல்

112—118 மணியம் நல்லசிவன்பிள்ளை கிழக்கே திருமலை நாயக்கர் காலத்தில்தான் மணியக்கார் உத்தியோகம் உளதென்பர். (அம்பலக்காரர், மணியகாரர்=வரிபிரிப்போர்)

119—123 அததந்திரம் அ+தந்திரம் தந்திரம்=படை.

படைத்தலைவனுகிய அழகப்பமுதலியார். அவரதுவீடுமீனுக்ஷியம்மன் கோயில் சந்நிதித் தெருவில் இருக்கிறது. இங்கு ஒரே ஒரு முதலியார் வீடுதான் உளது.

124—129 பணகுடிநாட்டில் மாணிக்கவாசகம்பிள்ளை இங்கு வந்ததாலும் நாயக்கரது ஆட்சிக்காலம் என்பதுறுதிதான். அல்லையெனில் நாஞ்சிநாட்டிலுள்ளார் பெயரோ வேணுட்டிலுள்ளார் பெயரோ கூறியிருப்பர்.

கொல்லம் 831-க்கு முன்னரே சில ஜாதியாரெல்லாம் தங்கியிருக்கின்றனர். நாடார், ஈழவர், வாணியர், முதலியோர்களெல்லாம் வடக்கூர் முத்தாரம்மன் கோயிலின் மருங்கில் தங்கினர். இது அரசர் கட்டளைப்படி குடியேறுதலாம். நாயக்கர் சர்க்காரிலிருந்து இதற்கு வரி வாங்கினர். கொல்லம் 763 லேயே இவ்வூரில் ஈழவர்களில் பிரதானியான இராமப்பணிக்கன் என்பார் தங்கியிருந்தனர். ஓலைப்பிரமாணம் பின்னுலுள்ளது.

## அரசர் நினைவு.

(ஆண்டில்லை) (வடமலையப்ப பிள்ளையைப்பற்றியது)

ஆளூர் செட்டி மூப்பமாரும் பல பட்டறையும் கண்டு— நிங்ஙள்க்கு பல கூட்டம் தங்கடம் உண்டெந்நு உள்ளது கிட்டிணய்யன் இங்ங பறஞ்ஞயச்சிட்டு நிஙஙடே தங்கடமும் நீக்கிப் பொறுப்பிச்சு வைக்கிந்நதும் உண்டு. நிலங்ஙளுக்கு உள்ளதி.... ........யெ இட்டு அரமனையாருக்கு (மதுரை நாயக்கருக்கு) குடுத்து ............ச்சால் மற்றுள்ளதினு ஒரு உபத்திரவமுண்டாகாதே இரிக்கத்தக்கவண்ணம் நாம் வடமலையப்பபிள்ளைக்கு இவுடிந்நு ஓலையெழுதி அயச்சிட்டும் உண்டு. திருவாங்கோட்டுக்கப்புறம் வடமலையப்பபிள்ளை பார்சுபம் செய்தல்லே இரிக்குந்நு. இவிடே சிலவினு பத்துபணம் ஆளூரிந்நு வங்ஙிட்டுவேணும். அதறிஞ்ஞு மாசி மீ டிஉ க்ககம் ஆயிரம் பணம் அடைச்சு குடுக்குமாறும் இப்படிக்கு திருவுள்ளத்தின்படி கணக்கு பெருமாள் ராமன் எழுத்து.

இவ்வூர் சாத்தா உடையான் சோணாசலம் பிள்ளை கொல்லம் 980-ல் பல்லக்கு ஏறிப்போக ஆயிரம் பணம் சர்க்காருக்கு அடியுறவு தீர்த்து மிக்க விமரிசையுடன் சென்றதாய் மூத்தபிள்ளை வீட்டு ஓலைப்பிரமாணங்களால் விளங்குகின்றது. இது செல்வச்செழிப்பைக்காட்டும். அகலிகையூற்றுக் கல் வெட்டு நாட்டிய குடும்பத்தார் சிவப்பணி செய்திருக்கின்றனர். கொல்லம் 981-ல் சாத்தா உடையான் சோணாசலம் பிள்ளை திருவனந்தபுரம் அரசமாளிகைப் பணிக்கு 6012 பணம் அளித்திருக்கின்றனர். (ஓலைப் பிரமாணம்) அவர்கள் அக்காலத்தரசர்களிடம் மிக்க பக்தியுடையவர்கள். அரசன் அவரிடம் நம்பிக்கைகொண்டு பணம் கடன்வாங்கியிருக்கிறார். இதிலிருந்து அரச பக்தியுள்ள பெரிய பிரபுக்களும் இருந்தனர் என அறியக்கிடக்கின்றது. இப்போது யுத்தக்கடன் சில அரசாங்கத்தில் ஜன நன்மைக்கு வாங்குவதுபோல் அக்காலத்திலும் வாங்கியிருக்கலாம்.

மிஷன் குடியிருப்பில் நாடார்களில் சிலர் கிறிஸ்து மார்க்கத்தில் 130 ஆண்டுகளுக்கு முன் சேர்ந்தனர். சாம்பவர்களும், பரவர்களும், படையாட்சிகளும், யாதவர்களும், மறவர்களும் இன்னும் பல ஜாதியினரும் பழைய குடிகள்தான். படையெடுப்புக் காலத்தை

யொட்டி முஸ்லீம்களும் குடியேறினர். விசுவப்பிரம்ம ஜாதியர் பண்டேயுளர். சிற்பத் தொழிலில் இவர்க்கிணை எவருமிலர். காசுக் கடை இங்கு முக்கியமாயிருந்தது. இப்போது லண்டன்மிஷன் லூதர்மிஷன், ஸால்வேஷன் ஆர்மி, ரோமன்கத்தோலிக்கர் ஆகிய எல்லா கிருஸ்துவர்களுமுளர். குருசடிக்கிருஸ்தவர் தேவசகாயம் பிள்ளையின் பின் வந்தவர். ஒரு பட்டணத்திற்கு வேண்டிய எல்லா வித ஜாதி சமூகத்தினரும் இங்கிருப்பது மிக்க விசேடமே. பல ஜாதியினரையும் விரித்துரைக்கத் தாளின் கூடுதல் வில்லையை எண்ணி விட்டுவிட்டேன். வெள்ளாளர் தங்கின காலம் முதற் கொண்டு சாம்பவர்களும் சேரியில் தங்கிவருகின்றனர். சேரி என்பது சிறந்த பெயராகும். சேர்ந்திருக்குமிடம் சேரியாம். அவர்கள் நல் லுழைப்புடையவர்கள். கோட்டையும் படைகளும் இங்கிருந்து வந் ததால்ஆரைவாய் தோவாளை ஊர்களிலுள்ளவர்கள் தைரியத்துடன் படையிற்சேர்ந்து நாட்டைக்காக்க போராடியிருக்கின்றனர். இன் றும் இவ்விரு ஊர்களிலும் படையில் அஞ்சாமல் சேர்கின்றனர். நாகரீகம் மிகுந்த இக்காலத்தில் இது மெச்சத்தக்கதே. மனித னுக்கு ஆண்மையும் வீரமும் அழகன்றோ?

## வெள்ளாளர்.

வெள்ளாளர் பண்டைக்காலமுதற்கொண்டே உழவுத்தொழி லிலும், வீரத்திலும், தெய்வ பக்தியிலும், சமூக ஒற்றுமையிலும், பரோபகாரத்திலும் சிறந்து விளங்கினர்.

"யாவும் வேளாளர் மேழியின் விளைவன்றோ
காராளர் பயிர் வளரும் திறத்தாலே"

வெள்ளாளர் பயிர் வளர்க்கும் திறத்தால் அரசநீதியும் ஆலயப் பூசையும் விருந்தோம்புதலும் இனிது நிகழும். (கம்பர்)

ஆரையில் வெள்ளாளர்கள் சைவசமய அபிமானிகள். சைவக் கோட்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். இங்கு நடைபெறும் காரி யங்கள் யாவும் சைவ சமய முறைப்படியானவைகளே.

மருத நில வாழ்க்கையில் பண்டுதொட்டே வேளாளர் அமைந்த னர். சிலர்தமது விடாமுயற்சியின் திறனால் நிலப்பொருளை மிகுதியா கப்பெற்று வேளாண்டலைவராய் குறுநில மன்னராய் மேம்பட்டனர்.

தமிழ்நாட்டு மன்னர்கள் வேளிர் வகுப்பினரோடு பெண்கோடல் கொடுத்தல் முதலியன செய்து வந்தனர். உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேள் புதல்வியையும், கரிகால் புதல்வன் நாங்கூர் வேள் மகளையும் மணந்தனரென்ப. வள்ளன் மையில் இவர்க்கிணை எவரும் இல்லை என்ப. "எந்நாளும் காப்பாரே வேளாளர்காண்" என்றார் கம்பரும். சடையப்ப வள்ளல் வெள்ளாளர் அன்றோ? காஞ்சீபுரத்தில் மன்னன் கொடுங்கோலனாக வேளாளனொருவனை அரசனாகக்கொண்டனர். அமைச்சராக சேக்கிழார், தாயுமானசுவாமிகள் முதலியோர் இருந்தனர். பிற்காலத்து அரியநாயக முதலியார், துறை அழகப்ப முதலியார், ஆறுமுகம்பிள்ளை தளவாய் முதலியோரும் உளர். பெரிய புராணத்தில் கோட்புலி நாயனார், கலிப்பகையார், கலிக்காமர், மானக் கஞ்சாறர் என்போர் படைத்தலைவராய் விளங்கினர். 63 நாயன்மார்களில் பதின்மூவர் வேளாளர்களன்றோ? பிறர்க்கு அடிமை வேலை செய்யும் தொழுதூண் இவர்க்கில்லை. இவர்கள் சூத்திரரல்லர்.

"வேளாண் மாந்தர்க்குழுதூணல்லது
இல்லென மொழிப பிற வகை நிகழ்ச்சி"

உமையம்மை காஞ்சியில் தோன்றி அறம் வளர்த்தகாலை வேளாளர் அதனைக் கொண்டு பயிர் செய்து உலகிற்கு வேண்டும் உணவுப் பொருளைத் தந்தனரென்ற வரலாறு காஞ்சிபுராணம், பெரிய புராணங்களில் விளங்குகின்றது. "உழுவார் உலகத்தார்க்காணி"

பழையனூர் நீலி கதையில் எழுபது வேளாளர் வாய்மையைக்காக்கத் தீக்குளித்ததை சம்பந்த மூர்த்தியும் தேவாரத்தில் கூறுகின்றார்.

சைவசமயாசாரியரில் அப்பர்சுவாமிகளும் வைணவசமயாசாரியரில் நம்மாழ்வாரும் வேளாளரன்றோ? மெய்கண்டதேவர், குமரகுருபரர், சிவஞான சுவாமிகள், கச்சியப்பர், சிற்றம்பல நாடிகள், இராமலிங்க சுவாமிகள் முதலியோர் வேளாள சிகாமணிகளன்றோ? திருவாங்கூரில் வலியமேலெழுத்து, தளவாய், சம்பிரதி, கிழக்கூட்டம் முதலிய பண்டைக்கால உத்தியோகங்களில் வேளாளர்கள் சிறந்து விளங்கினர்.

ஆரைவாய்மொழி பெருமாள்புரம் வணிகர் சமூகத்தார் முதன்மையானவர்கள். இவ்வூரில் ஆதிக்குடிகள். முதலில் கோட்டையின் கிழக்கில் தங்கியிருந்தனர். அதற்குரிய தெளிவுகளில் பலசெக்குகள் இன்றும் காணப்படுகின்றன. பின்னர் முத்தாரம்மன் கோயிற்பக்கம் தங்கியிருந்தனர். அங்கே பிள்ளையார் கோயில் முத்தாரம்மன்கோயில் முதலியவற்றில் வழிபட்டிருந்தனர். வணிகர் தெருவில் பின்னர்தான் குடியேறினர். கல்வெட்டுத் தர்மத்தில் கூறியது பார்க்க. மீனாட்சியம்மன் கோயில் பட்டயத்தின்படி ஏழாம் திருவிழாவில் மண்டகப்படித் தர்மம் செய்துவருகின்றனர். மீனாக்ஷியம்மனிடம் சிறந்த பக்தியுடையவர்கள். சமூகவகையாய்ப் பஜனைமடம் பிள்ளையார் கோயில் முதலியன வைத்துப் பரிபாலிக்கின்றனர். சைவசமயப்பற்றும் சிறந்த ஆசாரமும் உடையவர்கள். நல்ல வியாபாரிகள். நல்லெண்ணெய், பிண்ணாக்கு ஏராளம் அயல் நாட்டுக்கு அனுப்புகின்றனர். செல்வச்செழிப்பும் உளது.

இக்குலத்தில் பிறந்து சிவத்தொண்டு செய்து முத்திபெற்ற அடியார்கள் சிலரைப் பற்றிப் பெரிய புராணமும் திருவிளையாடலும் கூறும். கிலப்பாறைக்கண்டன் சாத்தான்கோயிலில் திருக்கைவேல் சொர்ண ஆண்டிச் செட்டியார் தர்மம் செய்திருக்கின்றனர். கல்லில் பெயர் எழுதப்பட்டிக்கின்றது.

நாடார் சமூகம்:— சுமார் 2000 மக்களுக்கு மேல் தெற்கூர் பெருமாள் புரத்தில் தங்குகின்றனர். இவ்வூரில் ஆதிக்குடிகள். முதலில் கோட்டையின் கிழக்கில் தங்கியிருந்தனர். பின்னர்ச் சிலர் முத்தாரம்மன் கோயிற் பக்கம் வாழ்ந்து வந்தனர். கோட்டை கட்டுமுன்னரே பெருமாள் புரத்திலும் தங்கி வருகின்றனர். கிருஷித்தொழில் செய்வதில் பேர்பெற்றவர்கள். ஆண்களும் பெண்களும் நன்றாய் முயற்சிசெய்து பயிர்த்தொழில் செய்வர். இது போற்றததக்கது. பொதுவாக சண்டைச் சச்சரவுகளில் ஏற்படாமல் ஒதுங்கி வாழக்கூடியவர்கள். முயற்சியால் செல்வமும் வளர்ந்து வருகிறது. முப்பந்தலில் ஔவையாரம்மன் காலததில் இச்சமூகத்தார் உளரென்பர். முப்பந்தலில் இரு இசக்கியம்மன் கோயிலில் ஒன்று இவர்களைச் சார்ந்ததாகும். 1014—ம் ஆண்டு கவண்மென்றிலிருந்து இரு கோயில்களுக்கும் வழிபாடு செய்த நீட்டு இவர்களிடம் இருக்கின்றது.

இவர்களிற் சிலர் விஷ்ணு மதத்தைச்சார்ந்தவர். காத்தற் கடவுள் பெருமாள்கோயில் கட்டி வழிபடுகின்றனர். பலரும் சைவ மதத்தைச் சார்ந்தவர்கள். முழு முதற்கடவுள் சிவபெருமானை வழிபடுகின்றனர். இரு சமயத்தாரும் ஒற்றுமையாய் இருக்கின்றனர். அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஏனாதிநாதநாயனர் நாடார் குலத்தைச் சார்ந்தவரன்றோ? அவரால் அடியார் பத்தியும், திருநீற்றின் சிறப்பும், பகைவரையும் நேசிக்குமியல்பும், போர் வலியும், வீரமும், ஆண்டவனிடத்தன்பும் விளங்கியதாய்ச் சேக்கிழார் பெருமான் கூறினர். முத்தாரம்மன்கோயில், பெருமாள்கோயில் உச்சினிமாகாளிகோயில் முதலியன இவர்களைச் சார்ந்தன.

வேளாளப் பெண்கள்:- பெரும்பாலரும் வீட்டு வேலைகள் செய்வர். கற்புடையவர்கள். சமயப்பற்றும் தெய்வ பக்தியும் நிரம்பியவர்கள். சிலர் தோட்டங்களில் புஞ்செய்ப் பயிர்க்குரிய வேலைகள் செய்வர். தைரியமும் தேகவன்மையும் உளர். படிப்புச் சுமாராகவுண்டு. பெண் குழந்தைகளை வற்புறுத்தி 7-ம் வகுப்பு வரையிலும் கல்வி கற்பிக்கவேண்டும். படிப்பு நிரம்பினால்தான் அவர்கள் வயிற்றிற் பிறக்கும் மக்களை காலோசிதமாய் ஏற்றவாறு வளர்க்கமுடியும். இவ்வூர் பழைய ஓலைப்பிரமாணங்களில் பெண்களுக்கு ஏராளம் ஸ்திரீதனம் கொடுத்ததாய்த் தெரிகின்றது. பருத்தி ஏராளம் விளைவதால் நாட்டுச் சுற்றி நூல்நூற்றல் லாபமிகும். நாஞ்சினாட்டுப் பெண்கள் எதுகை மோனையுடன் ஒப்பாரி வைப்பதில் வல்லவரென்று நாஞ்சி வெண்பா கூறுகின்றது.

"ஒப்பாரி வைத்தழுத ஒண்டொடி மார்க்காசுகவி
தொப்பாருமில்லா தோதுங்கினர்— இப்பாரில்
வரிசை வரிசை தானமெனல் வீண்பொய் இவர்வாய்
சொரிவரி சைக்கில்லையே சோர்வு"

இறந்தவரைத் தேடியழுதல், பட்டினத்தடிகள் காலத்திலும் அவிநாசியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சென்றபோது முதலையுண்ட பார்ப்பனப்பிள்ளையைத் தேடியழுததிலிருந்தும் கண்ணகி, மணிமேகலை முதலியோர் அழுததிலிருந்தும் தமிழ்நாட்டு வழக்கமென்றறிக. பழைய தமிழ் நூற்களில் இவ்வழக்கம் உளது.

(இவ்வூரில் ஆரியக்குயத்தியெனும் ஓர் பெண்மணி 90 வயது வரை வாழ்ந்து கோயில் பூசையும் செய்ததாய் வழங்கும் மொழியுளது. இது சமயத்துறையில் போற்றத்தக்கது.)

பொற்கலை ஆண்டிச்சிப்பிள்ளை, ஆனந்தவடிவு முதலிய பல பெண்மணிகள் இல்லறத்திலும், சமயத்துறையிலும் சிறந்துவிளங்கினர். தெளிவிற்கு ஓலைப்பிரமாணங்களுள.

குடிசைக் கைத்தொழில் படித்து ஓய்வு நேரங்களில் வேலை செய்யவேண்டும். தண்ணீர்க் கஷ்டத்தால் அதிகம் வருந்துவோர் பெண்களாவர். அவர்கள் துன்பத்தை விரைவில் ஒழிப்போமாக. ஆலயங்களில் இந்துப் பெண்கள் சென்றால் பேசாமல் மந்திரம் ஜெபிக்க வற்புறுத்தவேண்டும். இப்புத்தகத்தில் மந்திர ஜெபம் பாடம் அவசியம் எல்லோரும் படித்துக் கடவுள் நாமத்தை ஜெபித்து நன்மையடைவாராக. ஆலயதரிசன விதிகளும் கற்பிக்க.

977-ல் பெருமாள்புரம் திரு. குற்றாலம் பிள்ளையவர்கள் வீட்டில் ஓர் பெண்மணிக்கு ஸ்திரீதனம் கொடுத்த பரிசு ஓலையொன்றுளது. வடக்கூர் மூத்தபிள்ளையவர்கள் வீட்டில் 870-க்குமுன் ஸ்திரீதனம் கொடுத்த ஓலையொன்றுளது. இவ்வாறு பல வீடுகளிலும் இன்றளவும் நடைபெறுகின்றது.

நாஞ்சிநாட்டு வெள்ளாளரிடையில் சொத்துரிமை ஆண்களைப் போல பெண்களுக்கும் இருப்பதால் ஸ்திரீதனம் அதிகமாய்க் கொடுப்பதில்லை. கணவனிறந்தவர்கள் கைமை நோன்பாற்றுவர். சில சமூகத்தாரிடை சிறுபான்மை மறுமணமுண்டு. பெரும்பாலும் அவ்வாறில்லை.

ஆண்கள்:— நல்ல வீரமும் உழைப்பும் உடையவர்கள். பெரும்பாலரும் விவசாயிகள். சோம்பலற்று வேலை செய்கின்றனர். தேக திடமும் ஏற்ற உயரமும் உண்டு. போலீஸிலும் பட்டாளத்திலும் சந்தோஷமாய்ச் சேருகின்றனர். சிலர் வியாபாரம் செய்து வருகின்றனர். படிப்பு ஏற்றவாறுளது. யோகியர், ஞானியர், கர்மிகள் பக்தர்கள் உளர். சிலர் விறகு வெட்டியும் சிலர் கூனையில் தண்ணீர் இறைத்தும் வேலை செய்து வருகின்றனர். செல்வச் செழிப்புமுண்டு. பொதுவாக மிகவும் நல்லவர்கள்.

பிராமணர்கள் சுருக்கமாயுளர். கல்லில் சிற்பவேலை செய்யும் சிற்பியர் கோட்டை கட்டிய காலம் முதற்கொண்டு தங்கிவருகின்றனர். இவர்களுக்கு இணை இந்நாட்டில் இல்லை. பொன் வேலை, தச்சவேலை செய்யும் விசுவப்பிரம்மரும், மட்பாண்டம் செய்யும் குலாலரும், பிராணோபகாரிகள், வண்ணார், மூப்பர்களும், ஆக பற்பல தொழிலாளர்களும் இங்கு வசித்து வருகின்றனர். மறவர்களும் உண்டு. அணஞ்சி மறத்தி நாஞ்சிநாட்டைக் காத்து மன்னரிடம் பரிசு பெற்றாள். பயிர்த்தொழிலில் நாடார்களும் வெள்ளாளரைப்போல முன்னேற்றமடைந்திருக்கின்றனர்.

ஆடுகள்ஏராளம். பால்மாடுகளும் காளைகளும் அதிகம். யாதவர்களும் உளர். பண்டைக்காலம் தொட்டே பசுமாடுகளை வளர்த்தி வந்தனர். ஆடுமாடுகளை கூட்டத்தோடு விற்கவும் வாங்கவும்செய்வர். 1046-ாம் ஆண்டு மார்கழி 27-ம் உ முத்தும் பெருமாள் வேலாயுதத்துக்கு ஆரைவாய்மொழி திருச்சித்தம்பலம் ஆறுமுகப்பெருமாள் எழுதிக்கொடுத்த மொழி மாறுக்கச்சீட்டாவது. பசுவின் மாடு பாதிக்கு ஏள்ப்பிச்ச வகையில்.......................காரிப்பசு வருக்கம் டெ யான் அடுமச்சத்துக்கு ஆவதுபாதிக்கு வகைவச்சு தந்து போனதினாலே டெ பசுக்களையும் அதிமேல உண்டாகிற கன்றுகளையும் டெ யான்தானே அனுபவித்துக் கொள்வானாகவும்.......... என்ற பெருமாள்புரம் ஸ்ரீ காக்கும்பெருமாள்பிள்ளை சுடலையாண்டிப்பிள்ளையவர்கள் ஓலைப்பிரமாணத்தாலறிக.

ஆரைவாய்மொழி ஓர் ஸென்ஸஸ் டௌண். 1941-ல் 271 ஜனனமும் 173 மரணமும் உண்டு. 1941-ல் ஸென்ஸஸ் கணக்கின்படி மொத்தம் ஜனங்கள் 7166. 1931 ஐ விட 581 ஆட்கள் கூடுதல். ஆண்கள் 3589. முன்னைவிடக் கூடுதல் 146. பெண்கள் 3577, முன்னைவிடக்கூடுதல் 435. 1931-ல் ஸென்ஸஸ்படி ஜனத்தொகை 3443 ஆண்கள். 3142 பெண்கள். மொத்தம் 6585. ஜனங்கள் வசிக்கும் வீடுகள் 1535. கடைகள் கோவில்கள் முதலிய மனிதர் வாழ்வில்லாத கட்டிடங்கள் 200. தோவாளைத் தாலூக் தற்பொழுது சென்ஸஸ் கணக்கின்படி கல்வியில் ஏழு தாலுகாவிற்கு மேல் நிற்கின்றது. ஜனத்தொகைப்படி வெள்ளாளர்கள் திருவாங்கூரில் 56·7%. படிப்புடையவர்கள். வெள்ளாளர் குழந்தைகளில் 1000 க்கு 188 இறக்கின்றன. தோவாளைத்

தாலுகாவில் 141·84. சதுரமைலும் 43324 ஜனங்களும் உண்டு. தோவாளைத் தாலுகாவில் 1000 பேருக்கு படிப்பிருந்தால் 694 ஆண்களுக்கு 306 பெண்கள்தான் படிப்புடையவர்கள். இத் தாலுகாவில் இரண்டு பட்டணங்களும், 149 கிராமங்களும் உள. மொத்தம் வீடுகள் 9699. 21370 ஆண்களும், 21954 பெண்களும் உளர். ஜனத்தொகை கூடிவருகிறது:

விவாகக்கணக்கில் திருவாங்கூரில் விதவைகள் குறைவில்லை. ஏற்றவாறு மீண்டும் மணம் செய்யலாம். பொதுவாக நம் நாட்டில் விவாகம் ஆகாத ஆண்கள் அதிகம் என்றும், விவாகமாகாத பெண்கள் கிருஸ்தவரிடையே அதிகமென்றும், விதவைகள் இந்துக்களிடையே கூடுதல் என்றும், கிருஸ்தவர்களிடையிலும் முஸ்லீம்களிடையிலும் கணவனையிழந்த மனைவிகளும் மனைவியையிழந்த ஆடவர்களும் சுருக்கமென்றும் 1938-ல் வெளியான டயரக்டரி புஸ்தகத்தால் விளங்குகின்றது. அதில் 500-க்கு மேற்பட்ட ஜாதிகளுண்டென்றும் அவையில் 77 முக்கியமென்றும் காணப்படுகின்றன.

கொல்லம் 855-ாம் ஆண்டு பொற்கலை ஆண்டிச்சிப் பிள்ளையும், பண்டாரம் பிள்ளையும் ஆலவாயில் சிறப்புற்றிருந்தனர். சிறந்த தெய்வ பக்தர்கள். மீனாக்ஷியம்மன், பரக்கோடி அய்யன், பூதலிங்க சுவாமி முதலிய கோயில்களுக்குச் சொத்து விட்டிருக்கின்றனர். பொற்கலை ஆண்டிச்சிப் பிள்ளையை நாஞ்சில்நாட்டில் மூன்று தலைவர்களில் ஒருவரும் மாடம்பிப்பட்டம் பெற்றவருமான தாழக்குடி வைரவன் பிள்ளையவர்களின் இளைய சகோதரர் மணஞ்செய்து வாழ்ந்து வந்தார். நாஞ்சிநாட்டு முத்தலைவர்களும் வீரர்களே. பிடாகைக்கூட்டம் கூட்டுவித்து பலதும் செய்வர் நம் பெரியோர்களே.

"தாழக்குடியில் வைரவனும்
தமிழ்த்தேரூரில் சந்திரனும்
கூழம்பெருத்த முளையகல்லூர்
குறும்ப னணஞ்சபெருமாளும்
நாளையிவர்கள் தலைதெறிக்கில்
நன்றாய் வாழும் நாஞ்சில் நாடே"

என்பது பழைய பாட்டு. தலைதெறிக்கில் என்றது சரியல்ல. பகைவர் கூற்று.

## திருவாளர் சூற்ருலம்பிள்ளையவர்கள் வீட்டு ஓலைப்பிரமாணம்.

நீட்டு:— 1043ல் திருவனந்தபுரம் சதிர்க்கோர்ட்டில் மேலெழுத்து வேலையில் பெருமாள்புரம் சுப்பிரமணியபிள்ளை ஆறுமுகம் பிள்ளை என்பவர் இருந்திருக்கிறார். அவரையொட்டிச் சிலருக்கு மகாராஜா கணக்குப்பட்டத்திற்கு நீட்டுக் கொடுத்திருக்கிறார்.

966-ல் பெருமாள்புரத்திலிருந்து திருச்செந்தூர் கோயில் காரியம் ஒருவர் பார்த்தார். இப்பொழுதும்கூட இவ்வூர் வாசியான ஒரு சாமியார் திருச்செந்தூர் கோயிலில் முதன்மையாயிருக்கின்றார்.

961-ல் பெருமாள்புரத்தில் ஷை யாரவர்கள் பரம்பரையார் எழுதிய விலைப்பரிசு ஓலையொன்றுமுளது. இவ்வோலைகளிலிருந்து பெருமாள்புரம் எனும் பெயர் முன்னரே ஏற்பட்டுவிட்டதாயறியலாம்.

## அத்தியாயம் 9.

## முப்பந்தல்.

சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களும் தங்குவதற்காக மூன்று கட்டிடங்கள் கட்டினார்கள். அதனால் முப்பந்தல் எனும் பெயர் வந்தது. மூன்று கட்டிடங்கள் இப்போதும் காணப்படுகின்றன. சிலர் மீனாட்சி கோயிலும், சொக்கலிங்கர் கோயிலும், ஔவை (இசக்கியம்மன்) கோயிலும் ஆகிய மூன்று கோயில்கள் இருப்பனவால் முப்பந்தல் என்பர்.

முப்பந்தலில் ஔவையார் கோயிலும், இசக்கியம்மன் கோயிலும் சிறப்பாகக் காணப்படுகின்றன. ஔவையார்தான் இசக்கியம்மனென்றும், காளிதேவிதான் இசக்கியம்மன் என்றும் கூறுகின்றனர். ஔவையார் சரசுவதி தேவியின் அவதாரமென்பர். இசக்கியம்மன் உமாதேவியன்றோ. ஆகவே ஒரே பராசக்தியின்

தோற்றந்தான் இப்போதிருக்கும் தேவியென்பதில் இழுக்கில்லை. எல்லாவுயிர்களையும் இயக்குபவள் இயக்கியம்மன் (இசக்கி) ஆவாள். யக்ஷியை இசக்கியென்றும் கூறுவர். ஔவையார் கோயில் இங்கு வரக் காரணம் என்ன? நம் நாஞ்சில் நாடு செந்தமிழ் ஓங்கும் நாடென்பதற்கையமில்லை. தாழக்குடியிலும் ஔவையாரம்மன் கோயில் சிறப்பாக விளங்குகின்றது.

"சூடகக்கைச் சூலம் தாங்கித் உயிர் துறந்த
தாடகையின் வெற்புதவு தண்சலச— வடகத்துத்
தங்குங் கலைமகள் போலவ்வை யமர்தனி வே
றெங் கேனுமுண்டோ இசை"

"சீதமும் சூடும் தெறுதலால் முன்னவ்வை
கோதைக்குமரி யிவர் கூட்டமிட்டார்— ஓதம்
பொதிகுளிர் வேண்டாள் முதியள் வெம்மை பொருள்
வதிகுவாள் மாமலை நீர் மாடு." [கன்னி

நாஞ்சி வெண்பா.

ஔவையார் திவ்ய நெல்லிக்கனியுண்டு நீண்டநாள் வாழ்ந்ததாலும், பிசாசுகளைப் பாடல்கள்பாடி ஓட்டியதாலும் கடவுள் பக்தியும் கற்பும் மிகுந்திருந்ததாலும் அவரது தெய்வத் தன்மை சிறந்து விளங்கியது. வேள்வி, தானம், தவம் இவற்றால் மனிதர்களும் தேவர்களாகலாம்.

"யஜ்ஞ தான தபஸ் சைவ பாவனானி மனீஷிணாம்" காமம், கோபம், முதலியவைகளை அகற்றியவரும், அன்பு, வாய்மை, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், ஐம்புலனடக்கம் உடையவர்களும் முனிவர்களும், தேவர்களுமாவர்.

"காமக் ரோத வியுக்தானாம்
யதீனாம் யத சேதஸாம். (கீதை)
"பிறந்த பிறப்பிதில் தானே நித்திய மெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் வம்மின்"

இப்பிறவியிலே நித்திய மெய் வாழ்வு பெறலாம் என இராமலிங்க அடிகள் கூறுகின்றார்.

ஔவையார் வெறும் புலவர் மட்டுமல்ல. ஒழுக்க மிக்க வாழ்க்கை நடாத்திய உத்தமப் பெண்துறவி. சிறந்த யோகினி. உயர்ந்த ஞானி. ஆதலால் அவர் எண்ணியவாறு மக்களுக்கு அருள் சுரந்தனர். நாஞ்சிநாட்டில் இரண்டு கோயில்களிலும் மதுரமான கூழும், கொழுக்கட்டையும் சிறந்த நிவேதனமாகும். கண்ணகியாகிய வணிகப்பெண் தெய்வமாகிச் சேரநாட்டில் செங்குன்றூரில் விளங்குவது போன்று ஔவையாரும் தெய்வமாகி ஆலவாய் முப்பந்தலிலும், தாழக்குடியிலும் இலங்குகின்றனர். மக்களனைவரும் பல்லாண்டுகளாய் வழிபட்டு அளப்பரிய நன்மைகளடைந்து வருகின்றனர். தெய்வ அருள் நிறைந்த ஆலயங்களாக விளங்குகின்றன.

புறநானூற்றில் கூறப்பட்ட நாஞ்சில் வள்ளுவன் நம் நாஞ்சிநாட்டைச் சார்ந்தவனாகவுமிருக்கலாம். வித்துவான் தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், திருவள்ளுவர் பிறந்த நாடு நாஞ்சில்நாடெனக்கூறுகின்றனர். வள்ளுவன் பிறந்தது மயிலையென்ற கபிலரகவலைப் பிற்கால நூலாகவும் மறுக்கின்றார். பண்டு தமிழ் மிகுதியும் வளர்ச்சியடைந்திருந்தது சேர நாடென்றும் கூறுவர். மதுரையிலும் மயிலையிலும் திருவள்ளுவர் இருந்திருக்கலாம். அவ்வாறே நாஞ்சில் நாட்டிலும் ஏன் இருந்திருக்க முடியாது? ஔவையாரும் சேர நாட்டிற் பிறந்தனர். சேரநாட்டின் ஓர் பகுதியான அதிகமான் நாடே தன் நாடெனவும் அதிகமானே தம் அரசனெனவும் கூறினர். ஔவையென்றால் தாய் எனப்பொருள் படும். இப்பெயர் எல்லோரிடமும் அன்புடைய அவர்க்கு சாலப் பொருந்தும். சங்க காலத்தில் இந்நாடு நாஞ்சில் வள்ளுவன் என்னும் ஓர் சிற்றரசனால் ஆளப்பட்டமையால் இது வள்ளுவ நாடாயிற்றென்று உயர் திரு K. N. சிவராஜபிள்ளை அவர்கள் கூறுகின்றனர். வள்ளுவ நாட்டில் சமயசமரசமுடையவர்கள் என்பர்.

"பூத நகர் மேவு புராந்தகனும் பூமகள் சேர்
சீதரனும் நாகராந் தெய்வதமும்—ஆதரவாய்
வாழ்வுருவோங்கி யொளிர் வள்ளுவநாட்டிற் சமயக்
கோள்பெறு தோங்குங்குடி"

ஔவை பாடிய அதிகமானஞ்சியை ப்பரணரும் பாடியிருத்த லால் பரணர் காலம் கி. பி. 55—60-க்கு முன்னராகும். ஔவையும் இக்காலத்தவரே. ஔவை இரண்டாம் நூற்றுண்டிலிருந்த உக்கிரப்பெருவழுதியையும் பாடியுள்ளார். நாஞ்சில் வள்ளுவனையும் புறநானூற்றில் பாடியிருக்கின்றனர். அவன் ஓர் பெரிய யானையைப் பரிசிலளித்தான். யானை நம் மலைநாட்டுப் பொருளன்றோ? "தடவுசினைப் பலவினுஞ்சிப் பொருநன்" புறம் 137-ம் பாட்டில் நாஞ்சில்மலையின் செழிப்பையும் பாடினர். ஆகவே இவ்வரலாறுகளால் ஔவையாருக்கும் நம்மூரோடு நெருங்கிய சம்பந்தமுளது. இவரைச் சேர சோழ பாண்டிய நாட்டு மக்கள் பெரியாராகக் கொண்டாடினர். அவருக்கு எல்லோரும் உணவுமளிப்பர். "எத்திசைச் செல்லினு மத்திசைச் சோறே" மூவேந்தர்களும் அவரைப்போற்றினர். அவர் சொல்லைப் பெரிதும் ஆதரித்தனர். "ஔவை வாக்குத் தெய்வ வாக்கு" என ஜனங்கள் கருதுகின்றனர். ஔவையார் முப்பந்தலின் சமீபத்தில் ஓர் இடைப்பெண்ணின் வீட்டில் தங்கினர். அவளும் அவள் சகோதரனும் புலவர் பெருமாட்டியை அன்புடன் உபசரித்தனர். சில நாள் அங்கு தங்கினர். அப்பெண்ணுக்கு மணமாகவில்லை. தன்னை ஆதரித்த அவர்களுக்குச் சிறந்த உதவிசெய்ய எண்ணி முப்பந்தலில் வைத்துத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்தார். மிக்க விமரிசையாய்க் கொண்டாடலானார்கள். மூவேந்தர்களுக்கும் ஓலையனுப்பினர். பாண்டியனுக்கனுப்பியவோலை

"வையத்துறை வன்மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையற்கு
வேண்டுவன கொண்டு விடியப் பதினெட்டாநாள்
ஈண்டு வருக விசைந்து."

சேர சோழ பாண்டியர் மூவரும் வந்தனர் என்றால் திருமணத்தின் பெருமையையும் ஔவையாரின் செல்வாக்கையும் பற்றிக் கூறவும் வேண்டுமோ? மூவர்க்கும் தங்குவதற்குச் சிறந்த கட்டிடங்கள் அரசர்களுதவியால் கட்டப்பட்டன. அக்கட்டிடங்கள் இன்றுமுள. மணத்திற்கு வந்த பாண்டியன் உக்கிரப்பெருவழுதி தினமும் மதுரை மீனாக்ஷி சுந்தரேசர் தரிசனம் செய்த பின்னர் தான் சாப்பிடுவது வழக்கம். இங்கும் அவ்வாறு தரிசனம் செய்ய

வில்லையென வருந்தவே, உடன் ஔவையார் அங்கயற் கண்ணியை யும் சோமசுந்தரமூர்த்தியையும் பிரதிட்டிதத்துக் கோயில் கட்டினர். திருமணத்தில் பெரிய விருந்து நடைபெற்றது. எல்லாக்கனிகளும் விளம்பினர். பனங்கனியில்லையெனவே உடன் ஔவையார் ஓர் பனந் தூணைத்தட்டிச் சிறந்த பாட்டுப் பாடினர், உடன் கனிகள் உதிர்ந்தன. அவர்களுக்களித்தனர்.

"திங்கட்குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் குறுகிட வந்து நின்றார் மணப்பந்தரிலே
சங்கொக்க வெண்குருத்தீன்று பச்சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பை விட்டு
நுங்குக் கண்முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தரவேண்டும் பனந்துண்டமே"

## முப்பந்தல் இசக்கியம்மன் வில்பாட்டு.

அவ்வையாரம்மன் தாழக்குடியிலிருந்து புறப்படுகிறாள்
"ஆதிச்சன்பூரைவிட்டுக் காட்டு மடப்பாதை கூடி
கட்டளைக்குளம் கடந்து சருமேணி ஐயன் தோப்பும்விட்டு
செந்நாரைப் பதிகடந்து சேரமான் கோட்டைவிட்டு
அதிர்த்தி விளைக் காடதிலே கோயில் கட்டிக் குடியிருந்தி
பெண்ணென பெண்கொடியாள் அவையாருக்கிழவியவள்
பாலோடே பண்ணையோடே பாக்கியத்தோ டிருக்கையிலே
ஆதிச்சன் பூரத்திலே வாறதந்த வேளையிலே
புரட்டாசி மாத்தையிலே பன்னிரண்டாம் தேதியிலே
மழைக்கொதுங்கி இடைப் பெண்ணின்
மனையதிலே சென்றாளே
அவையாரைக் கண்டவுடன் அகத்திருந்த சேலையீந்தாள்
அப்போது பாண்டியராசன் அதிர்த்தி விளைக்காடதிலே
ஆதரவாய் வந்து சேர்ந்தான்.

விற்பாட்டில் ஔவை வரலாறும், இடைப்பெண் கலியாண மும், சேர சோழ பாண்டியர் வந்ததும், முப்பந்தல் இசக்கியம்மன் கதையும் கூறப்படுகின்றன. பாட்டைத்திருத்தி விரைவில் அச்சி டவேண்டும்.

திருவாங்கூர் ஸ்டேட் மானுவல் இரண்டாம் பாகம் 373-ாம் பக்கத்தில் முப்பந்தல் வரலாறு கூறப்படுகின்றது. "ஆரைவாய் மொழியின் கிழக்கில் முப்பந்தல் இருக்கின்றது. இடைப்பெண்ணின் கலியாணத்தை யோகினி ஔவை நடாத்தினாள். அதற்கு மூவேந்தரும் வந்தனர். அவர்கள் பந்தல், நகை, ஸ்திரீதனம் முதலியன அளித்தார்கள். இது கர்ண பரம்பரை வரலாறென்று மிஸ்டர் நாகமையா கூறுகின்றார்.

நாஞ்சினாட்டு வெள்ளாளர் வரலாற்றைப்பற்றியும் சில எழுதுகின்றார். இதனைத்தொடர்ந்து பண்டை நாளிலேயே பலர் பாண்டியிலிருந்து இங்கு வந்து தங்கிப்பின் நாஞ்சினாட்டிற் புகுந்தனர். இதுவும் கலியுக ஆரம்ப காலமென்பர்.

நாஞ்சினாட்டார் ஆரைவாய்மொழிக்கடுத்த முப்பந்தலிலும் ஆரையிலும் பண்டைநாளில் தங்கியிருக்கலாம். நாஞ்சினாட்டார் பலர்க்கும் இங்கே சாத்தான்கோயில்களும், புஞ்செய்க் காடுகளும் இன்றுமுள. நாஞ்சினாட்டார் ஆதியில் இங்கு தங்கிப்போயினரென்பது இவ்வூரார்க்கு மிக்க பெருமையாகும். முப்பந்தல் மடத்தில் நின்றும் மீனாக்ஷியையும் சோம சுந்தரரையும் கொண்டு ஆலவாய்க் கோயிலில் பிரதிட்டித்தமை முன்னர் கூறப்பட்டது. அம்மண்டபத்தில் "பெருமாள் குலசேகரப்பெருமாள்" என்று எழுதப்பட்டிருக்கின்றது.

ஆளூரில் சேர சோழ பாண்டிய மகாதேவர் கோயில் ஒன்றுளது. அழகியபாண்டியபுரம் பெரிய வீட்டு முதலியார் குடும்பத்தாரில் ஒரு பிரிவினர் அதன் தர்மகர்த்தர்கள். அங்கு மூவேந்தர்களும் வ ந் த தா ய் க் கூ று வ ர். அதற்கு முன்னமே முப்பந்தலிலும் மூவேந்தரும் வந்திருக்கலாம். இது கர்ண பரம்பரைக் கதை. ஆனால் பெருவள்ளலாகிய பாரி ஔவையாரது நண்பன். மூவேந்தர்களின் சூழ்ச்சியால் பாரி இறந்துவிட்டான். பாரியின் மகளிரான அங்கவை, சங்கவையைக் கபிலர் அழைத்துச்சென்று வேளிருட்சிறந்த இருங்கோவேள் முதலியோர்பாற்சென்று மணம் புரிய வேண்ட அவர்கள் மறுத்தனர். பின்னர் கோவலூரிற் சில பார்ப்பாரது பாதுகாவலில வைத்தனர். இவர்களைப்பார்க்க நம் பிராட்டியார் அங்கு சென்றனர். பாரி மகளிர் மெல்லியலார். முல்

லைச்செடிக்குத் தனது தேரையளித்த பாரியின் மக்களை ஔவைப் பிராட்டிக்கு முன்னரே தெரியும். அன்றிரவு இலக்கறியுணவிட்டு அன்புடனுபசரித்தனர். அதனையுண்ட பெருமாட்டியார்

"வெய் தாய் நறுவிதாய் வேண்டளவும் இன்பதாய்
நெய்தானளாவி நிறைபிட்டுப்—பொய்
அடகென்று சொல்லிய முதத்தை யிட்டாள்.
கடகம் செறியா தோ கைக்கு" என்று அவர்கள் நன்

னிலை பெறுதற்குரிய முயற்சிகள் செய்தனர். அம்மகளிர் கலியாணம் முப்பந்தலில் வைத்து நடைபெற்றிருக்கலாம். ஔவையார் உதவி செய்யத்துணிந்ததால் தான் மூவேந்தர்களும் வந்தனர். இத் திருமணத்திற்கு ஓலையெழுத விநாயகர் வரவில்லையானல் சாபமிடுவதாகவும் ஓர் பாட்டுளது. அங்கே மகளிர் இருவர். இங்கொருவர்தான்.

"கரிமுகவன் கண்ணாலவோலை கடிதெழுத வாராவிடில்
தன்னுண்மை தீர்ப்பேன் சபித்து"

இஃதும் அவரது தெய்வத்தன்மையைக் காட்டும். ஔவையாருக்கு விநாயக பூசையுமுண்டு. கோவலூரில் வைத்துத் தெய்வீகனுக்குப் பாரிமகளிரை ஔவையார் மணம்செய்து வைத்தது கொள்ளத்தக்கதன்றென்றும், மணத்தினையொட்டிய பாடல்கள் ஔவையாரது சங்கநூற்பாடல்கள் போலில்லையென்றும் சில ஆராய்ச்சியாளர் எழுதுகின்றனர். அவ்வாறே முப்பந்தல் வரலாற்றையும் மறுக்கலாம். சரித்திரக்கண் கொண்டு பார்த்தால் சமய விஷயங்களிற் சில மாறுகத்தோன்றலாம். சமயக்கண்கொண்டு பார்த்தால் நம்பிக்கையுண்டாகும்.

அக்காலம் முதற்கொண்டு முப்பந்தலெனும் பெயரும் வழங்கி வருகிறது. மீனாட்சி சுந்தரேசர் கோயிலும் நிலைத்தது. பூசையும் நடந்துவந்தது. பின்னர் ஔவையாரையும் பிரதிட்டித்துக் கோயில் கட்டினர். இப்போதிருக்கும் தண்ணீர் மடத்தின் கீழ்ப்பக்கம் ஓர் தோட்டத்தில் ஆதிக்கோயில் இருந்தது. பின்னர்தான் ஔவையாரையும், இசக்கியம்மனையும் பிரதிட்டித்திருக்கும் இரண்டு கோயில்களும் வந்தன. பழைய ராஜபாதையையொட்டி நாடார்களது கோயிலும், புதிய ராஜபாதையை யொட்டி வெள்ளாளர்

களது கோயிலும் இருக்கின்றன. முப்பந்தலிற் காணப்படும் சிறந்த கிணறு மூவேந்தர்களும் வந்த காலத்திலுள்ளது தான். இடைக்காலத்தில் மண் தூர்ந்துவிட்டது. சுமார் நூறு வருடங்களுக்குமுன் திருவிதாங்கூர் கவர்ண்மென்ருர் அதைச் சீர்ப்படுத்தினர். இசக்கியம்மன் கோயிலில் தெய்வம் பிரத்தியட்சமாய் விளங்குகின்றது. பண்டைக்காலம் தொட்டே பலரும் வழிபட்டுப் பல நன்மைகளைப் பெற்றிருக்கின்றனர். திருவாங்கூர் மன்னர்கள் அதன் வழியாய் வெளியூருக் கெழுந்தருளும்போது அம்மனை வணங்கிப் பதிவுக் காணிக்கை வழங்குவது வழக்கமாம். வெளியூரிலுள்ள பலரும் இக்கோயிலுக்கு வழிபாடு செய்கின்றனர். கோயில் நல்ல நிலையில் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது. ஆலவாய் ஊருக்குத் தேவி நன்மைசெய்து வருகிருள். மக்களெல்லாம் அடிக்கடி சென்று வழிபட்டு வருகின்றனர். திருவாங்கூர் சமஸ்தானத்தை எல்லையிலிருந்து காப்பாற்றுகின்ருள். நாட்டிற்குப் பாதுகாப்பாயமையப் பெற்ருள். தெற்கு முனையில் குமரியும், வடக்கே கொடுங்கல்லூர்ப் பகவதியும், தென் கிழக்குக் கணவாயில் முப்பந்தல் அம்மனும் நாட்டைக் காக்கிருர்கள்.

இசக்கியம்மன் பெருமை:— நாஞ்சிநாட்டிலும், பாண்டி நாட்டிலும் உள்ள பலரும் சத்தியம் செய்ய விரும்புமிடம் இக்கோயிலாகும். சில முஸ்லீம்களும் சில கிருஸ்தவர்களும்கூட இங்கு வழிபாடு செய்வதுண்டு. மோட்டாரிலும் வண்டியிலும் நடந்தும் செல்வோர் தேவிக்குப் பணமிடுவர். ஸிலோன், ஸிங்கப்பூர், தூத்துக்குடி, மதுரை, சென்னை முதலிய பலவூர்களிலுள்ளாரும் இங்குவந்து வழிபாடு செய்வர். நம் நாட்டுப் பெண்களுக்கு அம்மன்மீது அளவிலா பக்தியுண்டு.

உருவம் வைத்தல்:— விம்பப் பிரதிட்டையின் சுருங்கிய கிரியைகள் இதற்கு நிகழும். ஒளவைப் பிராட்டிக்கும் இசக்கியம்மனுக்கும் வெவ்வேறு உருவங்கள் கொண்டுவந்து வைப்பர். அதற்குப் பொருட்செலவுமுளது. நன்மையுண்டு. ஒளவையாரின் உருவம் தென்னுட்டில் எங்குமில்லை. பழைய உருவங்களைப் பாழாக்காமல் ஓரிடத்தில் மதில்கட்டி வரிசையாய் வைத்துப் பாதுகாக்கவேண்டும். கண்ணகியின் உருவச்சிலை லண்டன் பொருட்காட்சி சாலையிலிருக்கின்றது. ஒளவையாரின் உருவங்களைப் பலரும்

கேட்பர். உருவம் விடும்போது "அடிமைகொண்டு கடமை தீர்த்தேன்" எனவும், பூசாரியிடம் "முக்கால் மூன்றுதரம் ஏற்ருயோ" என்றும் மும்முறை கூறுவர். பூசாரி "ஏற்றேன்" என ஒருமுறை நவில்வர்.

காளி:— உமாதேவின் தோற்றமே. காளிதான் இசக்கியம்மன். மகிஷாசுரனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றி உக்கிர ரூபத்தில் நிற்கும் கருணைவடிவமாகும். பெரும்பாலும் துர்க்கையும், பிடாரியம்மன்களும் இக்கோலந்தான். இவை தேவியின் வேகவடிவமே. கன்னியாகுமரி, கொடுங்கல்லூர், செங்குன்றூர், சேர்த்தலை முதலிய இடங்களில் தேவியின் சாந்தவடிவங்களாகும். காளிதாஸன் கும்பிட்ட காளியும், இராமகிருஷ்ணப் பரமஹம்ஸர் வழிபட்ட காளியும், நம்மூர் பத்திரகாளி, இசக்கியம்மன்களைப் போல் உக்கிரவடிவத்தினரன்றே? ஸம்ஹாரத் தொழில்புரிந்து உயிர்களின் வினையை வீட்டுவர். திருவொற்றியூர் காளியும், மேலாங்கோட்டுக் காளியும், மண்டைக்காட்டம்மனும், முப்பந்தல் அம்மனும் வீறுடைய தெய்வங்களன்றே? நம்பாவங்களை உடன் தீர்த்தருளுவர்.

பத்திரகாளி:— கரிய நிறமும், சந்திரக்கலைபோல் வளைந்த பற்கள் உள்ள முகமும், உடையாள் வச்சிரம்போன்ற வாள், வலது கரத்திலும் மது நிறைந்த பாத்திரம் இடதுகையிலும் தரிப்பள். தலைமாலைகள் அணியப்பெற்றும் பற்பல பாம்புகளின் படங்களின் இரத்தினங்களால் விளங்கப்பட்டு மிருக்கின்ருள். தேவர்களால் துதிக்கப்பட்டவளும்ஆவள். தக்கன் வேள்வி தகர்த்தவளன்றே?

துர்க்கை:— வலது மேற்கை முதல் சக்கிரம், கபாலம், அம்பு, சூலமும், இடது மேற் கை முதல் சங்கு, பரிசு, வில், கைமுத்திரையும் ஏந்தி மகிஷாசுரன் தலையில் நிற்பவளும், தேவர்களால் வணங்கப்பட்டவளும் ஆவள்.

பிராமணரல்லாத தமிழ் மக்களின் ஊர்வகைக் கோயில்களில் எல்லாம் துர்க்கை, பகவதி, இசக்கி, முப்பிடாரி, முத்தாரம்மன், மாரியம்மன், பத்திரகாளி முதலிய தெய்வங்களைப் பிரதிட்டித்து வழிபடுகின்றனர். இவையாவும் பராசக்தியின் கோலங்களே.

துஷ்ட அசுரர்களை அடக்குவதற்கு சாந்தவடிவமுள்ள தேவி கொண்ட கோலங்களாகும். இதன் சிறப்பையறியாது இவ்வழிபாட்டை இகழன்மின். மஞ்சமெனும் சங்காரத்தின் இரத்தக்கோலமாம். வாசனைப் பொருளாயணிவள்.

சூலம்:— பகைவரையடக்கும் ஆயுதம். ஒருகாம்பில் மூன்று தலையேன்? படைத்தல், காத்தல், அழித்தல் முத்தொழிலும் ஒருவளே செய்வள் என்பதையும், இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியாய மூன்றும் அவளேயென்பதையும், சரசுவதியும், லக்ஷ்மியும், பார்வதியும் ஒன்றே என்பதையும் குறிக்கும்.

ஆராய்ச்சியாளர், கே. என். சிவராஜபிள்ளையவர்கள் முப்பந்தலும் ஔவை வரலாறும் பற்றி நாஞ்சில் வெண்பாவில் கூறுவது காண்க.

"பாவேந்தர் போற்றவ்வை பாடற் பணிதழுவி
மூவேந்தர் சேர்ந்த முறைமையால்— நாவேந்தும்
எப்பந்தல் வாய் வல்லிசையும் இசையாகா
முப்பந்தல் வாய் முழக்கின் மூன்"

## காளியைப்பற்றி ஸ்ரீ அரவிந்தகோஷ் அடிகளின் கூற்று

"மனிதனிலுள்ள அசுரத் தன்மையை சங்கரிப்பவள். பல அசுரர்களையும் கொன்றவள். ஒரேயடியாய்த் தலையிலடிப்பாள். காமம், கோபம், லோபம், பொறாமை முதலிய அசுர குணங்களை வெட்டிப் பலிகொள்வாள். அவளுக்கு மக்கள் பலவீனமாய் மடியர்களாய் இருத்தல் பிடியாது. வீரத்துடன் உற்சாகமாயிருத்தலே விருப்பம். கையிலே ஓர் தலையை வெட்டி வைத்திருந்தாலும் நாக்கை நீட்டி வீரப்பல்லைக் காட்டினாலும் அவள் மக்களுக்கு இரக்கமுள்ள தாயன்றோ? தன் பிள்ளைகளை அன்பாய் நேசிப்பாள். சான்றாண்மை, அன்புடைமை, வாய்மை முதலிய நற்குணமுள்ள பெரியார்களின் வழிபடு கடவுள் காளியென்று அடிகள் தம் நூலில் எழுதுகிறார். கைகளில் சூலம், வாள் முதலிய ஆயுதங்களேந்தினும் அபயமளிக்கும் கையும் வரமளிக்கும் கையும் உள. காளி இல்லையானால் துஷ்ட சங்காரம் அநேக நூற்றாண்டுகளாகும். இது ஒரே நிமிஷத்தில் தீர்ப்பள், உருத்திரனில்லாமல் விஷ்ணு

இல்லை; அழிவில்லாமல் படைப்பில்லையன்றோ? அவள் ஆனந்தம், அழகு, சக்தி, வீரம் முதலியவைக்கு இருப்பிடம். காளியைக் கண்டு அஞ்சவேண்டாம்." தக்கன் வேள்வியில் பத்திரகாளியின் வீரச்செயல்கள்யாவும் மறக்கருணையன்றோ? அந்த நிகழ்ச்சியில்லையெனில் தேவர்களும் முனிவர்களும் தக்கனும் நல்வழிப்படமாட்டார்கள். பகைவர்தலைகளை அரிந்தனர். "கந்துகங்கள் போலடித்தனள் பத்திரகாளி" (கந்தபுராணம்.)

நடராஜனுடையவும் காளியினுடையவும் தாண்டவம் மிக்க விசேடமன்றோ. மதுரை மீனாக்ஷி கோயிலில் இதனை அழகாயமைத்திருக்கின்றனர்.

"இசக்கியம்ம னிணையடி போற்றி
அவ்வைப் பிராட்டி யடியிணை போற்றி"

1088-ாமாண்டு வைகாசி மீ முப்பந்தல் கோயில் கொட்டைகைத் திருப்பணி நடைபெற்றது. 1047 ஆவணி மீ 1-ாம் தேதி பூசாரி மீனாட்சிநாதனை மாற்றி காந்திமதிநாதனை இரு ஊர்காரர்களும் நியமித்தனர். 1118-ல் இருஊர் தர்மகர்த்தர்களும் சேர்ந்து சுற்று மண்டபப் புதுத் திருப்பணியாரம்பித்திருக்கின்றனர்.

## முப்பந்தல் தண்ணீர் மடத்தின் முன் கல்லில் காண்பது.

1. கதூகூளு சி
2. சித்திரை மீ
3. மௌ வ முத்து
4. சுவாமி விநா
5. யகப் பெருமாள்
6. செய்வித்த
7. உபயம்.

## முப்பந்தல் டோனவூர்.

கூட்டுறவு (Fellowship.)

இது தொடங்கி சுமார் 15 ஆண்டுகளிருக்கும். அயர்லாந்து தேச ஸ்ரீமதி கமைக்கோ அம்மையார் ஏற்படுத்தினர். பெரும் பொருள் செலவுசெய்து இதனை நடாத்திவருகின்றனர்.




கோட்டைவாயில், சவுக்கை,

வலிய யஜமான் கோயில்.

*Photo by: N. C. Kuttalam.*

நோக்கம்:— அநாதக் குழந்தைகளை எடுத்து வளர்த்தி அவர்களுக்கு உணவு, உடைகள் அளித்து, கல்வி, சுகாதாரப் பயிற்சி நல்கி வருகின்றனர். உண்மைக் கிருஸ்தவராக வாழவேண்டும்.

நோயுற்ற குழந்தைகள் இங்குவந்து தங்கி ஒருவாரத்தில் நலன் பெறுகின்றனர்.

காற்றாடி எஞ்சின் கிணற்றினால் பற்பல பயிர்களும் செய்யப்படுகின்றன.

நெசவு, ஓலைப்பெட்டிகள் செய்தல், கற்றாழையில் சடம்பு செய்தல், பருத்தியரைத்தல், படிப்பு, வேதபாடம் முதலிய வேலைகளுண்டு. இத்தகை ஸ்தாபனம் மிக அவசியம்.

---

## அத்தியாயம் 10.

### மார்த்தாண்டப்பிள்ளை.
### வலிய எஜமான்.

கொல்லம் 903 சித்திரை மாதம் பிறந்தார். நாயர் குடும்பத்தைச் சார்ந்தவர். பள்ளியாடியின் சமீபத்திலுள்ள குழிக்கோட்டில் பிறந்தார்.

தந்தையார்:— ஸ்ரீ வீரமார்த்தாண்டவர்ம மகாராஜாவின் அங்கரட்சகரான இரவிக்குறிப்பு. இவர்தான் நாஞ்சிநாட்டில் இரவிபுதூர் ஸ்தாபித்தவர். சிறந்த தேவி பக்தர். இரவிக்குறிப்பு இறக்கும் காலத்தில் மார்த்தாண்டவர்ம மகாராஜாவினிடம் தன் மகனைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டினார்.

மகாராஜா இவருக்கு எல்லா வித்தைகளையும் கற்பிக்க ஏற்பாடு செய்தார். ஆயுதப் பயிற்சியில் சிறந்து விளங்கினர். தந்தையைப்போல் தேவிபக்தி இவருக்கும் உளது. அவர் பூசித்த தேவி விம்பங்கள் இப்பொழுதும் புன்னகுளத்திலும் அகஸ்தீசுவரத்திலும் காணலாம். அரசன் மார்த்தாண்டப் பிள்ளையையும் அங்கரட்சகனாக்கினார். வடக்கே நெடுங்கோட்டை கட்டச்சென்றார். பின்னர் ஆரைவாய்மொழியில் பாண்டியிலிருந்து படைகள் வருவதைத் தடுக்க இவர் இங்கு தங்கவேண்டியதாயிற்று.

நல்ல திடமான உடம்பு. மகாராஜா இவரை ஆயுதாப்பியா சத்தில் பரீட்சைகளும் செய்தார். எல்லாவற்றிலும் மார்த்தாண் டப்பிள்ளை தேறினார்.

வட்டக்கோட்டை கட்டல்:— ரோமாக்காரரைத் தடுக்க 923-ல் கன்னியாகுமரியில் வட்டக்கோட்டை டிலனுயின் கட்டளைப்படி கட்டினார். 923-ல் காயங்குளம் யுத்தம் வெற்றிபெற்றதன் அறி குறியாக மாவேலிக்கரைக் கோயிலில் ஓர் விளக்குமரம் அவர் பெயரால் நாட்டப்பட்டிருக்கின்றது.

திறமை:— கோட்டையை அடைத்து மதிலோரம் முள் போடச் செய்து மகாராஜா இவரை உள்ளுக்கழைத்தார். குதி ரையிலிருந்து குதித்து மதிலையும் முள்ளையும் தாண்டி உள்ளுக் குச்சாடினார்.

மைசூர் மகம்மதிய வீரர்கள் மகாராஜா திருமுன் விருந்துக் கழைக்கவே, தொலிக்காத ஆறு தேங்காய்களும் வைத்தார்கள். கையினாற்பிழிந்து பால் எடுத்துச் சாப்பிடக் கட்டளையிட்டனர். வீரர்கள் தோற்றார்கள். இவர் தேங்காயைக் கையினாற் றெண்டை மாற்றிச் சிரட்டையோடு பிழிந்து பால் எடுத்துக் குடித்தனர். ஓர் சுமைதாங்கிக் கல்லைத் தனிமையாகத் தூக்கிக் கீழே வைப்பார். பலர் சேர்ந்து அதைத் திரும்ப எடுத்து வைப்பார்களாம்.

மகாராஜா வாழையில் செம்புக்கம்பி இறக்கி இவருக்குத் தெரி யாமல் வைத்துவிட்டு வாழையை வெட்டச் சொன்னதற்கு இவர் இதில் யாதோ பரீட்சையுளது என்றெண்ணி இரும்புக் கம்பி யென்று உறுதிப்படுத்தி ஊக்கத்துடன் வெட்டிவிட்டார். அரச னிடம் அடியேன் இரும்பென்று எண்ணி செம்புக்காகக் கால்களைத் தேன் என்றார். ஆரைவாய்மொழியில் மீனாட்சியம்மன் கோயில் முன்னுள்ள பெரிய கற்றூண்களிரண்டும் அவர் தூக்கி நாட்டினார். ஒரு தலைப்பில் யானையும் ஒரு தலைப்பில் இவரும் பிடித்துத் தூக் கினார்களாம்.

இவருக்கு ஓர் யானையும் கொடுத்திருந்தனர். இவரோடு புள் ளிப்பட்டாளத்தில் 2000 பேர் இருந்தார்கள். சவுக்கையில் இப் போதிருக்கும் கல் கட்டிடத்தை உபயோகித்திருந்தார். அவர்

உபயோகித்த தூக்குமஞ்சம் இன்றும் சவுக்கையிற் காணலாம். ஆரைவாய்மொழி வடக்கூரில் பூமுகத்து வீட்டில் தங்கினர். மீனாட்சியம்மன் கோயிலில் நாடோறும் தரிசனத்திற்குப் போவார். அவர் ஆலயதரிசனத்திற்குப் போனதையொட்டி பட்டாளக்காரர் பலரும், ஊர் ஜனங்களும் தரிசனத்திற்கு நாள்தோறும் சென்றனர்.

சுசீந்திரம் கோயில் ரிக்கார்டு:— தோவாளைக் கோட்டைப் படியில் காவல் நிற்கும் குஞ்சுக்கூட்டம் பிள்ளைமாரில் புனச்சல் மார்த்தாண்டப் பிள்ளையின் பட்டாளத்திற்கு ஆண்டுதோறும் இருபதினாயிரம் கோட்டை நெல் சம்பளம் கொடுக்கவேண்டு மென்று சுசீந்திரம் தேவஸ்தான ரிக்கார்டுகளில் காணப்படுகின்றது. மார்த்தாண்டவர்ம மகாராஜா தன் மருமகன் கார்த்திகைத் திருநாளிடமும் இவரைப் பழக்கப்படுத்தி வைத்தார்.

பாலராமவர்ம மகாராஜா காலத்தில் வேலுத்தம்பி தளவாயும் இவரிடம் சிநேகமாயிருந்தார். வேலுத்தம்பி தளவாயின் பகை காரணமாய் திருவாங்கூரை பிரிட்டீஷ் பட்டாளம் 984-ல் பிடிக்க வரவே ஆரைவாய்மொழிக் கோட்டையில் வைத்துப் பெரிய யுத்த மேற்பட்டது. தளவாய் பெருமுயற்சியுடன் வலிய யஜமானிடம் பொறுப்புக் கட்டினர். இவர் திறமையுடன் போர் புரிந்து பலரையும் கொன்றார். பிரிட்டீஷ் படைகள் பீரங்கிவைத்துக் கோட்டையை இடித்து விட்டனர். ஊர் ஜனங்கள் பலரும் மலையிலும் அயலூர்களிலும் மூன்று நாள் தங்கினர். புன்னகுளம் கோட்டையையும் வெட்டி முறித்தார்கள். 80-ாவது வயதில் (984) வலிய எஜமான் அடி போரில் காயம் பட்டிறந்தார். இறக்கும் தருணத்தில் பிரிட்டீஷ்காரர் மெச்சத்தக்க வாக்கு மூலம் கொடுத்தார். அவரைப் புன்னகுளத்தில் அடக்கம் செய்தார்கள். சிறந்த வீரருக்கு நடுகல் நாட்டி வைப்பது பண்டைய வழக்கம். இவ்வூரில் அவரது சிலையும் உடைவாளும் வைத்துக் கோயிலும் கட்டிக் கவர்ண்மென்றிலிருந்து பூசையும் நடந்து வருகிறது. யுத்தம் வெற்றிபெற மந்திரம் ஜெபித்திருந்ததாகவும் தெரிகிறது. உடம்பின் வன்மைக்குத் தக்கபடி அவரது உணவு மிகவும் கூடுதலாயிருந்தது. நாலைந்து பேர் சாப்பிடும் உணவை அவர் ஒரு நேரத்திற்றின்பதுண்டு. கேள்வரகு மாவரைக்கும் ஓர்செக்கு இன்றும் சவுக்கையில் அவர் ஆலயத்தின் முன் காணலாம். அதில் அவர்தானே மாவரைப்பார். பத்துப்பேர் சேர்ந்தும்

அரைக்கமுடியாது. இதேமாதிரி அவர் வீட்டிலும் திரிகைக்கல் உளது. பெரிய செல்வந்தராகவும் விளங்கினர். அவர் படுக்கும் கட்டிலிற் போட்ட சங்கிலி தூக்கியிருந்த வளையங்கள் இன்றும் சவுக்கையிற் காணலாம். கட்டில் 9 அடி நீளமும் 4 அடி வீதியுமுளது. ஆள் நல்ல உயரமும் பருமனும் உடையவர். படைகளுக்கெல்லாம் தலைவராயிருந்தமையால் வலிய யஜமான் எனும் பெயர் வந்தது.

சவுக்கைக் கல் கட்டிடம் பட்டாளம் தங்கியிருந்த இடமாகும். வலிய எஜமான் ஆப்பீஸ் அறை மத்தியில் விளங்குகின்றது. சவுக்கைக் கல் கட்டிடத்தில் நூற்றுக்கணக்கான மீன்களின் உருவம் கல்லிற் கொத்தப்பட்டிருக்கின்றன. இவ்வூரில் மீனாட்சியம்மன்கோயில் முக்கியமாதலால் அம்மனது அடையாளமாக மீன் கொடியை இட்டனர். மீனாட்சியம்மன் கோயில் மண்டபங்களிலும் மீன்களின் உருவம் தீட்டப்பட்டிருக்கின்றன. மீன் கொடி பாண்டிய மன்னனுக்காதலால் பாண்டியன் காலத்திற் கட்டப்பட்டதென்று வழக்கிட வேண்டாம். கோட்டை கட்டிப் பட்டாளம் தங்கின காலத்துத் திருவாங்கூர் அரசாங்கத்தாரால் கட்டப்பட்டதே. இவ்வூர்க் கல் மண்டபங்கள் எல்லாவற்றிலும் மீன்கொடியுண்டு.

"கோட்டை வாயிற் பாங்கர்க் கோயில் குடிகொண்டு
பாட்டை வழிப்போம் படைத்தம்பூர்—கேட்டங்
கிருக்கும் வலிய எஜமான் றிறத்தைப்
பெருக்குமே பின்னோர் வாய்ப்பேச்சு" (நாஞ்சி வெண்பா)

985 பெப்ரவரி 6-ல் ஆரையில் பிரிட்டீஷ் படைகள் தங்கின. கோட்டை உறுதியாகவும் நல்ல பாதுகாப்புடனும் பீரங்கிகளுடனும் இருந்தது என்று பிரிட்டீஷ்படைகளே ஒப்புக்கொள்ளுகின்றன.

"The pass was protected by a strong wall supported by built bastions provided with guns"

கோட்டைபிடித்தல் எளிதான காரியமல்ல. கோட்டையின் வெளியில் தங்கியிருந்த படைகளுக்குப் பகலில் கோட்டையைப் பிடிக்கமுடியாமல் இரவில் நகர்ந்து நகர்ந்து உருண்டு மிக்க உயர

மான மதிலை 6 மணி நேரம் வருந்தித்தாண்டினர். மறு நாள் காலையிற் கோட்டைக்குள் நுழைந்தனர். கர்ணல் சென்று லீகரின் வவுதலின்படி கர்ணல் வேலிஷ் சீக்கிரத்தில் தந்திரமாகக் கோட்டையைப்பிடித்தார்.

## மார்த்தாண்டன் செண்பகராமனது விண்ணப்பம்.

(ரிப்போர்ட்டு) 992 சித்திரை.

"பிரிட்டீஷ் படைகள் வந்து ஆரைக்கோட்டையை இடித்தபின் அவர்கொடுத்த வாக்குமூலமாவது. நான் இளமையிலேயே மகாராஜாக்களைச் சேவித்தேன். 960-ல் நெடுங்கோட்டைக் கட்டப் போனேன். டிப்புவின் பட்டாளத்தில் 500 வில்லரையும் கொண்டு எதிர்த்து கும்பனிஉதவியால் குடகுமலைவரைச் சென்றேன். 6 பட்டாளத்திற்கு கர்ணலாயிருந்தேன். 1500 பணம் சம்பளமிருந்தது. கர்ணலின் சம்பளமும் தந்து ஆடுதலியும் பாறுவும் தந்தனர்." உண்மைஉரைத்தார். சிறந்த தேசாபிமானி. அரசரது நட்பிற்குரியவர். கற்பனைப்படி கிழக்கே கோட்டைகளிலும், கொத்தளங்களிலும் காவலும் சட்டதிட்டங்களும் நடாத்தி, கடற்கரையில் உருக்கள் (படகுகள்) வருவதைக்கவனிக்கவும் காவலாக்கினர். வேலுத்தம்பியுடன் அதிகமாய் நெருங்கவில்லை. கம்பனிப்பாளயம் ஆரைவாய்மொழியில்வந்தது. நான் சமாதானம் செய்ய உதயகிரியில் வெள்ளைக்கொடிகட்ட பால்வர்ணநாதபிள்ளையிடம் ஆலோசித்தேன். கற்பனைப்படி சமாதானமாய்ப் போனேன். தளவாய்க் கேட்கவில்லை. யுத்தத்திற்குத் தயாரானூர். தன் வார்த்தையைத் தளவாய் மதிக்கவில்லையென்றும் அவர் கருதினர். அப்போது காலில் நோயென்றும் முதுமைப்பருவமென்றும் கூறுகின்றனர்.

## வலிய யஜமான் விற்பாட்டு

தென்னுரைப்பதியதிலே கோட்டைக்கிடம் பார்த்தல்லவோ
கோட்டைகட்ட தீர்மானிச்சு நாளான நாள்பார்த்து
நல்லதொரு திவசத்திலே வானம் வெட்டி கல்லிறக்கி
பட்டாளக்காரர்களும் பீரங்கிக்காரர்களும்

படையெடுத்து வந்தல்லவோ வாரதந்தவேளையிலே
கோட்டைவாசலிலே உடையான்பிள்ளை வலியயசமான்
வாளோடுகூடி டிரசுகள் தாம் போட்டு
வாசலிலே நிற்கும்போது வெள்ளைக்கார படைகள் வந்து
ஆர்த்தவிளைப் போக்கதிலே கூடாரம் தானடித்து
துப்புகள் கேட்டல்லவோ கோட்டைபிடிக்க வேணுமென்று
கோட்டைநடை வழியாக கோட்டை கடந்து வந்தல்லவோ
வருகிற சமயத்திலே உடையான்பிள்ளை வலியஜமான்
படைகளைத்தான் தடுக்க அதிலொரு வெள்ளைக்காரன்
உடையான் பிள்ளையை வாளெடுத்து வெட்டிப்போட்டான்.
சரித்திரமும் சரியில்லை. பாட்டும் பிழையதிகம்.

985-ல் பிரமாணம்:— "984 தை மாதம் இரவு துரைமார்களும் கூடவே வந்தார்கள். கோட்டைப் படியிலிருந்த பெரிய துப்பாக்கிகளைத் திருப்பிவைத்துச் சுட ஆரம்பித்தனர். கோட்டைப் படி காத்துநின்ற சிப்பாய்களிற் சிலர் மாண்டனர். சிலர் ஓடி ஒளித்தனர். (அஞ்ஞாழி நெல்லுக்காக உயிரை விடலாமாவென்று ஓடியதாய்ச் சிலர் கூறுவர்) பின்னர் தளவாய் வேலாயுதன் செண்பகராமன்பிள்ளை சில வீரர்களுடன் மாசிமாதம் தோவாளையில் படையெடுப்புக்குப்புறப்பட்டபோது கும்பனிப்படைகள் ஒழுகினசேரியில் எதிர்த்துப்போர் தொடங்கினர். அரசர் போர் வேண்டாம்; வெள்ளைக்கொடி பிடிக்கவேண்டுமென்று கட்டளை இட்டனர் என்பர். இதனால் வலிய யஜமான் ஆரைவாய்மொழியில் வைத்து இறக்கவில்லையென்று ஐயுறவேண்டாம். அவர் மாண்டது இங்குதான். திருவாங்கூர் படைகளுக்குத்தெரியாமல் இரவு வந்தனர். மறுநாட்காலையில் மருந்துப்புரைகளும் பிடித்தனர். கர்ணல் ஸென்று லீகர் கோட்டையில் தங்கினர். கோட்டையின் உள்ளும் புறம்பும் வாயில்கள் பீரங்கிகளால் இடித்துத் தகர்க்கப்பட்டன. இதைப்பிடித்தது அவர்களுக்குப் பெரிய வெற்றியென்பர். ஸிலோண் படைகளும் புது தளவாடங்களுடன் ஆரைக்கு வந்து சேர்ந்தன. வலிய யஜமானைப்பற்றி அவர் கூறவில்லை. வலிய எஜமான் உருவச்சிலை மாரிமுத்தாரம்மன் கோயிலில் தூணில் செய்து விட்டிருக்கின்றனர். அவர்தானென்று உறுதியாய்க் கூறமுடியாது.

வலிய யஜமான் மலரடி போற்றி
சேனைத்தலைவர் சேயடி போற்றி



அகலிகையூற்று ஆதிமுத்தானந்தர் கோயில்.

*Photo by: N. C. Kuttalam.*

## அத்தியாயம் 11.

# அகலிகையூற்று ஆதிமுத்தானந்த சுவாமிகள்.

---

பாண்டிநாட்டில் மதுரையில் பிறந்தவர். பன்னிரண்டாவது வயதில் தாயிடம் ஏற்பட்ட சிறுசண்டையால் வெளியூருக்கேகினர். பின்னர் தாயார் பெரிதும் வருந்த நேர்ந்தது. பல இடங்களிலும் தங்கி, இறுதியில் ஆரைவாய்மொழியில் வந்துசேர்ந்தனர். ஆலவாயில் மீனாட்சி சுந்தரேசர் அருளாற்பிறந்த அடிகள் மீனாட்சி சுந்தரேசர் வீற்றிருக்கும் ஆலவாய்மொழியை அடைந்தனர். ஆரைவாய்மொழியில் சொக்கலிங்கம்பிள்ளை மூத்தபிள்ளை சுவாமிகளைவரவேற்றுப்பெரிதும் உபசரித்தார். அவர்கள்வீட்டில் தங்கினர். வேளாளன் என்பான் "விருந்திருக்க உண்ணாதான்" என்பதுபோல் மூத்தபிள்ளை சுவாமிகளை உபசரித்தனர். அடிகளுக்கு மூன்று நேரம் உணவில்லை. ஒரே நேரம்தான் உணவு. உணவுப்பொருள் சோறல்ல. சிறுபயிற்றின் பருப்பை அவித்து அதில் உரியப் பசுவின்பாலும் விட்டு வைப்பார்கள். சுவாமிகள் அதில் தங்கப்பஸ்மம் போட்டுச் சாப்பிடுவார்கள். மூத்தபிள்ளையவர்களுக்குக் குழந்தையில்லாமலிருந்ததால் வருந்தினர். சுவாமி ஓர் பச்சிலை நல்கி அனுக்கிரகிக்கவே பிள்ளையவர்களின் மனைவி கருவுற்று ஆண்குழந்தையைப்பெற்றாள். ஒரு நாள் குழந்தை மாறுபாடான உணவினால் நோயுற்று இறக்கும் நிலையிலாயிற்று. தூக்கிச்செல்ல வேப்பந்தழையும் வந்தது. எல்லோரும் துயரக்கடலில் மூழ்கினர். சுவாமிகள் சித்தர்கிரி மலையிலிருந்து வந்து மகவைத் தண்ணீரில் குளிப்பித்து உயிர்ப்பித்தார். பின்னர் அகலிகையூற்றில் அடிகட்கு மூத்தபிள்ளையவர்கள் மடம்கட்ட இடம் கொடுத்தார்கள். சுவாமிகள் மடம் கட்டும்போது வேலையாட்களுக்கு மாலையில் வேலைக்குத் தந்த கூலி தன் நெஞ்சைத்தடவி ஒவ்வொருநாளும் கொடுத்து வந்தனர். இதனையறிந்து பலர் சுவாமிகளின் சீடரானார்கள். பெரிதும் கொண்டாடினார்கள். இல்லறத்தார் துறவிகளுக்கு வேண்டும் உதவிகள்செய்தல் அவசியம். மூத்தபிள்ளை ஏராளம் செல்வம் படைத்தவர். ஆலவாயூரில் பண்டுதொட்டே சீமான்களும் உளர்.

எட்டுவயதில் சங்கராச்சாரியர் சந்நியாசியானார். அடிகளும் பால சந்நியாசியே. ஆரம்பகாலத்தில் வெள்ளிய ஆடை உடுத்தனர். பின்னர்தான் காவியுடுக்க நேர்ந்தது.

பெரியார் நாள்தோறும் செக்ககிரியென்னும் சித்தர் கிரியில் சென்று ஆலயதரிசனம் தியானம் முதலியன நடாத்திவிட்டு பகல் பதினெட்டு நாழிகையில் இங்குவந்து மலையூற்று மண்பானைத் தண்ணீராலிட்ட மூன்று குடம் வெந்நீரில் குளிப்பது வழக்கம். பின்னர்ச் சிவபூசை செய்வார். மாத்திரைக்கோல், பெரியசங்கு, பாதக்குறடு, ஸாளக்கிராமம் போன்ற உருண்டைச் சிவலிங்கம், வேலாயுதம் முதலியன வைத்துப் பூஜித்ததற்கு அறிகுறியாக இன்றும் அவை அசுலிகையூற்றுச்சமாதியிற் காணக்கிடக்கின்றன.

பூசை முடிந்தவுடன் சாப்பிடுவார். மதுரையிலிருந்து பெற்றோர்கள் சுவாமியைத்தேடிவந்து ஆலவாய் மொழியில் தங்கினர். பலவாண்டுகள் கழிந்தன. சிலர் சுவாமியின் பெருமையறியாமல் குறை கூறினர். அடிகள் வருந்தி களங்கையிற் (களக்காட்டிற்) சென்றிருந்தனர். ஓராண்டு கழிந்து ஊராரெல்லோரும் ஒன்று சேர்ந்து சுவாமிகளை அழைத்து வந்தனர்.

பௌர்ணமியில் சிறந்த பூசை நடாத்துவர். கார்த்திகை மாதம் திருக்கார்த்திகையில் ஏக்கருக்கு 8 படி நெல் வீதம் பிரித்துக்குரு பூசை செய்து எல்லாச்சாதியாருக்கும் உணவளிப்பர். சுவாமிகள் வருணனை நோக்கித் தவம் கிடப்பார். இவ்வூரில் மழை செழிப்பாய்ப் பெய்து பயிர் செழித்தோங்குமென்று ஏற்பட்ட இவ்வழக்கத்தை இப்போதும் இவ்வூரார் சிரத்தையுடன் செய்து வருகின்றனர்.

முன்னாளில் திருநெல்வேலியில் நெல்லையப்பர் சுவாமிக்கு நிவேதனத்திற்குரிய நெல்லைக் காயப்போட்டு விட்டுப் பூசகர் குளிக்கப்போனார். அப்போது பெருமழை வந்தது. உடன் பூசாரி நெல் கிடக்குமிடம் மழை பெய்யலாகாதெனச் சிவபிரானிடம் பிரார்த்திக்கவே அதற்கு மட்டும் மழையில்லாது பாதுகாத்தார். பூசை நெல்லுக்கு வேலிகட்டியதால் அன்றுமுதல் வேணுவனம் நெல்வேலியாயிற்று. அவ்வாறே ஓரன்பர்தன் வயலில்மழையில்லாது

பயிர் கரிந்துவிட்டதாய் வருந்திச் சுவாமிகளிடம் கூற உடன் சுவாமிகள் அவர்பொருட்டல்லாமல் ஊராருக்கும் பயன்படுமாறு மழை பெய்வித்தனர்.

அப்போதிருந்த அரசன் சுவாமிகளின் பெருமையைக் கேள்விப்பட்டு ஆரைக்கு வந்து பார்த்துச்சென்றதாய்க் கூறுவர். இவர் பட்டினத்தடிகளைப்போலத் துறவிற்குப் பெற்றோரின் தடையைப் பொருட்படுத்தவில்லை. "தாய் தடையென்றேன் பின் தாரம் தடையென்றேன்" என்றார் இராமலிங்க அடிகள். செல்வம் முதலிய வெளிப் பொருட்களினுடையவும், உடம்பு முதலிய அகப்பொருட்களினுடையவும் நிலையாமையை உணர்ந்து நீக்குதலே துறவெனப்படும். எல்லாவற்றையும் ஒருமிக்கவோ ஒவ்வொன்றாகவோ துறக்கலாம். ஒவ்வொரு பொருளையும் விட்டுவந்தால் அது நிமித்தமான துன்பம் குறையும்.

"யாதனின் யாதனி னீங்கியானோத
லதனினதனி னிலன்" (குறள்)

முற்றும் துறத்தல் சிறப்பாம். மனைவி, மக்கள், செல்வம், இவற்றின் பற்றையறவே விட்டுவிட்டார். ஆமை தன் உறுப்புக்களை அடக்குவதுபோல் துறவி ஐம்புலன்களையும் அடக்கிவிட்டார். மனதை வென்று கடவுளிடம் செலுத்தினதாலும், சிவபூசை செய்ததாலும் அவர் நினைத்த பொருட்களையெல்லாம் ஆண்டவர் அருளினர். பலருக்கும் நோயைத்தீர்த்து வைத்தார். ஜீவகாணம் நீங்கிச் சிவகாணம் பெற்ற பெரியார்க்கு இவ்வூரில் பல சீடர்கள் உளர். யோகமுறைகள் நன்கு பயின்றுள்ளார். யோகம் சித்தத்தின் பல விருத்திகளையும் தடுக்கும்.

"யோக: சித்தவ்ருத்தி நிரோத:

சுவாசத்தை அடக்குவர். இரேசக பூரக கும்பகம் செய்து பழகினர். தியானம் ஆசனம் சமாதி முதலிய அஷ்டாங்க யோகம் பழகுதலும் உண்டு. யோகிகட்கு மனதின் சுபாவம் நன்கு தெரியும். சாதாரண ஜனங்கள் அதறிவதில்லை. மனதையடக்கி ஐம்பொறிகளை வெல்லவேண்டும். வென்றால் நாம் பெரிய யோகியாகலாம். யோகமே முத்திமார்க்கமென்று பதஞ்சலி பகவான் கூறு

வர். ஞானமில்லாமல் உண்டாகும் யோகத்தால் வீடு பெறவிய லாது. மோட்ச ஆசையுள்ளவர்கள் யோகத்தையும் ஞானத்தை யும் நன்கு பயிலவேண்டும்.

"யோகோபிஜ்ஞான ஹீனஸ்து
நக்ஷமோ மோக்ஷ ஸாதனே
தஸ்மாத் ஜ்ஞானம்ச யோகம்ச
முமுக்ஷுர்த்ருட மாப்யஸேத்" (கீதை)

ஆகவே யோக மார்க்கத்தோடு ஞானமார்க்கமும் பயின்றுள்ளார். சிறந்த பக்தனுயும் விளங்கினர்.

சமயம்:— மனிதப்பிறவி பெற்ற பயன் சிவபெருமான்றிரு வடியடைவதற்காம். சுவாமிகள் முழுமுதற்கடவுளாகிய சிவபெ ருமானது மெய்ச்சமயமாகிய சைவசமயத்தைச்சார்ந்தவர். ஜீவ காருண்யம் மிக்கவர். கொலைமுதலியன அறவே வெறுத்தவர். திருநீறும் ருத்திராக்ஷமும் எப்பொழுதும் அணிந்திருப்பார். சுவா மிகள் எழுதிய நூலில் சிவ சச்சிதானந்த பதம் என்பதை விதந்து கூறுவதால் சித்தாந்த சைவர்.

"பரமசிவனமலன் பக்தர்க்குச் சின்னம்
உருவுடலிற் கண்டியும் நீறும்"

அகந்தை குறைந்து சிவபூசை செய்யும் இயல்பினர்.

"வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமைதப்பி
தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறலரிது உயர் சிவஞானத்தாலே
போழிளமதியினுனைப் போற்றுவார் அருள் பெற்றாரே"
(சிவஞானசித்தியார்)

பல சாஸ்திரப் படிப்பு:— தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி உடையவர். வடமொழியும் கற்றிருக்கவேண்டும். வைத்திய நூலில் வல்லவர். அகத்தியமுனிவர் எழுதிவைத்த நூற்களை யெல்லாம் தொகுத்து ஒரு ஏட்டில் அனுபோக முறையான சிறந்த வைத்திய சாஸ்திரம் தன் கையால் எழுதிவைத்திருக்கின்றனர். அது இவ்வூர் திரு வீரபாகு ஆசாரியவர்களிடம் இருக்கின்றது. ஏட்டிற்காணும் முதற்செய்யுள்:-

"அடிமுடியுமாகி நின்ற நிர்க்குணத்தைப் போற்றி
அது கடந்த நின்மலத்தை அடுத்தென்னாளும்
வடிவுடைய சிவன் உமையைப் பூசை பண்ணி
மகத்தான சின்மயத்தின் கருணையாலே
படிமீதில் வைத்தியம் தானிரண்டு லட்சம்
பாடியதோர் பாவையெல்லாம் குறுக்கியானும்
சடிதியாச் சூத்திரம்போல் ஆயிரத்தி ஐநூறும்
சாற்றினேம் கணேசரருள் தான் காப்பாமே"

மாந்திரீகத்திலும் தேர்ச்சியுண்டு. சோதிடமும் நன்கு கற்றவர். விஷவைத்தியம், கண்வைத்தியம் செய்துவந்தார்கள். வைத்திய ஏடு எழுதி 134 ஆண்டுகளாயிற்று. தன் சீடர்களிடம் சமாதி நாள் முன்னரே தெரிவித்தனர். ஞானிகள் வருங்காலமறிந்துரைப்ப தியல்பு. "அறிவுடையார் ஆவதறிவார்"

கொல்லம் 1010-மாண்டு சித்திரை மாதம் 3-ம் தேதி திங்கட் கிழமை ஆதிமுத்தானந்தசுவாமிகள் சிவபெருமான் திருவடியோடு இரண்டறக்கலந்தனர்.

இப்பொழுது அகவிகையூற்றில் சுவாமிகள் சமாதி மடத் தில் புதிய திருப்பணி நடத்தியிருக்கின்றனர். பூசையும் உளது. மக்கள் நாடோறும் சென்று அருள்பெறவேண்டும். இந்துக்கள் கடவுளையும், கடவுளருள் பெற்றவர்களையும் கும்பிடுவர். குரு பூசைநாளில் சாப்பாட்டோடு விரிவுரைகளும், பஜனையும், புராணப் பிரசங்கங்களும் நடைபெறவேண்டும்.

ஆதிமுத்தானந்தர் திருவடி வாழ்க!
அகவியூற்று ஆதிமுத்தர்
நிகரிலா இணையடி நிதம்பணிவோமே.

கொல்லம் 988 கன்னி 21-ம் உ இராணிகௌரி லக்ஷ்மிபாய் துல்லியம் சார்த்தினது. (கைபெழுத்து) மருத்துவாமலையில் ஓர் சாமியார் இருப்பதாய்த் தெரிவதால் அவரிடமிருந்து விபூதிவாங்கி அணிந்ததால் நோய் தீர்ந்துவிட்டதாய்க் கூறுகின்றனர். அக்கா லத்தில் வாழ்ந்திருந்தவர் நம் அகவிகையூற்றுச் சுவாமிகளன்றோ? நம் சுவாமிகள் மருத்துவாமலையிலும் சிலகாலம் தங்கியிருந்ததாய்ச் சொல்லுவதால் மகாராணிக்கு விபூதியளித்தவர் இவர்தானென்று ஊகிக்க இடமுண்டு. குலசேகரபுரம் ஞானியார் சுவாமியுமாகலாம்.

## அத்தியாயம் 12.

## சித்தர்கிரி. (செக்கர்கிரி)

ஆரைவாய்மொழிக்கு மேற்கிலிருக்கும் மலையாம். சித்தர்கள் ஆடி அமாவாசையிலும், சித்திரைப் பௌர்ணமியிலும், இம்மலையில் வந்து கூடுவார்கள். அதுபற்றியே இந்நாட்டில் சித்தர் கலைக்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன.

"கோதகன்றயோகர் மனக்குகையில் வாழும் குருவே சண்முகம் கொண்டகோவே" என்றார் இராமலிங்க அடிகள். சித்தர்கள் என்பார் பண்டைக்காலத்து அறிவருள் ஒருசாரார். யோகம் பயின்று, விரிந்த காட்சியுற்றுப் பொருள்களின் உண்மை இயல்பு களையும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிந்து மருத்துவநூல், மந்திரநூல், இரசவாதநூல், யோகநூல், ஞான நூல் என்னும் பற்பல நூல்களையும் இலக்கியங்களையும் உலகுக் கீந்தனர். வடக்கே பொதியமலை, மகேந்திரகிரி இவைகளில் தங்கி யிருக்கும் சித்தர் திலகரான அகத்திய முனிவரைத் தரிசித்துவிட்டு இம்மலையில் வந்து வெளவால் புடை முதலிய குகைகளில் தங்கியும், முருகன்கோயில் பிரதிட்டையாவதற்கு முன்னமே வேல் முதலியனவைத்துப் பூஜித்துமிருக்கலாம். வேறிடங்களில் இதுபோ லில்லை. தோவாளையில் ஒரு சித்தர் முசிட்டைக்கீரை உண்டதால் அங்கு முசிட்டைக்கீரைப் பிரசித்தமாயிற்று. செண்பகராமன் புதூரில் ஒரு சித்தர் கீரைத்தண்டு சாப்பிட்டதால் அங்கு கீரைத் தண்டு சிறப்பாயுண்டாகிறது.

மண்ணின் நலமும் மறக்கமுடியாது. இப்பெரியார்களும் காரணமாகலாம். தோவாளைச்சித்தர்கிரியில் 50 வருடங்களுக்குமுன் சித்திமார்க்கம் பழகவந்த இடத்தில் இப்போதிருக்கும் கோயிலில் சித்தர்கள் காட்சியளித்ததாய் ஊராரிடம் கூறி அங்கு கோயில் கட்டினர். இரவில் இரண்டு யோகிகளின் 10 அடிக்குமேல் நீளமுள்ள இரண்டு எலும்புக்கூடுகள் வந்தனவாம். அவற்றை அங்கு சமாதியில் வைத்திருக்கின்றனர்.



செக்கர்கிரி முருகன் கோயிலும்,

மலையூற்றும்.

*Photo by: N. C. Kuttalam.*

பழனிமலை போகர், புலிப்பாணி முதலிய சித்தர்களால் சிறப்புற்றிருப்பதுபோல் இதுவும் சிறப்புற்றிருக்கலாம். ஆதலால், உச்சிமலையைச் சிறு பழனியென்றும், திருவாங்கூரின் 6-வது முருகன் தலம் என்றும் அழைப்போமாக.

ஆரைவாய்மொழிச்செக்கர்கிரி உச்சிமலை முருகன் விம்பத்திலணிந்திருந்த பொன் உருத்திராக்ஷத்தைப் பாண்டியினின்றும் வந்த படைகள் மலையிமேலேறி யுத்தவசதிகள் பார்த்தபோது விம்பத்திலிடப்பட்டிருந்த பொன் உருத்திராக்ஷத்தை எடுத்துக்கொண்டு, விம்பத்தையும் உடைத்துவிட்டனர். பின்னர் வேறு விம்பம் பிரதிட்டிக்கப்பட்டிருக்கிறது.

கொல்லம் 975-மாண்டு செக்கர்கிரி அடிவாரத்திலுள்ள முருகன்கோயில் தியாகராயமூர்த்தி என்னும் ஒரு சைவ சிகாமணியால் பிரதிட்டிக்கப்பட்டது. அவரது மனைவி மீனாக்ஷி ஆனந்தவடிவு அம்மாள் டிெ கோயிலுக்கு 977 லும் 981 லும் நிலம் முதலியன வாங்கிய பதிவுச்சீட்டு ஓலைப்பிரமாணங்கள் அவர்கள்பேரன் திரு. சண்முகம்பிள்ளையவர்கள் காண்பித்தார்கள். அம்மையார் சிறந்த சிவபக்தை. மனைவியின் வேண்டுகோளின்படி மனமிசைந்தே இக்கோயில் பிரதிட்டிக்கப்பட்டது.

உச்சிமலையில் ஒரு தொட்டி கிடக்கின்றது. அதில் ஓர் வரி எழுதப்பட்டிருக்கிறது. பழனிமலை எனக் காணப்படுகிறது. வட்டெழுத்தாலானது. மலையுச்சிக்குப்போகும் வழியில் ஓர் கல் வெட்டுளது. அது பாறைமீது எழுதப்பெற்றிருக்கிறது. இறுதியில் குமரநாயகன் துணை என்று எழுதப்பட்டிருக்கிறது.

1. உமசுமுண
2. லமானசிசு
3. ஸ்ரீ லதெச
4. த்துஉள்ளேகு
5. டுஉமெமெ
6. ருகான
7. ரகெமுயசுனட
8. யாஉருகுமரநாயகன்
9. துணை.

எழுத்துப் பருமனும் முந்திய காலத்தமிழ் வடிவமாயும் இருப்பதால் இற்றைக்குச் சுமார் 300 வருடகாலமாய் இருக்கலாம்.

ஆகவே செக்கர்கிரிக்கோயில் பழமை வாய்ந்தது என்பதும், முக்கியம் என்பதும் இதனாலறிக. கல்வெட்டு அழிந்துவிட்டது. வாசிக்க முடியாது.

உச்சிமலையூற்று தியாகராயர் வெட்டினார். அம்மலையூற்று விசேடமானது. கொல்லம் 981 வைகாசியில் உச்சிமலை முருகனுக்கு நிலங்கள் வாங்கினர். 250 வருடங்களுக்குமுன் உச்சிமலைக் கோயில் பிரதிட்டை நடந்திருக்கும். குன்று தோறுடல்நின்ற பெருமாளாகிய முருகனதுகோயில்கள் இங்கு மலைமீதும், மலையடியிலும் அமைந்தன மிக்க விசேடமே. தண்ணீர்க்கஷ்டமுள்ள இவ்வூரில் மலையூற்று அமைந்ததும் முருகனருளேயாம். சித்தர்களுடையவும் முருகனுடையவும் அருளால் இவ்வூற்றுநீர் இன்னும் அதிகப்படவேண்டும். அதற்கு ஆண்டுதோறும் மக்கள் குழுமிப் பிரார்த்தனையும் வழிபாடும் நடாத்த வேண்டும். உச்சிமலையில் தெற்குப்பக்கம் இருக்கும் செக்கர்கிரிக்கோயில் ஓர் கோசாமியும், பின்னர் ஓர் பெண்துறவியும் இருந்து திருவருளோடு முருகன் தொண்டுபுரிந்திருக்கின்றனர். இது தோவாளை ஊரைச்சார்ந்ததாகும். சித்தர்களை வழிபடவேண்டியது இன்றியமையாததே. அவர்கள் எளிதில் அனுக்கிரகிப்பர். அணிமை, மகிமை முதலிய அட்டமாசித்திகளையும்பெற்று திருவருள் நிறைந்தவர்கள்.

"பக்குவமா ஞானமொடு பக்தியேதும் பகருவதற்
கென்பா லொன்றில்லை யேனும்
இக்கலியிலி ருமைக்குநல மளிப்போன் எந்தையாம்
கந்தனொருவன்தா னென்றும்
அக்கருத்தைத் தக்கதென வகத்திற் கொண்டே ஆரைவாய்
மொழி யென்றுஞ்சீர் பெற்றோங்கச்
செக்கர்கிரி வாழ்பால சுப்ரமண்யன் திருவடியைச்
சிந்திப்பேன் வந்திப்பேனே"

(இலதூர் இ. வி. நாராயணசாஸ்திரிகள்)

ஆரைவாய்மொழி, செக்கர்கிரி முருகனால் சீர்பெற்றோங்குகின்றது எனக்கூறுவது காண்க. காசியிலிருந்த பழனியாச்சியம்மாளுக்குத் தீராக்குன்ம நோயிருந்தது. அப்பொழுது இறைவன் கனவில் தோன்றி நீ தெற்கே ஆரைவாய்மொழிச் செக்கர்கிரியில் தவமி

ருந்தால் தீரும் எனத் தரிசனம் நல்கினர். பின்னர் இங்குவந்து தியாகராயமூர்த்தியின் குலத்தார்களின் உதவியோடு கோயிலைப் பிரதிட்டித்தாள்.

சித்தர்களில் சிலர் அடிக்கடி தோன்றுவதுண்டு. அவர்கள் தரிசனம்பெற்றவர்களும் இங்கு உளர். சித்தி பழகுவதற்கும் பலர் வருவர். சித்தர்கள் சுவாசத்தை மட்டுப்படுத்தி யோகம் பயின்று நீண்டநாள் வாழ்கின்றனர். திருமூலர் 3000 ஆண்டுகள் வாழ்ந்தனர். அவர்கள் உடம்பு அழியாமல் பலகாலம் இருந்ததுண்டு.

"ஏற்றியிறக்கி இருகாலும் பூரித்துக்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றையுதைக்கும் குறியது வாமே" (திருமூலர்)

உச்சிமலையில் சித்தர்கள் தங்கும் காலங்களில் ஓர் வெளிச்சம் காண்பதுண்டு. அதனைப் பலரும் கண்டதுமுண்டு. சிலர் அதனை வெளிச்சப்புல் என்பர்.

வெற்றிவேலன் மலரடி போற்றி
செக்கர் கிரியான் சேயடி போற்றி.

## அத்தியாயம் 13.

# பக்த தேவசகாயம் பிள்ளை.

நட்டாலம் ஊரில் மருதக்குளங்கரை எனும் வீட்டில் 1712-ல் நீலகண்டப்பிள்ளை பிறந்தார். நாயர்ஜாதியைச் சார்ந்தவர். தமிழ், வடமொழி, மலையாளம் முதலிய பாஷைகளை நன்கு பயின்றுள்ளார். தர்க்கம், இலக்கணம் முதலியனவைகளையும் நன்கு கற்றனர். படைக்கல பயிற்சியும் உளது. பெரிய குடும்பத்தில் பிறந்தவர். செல்வத்திற்குக் குறைவில்லை.

காளைப்பருவம் வந்தவுடன் நாயர்ஜாதியில் ஓர் சிறந்த பெண் மணியை மணந்தார். மார்த்தாண்டவர்ம மன்னர்பிரான் இவரது திறமையையறிந்து பத்மநாபபுரம் நீலகண்டசுவாமி கோயிலின் கர்த்தாவாய் நியமித்தார். அரண்மனை உத்தியோகத்திலும் அமர்ந்தார். மாட்சிமைமிகும் மன்னர்பிரானின் கருணைக்குப் பாத்திரமானார். கோட்டை மேற்பார்வையாளராகவும் இருந்தார்.

குளச்சல் யுத்தத்தில் பிடிக்கப்பட்டு திருவாங்கூரின் முன்னேற்றத்திற்குழைத்த பெரிய கப்பித்தான் டிலனாயின் சிநேகிதரானார். டிலனாயின் நட்பு நாளுக்குநாள் வளர்ந்தோங்கியது. பின்னர்ச் சிலதினங்களாக நீலகண்டப்பிள்ளையவர்கள் கவலையுற்றிருப்பதையறிந்த டச்சு வீரரான டிலனாயென்பார் பிள்ளையவர்களிடம் தாங்கள் முகவாட்டமாயிருப்பதின் காரணமென்னவென்று வினவினார். கன்றுகாலிகளும், தனதானியங்களும் நஷ்டமடைந்ததாலும், குடும்பத்தில் நோயாளிகளின்எண்ணிக்கை பெருகிவருவதாலும்தான் எனது மனம் சதா சஞ்சல சாகரத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. இதுவும் தேவி கோபமாயிருக்கலாமென்றும் தெரிவித்தனர். உடன் டிலனாய் ஆறிடுமேடும் மடுவும் போலொத்த செல்வம் போனதற்கு வருந்தவேண்டாம், பிரிய நண்பரே கர்த்தரின் கிருபை என்றுமே மிக மேலானதாகும். அதுவே அமைதியையும், ஆனந்தத்தையும் அளிப்பதாகும் என்றார். பழைய ஏற்

பாட்டின்கண் யோபு என்ற ஓர் பரம பக்தனிருந்தார். ஏராளமான செல்வம் படைத்தவர். பல ஒட்டகங்களும், சுமார் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட ஆடுமாடுகளும் அவரது செல்வத்தின் அறிகுறியாக விளங்கின. யோபு செல்வத்தைவிட தெய்வத்தையே மிகவும் வழிபடுபவராகவிருந்தார். தெய்வச்செயலால் யோபு பலவிதமான கஷ்டநஷ்டங்களுக்காளாக நேர்ந்தது. இறுதியில் தன் மக்கள் முதலிய செல்வமெல்லாம் இழந்தபின்னரும அழியாச்செல்வமான தெய்வ பக்தி மாத்திரம் அவரை விட்டகலாமல் நிலைத்திருந்தது. அதுவே இன்றளவும் அவரது பெயரை உலகில் அமரத்வம் பெறச்செய்தது. யோபு இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது "கர்த்தர் தந்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தரின் நாமம் துதிக்கப்படுவதாக என்று தன்னைப் பார்க்கவரும் சுற்றத்தாரிடமும் ஏனையோரிடமும் தெரிவித்து வந்தனர். ஆண்டவன் அருளினால் அவர் மீண்டும் செல்வங்களை அடைந்தார். மேலும் தனக்குற்றநோய் நாள்தோறும் முற்றி உடல்முழுதும் அழுகி நாற்றமெடுக்கவும் தலைப்பட்டது. அவரது மனைவியாரும் கடவுள்செயல்தான் என்றும் கடவுளிடமிருந்து நன்மையைப்பெறும் நாம் ஏன் தீமையையும் பெற்று அனுபவிக்கக்கூடாது? என்று மொழிந்தனர். யோபுவின் சரிதையைக் கேட்ட நீலகண்டபிள்ளையாரின் மனத்துயரம் அகன்றது. உலகதுன்பங்கள் யாவும் நன்மைக்கே என்னும் உபதேசம் அவரது இருதயத்தில் சதா ஒலித்துக்கொண்டிருந்தது. டிலனாயின் போதனைகளும், யோபுவின் தத்துவார்த்தமான சரிதையையும் கேட்ட பிள்ளையவர்களின் மனதில் சிப்பியிற்பட்ட பனித்துளி போல் பதிந்தது.

அழியாத வாழ்வென்னும் பரகதியைத் தந்தருளும் ஏகக்கடவுளான சர்வேசுவரனை நம்பினால் மனச்சஞ்சலமின்றி எப்போதும் ஆறுதலாயிருக்கலாமென்று கூறினர். பின்னர் சர்வேசுவரன் யாரென்றும், அவரது இலக்கணம் எத்தகையதென்றும் படைத்தலைவரான டிலனாயிடம் கேட்டறிந்தார். பொய்த்தேவதைகளினியல்பும், சத்தியவேதத்தின் மகிமையும் உணர்ந்து ஞானதீக்ஷை பெற அவாவுற்று தளகர்த்தராகிய டிலனாயிடம் விவரத்தை நவின்றனர். நீலகண்டபிள்ளையவர்களுக்கு ஞானஸ்நானம் அளிக்கவேண்டுமென வடக்கன்குளத்தில் தங்கியிருந்த சேசுசபை பாஞ்

சோதிநாதசுவாமிகளுக்குக் கடிதம் கொடுத்தனுப்பினர். கனம் சுவாமிகள் பரஞ்சோதிநாதர் இவருக்கு உறுதியும், ஞானமும் இருப்பினும் உத்தியோகமுறையால் மறுதலிக்கக் கூடுமென எண்ணி தீக்ஷைபண்ண தாமதம் செய்வாராயினர். இதையறிந்த பிள்ளையவர்கள் "சுவாமி அடியேனை சத்தியவேததில் சேர யாரும் கட்டாயப்படுத்தவில்லை. என் உடல், பொருள், ஆவி மூன்றையும் சத்தியவேதத்திற்காக தத்தம்செய்யவும் தயாராயிருக்கிறேன்" என உறுதிமொழி கொடுத்தார். குருசுவாமியார் மனமகிழ்ந்து ஞானஸ்நானச்சடங்குகளை இனிது நிறைவேற்றினர். நீலகண்டப்பிள்ளை என்னும் பெயரை மாற்றி (லாஸறஸ்) தேவசகாயம் பிள்ளை எனும் நாமத்தைச் சூட்டினர்.

அங்கிருந்து திரும்பி படைத்தலைவரான டிலனுயைச் சந்தித்து தமதில்லமேகினர். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றுன்னித் தன் மனைவியாரிடம் ஞானமார்க்கத்தின் மகிமைகளைக் கூறலாயினர். மும்மூர்த்திபோன்ற பற்பல தெய்வங்களைத் தொழுவது பயனற்றது. எல்லாம் வல்ல சர்வேசுவரன் ஒருவனே. அவனை வணங்கினுல் எல்லா நன்மைகளும் பெறலாம். நாமிருவரும் உடல் இரண்டு உயிர் ஒன்று என்பதைப் போலிருக்கிறோம். நான் மெய்யான கடவுளென்னும் சர்வேஸ்வரனை வணங்கும்போது நீ பொய்த் தெய்வங்களை வழிபடல் நியாயமன்று. ஆதலால் நீ சத்தியவேதத்தை யேற்றுக்கொள்கவென்றுர். இதைச் செவியுற்ற தேவியார் மனம்வருந்தி நம் முன்னோர்களும், மன்னர் பெருமான்களும் வணங்கிவந்த தெய்வத்தைக் கைவிட்டு நீசரும், ஈனரும் கைக்கொள்ளும் புதிய மதத்தை தழுவுதல் தகுமோவென்றுரைக்கலானுள். கண்ணே! நீ புத்தியீனமாய்க் கூறுகின்றுய். இழிந்தோருக்கும், உயர்ந்தோருக்கும் தெய்வம் வெவ்வேறல்ல. மழையும், காற்றும், வெயிலும் சகலருக்கும் ஒன்றுபோல்தானே கிடைக்கும். சத்தியவேதம் படித்தால் உனது மனத்தை கவ்விக் கொண்டிருக்கும் அஞ்ஞான இருள் அகலும் என மிகச்சாந்தமாய்க் கூறினர். மனைவியார் அதற்குச் சம்மதித்தனர். பின்னர் தன் அன்னையாரிடம் இவ்வுண்மைகளை நவின்றனள். அவ்வம்மையார் பத்திரகாளியம்மையின் கோபம் தனதருமை மருமகனை பிடிக்கு முன்பாக காப்பாற்றவேண்டுமென்றெண்ணி விரைந்து மருமகனி

டம்சென்று மன்றாடிப் புத்திபுகட்டினள். அவர் அதற்கு இசைய வேயில்லை. பின்னர் தன் மகளைத் தனிமையில் அழைத்து "கண்மணி உன் கணவனுக்கு எந்தப் பாவிகளோ மருந்துகொடுத்து மதியை மழுங்கச் செய்துவிட்டனர். அவரது பேச்சும் செயலும் முன்மாதிரியில்லை. நீ அவர் சொல்லுகிறபடி மதியீனமாய் ஏதாவது செய்துவிடாதே. கிருஸ்தவமதத்தை அங்கீகரித்தால் உனக்குப்பிறக்கும் குழந்தைகளின்கதி யென்னவாகும்? சுற்றத்தார் நம் வீட்டுச் சடங்குகளுக்கு வரமாட்டார்கள். உன் கணவனது செய்கைகளால் உத்தியோகமும் நிலைத்திருக்குமென்ற நம்பிக்கையுமில்லை எனப் பலவாறு புத்திபுகட்டலானாள். கணவனே தெய்வமென்று நினைந்துள்ள மங்கை நல்லாள் தன் தாயின் சொற்களுக்கிசையாமல் தன் கணவரோடு வடக்கன்குளத்திற்குச் சென்று பாதர் புட்டாரி S. J. என்னும் சுவாமிகளிடம் ஞானஸ்நானம் பெற்றாள். அன்றுமுதல் அவளை ஞானப்பூ (த்ரேஸா) வென்றழைத்தார்கள். வீட்டிற்குவந்து பலரிடமும் சத்திய வேதத்தின் உயர்ந்த தத்துவங்களையும் கூறி கிருஸ்துமதத்திற் சேர்த்தனர்.

கணவனும், மனைவியும் ஞானஸ்நானம் பெற்றபின்னர் இறைவன் சோதனைக்காளாயினர். நாளுக்குநாள் இன்னல்கள் பல சூழலாயின. பிள்ளையவர்கள் இயேசுபெருமானை உறுதியாகப் பிடித்துக்கொண்டார். குடும்ப தேவதையான பத்திரகாளியம்மனது கோபத்தால் இங்ஙனம் துன்பங்கள்வருகின்றன. அதற்கு கோயில் பிரதிட்டையும், திருவிழாவும் நடத்தவேண்டுமென்று பந்துக்கள் எல்லோரும் கூறினர். அவ்வாறே தேவசகாயம் பிள்ளையின் மாமனார் அதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்தனர். பத்மநாபபுரம் கோட்டை வேலை விரைவாக நடந்துகொண்டிருந்தமையால் தேவசகாயம்பிள்ளை அங்கேயே தங்கியிருந்தனர். பிரதிட்டைக்குத் தலைநாள் வந்துசேர்ந்தார். பிராமணர் விபூதி கொடுத்ததை வீசி எறிந்துவிட்டு அங்கு குழுமியிருந்த சுற்றத்தாருக்கும் ஏனையோருக்கும் கிருஸ்து பெருமானது அருப்பெருங் கருணையைப் பற்றியும், இந்துத் தெய்வங்களின் குறைபாடுகளைப் பற்றியும் பெரியதொரு உபதேசம் செய்தனர். பிராமணர்கள் அவர் கூற்றுக்கு மறுப்புரைத்தனர். பிள்ளையவர்கள் அதற்கும் தக்க சான்றுகளால் பதிலிறுத்தனர். இருவர்களும் வெஞ்சினம் கூறிப்பிரிந்தனர்.

மனைவியை மேக்கோட்டில் தாய் வீட்டில் வசிக்கக் கட்டளையிட்டனர். பிரதிட்டை நாளில் மாமனார் இறந்தார். அமங்களமாய் முடிந்தது. பிராமணர் நடுங்கிப்போயினர்.

மார்த்தாண்டவர்ம மன்னர்பிரான் காலத்தில் அரச பக்தியிலும், நாட்டின் நலத்திலும், பற்றுடையவருமான இராமையன் தளவாயினிடம் மருதங்குளக்கரை நிகழ்ச்சிகளையும், பிள்ளையவர்கள் மதம்மாறின விவரத்தையும் பிராமணர்கள் தெரிவித்து மதப்பகையை மூட்டினர். இராமையன் தளவாய் பிள்ளையவர்களின் செய்கைகளில் கடுஞ்சினமடைந்தார். இந்துத் தெய்வங்களை அவர் குறைகூறுவதாகவும் அவரிடம் கூறினர். ஒருநாள் கனம் புட்டாரி சுவாமிகள் வடக்கன்குளத்தில் ஓர் கோயில் கட்ட தடிகள் மலையில் வெட்டுவதற்கும், ஆரைவாய்மொழிச் சவுக்கைவழி கொண்டுபோக அரசாங்கத்தார் அனுமதிப்பதற்கும் எழுதியனுப்பினர். உடன்தானே தேவசகாயம்பிள்ளை இராமையன் தளவாயைக் கண்டு விவரம் தெரிவித்தார். இராமையன் தளவாய்ப் பிள்ளையவர்களை வெகுண்டு நோக்கி "துரோகி! பிராமணர்களையும், தேவர்களையும் குறைகூறிய உன்னையும், உன் துணைவர்களையும் அடக்கிக் கழுவிலேற்றுவேன் பார்!" என்றனர். பிள்ளையவர்கள் அஞ்சாமல் "இயேசுபெருமானின் திருவுள்ளம் அவ்வாறிருக்குமாயின் யான் அதைச் சிரமேற் கொள்வேன் என்னைத் தண்டிக்கவேண்டுமாயின் தண்டியுங்கள்" என்றார். வீட்டிற்கேகி ஆண்டவனைப் பிரார்த்தித்தனர். சிலநாள் சென்றபின் பிராமணர்கள் மன்னர் பிரானிடமும் புதிய கிருஸ்தவரைப்பற்றிப் பலவாறு கூறினர். மன்னரும் தளவாயிடம் சகல சம்பவங்களையும் கலந்து, முடிவுசெய்து, உடனே பத்மனாபபுரத்திற்கு ஏவலாளரை அனுப்பினர். இதையறிந்த டிலனாய் தேவசகாயம்பிள்ளையை வடக்கன்குளம் சுவாமிகளிடம் அனுப்பினர். கனம் சுவாமிகள் அவரை ஆசீர்வதித்து, பரிசுத்த ஸெபாஸ்டியன் சரிதத்தை நவின்று விடையளித்தனர். வழியில் பந்துக்கள் கூறியதையும் பொருட்படுத்தவில்லை. சேவகர் பல சொல்லியும் கேட்கவில்லை. தளவாய் இதையறிந்து காலிலும், கையிலும் விலங்கிட்டு சிறைக்கூடத்தில் அடைக்குமாறு கட்டளையிட்டனர். தேவசகாயம்பிள்ளைக்கு உதவியாயிருந்த டிலனாயைக் கண்டித்தனர். சிறையில் பிராமணர்கள்

சொன்னவார்த்தைகளைக் கேளாமையினால் கழுத்தில் எருக்குமாலை யிட்டுக் குளுமைக்காட்டிற்குக் கொண்டுசென்று வெட்டிவிடுமாறு ஆணைபிறந்தது. விஷயம் அறிந்த பக்தர், "இதை நான் நீண்ட நாள் எதிர்பார்த்திருந்தேன். இப்பொழுது கடவுள் அருள் கிடைத் தமைக்கு மகிழ்கிறேன்," என்றார்.

ஆரச்சார் வந்து எருக்குமாலையிட்டு கொல்லக்கொண்டுபோனார். பலவிதமான துன்பத்திற்காளாக்கினர்; அடித்தனர்; மிதித்தனர்; இப்பொழுது கொல்லவேண்டாமென்று மன்னன் கட்டளைபிறந் தது. சிறையிலிடுமாறு கட்டளையிட்டனர். பின்னர் அவரை ஊருக்கு ஊர், பட்டணத்திற்கு பட்டணம், சந்தைக்குச் சந்தை ஒரு எருமையில் ஏற்றிச்சென்று கிருஸ்துமதம் கைவிடுமாறு உப தேசித்து வந்தனர். கேளாமையால் ஒவ்வோர் தடவைகளிலும் 30 அடிகள் அடிப்பர். அடிபட்டு இரத்தம்பெருகும் காயங்களிலும், கண், வாய், நாசிகளிலும் மிளகுத்தூளைப் போட்டுக் கடும் வெயி லிலே நிறுத்தவும், தாகத்திற்கு அழுக்குநீர் கொடுக்கவும் செய் தனர். குன்னத்தூர், நட்டாலம்வழி பத்மனுபபுரததிற்குக் கொண்டு போவர். இத்துயரமான காட்சியைக் கண்ணுறக் கடற்கரையோ ரங்களிலிருந்து கணக்கற்ற கிருஸ்தவர்கள் வருவர். தேவசகாயம் பிள்ளை அடியுண்டு, "ஐயோ கோ," வென்று சப்தமிடுவதில்லை. கல்வாரிமலையில் இயேசு பெருமான் சிலுவையைச் சுமந்து செல் லுகையில் மும்முறை விழுந்த விருத்தாந்தங்களை வாய்விட்டுச் சொல்லி, "இயேசு பெருமானே உம்மைப் பின்பற்றும் பாக்கியம் எனக்கும் கிடைததே அதுவே யானடைந்த பிறவியின் பயன்" என்பர். திருவாங்கோட்டிற் கொண்டுசென்று விலங்கிட்டு வைத் தனர்.

பற்பல கொடுமைகள் செய்தும் இவர்மனம் மாறாததால் அதி காரிகள் பலரும் வந்து இந்துத் தெய்வங்களின் பெருமைகளைக் கூறுவர். தேவசகாயம்பிள்ளை இந்துமதக் குறைகளை எடுத்து ரைப்பர். தினமும் அடித்தபின் மிளகுப்பொடி பூசுவதால் காயங் கள் குணமடைவதைப் பார்த்து பலரும் அதிசயப்பட்டனர். தோவாளைக் காட்டிலுள்ள முள்ளுக்கம்புகளால் அடித்து புலியூர்க் குறிச்சிப் பாறையில் வெயிலில் உட்காரவைத்தனர். குடிக்கத் தண்ணீர் கேட்டதற்கு குப்பைகள் அழுகி நாற்றமெடுத்த நீரைக்

கொடுத்தனர். தாகம் தீராமையால் மேலும் தண்ணீர் கேட்கப் பாறைமீது தள்ளினர். பிறகு அவர் மோஸஸ் தன் கோலால் பாறையிலடித்துத் தண்ணீர் வருவித்ததுபோன்று இவரும் எசுபெருமானைத் தியானித்துத் தண்ணீர் வேண்டுமென்று கைமுட்டு மடித்துப் பாறையிலிடித்தார். உடன் தானே பாறையிலிருந்து நீரூற அதைக்குடித்துக் கடவுளைத் துதித்தார்.

> "வாராவழி தனிலே சிறுபாறைதனில் ஊறும்
> நீரையுண்ண அருள்புரிந்தாய்— நானும்
> சேவித்தேன் கரம் குவித்தேன்."

(தேவசகாயம்பிள்ளை நாடகம்)

இந்தப் பெருமையை யறிந்து பலவூர்களிலிருந்தும் ஜனங்கள் பார்க்கவந்தனர், அதிசயித்தனர், பழங்கள் முதலியன கொண்டு வந்து கொடுப்பார்கள். சேவகர்கள் காணுதவேளைகளில் உபதேசமும் பெற்றுச் செல்வார்கள். வாடிக்கையாக மிளகு அரைத்துக் கொடுக்கும் பெண் திரு. தேவசகாயம்பிள்ளைமேலுள்ள பக்தியால் அரிசியை மிளகுடன் சேர்த்து அரைத்துக் கொடுத்தாள். உடம்பில் பூசியபோது அதிக நோவிருப்பதாய்க் கூறினர். ஆரச்சார் (ஆராய்ச்சியார்) பெருவிளையில் கொண்டுவந்து பட்ட வேப்பமரத்தில் சேர்த்துக்கட்டி வைத்தனர், ஏழு மாதம் சரியானபடி அன்ன ஆகாரமின்றிக் கட்டுண்டு கிடந்தார். பல நோயாளிகளும் பக்தரைவந்து தரிசித்துக் குணமடைந்து சென்றனர். ஆரச்சாருக்கு மகப் பேறில்லாமையால் பக்தரிடம் தன் குறையைச் செப்பலுற்றூர். அதற்குப் பக்தர் "பிள்ளையில்லாதவன் பாக்கியவான்" என்று வேதப்புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. நீர் ஏன் வீணுகச் சங்கடப்படவேண்டும்? என்று தெரிவித்தனர். ஆரச்சார் வருத்தப்பட்டு இந்தஅடிமைக்குக் குழந்தையில்லாவிடில் எனது சொத்துக்களெல்லாம் அழிந்துபோம் என்றூர். பின்னர் தேவசகாயப்பிள்ளை ஆரச்சாரிடம் எசுபெருமான் திருவருளால் ஓர் ஆண் குழந்தை பிறக்குமென்றனுக்கிரகித்தார், விரைவில் ஆரச்சார் மனைவி கர்ப்பவதியாயினள். பிள்ளையவர்களின் பெருமையை யறிந்த பலர் கிருஸ்தவ மதத்தில் சேர்ந்தனர். ஆரச்சாரின் உதவியால் வேப்பமரத்தின் பக்கத்தில் ஓலைப்பந்தல் போட்டு அதில் தங்

கச் செய்தனர். ஆரச்சாருக்கு தேவசகாயம் பிள்ளையிடம் அளவிலா அன்பு ஏற்படலாயிற்று. நிகழ்ச்சிகளெல்லாம் டிலனாய் துரையவர்களுக்கு ஓலையிலெழுதி அனுப்பிவந்தனர். அவைபின் வாசித்துக் கேட்டுக்கொண்டிருப்பார். ஓர் நாளிரவில் தேவமாதாவும், சூசையப்பரும், குழந்தையான ஏசுநாதரும் தேவசகாயம் பிள்ளையின் தரிசனத்திலே கோடி சூரியப்பிரகாசத்தோடும், அலங்காரத்துடனும் தோன்றியருளினர். புதிய கிருஸ்தவராதலால் இவ்விஷயங்களையெல்லாம் குருசுவாமிக்கு எழுதினார், உமக்கு மரணகாலத்தில் ஆறுதலளித்தார்கள். நல்ல தைரியமும், பக்தியும் உண்டாக அநுக்கிரகித்தார்களெனக் குருசுவாமி பதிலில் எழுதினார். இதைப் பலருமறிந்தனர்.

தேவசகாயம் பிள்ளையின் நிலையைச் சில பிராமணர்கள் தெரிவித்தனர். பிராமணர்களுக்காக பக்தரை வேறோரிடத்திற் கொண்டுபோய்க் கொல்ல ஏற்பாடு செய்யலுற்றார். இவ்வுண்மையை ஓர் துறவியறிந்து, மன்னர் பிரானிடம் வந்து குற்றமற்ற ஒருவனை மதம்மாறிய அபராதத்திற்காகக் கொல்லுதல் தகுதியன்றென வுபதேசித்தார். மன்னரும் தற்காலம் சரியென்று ஒப்புக்கொண்டார்.

பின்னர் மற்றைய சேவகர்களை மாற்றிப் பிராமணர்களை நியமித்தனர். மதுரேந்திரர் என்னும் பிரோவின்ஷியல் பெரிய சுவாமி மறைவாய் வந்து தேவசகாயம் பிள்ளையை அநுக்கிரகித்துச் சென்றார்.

பிள்ளையவர்களைப் பாதுகாத்துவந்த ஏவலாளர் ஒய்வுற்று இரகசியமாய்க் கொன்றுவிட விடம் தயாராக்கினர். இஃதறிந்த ஆரச்சார் பக்தரை எங்கேயாவது ஓடி ஒளித்துகொள்ளுமாறு வற்புறுத்தினர். மதுரேந்திர சுவாமிகட்கு விஷயம் தெரிவித்தார். அவர் அது கூடாதென்று தடுத்தனர், உலக இரக்ஷகரான கர்த்தனுக்காக உயிரை விடுதலே கடமையும், மேன்மையுமென்று முடிவுசெய்து ஆரச்சாரின் எண்ணத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்றார். ஆரச்சார் அதிசயப்பட்டார்.

இவ்வாறு மூன்று வருடகாலம் குளிக்காமலும், ஏற்றதானவுணவருந்தாமலும், கொடிய துன்பங்களை அநுபவித்தும் வந்தா

லும் ஒருவிதமான மாறுதலும், களைப்பும் அவர் முகத்தில் தோன்ற வில்லை. எப்பொழுதும் மலர்ந்த முகமும், சொல்வன்மையும், விசுவாச வன்மையும் உடையவராகக் காட்சியளித்தனர். இதைக் கண்ணுற்றவர் யாவரும் அதிசயப்பட்டனர்.

ஏசு பெருமானது நிலைமையின் சாயல்போல் துன்பங்கள் ஒருவாறிருந்தனவென்று சொல்லலாம். பிமான்றல் சுவாமிகள் (R. F. Pimantel S. J.) வந்துபார்த்து அதிசயப்பட்டார்.

## வேதசாக்ஷி மகுடம் சூட்டல்.

அதிகாரிகளும், பிராமணர்களும் சென்று தெரிவித்ததின் பயனாக தளவாய் ஆரைவாய்மொழிக் கோட்டை வாயிலின் பக்கம் கொண்டுசென்று கை, கால்களில் விலங்கிட்டு உணவளிக்காமல் சிறையிலிட வேண்டுமென்றும், இரவும், பகலும் போர்வீரர்கள் காத்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும், வேறு எவரும் சமீபத்தில் போகலாகாதென்றும் கடுங்கட்டளை பிறந்தது. வீரர்கள் ஆரையில் கொண்டுவந்து விலங்கிட்டு ஓர் பூவரசமரத்தினடியில் கட்டிவைத்தனர். படுக்கவும் இருக்கவும் முடியாமலும், உணவும் தண்ணீருமில்லாமலும் பெரிதும் வருந்தினார். ஓரிரண்டு நாட்கள் கழிந்தவுடன் நிலைமையில் மாற்றம்வந்தது. ஆரையூர் முக்கிய வியாபார ஸ்தலமும், சவுக்கையுமானதால் நூற்றுக் கணக்கான ஜனங்கள் பார்க்கவந்து காவலர்களைப் பொருட்படுத்தாமல் அவரைத் தரிசித்து கண்ணியப்படுத்தவும் செய்தனர். வடக்கன்குளம், மணப்பாடு, திருநெல்வேலி, தூத்துக்குடி முதலிய இடங்களிலிருந்து கணக்கற்ற ஜனங்கள் வந்து தரிசிக்கவாரம்பித்தனர். மிக்கக் கடுமையான தண்டனைகளையும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வதால் ஜனங்கள் "வேதசாக்ஷி" என்று சொல்லி வணங்கினர். நோயாளிகளின் நோய்களைத் தீர்த்தார். இவற்றை மீண்டும் பிராமணர் தெரிவித்தனர். ஏதோ பத்திரகாளிச்சித்து இவனிடம் உண்டென்றும், பலரும் இதைக்கண்டு மதிமயங்கிக் கிருஸ்தவ மதத்தில் சேருகின்றனர்என்றும் கூறினர். இறுதியில் ஆரைவாய்மொழிக் காற்றுடி மலையில் யாரும் அறியாமல் சுட்டுக்கொல்லுமாறு கட்டளைபிறந்தது. பிராமணர் ஆரையில் வந்து கொலைக்குரியன தயாரித்தனர்.

அப்பொழுது அவரது மனைவியார் பலவிடங்களிலும் தேடிக் காணாமையால் வாடிக் கலக்கமுற்று இங்குவந்து சேர்ந்தனள். கற்பின்

மிகுதியோடும், சுந்தர உருவத்தோடும் வந்த தனது மனைவியைக் கண்ட பிள்ளையவர்கள் ஐயோ வென்று கண்ணீருகுத்துக் கதறினர். மனைவியாரும் கண்ணீர்ப் பெருக்கெடுத்தோடத் தன் பதியின் பாதார விந்தங்களில் வீழ்ந்து வணங்கினர். பின்னர் பிள்ளையவர்கள் தம திருத்தேவியாரை வாரியெடுத்துக் கண்ணீர் துடைத்து தழுதழுத்த குரலில் கூறினர். "கண்ணே! நீ என்னைக் கணவனுகப் பெற்றதில் துன்பமேயல்லாது வேறொன்று மில்லையென்று வருந்தாதே. எனது செல்வத்திற்கும், சிறப்பிற்கும் பங்காளியானதுபோல் துன்பத்திற்கும், அவமானத்திற்கும் பங்காளியாக நேர்ந்தது. இவற்றை மேலும் பொறுமையாய் ஏற்றுக்கொண்டால் சுவர்க்க போகத்திற்கு நீயும் பங்காளியாவாய். என்றைக்காவது ஒருநாள் இறக்கவேண்டியது தானே? அதற்குப் பலகாரணங்களும் ஏற்படும். உலகமுள்ளளவும் நிலைநிற்பதும், சுவர்க்க பேரியடிப்பதும், சச்சிதானந்த சொரூபியான பரம கர்த்தனுல் மதிக்கப்பட்டதுமான தெய்வப்பிரீதி மரணம் ஒன்று தான். அதுவே மேலானதாகும். ஆதலால் உலகவாழ்வை, விரும்பாமல் நித்திய வாழ்விற்குரிய வழியைத் தேடவேண்டும். தண்டனை உடலுக்கும, உள்ளத்திற்குமாக இரண்டுவகைப்படும். உள்ளத்தையொட்டிய துன்பமனுபவிக்காத எவனுக்கும் உயர்வில்லை. துன்பானுபவங்கள் தான் நன்மைக்குரியவழி. நான் பேரானந்தம் அனுபவிப்பேன். ஏனென்ருல் ஆண்டவன் சித்தத்திற்கிணங்க எல்லாத் துன்பங்களேயும் அனுபவித்து வருகின்றேன். அன்பு நிறைந்த ஆண்டவர் என்னையழைக்கும் நாள் இட்டப்படுத்தி விட்டார். இத்தருணம் கழிந்தால் உனக்கு என்னைப்பார்த்திருக்க முடியாது. இனிமேல் உனக்கு உபதேசிக்கிற ஒரு சந்தர்ப்பமும் வாாது. ஆகையால் நான் இப்போது சொல்வதை ஒருபோதும் மறவாதே. இனிமேல் இந்நாட்டில் தங்கில் சுற்றத்தாரும் ஏனையோரும் கேடுசூழ்வர். நீ வடக்கன்குளத்தில் தங்கி வாணுளைக் கழிப்பாயாக. அங்கே எல்லாம்வல்ல இறைவன் உன்னைக்காப்பாற்றுவார். பந்துமித்திரர்களைத் துறப்பதுபற்றி மனம் வருந்தவேண்டாம். புவன ரக்ஷகனுகிய கர்த்தனே நமக்கு உயரியபந்துவும், மித்திரனுமாவர். கடவுளிலும் மேலான பந்து மனிதர்க்கு வேறெவருமில்லை.

இவையனைத்தும் கேட்ட தேவியார் விம்மிவிம்மி அழலாயினர். தேவசகாயம்பிள்ளை அஞ்சாதே! கருணையங்கடல் காப்பாற்றுவார். அன்னவர் அருளால் நாமிருவரும் அவரது பாதாரவிந்தங்களில் ஒருமித்துவணங்கும் காலம் வருமென்றுசொல்லி தேவியை அங்கிருந்துபோகத் துரிதப்படுத்தினர்.

பின்னர் மகோதர நோயாளியான ஒரு பெண்மணியைக் கொண்டுவந்தனர். பிள்ளையவர்கள் அப்பெண்ணின் நெற்றியிற் சிலுவை அடையாளம் காட்டி உன்நோய் தெய்வானுகூலத்தால் தீர்ந்தது. நீ கிருஸ்து சமயம் தழுவிக்கொள் என்றார். அப்பெண் நோய்தீர்ந்து நீண்டநாளிருந்தாள். கணக்கிலா ஜனங்கள் வந்துபோய்க் கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் ஜனங்களிடம் நீங்களெல்லோரும் போகலாம். நாளை இங்கு ஓர் விசேடம் நிகழவிருக்கிறபடியால் இன்றும், நாளையும் ஒருவரும் இவ்விடம் வரலாகாதெனக் கூறினர். அடுத்தநாள், வெள்ளிக்கிழமை. மாணத்திற்கு விதித்த நாள். ஜெப தபங்களை முடித்தார். ஞானஸ்நானம்பெற்று ஏழு ஆண்டுகளும், சிறைப்பட்டு மூன்று ஆண்டுகளுமாயின. நாற்பதுவயது நிறைந்தது. 1752- தை மாதம் 14-ந் தேதி வெள்ளிக்கிழமை சுவர்க்கம் அளிக்கக் கர்த்தர் திருவுள்ளம் கொண்டார். பழைய புத்தகத்தில் அவர் ஓர் பிரதான உத்தியோகஸ்தர் என்று கூறப்படுகிறது. படையாளிகள் கொல்லக் கொண்டுபோகும் விவரம் இவருக்குத் தெரியும். காவலரிடம் நீங்கள் மறைவாக ஒன்றும் பேசவேண்டாம். உங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்றுக வெனப்புகன்றார். காற்றாடி மலையில் கொண்டுபோய்க் கொல்லப்போவதைப் பிள்ளையவர்கள் அறிந்ததை நினைந்து காவலர்கள் பெரிதும் வியப்பெய்தினர். உடன் புறப்பட்டார். விரைவில் நடக்க வற்புறுத்தி அடித்தனர். காலில் விலங்குடன் துரிதமாய் நடக்கவில்லையென்று விலங்கினிடுக்குகளில் நீண்ட தடியையிட்டுத் தூக்கிச்சென்றனர். சித்தர் காற்றாடிமலையடைந்ததும் எனது ஆன்மா பரகதிக்குச் செல்லுமிடம் இதுவே. ஆகையால் சிறிதுநேரம் கடவுளைப் பிரார்த்திக்க உத்தரவுதரவேண்டுமென்றார். அவர்கள் அனுமதிபெற்று முழந்தாளிட்டுப் பிரார்த்தித்தனர். "எல்லாம்வல்ல இறைவனே! மனிதனாய்ப் பிறந்து யூதர்களின் ஆக்கினைகளைப் பொறுத்தீர். யூதாஸினால் காட்டிக் கொடுக்கப்படவும் செய்தீர். சவுக்காலடி பட்டீர். திரு



பக்த தேவசகாயம் பிள்ளை.

(குருசடி)

முகத்தில் துப்பப்படவும், பெரியமரத்தைச் சுமக்கவும் செய்தீர். தேவரீரே! நீர் எனக்குச்செய்த கருணை மட்டில்லாதது. இவ் வேளையிலும் காத்தருளவேண்டும்.'' என்று விழுந்து தோத்திரம் செய்தார். பின்னர், சிநேகிதர்களே! உங்கள் கடமையைச் செவ் வனே நிறைவேற்றுங்கள்,'' என்றார். அப்போது பிள்ளையவர் களை ஒருபாறையில் நிறுத்தி மூன்றுவீரர்கள் துப்பாக்கி நிறைத் துச் சுட்டார்கள். குற்றுயிராய், "இயேசுவே! எம்பெருமானே! எனைக் காத்தருள்க,'' என்று பாறையினடியில் இடிவீழ் மரம் போல் விழுந்தார். மறுபடியும் உயிரிருப்பதைக்கண்ட இருவீரர் கள் மார்பைநோக்கி மீண்டும் சுட்டனர். இயேசு பெருமானின் சாயலில் ஐந்து காயங்கள் பட்டு உயிர்துறந்தார். வேதசாக்ஷிக் கிரீடம் தாங்கிச் சிறந்தார்.

திரு தேவசகாயம்பிள்ளை உயிர்துறந்த மறுதினம் விலங்கை எடுத்துக்கொண்டு உடம்பைப் போட்டுவிட்டுப் போய்விட்டனர். வடக்கன்குளம் மதுரேந்திர சுவாமிகள் பிள்ளையவர்களின் உடம் பைக்கேட்டார். வெளிநாடு கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட வில்லை. சிலநாட்கழித்து பொதிமாட்டில் வியாபாரம் நடாத்தின கிருஸ்தவர்கள் கோட்டாற்றுச் சவேரியார் கோயிலிற்கொண்டு கொடுத்தனர். அங்கே அவரது அழிவுடல் அடக்கம் செய்யப் பட்டது. அப்போது கொச்சி மெட்ராணியார் இவர் புகழைப் பரப்பினார். விலங்குகளையும், தலையில் கட்டிய உருமாலையும் வாங்கி வடக்கன்குளத்தில் கோயிலில் வைத்திருக்கின்றனர். ஆரைவாய் மொழி இராஜபாதைக் கருகிலுள்ள ஓர் மரத்தடியில் கற்சிலுவை நாட்டப்பட்டிருக்கிறது. பூவரசு மரதிற்குப் பிறகு இவ்விடத்தில் வாகைமரம் இன்றளவும் நிற்கிறது. பூவரசுமரம் சவுக்கையின் மருங்கிலென்பாருமுளர். அவரது மனைவியார் வடக்கன்குளத்தில் 14 ஆண்டுகள் வழுவின்றி வாழ்ந்து மேன்மையான கர்த்தரின் பாதார விந்தத்தையடைந்தனர். காற்றாடிமலைஇப்போது பிரசித்த மாகிவிட்டது. அங்கே கருங்கல்லில் வெட்டுண்ட பாறைமீது ஒரு சிலுவை நாட்டப்பட்டிருக்கின்றது. ஒரு கோயிலும் காற் றாடிமலைக் கருகிலுள்ள குருசடியில் உளது.

இப்போது திருவிழாவிற்குப் பலரும் வந்துகூடுவர். இஃதோர் புண்ணியஸ்தலமாய் விளங்குகின்றது. ஆரைவூரை உலகெங்கும்

அறியச் செய்துவிட்டது. இற்றலிதேசம் அறிந்துகொண்டது. பரீக்ஷைக்குக் கணக்குத்தெரியாமலிருந்தாலும் மாட்டுக்கு உண்ணி வந்தாலும், நோய்கள் வந்தாலும் தேவசகாயம் பிள்ளைக்கு வழிபாடுசெய்து இந்துக்களும் நன்மைபெறுவதுண்டு.

## இவர் சரித்திரத்தைப்பற்றிய வாதங்கள்.

---

திருவாங்கூர் ஸ்டேட் மானுவல் இரண்டாம் புத்தகம் 129-ாம் பக்கத்தில் திருவிதாங்கூரிலும், கொச்சியிலும் ரெசிடெண்டாயிருந்த மிஸ்டர் ஜெ. டி. மெக்கன்ஸி துரையவர்கள் (J. D· Mackenzie) தேவசகாயம் பிள்ளையைப்பற்றி அடியில் வருமாறு எழுதுகிறார். "தேவசகாயம் பிள்ளை, டிலனுயிடம் சில கிருஸ்தவத் தத்துவங்களைக் கற்றுக்கொண்டார், இவருக்குக் கிருஸ்து தர்மம் பெற்றுக்கொள்ள விருப்பமுமுண்டாயிற்று. 1745 ல் புட்டாரி சுவாமியினிடம் ஞானஸ்னானம் பெற்றுத் தேவசகாயம்பிள்ளை என்ற புதிய பெயரையும் பெற்றார். நான்கு வருடங்களுக்குப்பின் மதம்மாறின காரணத்தால் அவரைச்சிறையிலிட்டனர். சிறை சென்று மூன்று ஆண்டுகள் கழிந்தபின்னர் 1753 ல் அரசர் கட்டளைப்படி தெற்கு இராஜபாதையில் ஆரைவாய்மொழிக்குப் பக்கத்தில் அவரைச் சுட்டுக்கொன்றனர்." மிஸ்டர் மெக்கன்ஸியின் அபிப்பிராயங்கள் சரியல்லவென்று மிஸ்டர் நாகமையா ஸ்டேட் மானுவலில் எழுதியுள்ளார். "இத்தகைய ஒரு கதையை நம்பவியலாது, அது நடந்ததல்லவென்று தோன்றுகிறது. பிள்ளையவர்களின் காலத்திற்குப் பின்னிருந்தவர்கள் முன்னுள்ளோர் தீரர்களாய் இருந்தார்களென்று நம்பும்பொருட்டு உயர்வு நவிற்சியாய்க் கூறினர். இந்தியர் ஏற்கனவே இறந்தவர்களைப்பற்றி அதிசயோக்தியுடன் துதிக்கும் இயல்பினர். டிலனுயின் உபதேசப்படி கிருஸ்தவ சமயம் புகுந்த திரு தேவசகாயம் பிள்ளையைச் சிறையிலிடவும், சுட்டுக்கொல்லவும் டிலனுய் சம்மதிக்கமாட்டார். அஞ்சுதெங்கில் ஓர் பிரதானியின் மகளை டிலனுய் மணஞ்செய்ய விரும்பினர். அப்பெண்ணின் பெற்றோர்க்கு விருப்பமில்லாததால் அவருடன் யுத்தம்செய்ய மகாராஜாவைத்தூண்டினர்.

இதுபோல் மகாராஜாவின் உண்மை அன்பனும், துணைவனுமான டிலனாய் தேவசகாயம்பிள்ளை விஷயத்திலும் யாதேனும் சொன்னால் அதற்கனுகூலமாய் செய்திருப்பார். தேவசகாயம் பிள்ளை அரண்மனை உத்தியோகஸ்தராதலால் அரண்மனை இரகசியங்களில் யாதேனும் வெளியிட்டிருக்கலாம். அக்காரணத்தால் அவர் கிருஸ்தவராகிச்சிலவாண்டுகள் கழிந்தபின் விசாரணைசெய்து தண்டித்திருக்கலாம். 4-ம் நூற்றாண்டில் சேரமான்பெருமாள் தாமஸ் கெனாவிற்கும், அவரது கூட்டாளிகளுக்கும் சில உரிமைகளும், சுதந்திரங்களும் தெளிவுடன் அனுமதித்தனர். இவ்வாறு கிருஸ்தவர்களுக்கு மதப்பிரசங்கத்திற்கும், மனம்போல கோயில்கள் கட்டவும் அனுமதி நல்கினர். அவரது பரம்பரையார் ஒருவர் கிருஸ்து தர்மம் புகுந்ததால் தண்டித்திருக்கமாட்டார். ஆதலால், அந்தச் சரிதம் சரியென்று நம்ப ஒரு வழியுமில்லை.'' திருவாங்கூர் ஸ்டேட் மானுவல் புத்தகம் 2. பக்கம் 124.

இதற்கு மறுப்புரையாக திரு. மாதாவடியான் அவர்கள், தாம் எழுதியமலையாளப்புத்தகத்தில் பலநியாயங்கள்காட்டுகின்றனர். தாள் பஞ்சத்தால் எழுதவியலவில்லை. தெய்வ அருள்பெற்ற ஒருவருக்கு கிருஸ்து சமயத்தில் அர்ச்சியசிஷ்டப் பட்டம் இன்னும் அளிக்கப் படாமலிருப்பது நியாயமோ? டிலனாய் வடக்கன்குளத்தில் ஞானஸ்னானம் கொடுக்க அனுப்புகிறதற்குக் காரணங்களுள. அங்கே பிரான்சுதேசக்குரு வீரமாமுனிவர் கிருஸ்துமார்க்கம் நன்கு பரவச் செய்திருந்தனர். 1746-ல் அவர் ஆண்டவன் திருவடியடைந்தார். அவரது பெருமையைக்கேள்விப்பட்டு திரு. நீலகண்டப்பிள்ளையை டிலனாய் அங்கனுப்பினர்போலும்.

மார்த்தாண்டவர்ம மன்னர்பிரான் பாவம் குறையவும் புண்ணியம் கூடவும் முறைஜெபம், பத்திரதீபம், திருப்படித்தானம் முதலிய புண்ணிய கருமங்களும் செய்தவர். சிறந்த தெய்வபக்தர். குடிகளிடம் அன்புடையவர். சீர்திருத்த வித்திட்டவர். அவர் இங்ஙனஞ்செய்தார் என்பதை எவ்வாறு நம்புவது? எப்போதும் தன் குடிகளெல்லாம் நலமாய் வாழவேண்டுமென்று எண்ணியவர். பகைவர்களிடமிருந்து நம்மைக்காப்பாற்றினவர். இதுவிஷயமாய் எனக்கொன்றும் சொல்ல வியலவில்லை. தேவசகாயம் பிள்ளையவர்களைப்

பற்றிய நாலைந்து சரித புஸ்தகங்களில் உள்ளவற்றைக் கூறினேன். தளவாய் இராமையனும் மிகப்பெரியவர். சிறந்த புண்ணியவான். பெருந்தியாகி. பலவாண்டுகளாய்த் தேவசகாயம் பிள்ளை சரிதம் மலையாளம், தமிழ், ஆங்கிலம் முதலிய பாஷைகளிலும் வெளியிட்டிருக்கின்றனர்.

தேவசகாயர் திருவடி வாழ்க
பாவம் நீங்கிய பக்தர் வாழ்க
கோவம் குறைந்த குணவான் வாழ்க
சேவகம் வேண்டாச் சீரியோன் வாழ்க.

## அத்தியாயம் 14.

## பெருமைக்குரிய பிரமாணங்கள்.

இவ்வூர்ப் பெரியார் ஒருவர் கணக்குப் பட்டத்திற்குத் திருமுகம் வாங்கிய ஓலை.

1. வாலகுல சேகரவர்மன் கிரீடபதி மன்னே சுல்தான் மகா ராச ராச ராம ராச பாதற்ஷா ஷெற் ஜாபி ஆய நாம்.

ஆரவாய்மொழியில் சாத்தாவுடையான் சோணசலத்தினு கணக்கினு திருமுகம் கொடுக்கயில் இந்நாள் முதல்க்கு ஆசந்திர தாரமே சந்ததிப் பிறவேசமே நம்முடெ கணக்கும் எழுதி உடம் அனுப்பெறும்பற்றி நடந்துகொள்ளுமாறும் செய்க. இது கூாஅ௰-ாம் ஆண்டு தை மாதம் உ௰அ-ாம் தேதி திருவனந்தபுரம் கெசட்டு.

அருளிச்செய்த சகாத்தம் கூஎாஉ௰கூ-ன் மேல் செல்லா நின்ற கொல்லம் கூாஅ௰-ாம் ஆண்டு தை மாதம் உ௰அ-ாம் தேதி வெள்ளியாழ்ச்சயும் ரோகணியும் பூர்வபட்சத்து நவமியும் மகேந்திருத்திய யோகமும் வாரகக் கரணமும்பெற்ற இந்நாளில் ஸ்ரீ பத்மனப தாஸ வஞ்சி புல்லிக்கோட்டு விளாகம் தலமாக நாம் இரிக்க இவதாகும். இவை வலிய மேலெழுத்துக் கணக்கு பிறைகூடும் பெருமாள் மாதேவன் எழுத்து.

## மூத்தபிள்ளையவர்கள் வீட்டு ஓலைப்பிரமாணம் (மன்னர் பிரான்) நினைவு.

2. சாத்தாவுடைய மூப்பன் கண்டு நமக்கு இவிடெ ஒருஅடியந்திரமாககொண்டு ஆ வகைக்கு சாதனங்கொடுத்து அங்ஙோட்டு அயக்குந்நூ. அங்ஙோட்டு வந்நால் இருநூறு பணம் சாதனம் கொண்டுவந்ந ஆளின்றெ பக்கல் கொடுத்தயக்கணம். நமக்கு இவிடெ பணத்தினு அத்தரே அடியந்திரமாகக் கொண்டதினே நினக்கு எழுதி அயக்குந்நது. ஆ வகைப் பணமும் பலிசையும் பின்னாலே கொடுத்தயக்குகயும் ஆ மென்னும் இப்படிக்கு திருவெழுத்தும்படி நினைவு எழுதிய கணக்கு செண்பகராமன் மாதேவன் எழுத்து.

3. கூா அய௰-ாமாண்டு தை மாதம் உ௰அ-ாம் தேதி தோவாளைப்பிடாகைக் கேள்வியில் ஆரைவாய்மொழியில் கணக்கு சாத்தாவுடையான் சோணாசலம் ஷியான் திருமுகம் கொடுத்தவகைக்கு அடியுறவு தீர்ந்தபணம் உகூ. இப்பணம் இரண்டாயிரவும் பிறவகைச் சேகரிப்பில் முதல் கூட்டுவகைக்கு கேட்டு நெல்லைநாதன் ராமலிங்கவும் ஒடுக்குமாறும் கல்ப்பிச்சு சீட்டு எழுதிய வலிய மேலெழுத்து பிறைசூடும் பெருமாள் மாதேவன் எழுத்து.

4. கொல்லம் எாகூ௰ங-ாம் ஆண்டு ஆனிமாதம் முதல்தேதி எழுதின பொருள்செலவு ஓலைக்காரணமாவது. இராசார் தென்னாட்டு குறுநாட்டு கடிகைய பட்டினத்து கிழக்கு மனையின் காட்டுவிளையிலிருக்கும் வலங்கைவுய்யக் கொண்டாரில் பெரிய மொட்டையன் பெருமாளுக்கு ஊ ரி து தன்னிலிருக்கும் பெ ற் ற பெருமாள் இராமப்பணிக்கன் பெரிய மொட்டையன் பொருட்சிலவோலை எழுதிக்குடுத்த பரியாவது:— நான் பிறந்துபேருடைய ஞயாண்டனுபவித்து வருகிற புல்லுவிளையில் என் கூறு தெக்கிணைத்த தட்டுமடல் முதுபனை நீக்கி ஒன்றரை எர்த்தரையும் விருச்சங்களும் நால்வரெணமாக்கூடி விலை கண்ட அன்றுடு வழங்குறு நெல்மேனி கலியுகராமன் பணம் உ௰க இப்பணம்

இருபத்தொன்றுக்கும் இந்தவிளக்கு பண்டாரக் கடமைக்காயி கடே யுமிறுத்து கையாண்டு கொள்வானாகவும். இப்படி சம்மதித்து இப் பணம் இருபத்தொன்றும் கொண்டு இந்தப்பொருட்செலவு ஓலே எழுதிக் கொடுத்தேன். பெரிய மொட்டையன் பெருமாளுக்கு பெருமாள் ராமப்பணிக்கன். பெரிய மொட்டையன். இப்படிக்கி இவர்கள் சொல்ல இந்தப்பொருள் செலவோலே எழுதின பெரிய மொட்டையன் சொல் எழுத்து.

கொல்லம் 763-க்குமுன்னமே இவ்வூரில் மூத்தபிள்ளையின் முன் னோர்தங்கியிருக்கின்றனர். இராமப்பணிக்கர்வீடும்பழைமையானது.

5. திருவனந்தபுரம் தெற்குமாளிகை கட்டப்பணம் கொடுத் தது. கூஅ௰-ாம் ஆண்டு வைகாசி மாதம் ரு-ாம் தேதி எழுதிய அறிவு சீட்டாவது.

தோவாளைப் பிடாகைக் கேள்வியில் ஆரைவாய்மொழியில் கணக்கு சாத்தாவுடையான் சோணசலம் ஷெயான் திருமுகத் தினும் மேனுவு கேறி நடக்குந்ந வகைக்கும் அடியுறவு தீர்ந்த வகையில் திருவனந்தபுரத்துக் கோட்டைக்கு அகத்துத் தெக்குத் தெருவில் மாளிகைப் பணிவகைக்கு தந்நபணம் 6012. ஷெயார் கொடுத்தயச்சதாக செய்து.

ஒந்நாவது ஒடுக்கு 14½. விலே அனந்தவரககன் 27-க்குப் பணம் 661½-ம் அனந்தராமன் பணம் 159-க்குப் பணம் 318-ம் சக்கறம் பணம் ½-ம் ஆக வகை மூன்றினால் ஒடுக்குபணம் 980. இப்பணம் தொள்ளாயிரத்து எண்பதும் திருவனந்தபுரத்துக் கொட் டாரம் உட்பட்ட மரப்பணி வகை, பண வகை முதல் கூட்டு வகைக்கு பற்றிக்கொண்டு அறிவுச் சீட்டுக்கொடுத்த ஷெ பணி கள் முதல்பிடி பல்பனுபன், வன்னியப்பெருமாள்.

6. பல்லக்கு ஏறி விருதுடன் எப்போதும் செல்ல அனுமதி கூஅ௰-ாம் ஆண்டு ஆடி மாதம் ௰-ாம் தேதி எழுதிய அறிவு சீட்டாவது:—

தோவாளைப் பிடாகைக் கேள்வியில் ஆரைவாய்மொழியில் கணக்கு சாத்தாவுடையான் சோணசலம் ஷெயான் திருமுகத்தி னும் மேனுவுகேறி நடக்குந்ந வகைக்கும் அடியுறவு தீர்ந்நவகையில்

தெற்குத் தெருவில் மாளிகைப் பணிவகைக்கு வகை தங்க பணம் 6012-ல் ஷெயார் கொடுத்தயச்சதாக மயதுகான ஒடுக்கு $24\frac{1}{2}$ விலை அனந்தவராகன் 34-க்குப் பணம் 833-ம் அனந்தரா மன் பணம் $83\frac{1}{2}$-க்குப் பணம் 167-ம் ஆகவகை இரண்டிலுல் ஒடுக்குப்பணம் 1000. இப்பணம் ஆயிரவும் திருவனந்தபுரத்துக் கொட்டாரம் மராப்பணிவகை பணவகை முதல் கூட்டுவகைக்குப் பற்றிக்கொண்டு பற்றுச்சீட்டுக் கொடுத்த ஷெ பணிவகை முதல் பிடி பல்ப்பனுபன். வன்னியப்பெருமாள், மூத்தப்பிள்ளையவர்கள் எப்போதும் பல்லக்கில் ஏறிச்செல்வர். கீழே துணிவிரிப்பார்க ளாம். அப்பல்லக்கு இப்பொழுதும் இருக்கின்றது.

7\. தாணுமூர்த்தி, பூதலிங்கம், நாகரம்மன், பரக்கோடி அய்யன் கோயில்களுக்கு அாஅமஎ-ல் தர்மம் விட்ட ஓலை.

சகாப்தம் ஞகூாஙஙமங-ன் மேல் செல்லாநின்ற கொல்லம் அாஅமஎ-ாம் ஞகரவருடம் கார்த்திகை மாதம் உமஉ-ாந்தேதி பூர்வபக்கத்து சதுர்த்தசியும் சுக்ரவாரமும் ருஷசவக்காணவும் மூல நட்சத்திரவும் திருநாம நிதநியயோகவும் பெற்றநாளில் உதகபூர்வ தர்மதானப் பிரமாணம் எழுதிய பட்டயமாவது:—

நாஞ்சிநாட்டில் ஆரைவாய்மொழியில் செட்டுச்சொல் விளங் கும் பெருமாள் சாத்தாவுடையான் ஷெநாட்டில் ஷெயூரில் கங் கையாடுவான் தர்மபுத்திரன் உள்ளிட்டாருக்கு பட்டயம் எழுதிக் கொடுத்த பரிசாவது.

நாளதுமுதல் தாணுமாலயப்பெருமாள் சுவாமிக்கும், பூத ஞத சுவாமிக்கும், நாகரம்மனுக்கும் வாராவாரம் சாத்துமாலை சுவடு ஐந்தும், பரக்கோடியனுக்கு தினசரி சாத்துமாலை ஒன்றும், அம் பலவாண சுவாமிக்கும் தினசரி சாத்துமாலையும், ஷெ தேவஸ்தல சுவாமிகளுக்கு விக்கிரக உடைமைப் பணம் ஆண்டு ஒன்றுக்கு விக்கிரகம் ஒன்றுக்கு பணம் ஆறு வீதம் பணம் 30-ம் திருச்செந் தூர் வீரவாகு சுவாமிக்கு கச்சை எடுததுகட்டுகிற வகைக்கு பணம் ஆறும் ஆக இந்தவிதமான சிவபணிவிடை செய்துவருகிற வகைக்கு ஷெ நாட்டு ஷெ யூரில் பெரியகுளம் புரவில் நடுமடைப் போக் கில் முதல் கண்ணூற்றில் வயல் ஒன்றுக்கு எல்கையாவது:— கீழ்

எல்கை தென்வடல் காலுக்கும் மேற்கு, தென் எல்கை ஆனந் தக்கூத்தன்பிள்ளை ஊத்துக்கும் வடக்கு, மேல் எல்கை தென் வடல் பெருங்காலுக்கும் கிழக்கு, வடஎல்கை கரைக்கும் காலுக் கும் தெற்கு, ஆக இவ்வித சொந்த நான்கெல்கைக் குள்பட்ட நிலத்தை ஷெ கங்கையாடுவன், தர்மபுத்திரன், பண்டாரம் உள் ளிட்டாருக்கு உதகபூர்வ தர்மதானப் பிரமாணப்பட்டயமாக எழு திக்கொடுத்தேன். செட்டு சொல்விளங்கும் பெருமாள் சாத்தா வுடையான் இந்தப் பட்டயம் நடுவெழுதின ஷெயூரில் அணஞ்ச பெருமாள், அணஞ்சபெருமாள்.

---

## கூ௨௨-ம் ஆண்டு நீட்டு.

## 8. உயர்திரு N. அகஸ்தியலிங்கம் பிள்ளையவர்கள் வீட்டுப் பிரமாணம்.

---

விட்டிணுபுரம் உள்ளிட்ட பத்துவகைக்கு புள்ளிக்கு நீட்டுக் கொடுக்கையில் தட்டான் விடுமாடன் பேரில் அஞ்சாலி அடைப் பின் படிக்கு நிலம் காணியரைக்காணியின் கீழ் முக்காலே அரைக் காலுக்கு கார்பசானம் தீர்வைப்படி ஒள்ள அஞ்சாலியும் செல்ல வஸ்துதங்க மேலப்புத்தேரியில் சேர்ந்த வலகுடி நிலம் அரை மாவின்கீழ் காலேஅரைக்காலுக்கு பஞ்சபாண்டவர்கள் மடத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு வாடாக்கடமை மாத்தால் பணம் முக்காலும் கொடுத்து பஞ்சபாண்டவர்கள் மடத்து மேல்வார பேரின்படிக்கு நிலம் முக்காணி அரைக்காணி முந்திரியின் கீழ்காலுக்கு ஆண்டு ஒன்னுக்கு நாற்கலவரிசை அதில் பெருமாள் ஸ்ரீ பற்பனாபப்பெரு மாள் பூசைக்கு ஒன்றுபாதியும் நயினார் திருவாழுமார்பர் பூசைக்கு ஒன்றுபாதியும், பஞ்சபாண்டவர் மடத்துச் சிட்டியும் பிடிச்சுச் செலவறுத்தும் கொடுத்த யாவிச்சுங்கொண்ட கிளை மரி ஆசந்திரதாரமே சந்ததிப்பிறவசமே யாவித்துக்கொள்ளு மாறும் செய்க. இது தொள்ளாயிரத்து இருபத்திரண்டாம் ஆண்டு பங்குனிமாதம் பத்தாம் தெய்தி கல்பித்தமைக்கு தட்டான் விடு மாடனுக்கு நீட்டு எழுதிவிடுகயென்னு திருவுள்ளமாயது நீட்டு.

## 9. உயர் திரு. N. அகஸ்தியலிங்கம் பிள்ளையவர்கள் வீட்டுப்பிரமாணம்.

சாலிவாகன சகாத்தம் ௲௭௱௪௰௮ன் மேல் செல்லாநின்ற கொல்லம் ௲௨-ாம் ஆண்டு வியவருஷம் தை மாதம் ௰௨-ாம் தேதி மங்களவாரமும் அமரபட்சத்து ஏகாதசியும் விருத்தியநாமயோகமும் சிங்கக்கரணமுமாகப் பெற்றநாள் அனுஷ நட்சத்திரமுமாக நாள் செய்த பறையடிமை விலையோலைக் கரணமாவது:- நாஞ்சிநாட்டு ஆரைவாய்மொழியில் ஆறுமுகப்பெருமாள் நந்தீஸ்வரன் உள்ளிட்டாருக்கு ஒடு நாட்டு தாமரைகுளம் கணக்கு பூதலிங்கம் ஆதிச்சன் உள்ளிட்டார் பறையடிமை விலையோலை எழுதிக்கொடுத்த பரிசாவது:— நாங்கள் குருபரமுடையோராக ஆண்டு அனுபவித்து வருகிற ஆரைவாய்மொழி ஸ்ரீ பால பொய்கை புறஞ்சேரியில் கிடக்கும் தீண்டாதாரில் பறை இசக்கி புரசுமாடத்தியும் மேல்படியாள் முலையுண்ணியும் பறைமாரச்சி புரசுகாணியும் அதற்கிளைய ஆண்புரசு சின்னக்காணியும் ஆகசனம் நாலும் விலைகொள்வாருளரோ கொள்வாருளரோ வென்று நாங்கள் முற்கூற விலைகொள்வோம் கொள்வோமென்று இவர் பிற்கூறி எம்மிலிசைந்து எதிர்மொழி மொழிந்து மறுமொழி கேட்டு உறுமொழிபேசி தம்மில் பொருந்தி ஆரைவாய்மொழி மன்றருகில் நிறுத்தி நால்வர்கூடி நடுவர்மூலமாக விலைநிச்சயித்த அன்றூடகம் வழங்கும் நெல்மேனி கலியுக ராமன்பணம் நூற்றைம்பது. இப்பணம் நூற்றைம்பதுக்கும் விலையாவணக்களத்தைக்காட்டி பெற்று கை செலவாகக் கொண்டு விலையறவிற்று பொருளறப்பற்றி விற்று விலைப்பிரமாணம் செய்துகொடுத்தோம். கணக்கு பூதலிங்கம் ஆதிச்சன் உள்ளிட்டார். ஆறுமுகப்பெருமாள் நந்தீஸ்வரன் உள்ளிட்டாருக்கு இப்பரிசு விற்பறைஇசக்கி புரசுமாடத்தியும் மேல்படி முலையுண்ணியும் மாரச்சி புரசுகாணியும் அதற்கிளைய ஆண்புரசும் ஆகசனம் நாலுக்கும் இது விலையோலையாவதாகவும் இதுவல்லது வேறு விலையாவண பொருளாவண சிலவாவண பொருள் மாண்டறுதி பொருள் செலவு ஓலைக் கரணமும் காட்டவும் கடவதன்றியென ஒருகாலாவது இருகாலாவது முக்காலாவது ஓலைக்குற்றம் எழுத்துக்குற்றம், சொல்குற்றம். பொருள்குற்றம், வெட்டுச்செருக்கு, வரிமாறூட்டம், வரிநுழைந்தெழுதல், வாசகப்பிழை, மறு எக்குற்

றமும் குற்றமன்றி வியாபித்து விலேப்பிரமாணம் செய்து கொடுத்தோம். கணக்குபூதலிங்கம் ஆதிச்சன் உள்ளிட்டார். ஆறுமுகப் பெருமாள் நந்தீஸ்வரன் உள்ளிட்டாருக்கு, இப்படிக்கு கணக்கு பூதலிங்கம் ஆதிச்சன் உள்ளிட்டார். இதற்கு சாட்சிஇராமலிங்கம், நல்லசிவன். (ஒப்பு) தாணுவன் பிச்சையாண்டி. (ஒப்பு) இப்படி இவர்கள் சொல்ல இந்தப் பறையடிமை ஓலேக்கரணம் நடுவெழுதின ஆரைவாய்மொழிதேசம் ஊர்கணக்கு வன்னியப்பெருமாள், நந்தீஸ்வரன். (ஒப்பு)

ஆரைவாய்மொழியிலிருந்து தாமரைகுளத்தில் தங்கிவந்த காலஞ்சென்ற உயர்திரு M. சிவதாணு பிள்ளேயவர்கள் குமாரர் திருவாளர் அரிஹர மஹாதேவன் பிள்ளேயவர்கள் தந்த ஓலேப்பிரமாணங்கள்.

## வெள்ளாட்டிவிலே ஓலேக்கரணம்.

10. சகாத்தம் ஆகூாஙயங ன்மேல் செல்லாநின்ற கொல்லம் அாஅயகூ ௵ ஆனி மீ ஙயஉ உ அமரபக்கத்து துவாதெசியும் ஆதித்தவாரமும் எனக்கரணமும் விருத்திகாமருத்தியோகமும் உரோகணி நாட்செய்த வெள்ளாட்டி விலேயோலேக் கரணமாவிது. நாஞ்சிநாட்டு ஆரைவாய்மொழியில் பொய்க்கலேமகள் ஆண்டிச்சிப் பிள்ளேக்கு ஷெ நாட்டு புதுக்கிராமத்தில் சொல்விளங்கும் பெருமாள் மகள் அய்யனடியாளென வெள்ளாட்டி விலே ஓலேக்கரணம் எழுதிக்குடுத்த பரிசாவிது. நான் குருபரமுடையொனுய் ஆண்ட அனுபவித்து வருகிற நாகர்மகள் நல்லதம்பியை கொள்வாருளரோ கொள்வாருளரோ என்று நான் முற்கூற இவர் கொள்வோமென்று பிற்கூறி எம்மிலிசைந்து எதிர்மொழிமொழிந்து மறுமொழி கேட்டு பூதப்பாண்டியில் மன்றினிறுத்தி நால்பெர் கூடி நடுவர் முன்பாக விலேநிற்செயித்த அன்றூடகன் வழங்கும் நென்மெனி கலியுகராமன் பணம் ருயம் யூசிக்கரணம் பணம் க ஆக பணம் ருயக யிப்பணம் அன்பத்திஒன்றும் விலேயாவணக் களத்தெ காட்டியெற்றி கடச்சிலவறக்கொண்டு விலேயறவிற்றுப் பொருளறப்பற்றி விற்று விலேப்பிறமாணஞ்செய்து குடுத்தென் சொல்விளங்கும் பெருமாள் மகள் அய்யனடியாள். பொற்கலே மகள் ஆண்டிச்சிப்பிள்ளேக்கு இப்பரிசு விற்ற வெள்ளாட்டி நாகர் மகள் நல்லதாய்க்கு இதுவெ விலேயிது

யாவதாகவும் இது வல்லது, வேறு விலையாவணச் சிலவாவணப் பொருளா வணப்பொருள் மாவறுதிபொருள் சிலவொலைக் கரணவும் காட்டவும் கடவதன்றியே யொருகாலாவது யிருகாலாவது முக்கா லாவது ஓலைக்குற்றம் எழுத்துக்குற்றம் சொற்குற்றம் பொருள் குற்றம் வெட்டுச்செதுக்கு வரிமாருட்டம் வாசகப்பிளை மற்று மெல் குத்தமும் குத்தமதன்றியெ விற்று விலைப்பிரமாணஞ்செய்து குடுத்தேன். சொல்விளங்கும் பெருமாள் மகள் அய்யனடியாள். பொற்கலைமகள் ஆண்டிச்சிப்பிள்ளைக்கு. இப்படிக்கு சொல்விளங்கும் பெருமாள் மகள் அய்யனடியாள் தற்குறிக்கு தற்குறி மாட்டறிந்தெ னும் இப்படி இவர்கள் சொல்ல இந்த வெள்ளாட்டி விலையோலைக்கர ணம்நடுவெழுதின நாஞ்சிஞட்டு தாழைக்குடியில் பெருமாள்க்குட்டி பரதெசி அறிவென். உலகுடைப்பெருமாள் வேலாயுதப்பெருமாளும் அறியும் இப்படி அறிவேன் அணஞ்சபெருமாள் கோணைப்பிள்ளை யும் இப்படி அறிவேன் அறமளத்த நயிஞன் படக்குட்டியும் அறியும் இப்படி அறிவேன் செந்திப்பெருமாள் உலகுடைப் பெருமாளும். கொல்லம் ௬௱௰ ஆமாண்டில் திருவாங்கூரில் அடிமைவியாபாரம் அறவே நிறுத்தப்பட்டது. பண்டைக்கால ஆதாரங்களின் இனிய தமிழ் நடையைக் கவனிக்க. வெள்ளாட்டி = ஏவற்பெண்

ஆவணம் = முறிச்சீட்டு (விலையோலை)

"அல்லல் தீர்த்தாள நின்ருர் ஆவணம் கொண்டுசென்ருர்"
(பெரியபுராணம்)

ஆரைவாய்மொழியிலிருந்து தாமரைகுளத்தில் தங்கிவந்த காலஞ்சென்ற உயர்திரு. M. சிவதாணு பிள்ளையவர்கள் குமாரர் திருவாளர் அரிஹரமகாதேவன் பிள்ளையவர்கள் தந்த ஓலைப் பிரமாணம்.

## வெள்ளாட்டி விலையோலைக் கரணம்.

சகாத்தம் ௲௬௱௰௬-ன் மேல் செல்லா நின்ற கொல்லம் ௬௱௰ புரட்டாதி மீ ........ புதஞச்சையும் அமரபட்சத்துச் சத் தமியும சித்தநாமயோகமும் சிங்ககரணமும் பெற்றரோகிணி நாட் செய்த வெள்ளாட்டி விலையோலைக்கரணமாவது நாஞ்சிநாட்டு உதை யன் புதுவூரில் அணஞ்சிப்பிள்ளை மகள் அணஞ்சிப்பிள்ளைக்கு

முறத்தாநாட்டுப் பணகுடியில் உத்தமநாச்சியார் மகள் மயிலேறும் பெருமாள் உள்ளிட்டார் நான் விலைகொண்டுடையவனாய் ஆண்டனுபவித்துவருகிற வெள்ளாட்டி காந்திமதியை விலைகொள்வாருளரோ கொள்வாருளரோ என்று நான்முறக்கூற இவர் கொள்வோங் கொள்வோமென்று பிற்கூறி எமமிலிசைந்து எதிர்மொழி மொழிந்து மறுமொழிகேட்டுத் தம்மில் பொருந்தி நாஞ்சிநாட்டு பூதப்பாண்டி மன்றில் நிறுத்தி நால்வர்கூடி நடுவர்முன்பாக விலை நிற்செயித்த அன்றாடகன் வழங்கும் நெல் மேனி கலியுகராமன் பணம் ௨௰ (20) ஊசிக்கரணம் பணம் ௧-ம் (ஒன்றும்) ஆக பணம் ௨௰௧-ல் ஊசிக்காணம் பணம் நீக்கி பணம் ௨௰-ம் விலையாவணக் களத்தேக்காட்டி யெற்றிக் கைச்சிலவாகக்கொண்டு விலையறவித்துப் பொருளறப்பற்றி விற்று விலைப் பிரமாணஞ்செய்து குடுத்தென் உத்தமநாச்சியார் மகள் மயிலேறும்பெருமாள் உள்ளிட்டார் அணைஞ்சிப்பிள்ளை 'மகள் அணைஞ்சிப்பிள்ளைக்கு நான்விலை கொண்டுடையவளாய் ஆண்டனுபவித்து வருகிற வெள்ளாட்டி காந்திமதிக்கு இதுவே விலை ஓலையாவதாகவும் யிதுவல்லது வேறு விலையாவணப் பொருளாவணச் சிலவாவணப் பொருளமாவறுதிப் பொருள் சில வோலைக் கரணவுங்காட்டவுங் கடவதன்றியே. ஒரு காலாவது, யிருகாலாவது, முக்காலவது, ஓலைக் குற்றம், எழுத்துக்குற்றஞ், சொற்குற்றம், பொருள் குற்றம், வெட்டுச் சேதுக்கு, வரிமாறாட்டம் வாசகப்பிழை, வரிமறுத்தெழுதல், மற்று எக்குற்றமும் குற்றமன்றியெ விற்று விலைப்பிரமாணஞ் செய்துகொடுத்தேன். உத்தம நாச்சியார் மகள் மயிலேறும்பெருமாள் உள்ளிட்டார் அணைஞ்சிப்பிள்ளை மகள் அணைஞ்சிபிள்ளைக்கு இப்படிக்கு உத்தம நாச்சியார் மகள் மயிலெறும்பெருமாள் உள்ளிட்டார் தற்குறிக்கு தற்குறி மாட்டெறிந்தனும் இப்படியிவர்கள் சொல்ல இந்த வெள்ளாட்டி விலையோலை நடுவெழுதின நாஞ்சிநாட்டு பூதப்பாண்டியில் அணைஞ்சமுத்து பூதலிங்கம் எழுத்து. இப்படி அறிவேன் முறத்தா நாட்டுப் பணகுடியில் செந்தியப்பெருமாள் குமாருப்பிள்ளை. இப்படி அறிவேன். பூதப்பாண்டியில் குலசேகரப்பெருமாள் பூதநாதன் இப்படி அறிவேன். கலியுகத்துமெய்யன் சேசக்குட்டி இப்படி அறிவேன். நயினான்குமாரசாமி இப்படி அறிவேன். ஆயிரங்காவுடையான் பூதனாதன். மயிலேறும்பெருமாள் பெயர் பெண்பாலே.

திருவாளர் அரிஹரமகாதேவன் பிள்ளையவர்கள் தந்த ஓலைப் பிரமாணங்கள்.

## பற்றுச் சீட்டு.

ஆகூயக ளு புரட்டாதி மீ உயகூ உ கல்க்குளம் அகரத்து சுப்பிரமணியன் பூதனுதன் நாஞ்சிநாட்டு ஆரைவாய்மொழியில் பொற்கலை மகள் ஆண்டிச்சிப்பிள்ளைக்கு பற்று நறுக்கு எழுதிக் குடுத்த பரிசாவிது. முன் எயஅ ளு வடபாறை குறுக்கிட்டான் சிவனடியான் என்னொடுவெண்டின நெல் கோட்டை எ க்கு வெடி ளு கூடுதல் கூயக ளு............ பலிசைகுடுத்து உரியும் கொக்குவகளிவு உரியும் முகத்தன்மையாக முறயிட்டு களித்தகளிவு உரியும் முதல் பலிசையுள்பட பெசி வகுப்பறுத்தகோட்டை கூ (ஒன்பது) இக் கோட்டை ஒன்பதுக்கும் கோட்டை க க்கு (ஒன்றுக்கு) பணம் எ (ஏழு) ஆக வகுப்பறுத்த பணம் கூயந. யிப்பணம் அறுபத்தி மூன்றும் பற்றிக்கொண்டு முன்இட்ட முறிகளைஞ்சு பொகயினுல் பற்றுச்சீட்டுக் குடுத்தேன். சுப்பிரமணியன் புத்திரன் பூதனுதன் பொற்கலை மகள் ஆண்டிச்சிப்பிள்ளைக்கு இப்படிக்கு சுப்பிரமணியன் புத்திரன் பூதனுதன் இப்படி இவர்கள் சொல்ல இந்தப்பற்றுச் சீட்டு நடுவெழுதின தாழைக்குடியில் பரதெசி செம்பிராக்குட்டி எழுத்து.

## கீழத்தெரு மூத்தபிள்ளையவர்கள் வீட்டு ஓலைப்பிரமாணம்.

வரி 1. கூஅஅ ளு ஆவணி மீ க உ திருவிதாங்கோடு சமத்தானத்தில் ஸ்ரீ பண்டாரகாரியம் செய்வார்களொம் தொவாளை மண்டபத்தும் வாதுக்கலில் செர்ந்த தொவாளைப்பிடாகைக் கெள்வியில் ஆரைவாய்மொழியில் சுப்பிரமணியன்

2. சுப்பிரமணியன் சந்திகாவலப் பெருமாளுக்கும் நாகர் இடப்பாகத்துக்கும் எழுதிக்கொடுத்த பட்டயமாவது. வெடி கெள்வியில் சென்மம் பொய்கைக்குளம் புரவில் ச (நாலா) ங்கண்ணுறு ரு (ஐந்தில்) கலியுகத்து மெய்யன் உள்ளிட்ட தடி அஉச கூ 111 ( ) விர கொட்டை கவஙி (ஒன்காலே முண்டாணி) நஉளிக்கு (மூன்னுளி உரிக்கு)

3. கரைக்காட்டில் முதல் கண்ணாறு கூல் (ஆறில்) ஆலம் விளை ஒன்றுக்கு விரகொட்டை களுக்கு (ஒன்றே முக்காலுக்கு) (ளு) ஆண்டு (க க்கு) ஒன்றுக்கு கடமை படம் (நிவ ம்) ஐங்தேகா லும் ஆக ஷெ (ளு) ஆண்டு (க) ஒன்றுக்கு பணவகை முதல் கூட்டு பணம் (கூவபாசு) ஒன்பதேகாலேமாகாணி அரைமாகாணியில் பயறு யிட்டு அளக்கவெண்டும் பயறுபடி (வ) காலுக்கு பணம் அரைக் காலும் பணமாயிட்டு ஓடுக்கவெண்டும் பணம் (கூஙிசு) ஒன்பதே மூண்டாணி அரைமாகாணி

4. அஅ ளு (88) ஆண்டு (ளு) ஆண்டு (க க்கு) ஒன்றுக்கு முதல்க் கூட்டுபணம் கூவபாசு ம் யிப்பணம் (ஒன்பதேகாலே மாகாணி அரைமாகாணியும்) ஷெ கெள்வியில் வெச்சிரிக்குங் தவணைப்பிரகாரம் பயறுயிட்டும் பணமாயிட்டும் ஓடுக்கி பற்றுச் சிட்டியும்

5. வாங்கிச்சுகொண்டு சுகமெயிருந்து கொள்ளுகெயும் வெணும்.

அர்த்தம்பணம் ௱கூ (106) நாளது ஏற்றொற்றி அர்த்தம் பணம் கம் (ஒன்றும்) ஆக அன்றூடகன் வளங்கும் கலியுகராமன் பணம் ௱எ (107) இப்பணம் நூத்தெழுக்கும் ஷெ துலாவடித் தொட்டம் தட்டு உ க்கு (இரண்டுக்கு) தொட்டம் க ம் (ஒன்றும்) இன்னாள் முதலுக்கு தொட்டொற்றியாக யாவிச்சுங்கொண்டு ஷெ துலாவடித்தொட்டம் தட்டு உ க்கு (இரண்டுக்கு) தொட்டம் க (ஒன்று) க்கு ஷெ காஞ்சிபுரங்கோண்டான் திருமடத்தில் பூசை வெஞ்சனம் வகைக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒற்றி மிச்சவாரக் கடமை பணம் கடுஙி ம் (ஒன்றரையே மூண்டாணியும்) ஆண்டுதொறு மிறுத்துச் சிட்டியும் பிடிச்சுத் தொட்டொற்றியாக கையாண்டு கொள்வானாகவும் கல்பிச்ச இந்த துலாவடித்தொட்டம் தட்டு உ க்கு (இரண்டுக்கு) தொட்டம் க ம் (ஒன்றும்) செட்டு செவகப்பெருமாள் அணஞ்சிக்கு தொட்டொற்றியாக எழுதிக்கொடுத்தார். ஸ்ரீ பண் டாரகாரியம் செயிவார்கள் இந்த தொட்டொற்றி ஓலைஎழுதின ஷெ திருமடத்து கணக்கு நீனலேயப்பன் எழுத்து.

## கீழத்தெரு மூத்தபிள்ளையவர்கள் வீட்டு ஓலைப்பிரமாணம்.

௲௪௪ ௵ ஆவணி ௴ ௧௪ ௳ எழுதின தொட்டாற்றி ஓலையாவது. திருவனந்தபுரத்து பள்ளிகொண்டருளுகின்ற பெருமாள் ஸ்ரீ பல்பனாபப்பெருமாள் செத்திரத்தில் ஸ்ரீ பண்டாரகாரியம் செயிவார்களோம் நாஞ்சினாட்டு ஆரைவாய்மொழியில் செட்டு செவகப்பெருமாள் அணஞ்சிக்கு காஞ்சிபுரங்கொண்டான் திருமடத்தில் பூசைகொள்ள வகை ஒற்றியாக எழுதிக்கொடுத்த தொட்டமாவது தொவாளைப் பிடாகைச்கெள்வியில் ஆரைவாய்மொழி உள்ளிட்ட சங்கெதத்தில் துலாவடித்தொட்டம் (ஒன்று) கக்கு எல்லை மெல்மாடத்து தொட்டத்துக்கும் கிணத்துக்கும் மெற்கு அம்பலவாணன் மருதப்பன் தொட்டத்துக்கும் வடக்கு ஷை யான் தெல்வித்தொட்டத்துக்கும் செவகப்பெருமாள் அணஞ்சி தெல்வித் தொட்டத்துக்கும் துலாவடிக்கும் கிளக்கு பெருமாள் எங்கோடியன் உத்துக்கும் தெக்குமாக இவைநடுவில் தொட்டம் க ம் (ஒன்றும்) ஷை தெல்வித்தொட்டத்துக்கு எல்லை ஷையான் தொட்டத்துக்கு மெற்கு அம்பலவாணன் மருதப்பன் தெல்வித்தட்டுக்கும் வடக்கு ஷையான் தொட்டம் உத்துக்கும் கிளக்கு ஷை தெல்விக்கும் கிணத்துக்கும் தெக்குமாக இவைநடுவில் தெல்வித்தொட்டம் க ம் (ஒன்றும்) ஆகத்தெல்வித்தட்டுஇரண்டுக்கு தொட்டம் க (ஒன்று)க்கு முன்னாள் ஷை திருமடத்தில் நிந்தும் எழுதிக்கொடுத்த காணம் காணாளிக்கொண்ட அயலோடொத்த அர்த்தம் பணம் ௱௭௬ ல் (176 ல்) இடத்தடி நெடுங்கன் தடிக்கு இருமா அரைக்காணி விரை கொட்டை முன்றுமா முன்னாளிக்கு பெரும் பணம் ௭௰ (70) ம்

## தெற்குத்தெருவின் பழமை.

௯௱௯௰௯-ாமாண்டு ஆடிமாதம் 31-ாம் தேதி எழுதின பதிவுச் சீட்டாவது:- ஆரைவாய்மொழிச்செட்டுச்சொல்விளங்கும் தாணுவப் பண்டாரம் வகை மனை ஒற்றி தோவாளைப்பிடாகை கேள்வியில் ஆரைவாய்மொழி ஊரில் தெற்குத்தெருவில் மனை ஒன்றுக்கு எல்லை:- தென்வடல் தெருவுக்கும்மேற்கு கிழமேல் தெருவுக்கும் வடக்கு சோணாசலம் சாத்தாவுடைய மூப்பனுக்கு பண்டார ஒற்றிக்கடை மனைக்கும் கிழக்கு கிழமேல் நாராசத்துக்கும் தெற்குமாக மனை ஒன்றுக்கு அளவு குழி 3 1/16க்கு கிரயம் பணம் 36¾ க்கு 947-ாம்

ஆண்டு ஆயக்கட்டின்படிக்கு அர்த்தம் பணம் 18ம் ஏற்றொற்றி கூடினவகை 966-ாம் ஆண்டு கார்த்திகை மாதம் 8-ம் தேதி திருவனந்தபுரம் கோட்டை வேலைவகைக்கு வச்செழுத்து வகை விசாரிப்புக்கணக்கு ஈசானம் கிட்டினன் வசம் ஒடுக்கு பணம் 18¾ ம் ஆகவகை இரண்டினால் ஷெ மனை ஒன்றுக்கு அர்த்தம் பணம் 36¾ இப்பணம் முப்பத்தாறேமுக்காலுக்கும் ஷெ மானக ஒற்றியாக பாவித்துக்கொள்வாராகவும். இப்படிக்கு பதிவுச் சீட்டுக் கொடுத்த தோவாளைப்பிடாகைக் கேள்வியில் சுப்பிரமணியன் மாணிக்கவாசகம். மேற்படியில் கணக்கு உமையொருபாகன் சுப்பிரமணியன். கண்டெழுத்துக்கணக்கு புன்னைவனம் சங்கராராமன். ஷெ கணக்கு பண்டாரம் நாகுட்டி எழுத்து.

## பொய்கை விநாயகர்க்குச் சொத்து

௯௱எ௰அ-ாம் ஆண்டு ஆவணிமாதம் ௬௰ாம் தேதி எழுதிய உபயக்கடன் முறியாவது:- தோவாளைப் பிடாகைக் கேள்வியில் ஆரைவாய்மொழியில் ஊர்வகைப் பிள்ளையார்கோவில் நயினார் பொய்கை விநாயகர்க்கு ஷெ யூரில் சோணாசலம் சிதம்பரசிவன் உபயக்கடன்முறி எழுதிக்கொடுத்த பரிசாவது:- ஷெ பிள்ளையார் சுவாமி கீழ்த்துறை மகமைவகையிலும் ஊர் கலியாணவகையிலும் எலுமிச்சவகையிலும் பலர் யாசகம் வகையிலும், நான் பற்றுபணம் 4300. இப்பணம் 4300க்கு அளக்கவோ நெல் கோட்டை 17½ இக்கோட்டை பதினேழரையும் 978-ாம் ஆண்டு இடவம் முதல்க்கு கார்பாதி இடவபாதியாக அளந்து வருவெனாகவும். இதில் ஒரு பூவாகிலும் உபயம் முடக்கம் வந்நால் என்றே வகையான இறைச்சகுளம் மேலப்பத்தில் கிட்டிணன் குளம் உள்ளிட்டபுரவில் 10ல் பள்ளவயல் தடிஒன்றை சிற்றொற்றியாக இறங்கிக் கையாண்டுகொள்வாராகவும். இப்படி சம்மதிச்சு இந்த உபயக்கடன்முறி எழுதிக்கொடுத்தேன். சோணாசலம் சிதம்பரசிவன். நயினார் பொய்கை விநாயகர் சுவாமிக்கு. இது கையெழுதின ஷெ யூர் சிவசங்கரன் சிதம்பரகுற்றாலம்.

## பிரம்மஸ்ரீ சுப்பையாப் பட்டர் அவர்கள் வீட்டு ஓலைகள்.

கொல்லம் ௯௱௯௰௬௰ல் நயினார் சொக்கலிங்கசுவாமி கோயிலில் ஆறுமுகநயினார் வாகனமும், வாகனத்தில் எழுந்தருளச்செய்யும் விம்பப் பிரதிட்டையும் செய்யப்பட்டன.

கூஅமரு-ாமாண்டு கோயில் சம்பந்தமான விசேடங்களுக்கு எழுதிய ஓலையில் இராஜாதிராஜ இரவிவர்ம ஈழநாடுவென்று யாழ்ப்பாணம் ஜயித்ததாக எழுதப்பட்டிருக்கின்றது.

அா-ாவது ஆண்டிற்குமுன் பாக்கோடி ஐயனுக்குத் திருவிழா உளது.

கொல்லம் கூஅமகூ-ல் சித்திரை மாதம் மக-ாம் தேதி திங்களாட்சையும், அமாவாசையும், அசுவதிநாளுமாய சுபதினத்தன்று கோயில் கொடிமரப் பிரதிட்டையும் அஷ்டபந்தனமும் ஆயிற்று. 1076-ல் மீண்டும் சுவாமிக்கும் அம்மனுக்கும் சுற்று தேவதைகளுக்கும் மகா கும்பாபிஷேகமாயிற்று. (கல்வெட்டு)

1102-ல் இரண்டாவதும் கொடிமரப் பிரதிட்டை நடந்தது. சுவாமிக்கு அஷ்டபந்தனமும் நடந்தது. (கல்வெட்டு.) 1104 ல் மீனாக்ஷியம்மன் முகப்பு மண்டப வேலையாரம்பித்து 1106 ல் முடிவுற்றது. (கல்வெட்டு)

ஸ்ரீ பொன்காத்தபெருமாள் நாடார் அவர்கள் வீட்டு ஓலைப்பிரமாணம்.

நீட்டு:—மகாராஜா அவர்களிடமிருந்து முன்னுளில் கரைக்காரன் எனும் பட்டத்திற்கு ஸ்ரீ பொன்காத்தபெருமாள் நாடார் அவர்களது பாட்டனுர் சொக்கன் செம்பன் என்பார்க்கு அளிக்கப்பட்டது. தோவாளைக் கஞ்சிப்புரை ஊழியம் முதலியன புரிய வேண்டும்.

அத்தியாயம் 15.

# மீனாக்ஷி சுந்தரர் கோயில்.

## திருச்சிற்றம்பலம்.

## ஆலவாய்ப் பெருமை.

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு"

பதினெண் புராணங்களில் ஸ்காந்தம் சிறந்தது. சனற்குமாரசங்கிதை, சூரசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணுசங்கிதை, சங்கர சங்கிதை, சூதசங்கிதையென ஆறு சங்கிதைகளடங்கியது. அதில் சங்கர சங்கிதை சிவபிரான் உமைக்குக்சொல்ல, முருகன் கேட்டு அகத்தியருக்குச் சொன்னார். அதில் கேட்ட மாத்திரத்தில் முத்தியளிக்கும் தலமொன்று சொல்லப்படுகிறது. அதுவே ஆலவாயாகும். அங்கே மூர்த்தி தலத்தீர்த்த மூன்று விசேடங்களும் உண்டு. பரமசிவன் அருட்கொண்டு 64 திருவிளையாடல்கள், மக்கள் அறியுமாறு செய்த தலம் வேறெதுவுமில்லை. இதனைப்பூலோகச் சிவலோகமென்பர். பொற்றாமரைப்பொய்கையில் மீன் முதலிய ஜீவராசிகள் இன்றுமில்லை.

பரதகண்டத்தில் சிவதலங்களில் 68 சிறந்தன. அவற்றுள்ளும் நான்கு சிறந்தன. சிதம்பரம், காசி, திருக்காளத்தி திருவாலவாய் என்பன.

சிதம்பரம் தரிசித்தவர்களுக்கும், காசியதிலிறந்தவர்களுக்கும், காளத்தி வழிபட்டவர்க்கும் போக மோக்ஷமளிக்கும். ஆலவாயதன் பெயரைக்கேட்டவர்க்குப் போகமோக்ஷ மார்க்கமென்று கூறினர். நான்கிலும் திருவாலவாயே சிறந்தது. எல்லாத்தலங்களையும் படைக்கும்பொருட்டு திரு ஆலவாயை முதலிற் படைத்து அதன்கண் எழுந்தருளினர்.

பரஞ்சோதி முனிவர் விரதம் கொள்ளுவதற்கும், தானம் செய்வதற்கும், பூசை செய்வதற்கும், தீக்ஷாஸ்நானம் செய்வதற்கும் எல்லாத்தலங்களிலும் திரு ஆலவாயே சிறந்ததென்றும் எளிதில் முத்திபெறலாமென்றும் கூறுவதால் ஆலவாயாகிய ஆரைவாய் மொழியில் வசிப்போர் தானதர்மங்களும் ஆலய தரிசனமும் செய்ய வேறிடங்களுக்குப் போகவேண்டாம். இங்கேயே செய்து விரைவில் பயன்பெறலாமென்று அகத்தியமுனிவர் வாக்கை எடுத்து ஓதுகின்றனர். இதன் மகிமையை அறிந்துதான் மற்றைய ஊர்களை விட இங்கு மக்கள் அதிகமாய்க் கோயிலுக்குப் போகின்றனர் போலும். மதுரையைப்போல் ஆலயஅமைப்பும் அதைச்சுற்றி நகர அமைப்பும் இவ்வளவு அழகிய முறையில் உலகில் எங்கும் இல்லையென்று அறிஞர் கூறுகின்றனர்.

மூர்த்தி விசேடம்:— காசி முதலிய தலங்களில் சிவலிங்கம் தோன்றும் முன்னரே இச்சிவலிங்கம் தோன்றியது. கடம்பமரத்தடியில் ஆதியில் சுயம்புவாய்த் தோன்றிற்று. 32 இலக்கணங்களுமுடைய சிவபெருமான் இம்மூல லிங்கத்தில் தேவியுடன் தோன்றியதால் தேவர்கள் சோமசுந்தரன் எனும் திருநாமம் சாத்தினர். இமமூர்த்தியையும் அம்மையையும் தரிசித்தால் பல பிறவிகளில் உறும் பாவங்களும் நீங்கி போக மோக்ஷங்கள் பெறலாம். பூசித்தவர்கள் எல்லா இன்பத்தோடு பேரின்பமும் பெறுவார்கள். இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றதால் பிரமஹத்தி தோஷம் பிடிக்கவே தேவலோகத்தும் தீராமைகண்டு குருவுடன் காசி, காஞ்சி முதலிய பலவிடங்களிலும் சென்றும் பழி தீராமையால் கடம்பவனத்தில் வந்தவுடனே பழி நீங்கியது கண்டு சோமசுந்தரக் கடவுளைப் பூசித்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியடைந்தான். அயன் விமானம் செய்து வைத்தான். பின்னர் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் சித்திரையில் வந்து சோமசுந்தரனைப்பூஜிப்பதால் இன்றும் இங்கும் அங்கும் விசேடத்திருநாள் நடைபெறுகிறது.

கடைச்சங்கம் நடந்த இடமாதலால் மிகப்பழைய நகரமென்பது உண்மை. பழம் பெரு நூற்கள் வெளியான இடம் இதுவே.

"தில்லையில் கூத்தனே தென் பாண்டி நாட்டானே"
"பாண்டி நாடே பழம் பதியாகவும்"

சிலப்பதிகாரக்கதை நடந்த இடமும், திருக்குறள் முதலிய நூற்கள் வெளியான இடமும் இதுவே.

# சோமசுந்தரப் பெருமான்செய்த அற்புதத் திருவிளையாடல்கள்.

64 விளையாடல்கள் நிகழ்ந்ததிலிருந்து யார்தான் இக்கோயிலைக் கும்பிடமாட்டார்கள்?

1. மாணிக்கவாசகர்க்காக குதிரைச்சேவகனானார்.
2. ஏழை வாணிச்சியின் பிட்டுக்காக மண்சுமந்து பிரம்படி பட்டார்.
3. கௌரியெனும் பெண்மணிக்கு வைணவ உபத்திரவம் தீர்க்க விருத்த குமாரபாலரானார்.
4. தீண்டாத்திருமேனி பாணபத்திரனுக்குவேண்டி விறகுக் கட்டுச் சுமந்தார்.
5. பத்திரனுக்குச் சேர மன்னனிடம் திருமுகம் கொடுத்து செல்வம் அளித்தார்.
6. பத்திரன் மனைவியின் சங்கீதப் போட்டியில் நடு நிலைமையோடு தலைமை தாங்கினார்.
7. தருமி என்னும் ஏழைக்கு ஓர் கவி எழுதிக்கொடுத்து கிழியைப் பெறச் செய்தார்.
8. நக்கீரரிடம் வாதிட்டு இலக்கணம் உபதேசித்து அனுக்கிரகித்தார்,
9. எல்லாம் வல்ல சித்தரானார்.
10. தனபதியின் தங்கையின்பொருட்டு மாமனார் வேடம் அணிந்து வழக்குரைத்தார்.
11. கல்யானையைக் கரும்பு தின்னச்செய்தார்.
12. திருவாதவூரடிகளுக்குபதேசித்தார்.
13. கருங்குருவி, நாரை, பன்றிக்குட்டி முதலிய அறிவில் குறைந்தவைகட்கும் கருணையால் அருள்புரிந்தார்.

இவ்வாறு 64 லீலைகள் உயிர்களை உய்விக்கும் பொருட்டு செய்தருளினர். இவற்றின் விரிவைத் திருவிளையாடற் புராணத்தில் படித்துக்கொள்க. இவ்வூரார் அனைவரும் இந்நூலை அவசியம் படித்தறிய வேண்டும். திருவிளையாடற்புராணம் வசனநூல் இங்குள்ளார் படித்தறிக.

## மதுரை மீனுக்ஷியம்மன் அருள் லீலைகள்.

1. திருமலைநாயக்கரது தீராத க்ஷயரோகத்தைத்தீர்த்து வைத்ததால் ஆலயத்திருப்பணியைப் புதுக்கித் திருவிழாவும் நடாத்தினர்.

2. குமர குருபரசுவாமிகள் மீனுக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் பாடி அரங்கேற்றினபொழுது மீனுக்ஷியம்மையார் ஒரு பிராமணப் பெண் வடிவாய் வந்திருந்து கேட்டுத் தலையசைத்தனர்.

வருகைப்பருவத்தில்,

"தொடுக்கும் கடவுள் பழம் பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்
சுவையே! யகந்தைக் கிழங்கை யகழ்ந்
தெடுக்கும் தொழும்பருளக் கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமைய
இமையப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் றிருவுள்ளத்திலழ
கொழுகவெழுதிப் பார்த்திருக்கும்
உயிர் ஓவியமே! மதுகரம் வாய் மடுக்கும்
குழற்காடேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே"

என்னும் பாசுரத்தைச் சொல்லும்பொழுது அம்மையார் திருவாயால் "மற்றொருமுறை கூறுக" என்று கேட்டதாகவும் கூறுவர். பின்னர் திருமலைநாயக்கர் குமரகுருபர சுவாமிக்குக் கனகாபிஷேகம் செய்தனர்.

தேவிபக்தரான நீலகண்ட தீக்ஷிதர், திருமலைநாயக்கரிட்ட கட்டளைப்படிப் போர் வீரர் கண்ணைக்குத்துமுன் தாமே கண்களில் கற்பூரஹாரத்தியை வைத்துக் கெடுத்துவிட்டார். இதையறிந்த

நாயக்கர் வருந்தினார். மீனாக்ஷியம்மை கண்ணை மீண்டுமருள மீனாக்ஷியானந்தசாகரஸ்தவம், எனும் வடநூலைப் பாடினவுடன் கண்ணொளி பெற்றார்.

ஸ்ரீ வீரமார்த்தாண்ட வர்மர் இளவரசராயிருந்தபோது இரவிக்குறிப்புடன் மதுரை மீனாக்ஷி சுந்தரேசர் கோயிலிற் சென்று 41 நாள் தவமிருந்து தேவியினருளைப் பெற்றாராம். தேவியனுக்கிரகத்தால் வாளும் கிடைத்ததாம். தேவி கனவில் "எனக்கு உனது இராஜதானி பத்மனாபபுரத்து நீலகண்ட சுவாமி கோயிலில் ஆலயம் கட்டி ஆனந்தவல்லியென்றழைப்பாயாக" என அருளினர். பின்னர் அம்மன்னன் திருவாங்கூரில் பற்பலயுத்தங்களிலும் வெற்றி பெற்று பல நாடுகளையும் வென்றார். பத்மனாபபுரத்தில் ஆனந்தவல்லியம்மனுக்கு மண்டபம் கட்டினார்.

திருமலைநாயக்கனைப்போல் மீனாக்ஷியினருள் இவருக்கும் கிடைத்தது.

மொழிபெயர்ப்பு.

வஞ்சி நாடாளும் மாமுடி மன்னா!
தஞ்சமா யெனைத் தரணியோர் போற்ற
பத்ம னாபப் பட்டணம் தன்னிலே
பாங்குடன் நீயும் பணிசெய்க கோயில்
நீலகண்டனும் நின்மல மூர்த்தியின்
கோலமாய் வாமத்தில் குலவுவேன் யானே
ஆனந்த வல்லியென் அழகுறு நாமம்
ஊனமில்லாமல் உரைத்திடு வாயே.

நூலாசிரியன்.

கொல்லம் 835-ம் ஆண்டிலேயே கல்குளம் ஆனந்தவல்லியம்மனுக்குச் சொத்து விட்டதாய் ஆர்க்கியாலஜிக்கல் ஸீரியஸ் VOL. V பக்கம் 147 ல் காணப்படுகின்றது. ஆதலால் ஆனந்தவல்லிக்குக் கோயில் கட்டவில்லை; விசேடப் பூஜைக்கு சொத்து விட்டிருக்கலாம்.

## கலி விருத்தம்.

1. பாண்டி மன்னர் பலரும் வணங்கியே
வேண்டி நின்று விழுப்பொருளெய்தினர்
தாண்டி வந்த தடாதகை யம்மையே
ஈண்டி வந்தனம் எம்மிறை காப்பதே.

2. மாலிக் காபரும் வந்தமை காரணம்
சீலி யெங்கள் சிறப்புடைக் கோயிலில்
ஆலி மிக்க நல் லந்தணர் அர்ச்சனை
ஓலைப் புத்தக உண்மை உணர்ந்தனம்.

3. கன்னிப் பெண்ணும் கவினுடை நாயகி
பொன்னி வேந்தன் புரந்தர னாதியர்
பின்னிடு மாறு பெரியதோர் வெற்றியால்
பன்னியைக் காணப் பசுபதி வந்தனன்.

4. வந்த போது வணங்கிக் கவிழ்ந்தனள்
கந்த மிக்கக் களிப்புறு மாலையும்
சொந்த மான சுடர் முடி சூட்டியும்
எந்த நாளும் இறைவனை யேத்தினள்.

நூலாசிரியன்.

## அத்தியாயம் 16.

## சிவபெருமான்.

---

பரமசிவனே உலகத்தைப் படைத்துக் காத்து, அழித்து, மறைத்து, அனுக்கிரகித்து ஐந்தொழிலும் புரிகிறார். ஆயிரம் சாகைகளுள்ள சாமவேதத்தில் எல்லாவற்றிற்கும் அதிபதி பரமசிவனென்று கூறப்படுகின்றது. உலகம் முழுவதையும் சங்கரிக்கும் பொழுது பரமேசுரன் தான் எஞ்சுவர். மற்றவையெல்லாம் சிவனில் ஒடுங்கும். அவ்விதமில்லையானால் அது சர்வ சங்காரமாகாது. பின்னர் சங்கரனே படைத்தல் முதலியன புரிவார்.

"ஏகனுன சிவனே பதி"
"அந்தமாதி யென்மனுர் புலவர்"

(சிவஞானபோத முதற் சூத்திரம்)

உருத்திரன் ஒருவன்தான்; இருவரல்லர்; அவர் எங்கும் நிறைந்தவர்; எல்லாமறிபவர்; எல்லாம் செய்பவர்; அவர்தான் விஷ்ணு; அவர்தான் பிரமன்; அவர்தான் சந்திரன். (சுருதி)

"எல்லா வுலகமு மானுய் நீயே"
"கரியானை நான்முகனைக் கனலைக்"
காற்றைக் கலந்து நின்ற பெரியானை (தேவாரம்)

உலகம் முழுதும் நீக்கமற நிறைந்து படைத்தல், காத்தல், அழித்தல் செய்பவன் எவனே அவனை இருக்கு வேதம் துதிக்கின்றது. ஆகையால், ஒரே தெய்வம்தான் இதெல்லாம் செய்கின்றதென்றறிக. பல தெய்வங்களில்லை.

வைணவ சமயம் விஷ்ணு ஒருவனே யாவும் செய்கின்றுன் என்றும், வேதாந்த மதம் பரப்பிரமமே யாவும் செய்கின்றதென்றும் கூறுகின்றன. அதில் யாதொரு இழுக்குமில்லை. கடவுள் ஒன்றே. பெயர்தான் வித்தியாசம். கிருஸ்தவரும் முகம்மதியரும் கடவுள் ஒன்றென்று சொல்ல இந்துக்கள் பலவென்று சொல்லலாமோ?

ஒவ்வொரு மதத்தினர் கடவுளுக்கு ஒவ்வொரு பெயர் கூறுகின்றனர்.

"ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு" எனவும் சிவபெருமானுக்கு உருவம், அருவம், அருவுருவம் என மூவுருவம் உளது.

"ஒருருவே மூவுருவாய் ஆனநாளோ" எனவும்
"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி
யாங்கே மாதொரு பாகனுர் தாம் வருவர்"




இவ்வொன்பது பேதமும் ஏகநாதனான பரமேசனே நடிப்பான். ஐந்தொழில்களும் உயிர்களுக்காகக் கருணையால் செய்கிறான். சிவாலயங்களில் பரமேசுவரனை ஆகம முறைப்படி பிரதிட்டித்திருக்கின்றனர்.

கடவுள் பலரில்லை. ஒன்றுதானுண்டென்று வேதாந்தமும் சித்தாந்தமும் ஒன்றுபோல் கூறுகின்றன. கோயிலில் மேற்கூறிய தத்துவம் மனதிலாகும்போது கடவுள் ஒன்றென்றும், மற்றையவை இறைவனில் ஒடுங்குமென்றும் அறியலாம். இத்தத்துவம் பெண்களும், பிள்ளைகளும் நன்கறியவேண்டும். ஒரே தெய்வம் ஒவ்வொரு தத்துவத்தின்படி ஒவ்வொரு தொழில் செய்யும்போது சிவன்சக்தி என்று ஒன்பது பேதங்களாகின்றது. என்றாலும் பொருள் ஒன்றுதான்.

சித் சக்தியோடு சேர்ந்த சிவன் ஆன்மாக்களின் மலநோயைத் தீர்த்தற்பொருட்டு சுத்த மாயையில் தொழில் செய்ய திருவுள்ளம் கொண்ட அவசரம் சிவம். அவ்வாறு தொழில் செய்யவேண்டுமென்றெண்ணிய அவசரம் சக்தி. சக்தியென்பது அடங்கி நிற்கும் ஆற்றலைக் குறிப்பது. நாதம் ஒலியையும் விந்து குறியையும்

உணர்த்தும். சுத்த மாயையோடு கூடின அவசரம் நாதம். அசுத்த மாயையோடு கூடிய அவசரம் விந்து. இன்னவாறு செய்யவேண்டுமென்றெண்ணிய அவசரம் சதாசிவம். எண்ணியவாறு செய்யுங்கால் அவரவர் கன்ம பலத்தை அனுபவிக்கச் செய்யும் முறைமையில் அனுபவிக்கவேண்டாத கன்ம பலன்களையும் அனுபவிக்கவேண்டிய கன்ம பலன்களில் உள்ள தோஷங்களையும் மறைத்தலாகிய அவசரம் மகேசுவரம். அனுபவிக்கவேண்டிய ஐசுவரியங்களைக்கொடுத்தும், அனுபவிக்கவேண்டாத ஐசுவரியங்களை மறைத்தும் வைத்தலின் மகேசுவரம் எனப்பட்டது. அவ்வாறனுபவிக்கும் காலத்து இளைப்பொழித்தற்பொருட்டும், வேறு உலகத்தில் இன்பதுன்பம் துய்த்தற்பொருட்டும், இவ்வுலகில் வேறு உடம்பு, வாயிலாய் இன்பதுன்பம் நுகர்தற்பொருட்டும் சங்கரித்தலாகிய அவசரம் உருத்திரன். அனுபவிப்பதற்காக நிலைக்கச்செய்யும் அவசரம் விஷ்ணு. அனுபவித்தற்குரிய உடல், கருவி, உலகம் பொருள் முதலியவற்றைத் தோற்றுவிக்கும் அவசரம் பிரமன். இதன்மேல் செய்யவேண்டுவன ஒன்றுமில்லாமையால் ஒன்பது பேதம் சித்தாந்த சாத்திரத்தில் வரையறுக்கப்பட்டது. இச்சிவபெருமானே நம் சோமசுந்தரக்கடவுளென்றறிக.

அரசன்போல் சுத்த சிவம். அவ்வரசன் தொழிற்படுத்த வேண்டுமென்றெண்ணிய அவசரம் சிவம். எவ்வாறு தொழிற்படுத்தலாமென்றெண்ணிய அவசரம் சக்தி. தன்னுள் அடங்கியுள்ள தொழிற்செய்யுமதிகாரிகளைத் தெரிந்தெடுக்க எண்ணுதல் நாதம். அவ்வதிகாரிகளைத் தெரிந்தெடுத்தல் விந்து. இன்னின்னார் இன்னின்ன காரியத்தை இவ்வாறு செய்யவேண்டுமென்று நியமித்தல் சதாசிவம். செய்யுங்காலத்தில் பிறழாதிருக்கச் செய்தல் மகேசுவரம். முறை பிறழ்ந்தாரைத் தண்டித்தலும், அவசியமானபோது அப்புறப்படுத்தவேண்டியதை அப்புறப்படுத்தலும் உருத்திரன். முறைபிறழ்ந்தாரைக் காத்தல் விஷ்ணு. காத்தலுக்காகக் கைத்தொழில் கிருஷி முதலியவற்றை உண்டுபண்ணுதல் பிரமன். இவ்வாறு உவமையாலறிக. இதில் ஆதி, அனாதியென்று மலையவேண்டாம். இது முழு உவமையல்ல. ஒருவாறு மாணாக்கருக்கு விளக்கும் உவமையாம்.

"சுத்த அறிவே சிவமென்றுரைத்தார் மேலோர்
வித்தகனும் குருசிவ மென்றுரைத்தார் மேலோர்";

பாரதியார்.

# அத்தியாயம் 17.

## மீனாக்ஷி திரு அவதாரம்.

பாண்டி நாட்டில் மலையத்துவசன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் மனைவி காஞ்சனமாலை. இருவரும் மிக்க தவமுடையவர்கள். சிவபக்தியிற் சிறந்தவர்கள். நெடுங்காலமாகக் குழந்தையில்லை. சிவ விரதங்கள் நோற்றும் மகப்பேறு இல்லை. பின் 99 அசுவமேத யாகம் செய்ததால் தேவேந்திரன் உபதேசப்படி புத்திரகாமேட்டி செய்யவே உலகமாதாவாகிய உமாதேவி மூன்று தனங்கள் உள்ள ஓர் பெண் வடிவமாகி மூன்று வயது பிராயத்துடன் யாக குண்டத்தில் தோன்றினாள். உடன் காஞ்சனமாலைகுழந்தையை எடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து முத்தமிட்டு ஆனந்தமடைந்தாள்.

பரம ஞானவடிவாகிய மீனாக்ஷியம்மை கருணையால் அவதரித்ததையறியாத மலையத்துவச மன்னன் வருந்தி யான் பிள்ளையிலாது வருந்தியதற்கு ஒரு பெண் கிடைத்தது. அதுவும் என் பகைவர் நகைக்குமாறு மூன்று முலையுள்ள குழந்தையாயிற்றே. என்செய்வேன் என்றான். வானில் சிவபெருமான் திருவருளால் ஓர் அசரீரி தோன்றிற்று. "அரசே உன் மகளுக்குப் புத்திரனைப் போலுள்ள சடங்குகளெல்லாம் செய்து தடாதகையெனப் பெயரிட்டு முடிசூட்டக்கடவாய். கணவன் வரும்போது ஒரு தனம் மாயும். ஆதலால் நீ கலங்காதே." தடாதகை என்றால் பிறரால் தடுக்க இயலாத திறமையுடையவள் என்பது பொருள். அரசன் சோமசுந்தரக் கடவுளைத் துதித்து மகிழ்ந்தான். மூன்று முலை தோன்றுமா? இருபெண் ஒட்டியிருந்ததும், இரு பசுக்கள் ஒன்று சேர்ந்து இருந்ததும், 19 மண்டைகளுள்ள பனையிருந்ததும், இக்காலத்தும் காண்கிறோமன்றோ? இது உலக இயற்கை. தெய்வீகத்தோற்றம் இதனினும் விசேடமானது. முக்கண்ணனும், நான்முகனும், ஐங்கரனும், ஆறுமுகனும், தேவர் மகிமையாம். அவற்றிற்குக்காரணங்களுமுள. தடாதகை தாய்வயிற்றில் நம்போல் பிறக்கவில்லை. தெய்வக்கோலத்தில் வேள்வியில்தோன்றியது

சைவப் பெருமையாம். அருள்தவமுடையார்க்கு ஈசுவரிகுழந்தையாய் வருவள். தக்கன் முதலிய பெரியார்க்குக் குழந்தையான திலும் மனிதனாகிய பாண்டியனுக்குப் பிள்ளையாகப்பிறந்தது மிக்க விசேடமே. ஆதலால், மனிதர்கள் பெரும் புண்ணியம் செய்து தெய்வப்பேறு அடையலாம், என்பது மீனாக்ஷியின் திரு அவதாரத்தால் அறிக. யசோதைக்கும் நந்தகோபனுக்கும் கண்ணன் மகவாய்த்தோன்றியது காண்க. மன்னவன் மகிழ்வால் பற்பல தான தருமங்கள் செய்தனன்.

தடாதகைப்பிராட்டிக்கு 64 கலைகளும், யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய வித்தைகளும் படைக்கலப்பயிற்சியும் அளித்தான். தற்காலப் பெண்மக்களுக்கும் இத்தகைய பயிற்சி அளிக்கலாம் என்பது மலையத்துவச மன்னன் உலகிற்குக் காட்டி விட்டான். மேனாட்டாரும் ஜப்பானியரும்போல், நம் நாட்டுப் பெண்கள் பயிற்சிபெறலாம். மகள் திறமைகண்டு அரசன் முடிசூட்டு விழாக்கொண்டாடினான். மதுரையில் இன்றும் திருவிழாவில் பட்டாபிஷேகம் விமரிசையாய் நடைபெறுகின்றது.

அரசாட்சி:— அறநூல் வழுவாது செங்கோல் செலுத்தினள். எலிசபெத்து, விக்டோரியா முதலிய மகாராணிகளைப்போல் நன்கு ஆண்டுவந்தனள். கன்னிப்பெண்பாண்டி நாட்டை ஆண்டுவந்ததால் அந்நாட்டிற்கு கன்னிநாடெனப் பெயர் வந்தது. இந்தியாவைச் சுற்றி பார்க்கவந்த பாஹியான் என்னும் சீன யாத்திரிகன் 'கன்னிப் பெண்ணொருத்தி தென்னாட்டைச் செம்மையாய் ஆண்டுவந்தனள். எனக்குறித்துள்ளான். மீனாக்ஷியாகிய தடாதகையின் அரசாட்சி யென்று அறிஞர் கூறுகின்றனர்.

தென்னாட்டில் மலையத்துவசனது அருமை மகளாகிய தடாதகைப்பிராட்டியார் அரசாண்ட செய்தி வடநாட்டிலே சந்திரகுப்தர் அரசவையைச் சிறப்பித்த கிரேக்க தூதராகிய மெஸஸ்தனிஸ் என்பவர் ஏறக்குறைய கி. மு. 312 ல் எழுதிய குறிப்புரைகளுட் காணப்படுகின்றது. மலையத்துவசன் காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டென்று கருதலாம். (இலக்கிய வரலாறு). மலையத்துவசன் சிலநாள் ஆண்டபின் சிவபதமடைந்தான். உத்தரக்கிரியை

களெல்லாம் பெண்மகளே செய்தாள். இக்காலத்தவர் சிலர் அந் தியேட்டிக்கிரியை செய்ய பெண்மகளுக்குரிமையில்லை யென்பது சரியல்ல. ஆண்மகனில்லாதிருப்பின் செய்ய உரிமையுண்டென்று இதனாலறிக.

பெண்ணரசாட்சி:—தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் ஆத ரித்தனள். வடமொழி வேதங்களை நன்கு பயிலச்செய்தாள். கோயில் வழிபாடு குறைவற நடந்தது. இதனைப் பரஞ்சோதி முனிவர் சிறப்பாய் விளக்குகின்றார்.

மீனாக்ஷியம்மனை முற்பிறப்பில் வழிபட்டதால் காஞ்சன மாலைக்குத் தேவி பிள்ளையாய் அவதரித்தாள். அம்மையின் அருளை அளத்தற்கரிதே. தாயை வழிபட்டால் தாமே நேரில் பிள்ளையாய் வருவரென்றால் வேறென்னதான் பெறவியலாது. இக்காலமக்கள் இதனையறிந்து தேவியைத்தொழுது பல போகங்களையும் பெறுக. முற்பிறவியுண்டென்றும் இச்சரிதையாலறிகிறோம்.

தடாதகைப்பிராட்டி எண்டிசையும் வெல்லல்:—தாய் காஞ்சன மாலை தன் மகள் மங்கைப்பருவம் அடைந்ததும் மணம் நிகழவில் லையேயென வருந்தினள். "தடாதகை ஆம்போதாகும்" என்று மறுமொழி கூறி திக்குவிஜயம் செய்யப் புறப்பட்டனள். வடநாட் டில் கயபதி என்னும் அரசனை வென்று இறைபெற்றாள். திக்குப் பாலகர்களை வென்றாள். கயிலைநோக்கிச்சென்றாள்.

பாண்டிநாட்டுப்படைகள் திருக்கைலாயமலையை வளைய, நந்தி தேவர், பூதகணங்கள் முதலியோர் எதிர்த்துத்தோற்றனர். சிவ பிரான் இதறிந்து படைக்கலங்களோடு வரவே தன்னையே நோக்கு கின்ற திரு நோக்குடையவலப்பாதியை எதிர்கண்டாள். கண்ட போதே நடுவிலுள்ள ஒரு தனம் மறைந்தது. உடனே உள்ளத் தில் நாணமும், மடனும், அச்சமும் உதிக்கமுன்னைய அன்பு குடி கொள்ள கண்கள் புறவடியை நோக்க தலைகுனிந்து நின்றாள். முன்னாளிலே தோன்றிய அசரீரி வாக்கை அறிந்த சுமதி மந்திரி தடாதகைப்பிராட்டியிடம் இக்கைலாசபதியே நும் மணவாளன் என்றான். சிவபெருமான் இன்றைக்கு எட்டாம் நாள் சோமவா ரத்தன்று உன்னை விவாகம் செய்ய வருவோம். நீ மதுரைக்குப் போவென்று திருவாய் மலர்ந்தருளினார்.

# மீனாட்சி திருமணம்.

மதுரையில் சிறந்த அலங்காரம் செய்யப்பட்டது. தேவர், முனிவர் முதலியோர் வந்து நிறைந்தனர். மன்னர்களும் குழுமினர். கலியாணமண்டபம் நன்கு அலங்கரிக்கப்பட்டது. தடாதகைப் பிராட்டியை ஈசுவரியாய் யாவரும் மதித்தனர். மீனாட்சியம்மையாகிய தடாதகையைப் புகழ்ந்தனர்.

திருமால், பிரமன் முதலியோர் புடைசூழ வேதவிதிப்படி தேவியைத் திருமணம் செய்து மக்களை ஆசீர்வதித்தனர். மதுரையில் நடைபெறும் எல்லாத் திருவிழாக்களிலும் திருக்கலியாணத் திருவிழாவே மிக்க சிறப்புடையது. இன்றும் அவ்வாறே நடைபெறுகின்றது.

ஆலவாய்மொழியிலும் திருக்கலியாணம் அதே காலத்தில் சித்திரைத்திங்களில் சிறப்பாய் நடைபெறுகின்றது. மதுரையம்பதியில் இருந்து மீனாட்சிசுந்தரேசர் வந்ததற்கு இதுவும் ஓர் சான்று.

இத் திருமணத்தை யொட்டி இலக்குமியும், சரஸ்வதியும் தோழிகளாயினர். மாமி காஞ்சனமாலை கங்கை நீரால் மருமகன் பாதகமலங்களை விளக்கினர். மருமகனைக்கண்டால் மாமி ஒளிக்கலாகாதெனும் உண்மையைத் தமிழ் மக்கள் அறியவேண்டும். மாங்கலியம் சூட்டினர். காஞ்சனமாலை, அடியேன் அருமையாய்ப்பெற்ற கன்னியை விவாகம்செய்து இப்பாண்டிநாட்டை அரசாளுக என்று விண்ணப்பம் செய்தாள். சிவபெருமான் தம் வேடங்களைமாற்றி அரசியல் கோலம்கொண்டு சௌந்தரபாண்டியனாக நாட்டைச் செம்மையாய் ஆண்டுவந்தார். தற்கால அரசியல் ஞானிகள் ஆண்டிக் கோலத்துடன் அரசாள வியலாது எனும் கூற்று உண்மையே. சோமசுந்தரனே தன் கோலமாற்றினார்.

திருக்கலியாண காலத்தில் புலிமுனிக்கும் பதஞ்சலிக்குமாக பொற்சபையில் (கனகசபை) நடனம் புரிவதுபோல் வெள்ளியம்பலத்துத் திருக்கூத்தாடியும், பெண் வீட்டாரது அகந்தையை அடக்கக்குண்டோதரனுக்கு அன்னமளிக்கச் செய்தும், அன்னக்குழியும் வைகையும் அழைத்துத் திருவிளையாடலும் புரிந்தார்.

# திருக்கலியாணத் தத்துவம்.

முன்னாளில் பரமேசுவரியைப் பரமசிவன் அனுக்கிரகித்து மணந்த விசேடத்தை ஆண்டுதோறும் திருக்கலியாணத்தில் பல வூர்களிலும் சிவாலயங்களில் கொண்டாடுகின்றனர். ஆண்டுதோறும் அம்மன் சாமியினிடம் சண்டையிட்டுக்கொண்டு வேறிடம் புகவில்லை, தாலியறுத்தெறிவதாகவும், பரிஜனங்கள், நல்லோரும் கூடவருவதாகவும், பார்வதி அண்ணன் வீட்டில் சென்றிருப்பதாகவும் பரமசிவன் இதனையறிந்து மாலைவேளையில் வந்து மாலையிடுவதாகவும் சாதாரண ஜனங்கள் கூறுவர். பெண்பாலார்க்குத் திருக்கலியாணம் பார்க்க மிக்க சந்தோஷம் உண்டு.

திருக்கலியாணம் என்றால் தேவனும் தேவிக்குமுள்ள திருமணம் என்று பொருள். ஈசுவரன் தவம் யோகம் போகம் உள்ளவனென்று காணப்பட்டாலும் உண்மையில் இவையொன்றும் உள்ளவனன்று. இவையெல்லாம் கடந்தவன் அவன் அரூபி. அத்தெய்வம் திருக்கலியாணம் புரிவது சரியா? அநாதியாய் ஆணவமதத்தில் அழுந்திக்கிடக்கும் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு தனுகரணபுவன போகங்களைப்படைத்து நல்கி அறிவை விளங்கச் செய்தார். சிற்றறிவிற்கொத்தவாறு மோட்சத்தையும் நல்கிபோக மோட்சங்களை அனுபவிக்கிறார். அதோடுதான் கருணையுடன் ஜீவனுக்கு ஜீவனாய் நின்று அவைவயை நடாத்துகின்றார். ஈசுவரன் ஜீவ ஜீவனாய் விளங்குவதால் ஜீவாண்மாவிற்குப் போகத்தையருளும்போதுதான் போகியாகவும் யோகத்தை நல்கும்போது யோகியாகவும் தீரவேண்டுமென்னும் நிலையுளடாகின்றது.

"போகியாய் இருந்துயிர்க்குப்
போகத்தைப் புரிதலோரார்" (சித்தியார்)

"தென்பாலுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான் பெரும் பித்தன் காணேடி
பெண்பாலுகந்திலனேல் பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்தி வீடுவர்காண் சாழலோ"
(திருவாசகம்)

சிதம்பரத்தில் பௌத்தர்கள் சமயவாதம் செய்யும்பொழுது சிவனார் மனைவியைக் கண்டு காமுற்றார் என்றும் இதுவா கடவுளிலக்கணம் என்றும் கூறியபொழுது மணிவாசகப்பெருமான் தேவியை விரும்பிய காரணங்களை விளக்கி வினவிடையாக திருவாசகத்தில் பாடியுள்ளார்.

ஜகதீசன் உயிர்கட்குப் போகம் நல்க உமாதேவியோடுகூடப் போகியாகவும் யோகத்தை நல்க கல்லாலின் நிழலில் யோகியாகவும் அவதரித்தார். அந்த உருவங்கள் தோல், எலும்பு, மச்சை, இறைச்சி, நரம்பு முதலியன அமைந்த நமது மாயா உடம்புபோல் அன்று. அவை கருணையுள்ள ஞான சொரூபமாம். அதுபோல் ஈசுவரனது போக ரூபத்தில் காணும் உமாதேவியும் உலகப்பெண்களைப்போலல்ல. அக்கினியினின்றும் அகலாத சூடுபோல் ஈசனை விட்டுப்பிரியாத அவனது கருணை சக்தியாம். ஆதலால் தேவியின் உருவமும் ஞானவடிவமே. இவ்வாறு பரமேசுவரனும் பராசக்தியும் ஆணும் பெண்ணும் உருவம் தாங்கி உலகிற்கு அம்மையப்பராய் விளங்குகின்றனர். வேறுபொருள்போல் சேர்ந்து தம்மில் ஐக்கியமாய்ச்சேர்ந்து மகிழ்கின்றனர். கடவுள் உலகைப்படைக்கின்றாரென்றால் அதைப்படைக்க யந்திரங்களும் மற்றும் வைத்து எத்தனை ஆண்டுகளாகும் என்று யோசிப்பீர்கள். மனிதவியல்புக்கு அவ்வாறுதான் முடியும். ஆனால், அவர் நினைத்த மாத்திரையில் யாவும் படைக்கின்றனர். அதுபோல் திருக்கலியாணத்தில் சக்தியும் சிவனும் சேர்ந்தார்கள் என்றால் மனித இயல்பை வைத்துத் தெய்வத்தை அளந்து கூறலாகாது. தெய்வத்தன்மை வேறன்றோ?

மீனாக்ஷிசுந்தரேசர் திருக்கலியாணம் திருவிளையாடற்புராணத்தில் பரஞ்சோதிமுனிவர் நன்கு கூறுகின்றனர். திருமணத்திற்கு அக்கினிதேவனும் அக்கினியை வளர்ப்பவனும் அக்கினியில் ஆகுதியை ஏற்பவனும் சிவபெருமானே கடவுள் உலகம் போகம் அனுபவிக்க ஆணும் பெண்ணுமாக திருக்கலியாணம் செய்தார். அத்தகைய இறைவனது திருவிளையாடல்களை யாருக்கறியவியலும்?

"முற்ற மங்கல நாண் சாத்தி முழு துல கீன்றாள் செங்கை
பற்றினன் பற்றிலார்க்கே வீடருள் பரமயோகி"

(திருவிளையாடல் புராணம்)

"இணரெரித் தேவுந்தானே யெரி வளர்ப்பவனும் தானே
உணவு கொள்பவனுந்தானே யாகிய ஒருவன் வையம்
புணர்வுறு போகம் மூழ்கப் புருடனும் பெண்ணுமாகி
மணவினை முடித்தான் அன்னான் புணர்ப்பையார் மதிக்க வல்லார்"
(திருவிளையாடற் புராணம்)

அக்கினியின் சூடுபோல் அபின்ன சக்தியான உமாதேவி தக்ஷன் மகளாகவும், பர்வதராஜன் புத்திரியாகவும், மலையத்துவசன் மகளாகவும் எங்ஙனம் பிறந்தாள்? ஆதலால் பராசக்தி ஜனனமரண முள்ள ஜீவிகளைப்போலென்று எண்ணற்க. தக்கன் முதலியோர் தேவியை நோக்கி பிள்ளையாய் வரவேண்டுமென்று தவம் கிடந்ததால் தவத்தில் கருணையுண்டாய் அவதரித்தனர். இவ்வாறு தேவி பிறந்து வளர்ந்து பரமேசுவரனை அடையத்தவம் செய்தகாலையில் பசுபதி கருணையோடு கூட தேவியைத்திருமணம் செய்த சந்தர்ப்பங்கள்தான் மீனாக்ஷி கலியாணம்போன்ற பல திருக்கலியாணங்கள் ஆண்டுதோறும் அதனை நினைப்பூட்டி அம்மையப்பரின் அருளைப் பெறுகின்றனர். திருக்கல்யாணத்திருநாள் மக்களுக்கு விசேட அருளைத்தரும் நன்னாளாகும். அன்று தரிசனம் மிக்க பயனையளிக்கும். தவத்திற்கு மகிமையுண்டென்றும், ஆண்டவன் அருட்கடல் என்றும், பெண்களுக்கும் ஈசுவர சாக்ஷாத்காரம் பெறலாமென்றும், ஜீவான்மாக்கள் தவம் செய்தால் கடவுள் பிரத்தியட்சமாவாரென்றும், உள்ள பெரும் தத்துவங்கள் திருக்கலியாணத்திலடங்கியிருக்கின்றன. கன்னிமாகுமரிப் பகவதி கையில் ஜபமாலையோடு சுசிந்தைத் தாணுமாலயனை நோக்கித்தவம் செய்கின்றாள். பக்தர்களும் கடவுளையடைய வேண்டுமென்பது எதிர்நோக்கு. குமரிப் பகவதி கற்பகாலத்தில் கடவுளையடைவதாய்த் தலபுராணம் கூறும்.

"நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவம் செய்யும் குமரி" பாரதியார்.

சிவ பரம்பொருள் பெண்ணை இடது பாகத்தில் வைத்தாலும் ஐம்புலனையும் வென்ற ஓர் துறவியென்றறிக.

நேரிழையைக் கலந்திருந்தே
புலன்களைந்தும் வென்றானை" (தேவாரம்)

இந்த உலகத்திலிருந்து கொண்டே பரலோகமும் பெறலாம். I am in the world but not of the world. ஈசுவரனே சிவனும் சக்தியுமாயிருந்து ஜீவராசிகளை நடாத்தவில்லையேல் ஜீவ ராசிகள் ஆண் பெண்ணாகவிருந்து இன்பமனுபவிக்கமாட்டார்கள்.

"அவளால்வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்"

தவத்தின் பயன் கடவுட் கருணையாம். இது உலகமறியவேண்டும். சாத்திரக்கருத்தும் அதுவே. கடவுள் நித்திய கலியாணமூர்த்தியே. சத்தி சிவதரிசனம் அதிக விசேடமாம்.

"சிவஞ் சத்திதன்னையீன்றும் சத்திதான் சிவத்தையீன்றும்
உவந்திருவரும் புணர்ந்திங்கு லகுயிரெல்லா மீன்றும்
பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்
தவந்தரு ஞானத்தோர்க் கித்தன்மை தான்றெரியுமன்றே."
சித்தியார்.

"மண்ணினல் லாவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கியாது மோர்குறை வில்லை
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகையிருந்ததே"
தேவாரம்.

பள்ளியறை:—பரமசிவனிலிருந்து சக்தியும் சக்தியிலிருந்து பிரபஞ்சத்தில் எல்லாப்பொருளும் உண்டாயின. சக்தியும் சிவனும் பிரிந்திருக்கவியலாது. கோயில்களில் இரவில் கடைசியில் பள்ளி யறைப்பூஜை நடைபெறுகிறது. வைகறையில் திருவனந்தல் உணர்த்தி விம்பத்தை ஈசுவர சன்னிதானத்திற்குக் கொண்டு போவார்கள். உற்பத்தியென்பதுபோல் லயமென்னும் தத்துவத்தைப் பள்ளியறை உணர்த்துகின்றது.

சிவனிலிருந்து தோன்றிய சக்தி மீண்டும் சிவனில் சென்று லயிக்கிறது. உலகம் முழுவதும் இவ்விதமே ஈசுவரனில் லயிக்கின்றது.

"சத்தி சிவம் இரண்டாகித்தான் முடிவில் ஒன்றாகி
சித்திரமாய் நின்ற திறமறியேன் பூரணமே"

பள்ளியறைக்குச் சிவபிரான் திருப்பாதாரவிந்தங்களை மட்டும் கொண்டுபோவர். உருவமுள்ள விம்பங்களில்லை. உருவத்திரு மேனியைத் தரிசித்து அருவத்திருமேனி தரிசனம் பயிலுவதற்குப் பள்ளியறை பயன்படுகின்றது. சிவபிரான் உருவக் கோலம் நடராஜர் முதலிய மூர்த்திகளிலும், அருவக்கோலம் பள்ளியறையிலும், அருவுருவக்கோலம் சிவலிங்கத்திலும் காட்டியருள்வர். பூஜை முடிவில் சக்தியையும் சிவனையும் சேர்த்து அம்மையப்பராய் வணங்குவர். இரண்டாக யிருந்ததை ஒன்றாகப் பூஜிப்பர்.

பள்ளியறையில் நடைபெறும் அலங்காரம் நிவேத்தியம் யாவும் நம் அனுக்கிரகத்தின் பொருட்டேசெய்கிறோம். கடவுளுக்கு ஊணுமுறக்கமுமில்லை.

"உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி"

(திருவாசகம்)

பள்ளியறை அவிக்கிரகோபாஸனையாம்.

---

## மீனாக்ஷி சுந்தரர் கும்மி.

---

வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள் மங்கையரே — மகிழ்ந்
தேத்துங்கள் ஏத்துங்கள் ஈசுவரியை.

1 சீர் பெறும் வஞ்சிநல் தேசத்திலே — செல்வச்
சிறப்புறும் ஆலவாய் நகரத்திலே
பேர் பெற்ற மீனாக்ஷி பெருமையெல்லாம் — நிதம்
பேணிக் கும்மி யடிப்போமே.

2 தென்னா டாண்டநல் தெய்வமடி — நந்தம்
தேசமெங்கும் புகழ் வெற்றியடி
மன்னாதி மன்னர் வணங்கி வந்த — இந்த
மாநிலத்தில் தெய்வம் வேறுளதோ. (வாழ்த்து)

3 திருக்கலியாண தினத்தினிலே—யாமும்
தீஞ்சோறு மெத்தப் படைத்துவிட்டோம்
தருக்கமுடன் சென்று சங்கரன்—தன்னொடு
சாற்றினளே குறை தூற்றினளே.

4 பெரும்பசிக்காரனோர் சிறுவனுளன்—அவன்
பிணியைத் தீரடி பெண்மணியே
அருஞ்சொல்லைக் கேட்டம்மை ஆய்தலின்றி—அங்கு
ஆட்களை யேவினர் பசிதீர்க்க.

5 குண்டோதரன்றன் குறைதீர்க்கப்—பெரும்
குவலயப் பொருளெலாம் போதாமல்
மண்டலம் நோக்கி மனமுடைந்தாள்—மண
மாட்சிமை சான்ற மீனாக்ஷியன்னை. (வாழ்த்து)

6 சேரர்கோன் வந்து சிறப்புச்செய்த—நல்ல
தெய்வங்கள் வேறெங்கும் கண்டீரோ
வீரர்களிருவரும் வேண்டி நின்றார்—அவ்வை
வினயமாகப் பிரதிட்டை செய்தாள்.

7 முன்னவனார் சோம சுந்தர—மூர்த்தியும்
முத்தமிழ்த்தலைவரில் முதன்மையானார்
பன்னரும் லீலைகள் பலபுரிய—தெய்வப்
பாவையரும் கூடச் சேர்ந்தனரே. (வாழ்த்து)

8 வக்கீலுடன் மாமனுமாகி—வணிகர்
வழக்குகள் தீர்த்து வழங்கினரே
பக்த கௌரியின் பரிவிற்—இரங்கியே
பாலனும் விருத்தனுமாகி நின்றார்.

9 திருவாசகம் பாடத்திருவருள்—செய்து
தேசிகன் மாணிக்க வாசகனுக்கி
ஒருவாப் பிறப்பறுத்து யர்பதம்—நல்கிய
உத்தமனார் வல்ல சித்தனரே. (வாழ்த்து)

10 அங்கயற் கண்ணியின் அருளை வேண்டி—அரன்
ஆலவாய்க் கோயிலி லமைச்சருடன்
மங்கையர்க்கரசியாம் மகாராணி—அம்மை
மாலையும் காலையும் வாழ்த்தி நின்றார்.

11 ஏழிசைக் கீதங்கள் இறைவன் பாட—ஏங்கி
ஏம நாதனூரை விட்டோடினனே
வாழிய சுந்தரர் வாழிய—ஆலவாய்
வாழிய மீனாக்ஷி வாழியவே. (வாழ்த்து)

நூலாசிரியன்.

---

## அத்தியாயம் 18.

# பராசக்தி.

## (பெண் தெய்வம்)

---

கிருஸ்தவர்களும், மகமதியர்களும் கடவுளை ஆணாக எண்ணி வணங்குகின்றனர். ஆண் பெண் காரணமாக உலகில் சகல ஜீவ ராசிகளும் உற்பத்தியாகின்றன. ஜீவிகள் யாவும் இவ்வாறு ஆண் பெண் என்னும் இரு இனத்தினின்றும் தோன்றுவதால், ஆதியில் ஆண் பெண் என்ற இரு தெய்வங்களினின்றும் மனிதரும் தோன்றியிருக்கலாம் என்னும் யுக்தி வாதம் நியாயமே.

ஈசுவரனும் தன் சக்தியைப் பெண்வடிவமாக்கிப் போகியாயிருந்து ஜீவிகள் எல்லாவற்றையும் போகம் துய்ப்பிக்கிறார். பரமசிவனுக்குச் சக்தியும், சிவமுமான இருவிதத் தன்மைகள் இருப்பனவால் உலகிலும் நானாவித ஜீவராசிகளும் ஆண் பெண் நிலையிலிருந்து போகம் அனுபவித்து உலகை வளர்க்கின்றன.

பீடம், லிங்கம் இவை சிவனும், சக்தியும் என்ற போதனையை காட்டுகின்றன. பெண்தெய்வம் பலவோ? ஒரே பராசக்திதான் பெண்தெய்வங்களாக உலகிலறியப் படுகின்றனள். பரமேசுவர

னிடத்திருந்துண்டான பரமேசுவரி (பராசக்தி) சிவனுயிருக்கும் பொழுது சக்தியாகவும், நாதத்திற்கு விந்துவாகவும், பிரம்மனுக்குச் சரசுவதியாகவும், சதாசிவனுக்கு மனோன்மணியாகவும், மகேச னுக்கு மகேசையாகவும் வருவாள். பரமசிவனுக்கு ஒன்பது அவஸ்தா பேதங்கள் உள்ளனபோல் பராசக்திக்கும் அவஸ்தா பேதங்களுண்டாயிற்று.

"சக்தியாய் விந்து சக்தியாய் மனோன்மணி தானுகி
ஒத்துறு மகேசையாகி உமைதிரு வாணியாகி
வைத்துறு சிவாதிக்கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தியாகும்
எத்திறம் நின்றானீசன் அத்திறமவளும் நிற்பள்"
(சிவஞானசித்தி)

இதிலிருந்து பராசக்தியொன்றென்றறிக. அவள் ஏழு அவஸ்தா பேதங்களை யடைகின்றனளென் றியம்பப் படுகின்றது.

## சிவன் சக்தி யிவர்களது பந்தம் எவ்வாறு?

சக்தியும், சிவனும் தீயும் சூடும்போல் பிரிக்கமுடியாதவராம். சூட்டிலிருந்து அக்கினியையோ, அக்கினியிலிருந்து சூட்டையோ பிரிக்கமுடியாமை போன்று பரமசிவனின்றும் பராசக்தியைப் பிரிக்க வியலாது. இரண்டினையும் வெவ்வேறு பிரிக்கவியலாதென்றுலகோ ரறியும் பொருட்டே ஈசுவரனது உடலில் பாதி ஆணும், பாதிப் பெண்ணுமாக அர்த்த நாரீச உருவத்தில் ஆலயங்களிலெழுந்த ருளச்செய்கின்றனர். பிரம்மன் சரசுவதிக்கு நாவிலுறைவிடங் கொடுத்தருளியதும், விஷ்ணு மார்பில் இலக்குமியை வைத்தருளி யதுமான தத்துவமிதுவேயாகும். மரமும், வைரமும் போல் சிவனும் சக்தியுமாம். சிவ தத்துவத்தினின்றும் சக்தி தத்துவ மும், சக்திதத்துவத்தினின்றும் சதாசிவத்தத்துவமும், அதனின்று உலகிலுள்ள எப்பொருளும் உண்டாயிற்று. ஆகையால், சக்தி சிவனது மகள். மகளை மனைவியாகப்பெற்றது முறையோவென்பர்.

பரமேஸ்வரனோடுகூடச் சக்தி உடன்தோன்றியதால் தேவியை ஈசனது சகோதரியென்று யஜுர் வேதத்தில் கூறப்படுகின்றது.

"ஏஷ தே ருத்ர பகுஸ்தம்
ஜுஷஸ்வ ஸ்வைஷதேருத்ர பாக:
ஸஹஸ்வஸ்ராம்பிகயாதம் ஜுஷஸ்வ" (யஜுர் வேதம்)

மணிவாசகப் பெருமானும் இக்கருத்தை வெளியிடுகின்றனர். சிவனது நாயகி சக்தியாம். ஆதலால், எல்லாச் சீவராசிகளும் சக்தியிலிருந்து உற்பவித்தன என்றாலும் ஈசுவரி கன்னியும், ஈசுவரன் பிரம்மச்சாரியுமாவர். இங்ஙனம் இருவரும் கன்னியும், பிரம்மச்சாரியு மாதலால் போகப்பிரியரல்லரெனினும் சுயநலமில்லாது ஜீவிகட்காகவும் செய்கின்றனர் என்பது பொருள்.

வறுத்தல், அவித்தல், பொரித்தல் முதலிய தொழில்களை அக்கினி செய்வதுபோல் சிருஷ்டிஸ்திதி, சங்காரம் முதலிய தொழில்களைப் பராசக்தி செய்கிறாள். பல தொழில்கள் புரிந்தாலும் தீயும் சூடும் ஒரே தன்மைதான். சிவன் ஐந்தொழில் நிகழ்த்தும்போது ஒரு மாற்றமும் அடைவதில்லை. ஒவ்வொரு தொழில் புரியும்போது சரஸ்வதி, இலக்குமி, உமையென்று பல பெயர்கள் கூறினாலும் உண்மையில் தேவி ஒன்றுதான்.

சிவன் அர்த்தநாரீசனானது:— பிருங்கி மகரிஷி சங்கரனை மட்டும் வணங்கி வலம் வைத்ததாகவும், பெண்ணை வணங்குவதில்லையென்றும் உறுதி உரைத்தார். உடன் தேவியின் பிரார்த்தனைக்கேற்ப தன் உடம்பில் பாதி நல்கியதாய்ப் புராணம் கூறுகின்றது.

பசுபதி பாதி ஆணும், பாதிப் பெண்ணுமாக இருந்ததை ஞானசம்பந்த சுவாமி தேவாரத்தில் பாடுகின்றார். சம்பந்தருக்குப் பார்வதி தேவி ஞானப்பாலூட்டினர். தந்தை, பிள்ளையாரிடம் பால் தந்தவரைக் காட்டச் சொன்னபோது பரமசிவன் காளை வாகனத்தில் விண்ணில் காட்சி அருளினர். அப்போது பாதிப் பெண்ணும் பாதி ஆணுமான தோற்றத்தைக் கண்டு "தோடுடைய செவியன்" என்று பாடினர். பாலன் பொய்யுரையார், உண்மை வடிவம் கூறினர். அர்த்தநாரீச உருவம் இந்துக்கள் வழிபடவேண்டியதே.

பரமேஸ்வரனுக்கு சக்திகள் பலருண்டோ? இல்லை. அரசனது ஒரே சக்தி மந்திரி, சேனைத்தலைவன், அதிகாரிகள் இவர்களில் பிரதிபலித்து பற்பல தொழில்கள் புரிவதுபோல் ஒரே சிவசக்தி பிரமன் முதலியோர் எக்காரியம் செய்யினும் அரசன் சிந்தித்ததையொட்டி அல்லாமல் நடைபெறாததுபோல், போக மோட்சங்களெல்லாம் கருணையால் அரன் சங்கற்பப்படி நடைபெறும்.

சிவசக்தியின் இலக்கணம் என்ன? மேற் கூறியவை சக்தியின் ஸ்தூல இலக்கணம். சூக்ஷ்ம இலக்கணம் ஜீவிகளின் அனுக்கிரகத்தின் பொருட்டு பொதுவாகத் தானறிந்தும், ஜீவான்மாக்களையறிவித்தும் நிற்கும் ஞானமாம். ஞான சொரூபிதான் பராசக்தி. ஜீவான்மாக்களுக்கு மலபரிபாகம் உண்டுபண்ண ஐந்தொழிலும் செய்கின்றனள். அது வியாபகமான திரோதான சக்தியால் கிரமாக இச்சா ஞான சக்திகளாகி மூன்றாய்ப் பிரிந்து தொழில் நடத்துகின்றது. ஞானம் எப்படியோ அதற்கொத்தவாறு இச்சையும், கிரியையும் நடைபெறும். ஆதலால், பராசக்தியென்றால் தடுக்கப்படாத அனுக்கிரகம் என்பது பொருள். இவ்வாறு பராசக்தி, திரோதானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, என்று சக்தி ஐந்து விதமாய் இருந்தாலும், பராசக்தி மட்டும் ஈசுர சொரூபமென்றும் ஏனைய நாலும் அதன் வியாபாரபேதமென்றுமறிக.

தேவி கோவில்களில் மூன்று ஸ்தூபிகள் வைப்பதன் நோக்கம் என்ன? இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி யென்றும் மூன்று சக்திகளைக் குறிப்பதாய்க் கூறப்படுகிறது. சக்திதான் இந்துக்களின் ஆராதனையில் முக்கியமென்று புலனாகும். தாய் முதன்மையன்றோ! ஜீவான்மாக்களுக்குப் போகம் நல்கி, அறிவுகொடுத்து, மோட்சம் அருளும் கருணையும் ஈசுரவனுக்கு இயற்கையிலுள்ள சக்தியாம்.

"அருளது சக்தியாகும் அரன்றனக்கருளையின்றித்
தெருள் சிவமில்லை யந்தச் சிவமின்றி சக்தியில்லை"

உலகவிருளைக் கிரணங்களாலகற்றிக் கண்களுக்கு ஒளியருளும் கதிரவனைப்போல் அந்தப்பராசக்தி கருணையானதால் ஈசுவரன் சக்தியால் அஞ்ஞானமகற்றி ஜீவிகளை யனுக்கிரகிக்கின்றனன். சூரியன் இருளை ஓட்டுவதால் யாதொரு பயனையும் பெறாததுபோல் கடவுளுக்கும் கருணை இயற்கையானதால் யாதொரு பயனுமில்லை, மேனாட்டு விஞ்ஞானிகள் கூறும் மாற்றர் (Matter) சிவனும், எனர்ஜி (Energy) சக்தியென்றும் சொல்லலாம். உலகில் இருவித சக்திகள் உண்டென்று கூறுவர். அதில் பொட்டன்ஷியல் எனர்ஜி சிவனும், கைனற்றிக் எனர்ஜி சக்தியுமாவர், தேவியாராதனையை இகழ்வோர் இவையெல்லாம் கவனிக்கவேண்டும்.

உலகில் மனித உடம்புகள் பெற்றோரின் உடம்பின் நிலையைப் பொறுத்திருக்கும். ஒட்டு மாங்கனியைப் பார்த்தால் ஒரு பக்கம் புளிப்பும் மறுபக்கம் இனிப்புமாகவிருக்கும். ஒரு பக்கம் நாரும் மறுபக்கம் நாரில்லாமலும் இருவித சேர்ப்புடையதாகவிருக்கும். இத்தகைய இருவகைச் சேர்ப்பு எப்படி உண்டாயிற்று? அது அதன் உற்பத்திக்குக் காரணமான இருவித மரங்களின் சேர்ப்பால் வந்ததென்று நமக்குத் தெரியுமே. இதுபோல் மனித உடம்பிலும் வலது பாகம் ஆணென்றும், இடது பாகம் பெண்ணென்றும் மருத்துவ நூல் கூறும். ஆடவருக்கு வலப்பாகம் வரும் நோய் கடினமென்றும், இடப் பாகம் வருவது எளிதென்றும் வைத்திய நிபுணர்களின் கருத்து. இதுபோல் மின்சாரத்திலும் பாஸிற்றீவ் (Positive) நெகற்றீவ் (Negative) என்று இருவிதமுண்டல்லவா? இவை இரண்டும் சேர்ந்தால்தானே மின்சார சக்தி ஓடும்.

இதனாலன்றோ கடவுளை ஸ்ரீராமகிருஷ்ணபரம ஹம்ஸர் தாயாகவும், மாணிக்கவாசகர் அம்மை அப்பாகவும் வாழ்த்தி வணங்கினர். இத்தகைய பெண்தெய்வமாகிய பராசக்தியே நம் மீனாட்சியம்மன். தத்துவக் கூற்று:— தேவியென்றால் ஞானத்தைப் பக்தனுக்குக் கொடுக்கும் பிரகாச ரூபமான ஈசுவர சக்தியென்று பொருள்படும். மனிதர் வைதீக மார்க்கத்தில் முயற்சித்துப் பெற்றுக்கொள்ள வேண்டிய தத்துவ ஞானம் தேவியென்பர். சிவை அல்லது தேவியென்றால் எல்லாம் சிவரூபமான பிரம்மம் என்ற நிச்சய புத்தியாம். சாத்திரங்களில் பெண் வடிவமாய்க் கூறியிருக்கும் தேவிகளெல்லாம் பிரம்ம ஞானத்தின் பேதங்களென்றும் கூறுகின்றனர். மும்மூர்த்திகளையும் படைத்த தேவியென்பதால் இருபத்திநாலு தத்துவங்களுக்கும் மூலகாரணமான பிரம்ம சக்தி அல்லது பிரகிருதியென்பது பொருளாகும். ஸ்தூலார்த்தம் கொள்வதில் பயனில்லையென்பர். எல்லா தேவிகளின் கதைகளும் தத்துவ ஞான தரிசனங்களே.

சரஸ்வதியென்றால் பரமாத்மாவை ஸம்பந்தித்த வாக்கு, புத்தி, வித்யை, ஞானம், இவைகளின் அதிஷ்டமான தேவதை. ஸர்வ வித்தியா சொரூபிணியென்று பொருள். ஸாவித்திரி அல்லது காயத்திரி யென்றால் நான்கு வேதங்களினுடையவும், வேதாகமங்களினுடையவும், சந்தசுகளுடையவும் மாதா. பிரம்மன் மனைவியாகிய

அதிஷ்டானதேவதை. தூர்க்கையென்றால் ஆபத்தை இல்லாமலாக்குபவள். விஷ்ணுமாயையென்றும் வைஷ்ணவீ யென்றும் பெயர். இவ்வாறு தேவிகளுக்கெல்லாம் ஞான சம்பந்தமான அர்த்தமே கொள்ளவேண்டும்.

"மழையும் காற்றும் பராசக்தி செய்கைகாண்"
"துன்பமிலாத நிலையே சக்தி"
முன்பு நிற்கின்ற தொழிலே சக்தி"
"முத்தி நிலையின் முடிவே சக்தி"
"சாம்பனைப் பூசி மலைமிசை வாழும்
சங்கரனன்பு த்தழலே சக்தி"
"சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி"
"மாதா பராசக்தி வைய மெல்லாம் நீநிறைந்தாய்"
"மகா சக்தி யில்லாத வஸ்துவில்லை"
"ஆதியாஞ்சிவனு மவன் சோதியான சக்தியுந்தான்
அங்குமிங்கு மெங்குமுளவாகும்—ஒன்றே
யாகினும் உலகனைத்தும் சாகும்—அவை
யன்றியோர் பொருளுமில்லை அன்றியொன்றுமில்லையிதை
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும்—இந்த
அறிவுதான் பரமஞானமாகும்.
மூர்த்திகள் மூன்று மூலப்பொருளொன்று—அந்த
மூலப்பொருள் ஒளியின் குன்று
நேர்த்திகழுமந்த வொளியை எந்த
நேரமும் போற்று சக்தியென்று"
"நம்பினார் கெடுவதில்லை
நான்மாறையின் தீர்ப்பு"
அம்பிகையைச் சரண்புகுந்தால்
அதிக வரம் பெறலாம்"
"ஆதாரம் சக்தியென்றே
அருமறைகள் கூறும்"
(பாரதியார் பாடல்)

சுப்பிரமண்ய பாரதியார் தேவி பக்தியிற் சிறந்தவர்.

## சிவநெறித் தொண்டு.

உயர் திரு என் அகஸ்தியலிங்கம் பிள்ளையவர்கள் சிவபக்தியி லும் தமிழ்ப்பற்றிலும் பொது நன்மைக்குழைப்பதிலும் சிறந்து விளங்குகின்றனர். மீனாக்ஷியம்மன் கோயிலில் சித்திர சபை முகப்பு மண்டபம், தளவரிசை, வெளிச்சுற்று மதில், தெப்பக்குளப் பணி, பல கிணறுகள், பஜனை மடம், முப்பந்தல் சுற்றுக்கட்டிடம் பெண்பள்ளிக்கூடம், ஆண்பள்ளிக்கூடம், சித்திரைவிலாச நூலகம் முதலியன ஊராரின் ஒற்றுமை மிக்க உதவியோடும் சர்க்காரின் அனுமதியோடும் நீண்டநாள் உழைத்து அழகுற அமைத்திருக் கின்றனர். இவ்வாறு சுயநலம் கருதாமல் பொதுநலம் கருதி சமய முன்னேற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் உழைப்போர் நம் நாஞ்சினாட்டில் மிகச் சிலர்தாமுளர். அன்னார்க்கு மீனாக்ஷி யன்னையிடம் அளவிலா பக்தியுண்டு. வடக்கூரில் பெரியவூர் தர்ம கர்த்தரும் மாஜி ஸ்ரீமூலம் அஸம்பிளி மெம்பரும் ஆவர். இந் நூலை வெளியிடவும் வேண்டும் பொருளுதவி செய்து ஊக்கப்படுத் தினார்கள். அங்கயற்கண்ணியினருளால் பற்பல தொண்டுகளும் புரிவார்களாக.

## அத்தியாயம் 19.

### விநாயகர்.

எல்லோரும் முதலில் வணங்கும் மூர்த்தி. பலரும் பற்பலவாறு பேசுகின்றனர், பார்வதி தேவியின் அழுக்கு உருட்டி வைத்த தென்றும், கொழுக்கட்டை தின்றதால் வயிறு பெருத்ததென்றும், விரூபமான இத்தெய்வத்தை வணங்குவது நியாயமல்லவென்றும் சிலர் கூறுவர். ஆனால் விநாயகரின் தோற்றத்திற்குத் தக்க கார ணங்கள் உள.

விநாயகன் என்றால் நாயகன் இல்லாதவன் என்று பொருள். கணேசன்தான் எல்லாவற்றிற்கும் தலைவன். 'ஓம் அனீசுவராயநம:'

என்ற மந்திரத்தின் கருத்தென்ன? சிவ கணங்கட்கெல்லாம் தலைவனன்றோ கணபதி.

கணபதியின் உருவம்:- யானை முகம், ஒற்றைக் கொம்பு, குடவயிறு, இடது கையில் மோதகம், பெருச்சாழி வாகனம், ஐங்கரம் முதலியன உடைய தோற்றம்.

பாரத கண்டத்தில் எல்லாக் கோயில்களிலும் விநாயகரை வணங்குகின்றனர். புலவர்கள் நூலாரம்பத்தில் கணபதி வணக்கம் கூறுவர். கோயில்களில் முதற்பூசை பிள்ளையாருக்குத்தான். தேவர்கள் முதலியோர் முதலில் கணபதி பூசை செய்வர். யார் எக்காரியம் செய்தாலும் முதலில் கணபதியைப் பூஜிக்கவில்லையானால் அதற்கிடையூறு செய்ய சிவபெருமான் கட்டளையிட்டதாகக் காந்தபுராணத்தில் கூறப்படுகின்றது. இந்த மூர்த்திக்கு ஒரு உபநிடதமும் ஓர் உபபுராணமும் உண்டு. விநாயகர் கையில் இருக்கும் பாசமும் அங்குசமும் யானைப் பாகன் கையிலுள்ளவை. இங்கு யானையின் கையிலிருக்கின்றன. இந்த யானையை நடாத்துவோரில்லை. என்னை? யானை முகனே யானைப்பாகனாக பாசாங்குசம் கையில் ஏந்தி உயிர்களாகும் யானைகளை நடாத்துகின்றான்.

பண்டைக்காலத்து ஓம் என்று வேதம் ஓதத் தொடங்குவார்கள். இப்போது அரி ஓம் என்று தொடங்குவர். உலகம் ஓம் எனும் பிரணவத்தினின்றும் விரிந்ததென உபநிடதம் கூறும். தமிழில் "ஓம்" என்னும் எழுத்தின் வடிவம் கணபதியின் உருவமாம்.

"ஓம் இத்யேகாக்ஷரம் பிரம்ம வஸந்தே யோகின:"

"பிரணவம் ஸர்வ வர்ணானும் ஜீவபீஜமுதாஹிருதம்"

"இறை சக்தி பாசம் எழிலார் மலமாயைஉற நிற்கும் ஓங்காரத்துள்"

எல்லா மந்திரங்களுக்கும் ஆதாரம் பிரணவ மந்திரமாம். எந்த மந்திரம் உச்சரித்தாலும் பிரணவம் சேர்த்தே சொல்லவேண்டும். இந்துக்கள் மட்டுமலல கிருஸ்தவர், மகமதியர்களும் "ஆமேன்" மொழி சேர்த்து தங்கள் வேத புஸ்தகம் படிப்பர். இதனால் ஓம் நாதத்தின் பெருமையை உணரலாம்.



தெற்கூர் மெய்நின்றவிநாயகர் கோயில்.

*Photo by N. C. Kuttalam.*

கடவுள் முதலிலளித்தது பிரணவ நாதமும், அதன் பொருளான கணபதியுமாகும். ஓம் எனும் தமிழ் எழுத்துக் கணபதி விம்பம் போலிருக்கின்றது. அ+உ+ம்=ஓம். சிவனே கணபதி.

பெரிய வயிறு எல்லா அண்டங்களும் தன்னுள்ளடக்கம் என்பதைக் குறிக்கின்றது. வயிறும், அண்டமும் உருண்டை வடிவமன்றோ? கையில் மோதகம் வைத்திருப்பதால் இன்பமளிப்பவன் என்பதைச் சுட்டுகின்றது. மோதகம் உருண்டை வடிவமுள்ளது. பக்தர்களின் பக்தியால் மோதகம் தனக்கு விருப்பமென்பது கருத்து. யானை முகம் மிருகங்களும் தானெனன்றுணர்த்தும். கால்கள் மனிதர்களைப்போல் இருப்பதால் மனிதனும் அவனே என்றறிக. முக்கண் ஐங்கரம் இவையால் தேவனென்றும், பிரணவமானதனால் எல்லா வேத மந்திரங்களும் கணபதியே என்றுமறிக. எலி வாகனம் அணுவிலும் அணு அவன் என்று காட்டுகின்றது.

தமிழ் மொழியில் "உ" இந்த அடையாளத்தைப் பிள்ளையார் சுழியென்பர். இது நாதவிந்துக்கள் சேர்ந்ததாகும்.

பிந்து "O" நாதம் "—" இவையிரண்டும் சேர்ந்துதான் கணபதிக்குறி. மனித சிருட்டியும் இவ்வாறுதான். பெண்கரு அணுக்கள் கடுகினும் மிகச்சிறிய வட்டப்புள்ளி போன்றும் ஆணின் கருவணுக்கள் "—" நீண்ட வடிவத்திலுமிருக்கும். இரு அணுக்களும் சேரும்போது கர்ப்பமுண்டாகும். அதுவே நாத விந்து வடிவம்: "உ" பிள்ளையார் சுழி. சைவம் இயற்கைக்கு எவ்வளவு ஒத்ததாயிருக்கின்றது. இவ்வாறு உலகப்படைப்பின் ஆரம்பத்தைக் காட்டும் நாத விந்துவடிவமான பிரணவ மூர்த்தியின் மகிமையை அறிக.

விநாயகர் முன்னிலையில் தலையில் குட்டித் தோப்புக்கரணம் போடுவதன் நோக்கம் என்ன? கஜ முகாசுரன் கடவுளினிடம் வரம்பெற்ற பின் தேவர்களைத் துன்புறுத்தினான். தேவர்கள் அவனைக் கண்டவுடன் தலையில் குட்டித் தோப்புக்கரணம் போடவேண்டுமென்று கட்டளை பிறந்தது. இந்த அவமானம் பொறுக்க முடியாமல் அவர்கள் பரமசிவனைப் பிரார்த்தித்தபொழுது தேவியி

னருளால் விநாயகன் பிரணவ வடிவனாய்த் தோன்றினன். ஆனால் தாயின் வயிற்றிற் பிறக்கவில்லை. உடன் சிவபிரான் அடியிற்கூறும் வரங்கள் நல்கியனுக்கிரகித்தார்.

1. எத்தொழிலும் செய்யுமுன் உன்னை வணங்குவோரை யெல்லாம் அவர்களது எண்ணம் ஈடேறுமாறு அருள்புரிக.

2. உன்னை வணங்காதவர்களது கருமங்களுக்கு இடையூறு செய்க.

3. தேவர்கட்கெல்லாம் தலைவனாயிருப்பாயாக.

4. கஜமுகனைக்கொன்று தேவர்கள் துயரம் தீர்க்க.

தேவர்களாலும் மனிதர்களாலும் விலங்குகளாலும் கொல்ல முடியாதவாறு வரம்பெற்ற அசுரனை, முற்கூறிய மூன்று உருவமும் பெற்றும் கொல்லமுடியாது. ஆயுதங்களாலும் சாகான். ஆதலால் தனது ஒற்றைக்கொம்பை முறித்தெடுத்து அவனைக் குத்திக் கொன்றார். மீண்டும் பெருச்சாழியுருவத்தில் வந்தெதிர்த்தான். அதையும் அடக்கி வாகனமாக்கினார். அவன் அகந்தையை அகழ்ந்தான். இதனைக்கண்டு தேவர்கள் மகிழ்ந்து துட்டனான அரசனைக்கண்டு அஞ்சி வணங்கிய மாதிரி தம்மைக்காத்தருளிய ஆண்டவன் திருமுன் தோப்புக்கரணமிட்டு வணங்கினர்.

அன்றுமுதல் விக்கினேசர் முன்னிலையில் தலையில் குட்டி வணங்கி வந்தனர்.

வல்லபை என்றொரு சக்தியுண்டு. (மூன்று தேவியர் உளர் என்பர்)

கணபதிக்கு யானைத்தலை, தேவ உடம்பு, பூதக்கால், இவை மூன்றும சேர்ந்த உருவம் உளது. பிள்ளையாரின் நிறம் சிவப்பு. இதனால் சிவப்பாடைகள், செம்பூக்கள் இவை மிக்க விருப்பம். ஐங்கரங்களில் மோதகம் வைத்த கரம் தனக்கும், தண்ணீரெடுத்து தாய் தந்தையரைப் பூசிக்க தும்பிக்கையும், பாசாங்குசம் கொண்ட இரு கைகளும் மனிதர்கட்காகவும், தேவர்களைக் காப்பாற்ற

ஒற்றைக்கொம்புள்ள காமும் என்று கச்சியப்பர் தணிகாசல புரா ணத்தில் கூறுகின்றார். பிரமாண்ட சொரூபியான தெய்வம் ஒரு சிறிய எலியை ஊர்தியாக்கியது அணுவிலும் அணு, பெரியதிலும் பெரியன் என்ற தத்துவத்தை விளக்குகின்றது.

## தேங்காய் உடைத்தல்.

நாம்செய்த பாவங்கள் உருண்டு திரண்டு நிற்பதாய்த் தேங்காயை எண்ணி அது கணபதி வணக்கத்தால் உடைந்துவிட்டதாய்க் கருதலாம். தேங்காய் உடைத்து மேல் பாவம் செய்யாதிருக்கவே இவ்வேற்பாடு வந்தது. தேங்காயை எறிந்து பலர்க்குமளித்தல் புண் ணியமுமாகும். தேங்காயில் ரேடியம் என்ற விலையுயர்ந்த பொருள் இருப்பதாய் ஓர் ஜர்மன்பண்டிதன் கூறுகின்றான். இது தங்கத்தை விட விலையுள்ளது. அதனால்தான் தேவர்கட்கு தேங்காயுடைத்து நிவேதிக்க விதித்தனர்.

"தடக்கை ஐந்துடைத் தலைவா போற்றி
இடுக்கண் தீர்த்தருள் இறைவா போற்றி"

இவ்வூரில் நல்லவிநாயகர், பொய்கைவிநாயகர், மெய் நின்ற விநாயகர், குலசேகர விநாயகர், ஆபத்துக்காத்த விநாயகர் கைக் கொண்ட விநாயகர் முதலிய கோயில்கள் பலவுள. அங்குதரிசிப்போர்க்கும் இது பயன்படும்.

# அத்தியாயம் 20

## சாஸ்தா.

பெரிய கோயிலில் முக்கிய மூர்த்தி சாஸ்தா. சாஸ்தாவென்றால் சாஸனை அல்லது கட்டளை நல்குவோர் என்பது பொருள். சாத்தான் கோயில்கள் பல மலையோரங்களிற் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் புத்தமதக்கோயில்களென ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். புத்தமதப்பிரசாரத்திற்கு முன்னரே சாஸ்தா உள் ளதாகத் தெளிவுகள் உள.

முன்னாளில் தேவாசுரர்கள் ஒன்றுசேர்ந்து பாலாழியில் அமுதம் கடைந்தனர். அப்பொழுது அமிர்தம் தோன்றிற்று. நாராயணன் அழகிய மோகினியெனும் பெண்வேடம் புனைந்து அமுதம் விளம்பினர். நல்லொழுக்கம் மிக்க தேவர்கள் மோகினிப் பெண்ணைப்பாராமல் அமிர்தத்தையுண்டனர். ஆனால் அசுரர்களோ அமுதம் விளம்பும் ஜகன் மோகினியின் அழகைப்பார்த்து மயங்கி அவள் நயனமிர்தம் மட்டும் உண்டதால் அமுதம் பெறவில்லை. அரன் அரியாகிய மோகினியோடு சேர்ந்ததால அரிகரபுத்திரனை சாத்தா உற்பத்தியாயினர். ஈசுவரனது சேர்ப்பு மனிதரைப்போன்றல்ல வென்றறிக.

சாத்தாவினவதாரம் மிக்க விசேடமானது. சைவம், வைணவம் சாக்தேயம் மூன்றும் கலந்தது. சாத்தா எல்லா சக்திகளும் சேர்ந்து உலக ரட்சையின் பொருட்டவதரித்தனர். தேவர்களின் குலதெய்வம். பிராமணர்களும் மற்றவர்களும் சாஸ்தாவைக் குல தெய்வமாக வணங்குகின்றனர். நம் நாட்டில் எல்லோருக்கும் குலதெய்வமாக ஒவ்வொரு சாத்தாங்கோயில் உண்டு. உருத்திரர் கூட்டத்தலைவர். அளவற்ற பூதப்படைகளுக்குத் தலைவராய் உருத்திரலோகத்திற்கதிபதியாவர். புவன சராசரங்களை இராப் பகல் காப்பர்.

தமிழ்மொழியிலுள்ள பழைய சங்க நூற்களில் ஐயனர் (சாத்தா) வணக்கத்தைப்பற்றிக் கூறப்படுகின்றது. சூரபன்மனின் கொடுமைக்கஞ்சின தேவேந்திரன் ஐயனைத்தியானித்தான். ஐயனர் தோன்றிச் சிவபிரானைத் தரிசித்து வருமளவும் "இந்திராணியை யாம் காப்போம் தனித்து விட்டேகுக" என்றார். உடனே தன் படைத்தலைவனுகிய மகா காளனையழைத்து இந்திராணியைக் காப்பாற்றக் கட்டளையிட்டனர். அவ்வாறே பெருவீரனுகிய மகா காளன் சூரபன்மன்தங்கை அஜோமுகி முதலிய அசுரப்பெண்க ளினின்றும் இந்திராணியைக் காப்பாற்றினர். அம்மகாகாளன்தான் நம் கோயில் வெளியில் பிரதிட்டித்திருக்கும் தெய்வம் மாடன் தம்பிரானுயிருக்கலாம். எல்லாச் சாத்தான்கோயில்களிலும் மாடன் தம்பிரான் (மகாகாளன்) உண்டு. ஆடு, கோழி முதலியன பலி யில்லை. வீரக்கோலம் காணப்படுகிறது. இச்சந்நிதியினின்றும்

பூசாரி அனுக்கிரகம் பெற்றபின்னரே நம்பிரான் விளையாட்டில் குதிரைவாகனம் புறப்படவேண்டும். இங்கு பலருக்கும் அனுக் கிரகம் எளிதிற் கிடைத்ததுண்டு. முன்னாளிற் கோயில்நகைகளைத் திருடியவனை இத்தெய்வம் காட்டிக்கொடுத்துவிட்டது. மாடன்தம்பி ரானுக்கு வடைமாலை சிறந்தவழிபாடாகும். கொடிமரம் வந்தபோது கூட வந்த தெய்வமென்பர்.

பரக்கோடியன்கண்ட ஐயனுக்குப் பங்குனி மாதத்தில் கொடி யேற்றும் வேளையில் மாடன்தம்பிரான் ஆவேசமுற்றதாம். மை போட்டுப்பார்த்து நிலையமிட்டார்களாம்.

"கொடியேற்றும் வேளையிலே கொடிப்படலை யறுக்குதப்பா
திமிலைகளை யுடைக்குதப்பா திருதாளி பண்ணுதப்பா"
(விற்பாட்டு)

இக்கலியுகத்தில் சாத்தா அனுக்கிரகமூர்த்தியே. புட்கலை யென்றும், பூரணையென்றும் இரு தேவிமாருளர். கேரளத்தில் சாத்தன்கோயில்கள் பலவுள. பங்குனிமாதம் பௌர்ணமி உத்தர நாளில் அவர் பிறந்ததால் எல்லோரும் தத்தம் கோயில்களில் சாத்தாப்பிரீதி நடாத்துவர். பங்குனி உத்தரம் சாஸ்தாவின் பிறந்தநாளாகும். மலைநாட்டில் ஐந்து முக்கிய சாத்தன்கோயில்கள் உள்ளன. அவை:— பாணதீர்த்தம், குளத்துப்புழை, அச்சன் கோயில், ஆரியங்காவு, சபரிமலை. சபரிமலையின் பெருமையைப் பற்றி அதிகம் கூறவேண்டுவதில்லை. ஆண்டுதோறும் பாமர பண்டிதரான லட்சக்கணக்கான பக்தர்கள் ஐயப்பன்மார்களாக விரத அனுட்டானத்துடன் செல்வதைப்பார்க்கவேண்டிய ஒரு காட்சியே. அதற்குச் செல்லவேண்டியதும் இந்துக்களின் முக்கிய கடமை யாகும். இஃதொன்றே ஐயனார் மகிமைக்குத்தக்க சான்றாகும்.

காந்தமலையும் முக்கிய தலமென்பர். அது இருக்குமிடம் தெரியவில்லை. ஆரைவாய்மொழிச் சாஸ்தாவும் மிக்க விசேட முடையவராகும். மக்கள் பலரும் தொழுது அருள் பெற்றிருக் கின்றனர்.

நம்பிரான் விளையாட்டு:— சாஸ்தாவின் வாகனம் குதிரை. வேட்டைக்குப் புறப்படல் துட்டநிக்கிரகமும் சிட்டபரிபாலனமு மாகும். உலகாட்சை ஐந்தொழிலில் ஒன்றன்றோ? அதனையே சாஸ்தாவும் செய்கின்றனர். இங்கு நடைபெறுவதுபோல் செவ் வையாக வேறெங்கும் நடைபெறாத முக்கிய திருநாளாகும். பலவூர் மக்களும் வருவர். குதிரை சுற்றுவதும், சீர்பாதம் தாங்கிகள் மெய்மறந்து பக்தியுடன் சுவாமியையும், வாகனத்தையும் தூக்கி ஓடுவதும் அவ்வோட்டத்திற்கேற்ப பக்க வாத்தியங்களும் கண் கொள்ளாக் காட்சியாம்.

இறைவனது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், முதலிய ஐந்தொழிற்களையும் கோயில்களிலே பத்து நாள் திருவிழாவும் நன்குணர்த்துகின்றது. உத்ஸவம் என்றால் பெரிய படைத்தலாதி காரியங்களையுணர்த்தும். வாகனாதி உத் ஸவங்கள் காத்தலைக்குறிக்கும். குதிரை வாகனத்தில் எழுந்தருள் வது பெரிய தத்துவத்தை விளக்கும். இது லயக்கிரம சங்காரக் கோலம். அறம் பொருளின்பம் வீடாய் நான்கு கால்களும், ஞான காண்டம், கன்மகாண்டம் எனுமிரு காதுகளும், விடயாதீதமான பரஞானம் அபர ஞானமென்ற கண்களும், விதியாகிய முகமும் விலக்காகியவாலும், ஆகமங்களென்னும் நகைகளும், ஆகமங்களின் மந்திரங்களெனும் பாதசரமும், பிரணவக்கடி நாணும், அண்ட கோடிகள் சேர்ந்த முதுகும், உபநிடத தத்துவங்களாகிய ஜீனியும் உள்ள வேதக்குதிரையில் ஈசன் சவாரி செய்கிறார்.

"ஆரியனல்லன் குதிரை யிரண்டுள
வீசிப்பிடிக்கும் விரகறிவாரிலை
கூரியநாதன் குருவினருள் பெற்றால்
வாரிப்பிடிக்க வசப்படுந்தானே" (திருமந்திரம்)

வாசி யேறுதலென்றால் (குதிரை யேறுதல்) கீழும் மேலும் செல்லும் வாயுக்களை அடக்குதலாம். சுழி முனையில் பிராணவாயு வைச் செலுத்தவேண்டும். மனதை விடயங்களினின்றும் மாற்ற வேண்டும். பிராணாயாமம் பழகுதலின் கருத்தும் இதுவே.

"கட்டக்கபிறெடுத்துக் கலைநாலுஞ் சேர்த்திறுக்கி
அட்டாங்க யோக மெலா மாண்டிருந்தாலாகாதோ"

குதிரை வாகனத்தின் நாற்புறங்களிலும் நான்கு வீரர்களையும் காணலாம். தூண்டாசுரன் விரலினுற் சுட்டினுல் அதில் பட்டவர் களின் தலை வெடிக்கவேண்டுமென்று கடவுளை நோக்கித் தவம் செய் தான். பக்தவலையிற் படும் பரமசிவன், வேண்டியவரமும் அவ னுக்கு நல்கினுர். நினைத்த அளவில் எல்லோரையும் கொல்லும் ஆயுதம் பெற்ற அசுரன் பயிற்சிக்காகப் பரமேசுவரன் தலையை நோக்கிச் சுட்டத் தலைப்பட்டான். ஈசுவரன் ஓட்டம் பிடித்தார். இவ்வாறு சாவுக்கஞ்சி யோடுவது கடவுளுக்கடுக்குமோ வென்றை யுறவேண்டாம். ஈசுவரன் சர்வ சராசர சொரூபியல்லவா? அந்தத் தெய்வத்தைக் குறிவைத்தால் சர்வ சராசர நாசமுண்டாகுமென் றுன்னிக் கருணையால் பிராணிகளின் ரட்சையைப் பொறுத்தோடுவ தாய் நடித்தார். அசுரனும் தொடர்ந்தான். இவனைக்கொல்ல முற் கூறிய மோகினியை எண்ணினுர். நாராயண மோகினியின் கண் கவர் வனப்பைக்கண்டு அசுரன் காமாந்தகனுனன். அசுரனிடம் தான் இசையவேண்டுமாகுல் அவன் தலையில் கைவைத்துச் சத்தி யம் செய்யவேண்டுமென்று மோகினிகூறினுள். பெண்ணுசையால் அசுரன் அவ்வாறு செய்யவே தலைவெடித்து இறந்தான். இந்த ரட்சா மோகினியினின்று மன்ரே சாக்ஷாத் சாஸ்தா அவதரித்தார்.

"நின்றுளைக் கண்டானும் நிலைகுலைந்து தடுமாறி
ஒன்றுகுமவிடம் விட்டு உலகமெலாம் நிறைந்துகொண்டு
மன்ருடும் செஞ்சடையான் மனத்துயரமவள் மேலே
எறும்பு கடையானை முதலெவ்வுயிர்க்கு மீறுன
கடம் பெறவே படைக்கவுனைச் சிவனுருமதறிந்தார்"

(விற்பாட்டு)

தர்ம சாஸ்தா தூண்டாசுரனுல் உலகில் அழிந்துபோன தனுர் வேதத்தையும், ஆயுதப் பயிற்சியையும் மீண்டும் நிலைநாட்டினுர். யானைவித்தை, குதிரைவித்தை, படைக்கலப் பயிற்சி இவைகளை யெல்லாம் திரும்பவும் நிலைபெறச் செய்தார். தூண்டாசுரனது எளிதான உபாயத்தால் எளிதில் உலகைவென்று விடலாமென்பது இயலாது. மனிதனுக்கு வீரமும், போர்த்திறமையும் வேண்டு மென்பதான தத்துவங்களை உலகிற் குணர்த்துவதற்கெனவே சாஸ் தாவைப் படைவீரன் வேடத்தில் அரசநீதிபாலிக்க அரிஹரபுத்திர

னுயவதரிப்பித்திருக்கின்றனர். இக்காரணங்களால் யானையேற்றம், குதிரையேற்றம் முதலியன கூறும் சாத்திரங்களில் சாஸ்தாவைக் குருவாகக் கூறப்படுகின்றது. பாரதீய மக்களனைவரும் ஐயனை (சாஸ்தாவை) அவசியம் வணங்கல் வேண்டும். ஆயுதாப்பியாசம் பழகுதலும் நன்றே.

"அச்வம் ஸமாருஹ்யம் வனேசரந்தம்
கோதண்ட நாராசகராம் தராய்யாம்
சாஸ்தாரம் அத்யத்புத பூதநாதம்
த்யா யேத் ஸுபூஜ்யம் ஸுகுமாரரூபம்"

சாஸ்தாவின் உற்பத்தியில் பரமேஸ்வரன் மோகினியைக் கண்டு மோகிக்கலாமா எனும் கேள்வி கேட்கலாம். மோகினி உலகைக் காப்பாற்றுபவள். இவள் உலகைக் காப்பாற்றும் திருமாலின் அவதாரமன்றோ? சிவபிரானும் உலக பாலனமல்லாது மற்றொன்றினும் பற்றில்லாதவர். தேவர்களின் தவத்திற்கிரங்கி மகாவிஷ்ணு இந்த உருவங்கொண்டார். அந்த நாராயண மோகினியில் மன்மதனை யெரித்தவனும், அமிர்தம் கடைந்த காலத்தில் உண்டான காளகூட விஷத்தைப் பிறர்க்களிக்காமற் குடித்தவனும், பாலாழியினுற்பவித்த அரிய அமுதத்தை அரிஹரர்கள் மோகிக்காமல் அதற்காகத் தவம் செய்தவர்களுக்குக் கொடுத்து உலகபாலனம் செய்தவனுமாகிய சிவபெருமான் தனது சச்சிதானந்த சொரூப சக்தியைத் தோற்றுவித்து தருமமூர்த்தியான அரிஹரபுத்திரனை யவதரிப்பித்தார்.

அமிர்தம் பெற்றாலும் ஒருக்கால் தேவர்களுக்குத் துன்பம் வரலாம். அசுரர்களும் அமிர்தம்பெற்று அமர்த்தியராகித் தேவர்களைத் துன்புறுத்தலாம். அத்தகைய துன்பம் வாராமலிருக்க உலக பாலன கர்த்தாவான சாஸ்தாவை நல்கினர். இத்தெய்வம் பூவுலகிற்கென்றல்ல எல்லாவுலகங்களுக்கும் அடைக்கல மளிப்பவரென்று புராணங்கள் விதந்து கூறுகின்றன. இவ்வாறு அரியுமரனும் சேர்ந்துதித்த சாஸ்தாவைச் சாதாரண ஆணும்பெண்ணும் சேர்ந்து பெற்றதுபோல் நினைக்கலாகாது.

"சாஸ்தாரம் சர்வபூதேசம்
சிவபக்தம் சிவாத்மகம்
ஸ்துத்வா தல்பமொப் ஞேதி
ஸத்யமேதல் கலெளயுகே"

"மேல்வீடு கண்டவன் பாணியடி விண்ணில்
விளக்கில் நின்றவன் வாணியடி
தாய்வீடு கண்டவன் ஞானியடி பரி
தாண்டிக் கொண்டவன் பட்டாணியடி"
(குதிரை வாகனத்தில் நான்கு வீரர்பாட்டு.)

"வாலைக்கும்மி".

## சாத்தா.

---

1. "இந்த வண்ணமிருக்கு முராரியும்
அந்திவண்ணத் தமலனுமாகியே
முந்துகூடி முயங்கிய வெல்லையில்
வந்தனன் எமைவாழ்விக் குமையனே.

2. மைக்கருங் கடன்மேனியும் வானுலாஞ்
செக்கர் வேணியும் செண்டுறு கையுமா
யுக்கிரத்துடனோர் மகன் சேர்தலு
முக்கணெணந்தை முயக்கினை நீங்கினுன்.

3. அத்தருந்திரு மைந்தற் கரிகர
புத்திரன்னெனு நாமம் புனைந்துபின்
ஞெத்த பான்மையுருத்திரர் தம்மொடும்
வைத்துமிக்க வரம்பல நல்கியே.

4. புவனமீந்து புவனத் திறைமெயன
வவனை நல்கியமாரு மாதவ
ரெவரு மேத்திடு மேற்றமு நல்கினுன்
சிவனதின்னருள் செப்புதற் பாலதோ.

5. அங்கண்மே வியரிகா புத்திரன்
சங்கையிற் பெருஞ்சாரதர் தம்மொடு
எங்குமாகி யிருந் தெவ்வு லகையும்
கங்குலும் பகலெல்லையுங் காப்பனல்.

6. மண்ணகத்தரும் வானவரும் மல
ரண்ண லுந்தின மர்ச்சிக்கு நீர்மையான்
கண்ணனும் புகழப்படு காட்சியா
னெண்ணி னங்கவனுக் கெதிரில்லையே."

கந்தபுராணம்.

மானுடர், தேவர், இந்திரன், இந்திராணி, இவர்கள் துயர் தீர்த்தார்.

## யானைவாகனம்.

காருடல் வெய்ய களிற்றிடை யாகிப்
பாரிடர் எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரண மூர்பவன் முன்னுறவந்தான்.

கந்த புராணம்.

## மாடன் தம்பிரான்.

சாத்தன தருளினிற்கும் தானையந்தலைவன் வானோர்
வேத்தவையான வெல்லாம் வியத்தருவீரனுந்தி
பூத்தவன் முதலோர் யாரும் புகழவெவ்விடத்தை யுண்டு
காத்தவனுமம் பெற்றோன் காலற்கும் காலன் போல்வான்.

கந்த புராணம்.

## அத்தியாயம் 21.

# முருகன்.

சூரபன்மன் கொடுமைகள் பொறுக்கமுடியாமல் தேவர்கள் கைலாயத்தில் சிவபெருமானிடம் முறையிட்டு நிந்திருவடிக் கொப்பான ஓர் மகவைத் தந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தனர். உடன் கண்ணுதற் பெருமான் ஐந்துமுகங்களோடு அதோ முகமும் கொண்டருளி ஆறுமுகங்களிலும் நெற்றிக்கண்களினின்றும் ஆறு தீப்பொறிகளைச் சிந்தினர். அவை சரவணப் பொய்கையிற் சார்ந்த வுடன் ஆறு குழந்தைகளாயிற்று. இதனைக்கண்டு அக்குழந்தைகளை உமாதேவி ஒன்றுசேர்த்து எடுத்தபோது ஆறுமுகங்களும், இருகால்களும் உள்ள ஓர் உருவமாயிற்று. ஸ்கந்தன் என்றால் ஒன்றுசேர்க்கப்பட்டவன் என்பது பொருள்.

முருகன் திருவவதாரம் கந்தபுராணத்தில் விரிவாய்க் கூறப்படுகின்றது. ஐமுகச் சிவனே அறுமுகத் தெய்வமானான். ஆனால், நம்மைப்போல் தாய் வயற்றிற் பிறக்கவில்லை. கடவுள் தோற்றத்தின் அற்புதத்தைப் பாருங்கள்!

"பெம்மான் முருகன் பிறவானிறவான்" எனவும்,
"அருவமு முருவுமாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக் [டே
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்கொண்
ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகமுய்ய"

ஞானபாகம் மிகுதியானபொழுது ஈசனைச் சிவனென்றும், கிரியா பாகம் மிகுதியானபொழுது சக்தியென்றும் கூறுப. அறிவிற்கா தாரமான எழுத்தினொலி தோன்றக் காரணமாகிப் பிரணவ உருவுடைய மூத்தமகனைச் சிவாம்சமென்றும், இளையகுமாரனை சக்தியம்சமென்றும் கூறுவர்.

அறுமுகப்பெருமானை மானிடத் தொகுதியில் சேர்த்துரைப் போர் ஆறுதலைகள் இயற்கைக்கு மாறென்று மலைவர். (வழக் குரைப்பர்) இவ்வுலகில் இருதலை, முத்தலை, நான்குகால்கள் உள்ள பிராணிகள் சுருக்கமாயாவது பிறக்கின்றன. ஆனால், அவை பலக் குறைவினால் விரைவில் இறந்துபடுகின்றன. இங்கு தெய்வ சக்தி யானதால் பலமாய் ஜீவித்திருப்பதாய் நம்பலாம். தயமுகனும் இவ் வாறுதான்.

வேல் ஞான சக்தியும், வள்ளிநாயகி இச்சாசக்தியும், தேவ சேனைக் கிரியாசக்தியும் ஆகும். மயில் தனது இச்சைக் கிரியை ஞானசக்திகளை முருகனது இச்சைக் கிரியை ஞானசக்தி வழி நிறுத்தி பேரின்பம் அனுபவித்து வீடடைந்தது. தமிழ் மக்கள் "வேலும் மயிலும் துணை" யென்பதில் வேல் இறையறி வையும், மயில் உயிர் அறிவையும் உணர்த்தும். ஈசனது அருட்சக் தியின் அவதாரமே முருகன் ஆகும்.

"கல்லகங்குடைந்த செவ்வேள் கந்தனோர் தருவதாகி
வல்லியற் கிரியை ஞானவல்லியின் கிளையாய்ச் சூழ
பல்லுயிர்க் கருளைப்பூத்து பவனெறி காய்த்திட்டன்பர்
எல்லவர் தமக்கு முத்தி யுதவுமென்றும்"

(கந்த புராணம்.)

வள்ளிநாயகியைக் கிரியையாகவும், தேவசேனையை ஞானமாகவும், கூறுதல் காண்க. வள்ளி தேவசேனையோடும் மயில்வாகனத்துட னும் தனது பன்னிருகைகளில் ஓர் கையில் வேலேந்தி அறுமுகம் கொண்டதற்கு நூற்களில் பல காரணங்கள் கூறுவர். பிரணவத் துடன் சேர்ந்த ஐந்தெழுத்து மந்திரத்தின் குறிப்பென்பர். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு மேல், கீழ் ஆகிய ஆறிலும் பரந்து நிற்கும் சிதாகாச வடிவத்தை அறிவிக்கின்ற தென்பர். ஆறுமத உண்மைகளையும் உணர்த்துமென்பர். இவ்வாறு பல நியா யங்கள் கூறுவர்.

நக்கீர தேவர் இயற்றிய திருமுருகாற்றுப் படையெனும் நூலின் கருத்து வருமாறு.

ஒருமுகம் இருள் நிறைந்த உலகம் குற்றமில்லாமல் ஒளி பெறும் பொருட்டு பல கிரணங்களையும் தோன்றச்செய்தது. ஒரு முகம் பக்தர்கள் வணங்கினால் அவர்களது குற்றம் நீங்க அவர்களின் இதப்படி மகிழ்ந்து, வேண்டும் வரங்களை அளிக்கும். மூன்றாவது முகம்மந்திர சகிதமான வேதத்திற் கூறியவாறு முறை தவறாமல் அந்தணர்களின் வேள்விகளை எண்ணுகின்றது. நாலாவது முகம் வேதாகமங்களில் மறைந்துகிடக்கும் தத்துவங்களை முனிவர்கள் மகிழுமாறு ஆராய்ந்து போதிப்பித்து சந்திரனைப்போல் எல்லாத் திசைகளையும் விளங்கச்செய்யும். ஐந்தாம் முகம் திருவுள்ளத்தில் தோன்றும். சமத்துவம் நீக்கிக் கோபத்துடன் அசுரர்களைக்கொன்று போர்க்கள வேள்வியைவேட்கும். ஆறாவதுமுகம் சுந்தரியும் வேடப் பெண்ணுமான வள்ளிநாயகியோடிருந்து இல்லறத்தை நடத்து கின்றது. இதனைக்கூறும் திருமுருகாற்றுப் படையெனும் நூல் தமிழில் முக்கியமான பத்துப்பாட்டில் ஒன்றாகும். இதற்குரை யெழுதிய நச்சினார்க்கினியர் அடியில் வருமாறு எழுதுகிறார். முரு கன் ஒரு கரத்தால் தேவர்களையும் முனிவர்களையும் காப்பாற்று கிறான். அதற்கொத்த ஒருகை மறுபக்கம் இருக்கின்றது. ஓர் கை அங்குசம் தாங்குகிறது. அதற் கொத்த ஓர் கை ஆடை யணிந்து மருங்கு கிடக்கிறது. ஐந்தும், ஆறும் கைகள் பரிசோடு வேலைச் சுற்றுகின்றன. அடுத்த கைகள் முனி புங்கவர்கட்கு மௌனப்பொருளை உணர்த்த மார்போடு சேர்ந்து கிடக்கின்றன. ஒன்பதாவது கை வளைகளுடன் மேலே கறங்கி போர்க்களத்தை விரும்பும் முத்திரை நல்கின்றது. இதற்கொத்த கைமணியோ சையை முழக்கின்றது. பதினோராவது கை மழைபெய்விக்கிறது. கடைசிக் கரம் தெய்வப் பெண்களுக்கு மணமாலை சூட்டுகின்றது.

பன்னிருகரங்களும், பன்னிருமாதங்களும், பன்னிருராசி களுமாம்.

"ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே

ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்,
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே"

ஆறுமுகமான தத்துவம் எனக்குத் தெரியாதென்றும் நீயே அருள வேண்டுமென்றும் அருணகிரிநாதர் திருப்புகழில் கூறுகின்றார். ஒவ்வொரு முகத்தினுடையவும் தொழிலுக்கேற்றவாறு கைகளும் வேலைசெய்கின்றன. ஆறுமுகங்களும் திரு, புகழ், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், வீரியம் முதலிய ஆறு குணங்களைக் குறிக்குமென்பர்.

"ஆதியோடந்தம் ஆகிய நலன்கள்
ஆறுமுகமென்று அறியேனே" (திருப்புகழ்)

சிவனும், சக்தியும் சேரும் சுத்தப்பிரம்ம நிலை சுப்பிரமண்யன் என்பதிலும் ஆறுமுக உண்மையுண்டு. சிவபிரானுக்கு ஈசானம், தத்புருஷம் அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற ஐந்தும், தேவியின் ஒருமுகமும் சேர்த்து முருகனுக்கு ஆறுமுகமாயிற்று.

"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஆர்வலரேத்த அமர்ந்தினிதொழுகி காதலினு வந்து வரங்கொடுத்தன்றே" முதலியன. (திருமுருகாற்றுப்படை)

சத்தான சிவனும், சித்தான சக்தியும் சேரும்போது ஆனந்தமான குமரன் தோன்றவேண்டுமன்றோ? தாய், தந்தை, சேய் மூவரும் சச்சிதானந்த மூர்த்திகள். சத்து என்றுமுளது, சித்துக, அறிவு, ஆனந்தம், மோட்சம், இவ்வுண்மையை சோமாஸ்கந்த மூர்த்தி உலகினருக்குணர்த்துவர்.

நீளம், அகலம், கனம் இவை ஒருபொருளில் வெவ்வேறு பிரிந்திருக்கவியலா. அவைபோல் இம்மூர்த்திகள் மூவரும் சொல்லளவில் வேறாகத் தோன்றினும் எல்லாம் ஒன்றுதான். ஆனந்தமான இறைவன்தான் முருகன். அவன் என்றும் இளையவனும் அழகனும் ஆவன்.

"சச்சிதானந்த வுருவாண்டி—பர
தத்பர போகம் தருவாண்டி

உச்சி தாழன்பர்க் குறவாண்டி—அந்த
உத்தம தேவனைப் பாடுங்கடி
ஆனந்த மானவ முதனடி—பர
மானந்த நாட்டிற் கதியனடி
தானந்த மில்லாச் சதுரனடி—சிவ
சண்முக நல்குரு சாமியடி" (இராமலிங்கசுவாமிகள்)

சூரசங்காரம்:— சூரன் 1008 அண்டங்களையும் 108 யுக காலம் ஆண்டுவந்தான். தேவர்களைப் பலவாறு துன்புறுத்தினன். ஐயந்தன் முதலிய தேவர்களைச் சிறையிலிட்டான். அசுரர்களின் உணவுக்குத்தேவர்கள் மீன் சுமந்துகொண்டு போகவேண்டும். இத்தகைய துன்பங்கள் தேவர்கள் அனுபவித்தனர். வானவர்க்கு இத்துன்பங்கள் முன்னைய வினைப்பயனே காரணமாம். அதாவது தக்கன் வேள்வியில் பங்குபெற்று சிவபெருமானைக் குறை கூறியதைக் கேட்டிருந்ததால் நந்திதேவன் சபித்தார். அதனால் இங்ஙனம் துன்புற நேர்ந்தது. இறுதியில் முருகன் அவதரித்து சூரபன்மனை வேலால் குத்திக்கொன்றார். வரபலத்தால் மீண்டும் மயிலாகவும், கோழியாகவும் எதிர்த்தான். உடன் அகந்தையை அடக்கி மயிலை வாகனமாகவும், கோழியைக் கொடியாகவும் ஆக்கி அனுக்கிரகித்தார். ஆண்டவனது பெருங்கருணையைப் பாருங்கள்! துஷ்டனான அசுரனையும் அவனது அகங்காரத்தை அழித்து அருள்புரிந்து தனது வாகனமாக்கி உயர்பதவியை நல்கினன். சைவ மதத்தின் மேலான தத்துவத்தைப் பாருங்கள்! அது எல்லோருக்கும் வீடளிக்கும். நல்லோருக்கு எளிதில் முத்தியெய்துவிக்கும். பொல்லாருக்கு மாசு நீக்கியபின் முத்திகொடுக்கும்.

சூரசங்காரத் தத்துவம்:- ஆறுமுகன் கருணைக்கடல். சூரன் ஆணவாதி மலம்நிறைந்த உயிர். "அகந்தையுடையார் ஆண்டவனைத் தொழார்" வேலப்பன் சூரனது அஞ்ஞான இருளை ஞானசக்தியாகிய வேல்கொண்டு ஓட்டி மெய்யறிவளித்து முத்திகொடுத்தான்.

வள்ளிதிருமணம்:— வள்ளி- உயிர்; வேடர்கள் ஐம்புலன்கள்; தினைநிலம் உலகம்; தினை முதலியன அற்பப்பொருள்கள். பறவைகளை ஓட்டியது. மாயையை நீக்குதல். வள்ளியைத் திருமணம் செய்தது ஜீவேசுர ஐக்கியம். (உயிர் இறையோடு கலத்

தல்) இதுதான் வள்ளிதிருமணமென்று சண்முககவசரியில் விளக்கினர். குரு தன்னையறியாச் சீடனை யாட்கொண்ட முறைபோல் சிவஞானபோதம் 8 ஆம் சூத்திரக் கருத்தோடொத்தும் கூறுவர்.

வள்ளி நாயகியுடன் பல லீலைகள் காண்பித்தமை தேவியை அனுகிரகிக்க அவரது பக்தியைப் பரிக்ஷித்ததாகும். அல்லாது காமவிகாரமல்ல. இவ்வுண்மை கந்தபுராணத்தில் இனிது விளங்கும்.

புராணங்களை தத்துவம்தெரிந்து படித்தால் இவை தெரியும். தேவசேனையும் வள்ளியம்மனும் முற்பிறவியில் திருமால் மக்கள். முருகனை மணக்கவேண்டுமென்று 12 வருடம் தவம் செய்ததால் தவத்துக்கு இரங்கி இருவரையும் மணந்தான். வள்ளி நாயகியுடன் காட்டிய லீலைகள் எல்லாம் அருள் லீலைகளே. சந்திரன் கலங்கின தண்ணீரில் அலைவதுபோல் தோற்றினும் உண்மையில் அவ்வாறில்லை. அங்ஙனமே அறுமுகனுடலெல்லாம் என்றார் கந்த புராணநூலார்.

தேவசேனையும் வள்ளியும் உடலும் உயிரும்போலும் மலரும், மணமும் போலும் அன்புடனளவளாவியிருந்தனர். என நூலுரைக்க உலகில் சக்களத்தி சண்டையென்பது வெற்றுரையாகும்.

"இந்திரனருளுமாதும் எயினர் தம்மாது மிவ்வா
றந்தரம் சிறிதுமின்றி யன்புடன ளவளாவி
சிந்தையு முயிரும் செய்யும் செயற்கையும் சிறப்புமொன்றாக்
கந்தமு மலரும் போலக் கலந்து வேறின்றி யுற்றார்" எனவும்
"இங்கிவர் இருவர்தாமும் யாக்கையு முயிரும்போல" எனவும்

முருகன் கோயில்கள் வட இந்தியாவிலும் தென்னாட்டிலும் மிகுதி. அவற்றில் திருச்செந்தூர், பழனி, திருப்பரங்குன்றம், திருவேரகம் (குமாரகோயில்) குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய ஆறும்முக்கியம். கலியுகத்தில் அனுக்கிரகமூர்த்தி முருகனே. எல்லாக்குணங்களாலும் பரமேசுவரனுக்கு ஒப்பான விநாயகனையும், குமரனையும் சாம வேதத்தில் துதிக்கின்றனர். திருவேரகத்தை நச்சினார்க்கினியர் மலைநாட்டுத் தலமென்பர். (குமாரகோயில்).

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதியடைவரென்கை
ஆயவும் வேண்டுங்கொல்லோ அடுசமர் முன்னாள் செய்த
மாயையின் மகனுமன்றோ வரம்பிலா வருள் பெற்றுய்ந்தான்"
(கந்தபுராணம்)

"அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவேலுடனே வளர்வாய் அடியார்
புது வாழ்வுறவே புவி மீதருள்வாய்" (முருகா)
பாரதியார் பாடல்.

## அத்தியாயம் 22.

# தற்கால மத அபிவிருத்தி.

தற்கால இந்துக்களுக்குச் செல்வமில்லை; நோய்கள் பல; அற்பஆயுள்; தொழில் முன்னேற்றமில்லை; கல்விக் குறைவென்றெல்லாம் குறைகூறுகின்றனர். அதற்கு மேனாட்டாரைப் பின்பற்றவேண்டும். உலகியல் காரியங்களில் வேண்டுவனவும், வேண்டாதனவும் கவனியாமல் மேனாட்டாரைப் பின்பற்றும் இந்துக்கள் மத விஷயங்களிலும் அவர்களைப்போல் நடக்கவேண்டும். திட்டமாகவும், ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும், ஜபம், ஆலய தரிசனம், பிரார்த்தனை, சமயப்பிரசாரம் இவை செய்வதாயிருந்தால் துன்பம் நீங்கி இன்பம் பெறலாம். அவர்களைப்போல் கைத்தொழில், வியாபாரம், கல்வி, சுகாதாரம் இவைகளையும் நன்கு கவனித்து ஒற்றுமையாய் வேலைசெய்யவேண்டும். இந்து சமூகத்து ஆண்களும், பெண்களும் ஒன்றுசேர்ந்து கடவுள் பிரார்த்தனை செய்தல் நலம்.

இந்துக்கள் மதசம்பந்தமான அறிவும், அதற்கொத்த வாழ்க்கையும் நடத்தவேண்டும். பண்டிருந்ததென்றால் இப்போது என்ன பயன்?

ஆலயம்:— ஆ என்றால் பசு (உயிர்) லயம்—ஈடுபடுமிடம். அதாவது ஆன்மாக்களின் மனம் ஒடுங்கி முத்திபெறும் இடமாம். பல இடங்களிலும் அலையும் மனம் ஒடுங்கி ஈடுபடுமிடம் கோயிலாகும். கல்வியிலும் ஆரம்பகாலத்தில் மாணவர் பொருள்களை வைத்து எண்ணி கணக்குச்செய்து பின்னர் மனதினால் செய்வது போலவும், அரிச்சுவடி, முதற்பாடப் புத்தகம் முதலியனபடித்துப் பின் பெரிய நூற்கள் படித்துப் புலவராதல் போலவும் மக்கள் கடவுள் வழிபாடு பயின்று வெற்றிபெறுமிடம் ஆலயங்களாம்.

வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத இறைவனை தாவரமான கோயில்களிலும், சங்கமமான மனிதர்களிலும் வழிபடலாம்.

"தாவர சங்கமங்க ளென்றிரண்டு ருவினின்று
மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்''
[எனவும்

"நடமாடும் கோயில் மனிதன்; படமாடும் கோயில் ஆலயம்"
[என்றுமாம்.

சக்தி சிவலீலையால் உலகம் நடைபெறுகின்றது. மாற்றும், எனர்ஜியும் பிரியாதிருப்பதுபோல் ஈசனும் சக்தியும் பிரியாதிருக்கின்றனர்.

கடவுள் எங்கும் நிறைந்திருப்பதால் கோயில்களில் சென்று விக்கிரகங்களை என் வழிபடவேண்டும்? உலகிலுள்ள எப்பொருளிலும் இறைவன் விளங்கினாலும் அவைகளுக்கு வெவ்வேறு பெயர்கள் உண்டு. அவைகளைப் பார்க்கும்பொழுது அவைகளின் பெயர்கள் நினைவிற்கு வருவதன்றி இறைவன் என்ற எண்ணம் வருவதில்லை. பொதுவான நினைவுடையார்க்கும் கண்டவுடன் கடவுளின் நினைவு வருவதற்காகத்தான் மூர்த்திகளும், ஆலயங்களும் ஏற்படுத்தியிருக்கின்றனர். ஜகதீசனது கருணைவிலாசத்தை யொட்டிய அறிவுபெற கோயிலைப்போல்வேறெதுவுமில்லை. கோயில்களும், விக்கிரகங்களும், பலதத்துவங்கள் நிறைந்தவை.

## விக்கிரகங்கள்.

கதிரவனொளி எங்கும் ஒன்றுபோல் விளங்கினாலும், கண்ணாடிப்பளிங்கியில் கூடுதல் தோற்றுவதுபோல் கடவுள் உலகிலுள்ள எல்லாப்பொருட்களிலும் நிறைந்திருந்தாலும், ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களில் அவருடைய சைதன்யம் கூடுதலாக விளங்குகிறது. தெய்வம் பழத்தில் ரஸம்போலவும், பாலில் நெய்போலவும், விறகில் தீபோலவும, ஸர்வ வியாபியாம். பாலில் நெய்போல அரூபனான சர்வ வியாபி விக்கிரகங்களில் தயிரில் நெய்போல் வெளிப்படுவர். பூமியில் எங்கும் நிறைந்திருக்கும் நீர் கிணறுகள் வழி வெளியாவதுபோலவும், ஸர்வ வியாபகமான மின்சாரசக்தி பௌவர்ஹௌசில் (Power House) இருந்து கூடுதல் வெளியாவதுபோலவும், கோயில்களின் விக்கிரகங்களில் கடவுளின் சானித்தியம் மிகுதியாயுண்டு. "விசேஷேண கிருஹ்யதே இதி விக்ரஹ:" பூஜிக்கும் பிரதிமையிலிருந்து கிரகிக்கவேண்டும். ஈசுவரனென்றே விக்கிரகம் எனும் சொல்லின்பொருள். ஒருவன் அக்கினி கொண்டுவா என்றுசொல்லும் காலத்தில் யாரும் எரியும் விறகைத் தவிர தனியான அக்கினியைக் கொண்டுவருவதில்லாததுபோல் மூர்த்தி உருவமாக வைத்துத்தான் சிவனை பூஜித்துக்கொள்ள வேண்டியது.

"யதாக்னிமானயே யுக்தே
ஜ்வலத் காஷ்டாத்ரு தேஸ்வயம்
நாக்னி ரானியதெ த்வதம்
பூஜ்யோ மூர்த்தியாத் மனசிவ"

தியானம் வணக்கம் இவையில்லாது முக்திபெற வியலாது. கடவுள் தன்னைவணங்கப் பல மூர்த்தங்களையும் கற்பித்திருக்கிறார் அவை ஆலயங்களிலே விம்பங்களாம். அவைகளைக் கண்களால் தரிசித்து தெய்வமாகப் பாவனைசெய்து வணங்கினால் ஆண்டவனை நேரிற்கண்டு தொழுத பயனுண்டு. அம்மூர்த்திகளைத் தியானிப்பதும், கோயிலிற்செய்யும் தொண்டுகளும் அவருக்கு நேரிற் செய்பவைகளாகும். கடவுளை நேரிற்காணும் ஞானிகள் நீங்கலாக

எல்லோரும் ஆலயதரிசனம் செய்யவேண்டும். ஜீவன்முக்தர்களும் க்ஷேத்திர தரிசனஞ்செய்யவேண்டுமென்று சாத்திரம் கூறுகின்றது. சைவமதாச்சாரியர் நால்வர்களும், பன்னிரு ஆழ்வார்களும், சங்கராச்சாரியரும், பட்டினத்தடிகள், தாயுமானவர், அருணகிரிநாதர், இராமலிங்க அடிகள் போன்றவர்களும் ஆலயதரிசனம் செய்து பிறரையும் செய்யத் தூண்டினர். சாதாரண ஜனங்களுக்கு யாதேனும் ஒரு உருவத்தில்லாமல் கடவுளைத் தொழவியலாது என்பது விவேகானந்தர் வாக்கு.

கடவுள் சர்வ சரீரியாதலால் அவரை எதில் பூசித்தாலும் அவர் அதை ஏற்றுக்கொள்வர். மனிதனது உயிர், உடம்பு முழுவதும் பரவியிருப்பதால் அவயவங்களில் இல்லையென்று சொல்லலாமா? "ஸர்வம் சிவமயம் ஜகத" என்று கூறுவதால் விக்கிரகங்களில் கடவுள் இல்லையென்று சொல்லலாமோ? ஒருவனைத் தொழும்போது அவனில் தோன்றும் கடவுள் சைதன்யத்தையன்றி அவனது ஒவ்வொரு உறுப்புக்களையும் வணங்கவில்லை. அவ்வாறே இந்துக்கள் கல்லையும் செம்பையுமல்ல கும்பிடுவது; அதில் அமைந்திருக்கும் ஆண்டவனைத் தொழுகின்றனர். ஞான உருவனும், பலமற்றவனும், உடம்பில்லாதவனுமான இறைவனை வணங்கும் பக்தர்களின் உபாசனைக்கு வேண்டி உருவம் கற்பிக்கப் படுகின்றதென்பது உபனிடத முடிபு.

"உபாஸகாநாம் கார்யார்த்தம்
பிரம்மணோ ரூபகல்பனா"

---

## ஆலயதரிசனம்.

உடற்சுத்தம்:— குளித்துத் திருநீறணிந்து சுத்தமான உடைகளோடு செல்லவேண்டும். நனைந்த ஆடை அவ்வளவு விசேடமில்லை. குளித்தவுடன் ஈர ஆடையோடும் பலர் செல்கின்றனர். உலர்ந்த சுத்தமான ஆடைக்கு வசதியில்லையானால் ஈர ஆடையுடனும் செல்லலாம். குளிக்க வசதியில்லாதவர் கை கால் முகம் கழுவிச் சுத்த ஆடையுடுத்துத் திருநீறணிந்து செல்க.

வாக்குச் சுத்தம்:— உடற்சுத்தியோடு வாக்குச் சுத்தமும் வேண்டும். கோயிலுக்குள் கெட்டபேச்சுகளோ வீண்உரையாடலோ ஆகாது. மந்திரம் ஜபிக்கவோ தோத்திரப் பாடல்கள் பாடவோ செய்யலாம்.

மனச்சுத்தம்:— இது எல்லாவற்றிலும் முக்கியம். கூடிய மட்டும் மனசமாதானத்துடன் இருக்கவேண்டும். தரிசனவேளை யில் காமகோபங்களை யகற்றவேண்டும். இவைகளால் பலருக்கும் கேடுவிளைந்ததுண்டு. கோயில்களில் தரிசனத்திற்குச் செல்லும் பொழுது கந்தரிகளான பெண்கள் வரவோ, அல்லது சிலர் நெருக் கித் தள்ளவோ செய்தால் அங்குநிற்கும் மக்களின் மனம்மாற் றமடையும். குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசுவதுபோல் கடவு ளைக் கும்பிடச்சென்றும் மனம் வேறிடங்களிற் பற்றுகின்றது. வீட்டில் வந்து அன்றைய நிலைமை எண்ணி ஆண்டவனிடம் மன் னிப்புக் கேட்கவேண்டும். மேல் இவ்வாறு நிகழாதிருக்கப் பிரார்த் திக்கவேண்டும். நாளடைவில் மனம் சரியாகும்.

ஆலயதரிசனம் எப்போதும் செய்யலாம். காலையைவிட உச் சிக்காலமும் அதைவிட சாயரக்ஷையும், அதைவிட அர்த்தயா மமும் விசேடமென்று சைவாகமங்கள் கூறுகின்றன. காலைத் தரிசனத்தால் தலைநாள் செய்த பாவமும், உச்சிக்கால தரிசனத் தால் இப்பிறவியிற் செய்த பாவங்களும், அர்த்தயாம தரிசனத் தால் பலபிறவியிற் செய்த பாவங்களும் தீருமென்று சாத்திரங்கள் சாற்றுகின்றன. சிலர் கோயில்களிற் சென்றும் நன்மையொன்றும் கிடைக்கவில்லையே என்பர். இது உண்மையாயிருக்கலாம். அவர் களின் பக்திசிரத்தை மிகக் குறைவாயிருக்கும்.

கண்ணப்பன் எனும் வேடன் 6 நாளில் பூசித்துச் சாரூப முத்திபெற்றதை ஸ்ரீ சங்கராச்சாரியர் கூறுகின்றார். நாடோறும் சென்று தொழுதால் பாவம் நீங்கும்.

சரீரம்:— உடம்பினாற்செய்யும் வழிபாடு கோயிலைப்பெருக்கி துப்புரவாக்குதல், மெழுகுதல், விளக்கிடல், பூப்பறித்து மாலை கட்டிக்கொடுத்தல் முதலியன. இவைகட்குத்தத்துவார்த்தங்கள்உள.

ஆலயத்திற்குச் செல்லும்பொழுது யாதேனும் பொருட்கள் கொண்டுசெல்ல வேண்டும். கடவுளுக்கு இலஞ்சமாவென்று சிலர் கேட்கலாம். அது சரியல்ல. கருணைக்கடலான கடவுள் ஐம்பூதங்களையும் நமக்களித்தார். ஐம்பூதங்களின் கலப்பன்றோ நம்முடல். இவை நமக்கு இன்றியமையாதவை. காற்றில்லாமல் அரைநிமிடமும் இருக்கவியலாது. தாகத்துக்கு நீர் கிடைக்கவில்லையானல் எவ்வளவு வருத்தமுண்டாகின்றது. நமது சுகானுபவத்திற்குரிய பல பொருட்களையுமளித்த ஆண்டவனிடம் நன்றியறிதலோடிருக்க வேண்டியது நம் கடமையன்றோ? கடவுளை வாழ்த்த வாயும், நினைக்க மனமும், வணங்க தலையும் தந்தருளிய கடவுளைத் தொழாதிருப்பது எவ்வளவு அறிவீனம்?

"வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர்த் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே"

தேவாரம்.

கண்களால் ஈசுவரனைப்பார்க்கவும், காதுகளால் அவர் கீர்த்தியைக் கேட்கவும், நெஞ்சினல் தியானிக்கவும், தலையால் வணங்கவும், கைகளால் கூப்பித்தொழவும், கால்களால் வலம்வரவும் நாவினல் நாமம் நவிலவும், செல்வத்தால் தொண்டுகள் புரியவும் வேண்டுமென பக்தர் தலைவனுன அப்பர் சுவாமிகள் தூண்டுகின்றார்.

நமக்கு ஒரு சிறு உதவி செய்தவனிடம் எவ்வளவு நன்றி பாராட்டுகிறோம். நம்மைப் படைத்து எல்லா நன்மைகளையும் அளித்த ஆண்டவனைக் கும்பிடாமலிருப்பது எவ்வளவு அறிவீனம்? ஈஸ்வரன் பஞ்சபூத சொரூபனுனதால் பஞ்சபூத உபசாரம் விதித்தனர்.

1 பூமியுபசாரம்:— பலவிதப் பழங்கள், கிழங்குகள், சந்தனம், வெற்றிலைபாக்கு, தேங்காய் இவை பூமி சம்பந்தமான பொருட்கள்.

2 நீருபசாரம்:— பால், தயிர், நெய், பன்னீர், பழச்சாறுகள் இளநீர் முதலியன (நீர்ப்பொருட்கள்)

3 தீயுபசாரம்:— விளக்குகள், இரத்தினுபரணங்கள், பொன், வெள்ளி நகைகள் முதலியன (அக்கினி சம்பந்தப் பொருட்கள்)

4 காற்றுபசாரம்:— தூபம், சாமரம், விசிறி, குடை முதலியன.

5 ஆகாசோபசாரம்:— மணியோசை, பாடல்கள், சங்கு ஊதல், நாதஸ்வரம், மிருதங்கம், வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், தோத்திரங்கள் முதலியன. ஆகாயம் இல்லையானால் இவைகளின் ஒலிகேளாது. ஆதலாற்றான் நாதத்தை ஆகாச இனத்தில் சேர்த்தார்கள்.

கடவுள் இவையொன்றும் கேட்கவில்லை. நமது நன்மைக்கு வேண்டி பக்தியோடு கொண்டுபோனால் நம்முள்ளமறிந்து அனுக்கிரகிப்பார்.

கோயில்களிற் சென்றால் கோபுரத்தைத் தூலலிங்கமாக வணங்குக. கொடிமரத்தின் பக்கத்திற்சென்று ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் மூன்று தடவை செய்தல் வேண்டும். மீனாக்ஷியம்மன்கோயில் சந்நிதி மண்டபத்தில் எல்லோரும் நமஸ்காரம் செய்வார்கள். மூன்றங்க நமஸ்காரம் எல்லோருக்கும் பொது.

ஏகாங்க நமஸ்காரம் தலையால் வணங்குவதாம். பாவம் போக வேண்டுபவர்கள் பூமியில் விழுந்து வணங்குக. அகங்காரம் குறைந்தவர்கள் அவ்வாறு செய்வர். அகந்தை குறைவதே இறைவனருள் பதிய வழியாம். கொடிமரத்தைக் கும்பிடும்போது அதைத் தொடலாகாது. பின் பலிபீடத்தின் மருங்கு சென்று நமது கெட்ட குணங்களையெல்லாம் கடவுள் திருமுன் பலியிட்டதாக எண்ணுக.

வலம் வருதல்:— கோயில்களில் பஞ்ச பிராகாரங்களை பஞ்ச கோசங்களாயெண்ணி அவையைத் தாண்டுவதால் கடவுளை அணுகுவதாய்ப் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். வலம் வரும்போது கோயிலின் பிரதான மூர்த்திக்குரிய மூலமந்திரம் ஜபிக்க. விரைவில் செய்யற்க. தலையில் எண்ணெய்க்குடமெடுத்த நிறை

கர்ப்பிணி நடப்பதுபோன்று மெதுவாய் நடக்க, உட்பிராகாரத்தைவிட வெளிப்பிராகாரம் வலம் வந்தால் கூடுதல் புண்ணியம். முதலில் வணங்கும் மூர்த்தி கணபதியாம். விநாயக சந்நிதியில் தலையில் இருகைகளாலும் குட்டி 3 தடவையிற் குறையாமல் தோப்புக்காணமிட்டு தான் செய்த குற்றங்களை மன்னிக்கப் பிரார்த்திக்கவேண்டும். சாதாரணமாகக் கணபதிக்குத் தேங்காய் எறிவர். அதன்கருத்தாவது:-நாம்செய்த பாவங்களெல்லாம்உருண்டு திரண்டு தேங்காயின் வடிவத்திலிருப்பதாகவும் விநாயக வணக்கத்தால் அவைவுடைந்து சிதறினதாகவும் மேல் இத்தகைய பாவம் செய்வதில்லையென்றும் உள்ள சங்கற்பமாம். துவார பாலகர்களை வணங்கிச்செல்க. பின் சிவாலயங்களில் நந்தியையும், விஷ்ணு ஆலயங்களில் கருடனையும், ஒவ்வொரு கோயில்களிலும் பிரதான வாகனமூர்த்தியையும் வணங்குக. பின் பிரதான மூர்த்தியின் திருமுன் சென்று நாம் கொண்டுபோன பொருட்களை நிவேதிப்பித்தும் அர்ச்சனை செய்வித்தும் மிக்க பய பக்தியுடன் தலையிற் கைகூப்பித்தொழுது செய்த பாவங்களைப் போக்குக. மேல் பாவம் செய்யாதிருக்கப் பிரார்த்திக்க வேண்டும். அன்றியும் மூலமந்திரம் ஜபித்தலவசியம். தேவார திருவாசகத் (திருமுறை) தோத்திரங்கள் பாடல்வேண்டும். பெண்களும் தோத்திரங்கள் சொல்லல் வேண்டும். யாதொரு பயனையும் விரும்பாமற்றொழ வேண்டு மென்று கீதாசாரியன் விதிக்கிறார். இல்லறத்திலிருப்போர் தங்கள் குறைகளை ஆண்டவனிடம் முறையிடல் வேண்டு மென்பது சைவர் துணிபு. தேவி திருமுன் சென்று வணங்குக. நடராஜர் முதலிய 25 மூர்த்திகளையும் முறைப்படி வணங்குக. கலியுக வரதனான முருகனை அவசியம் வணங்கவேண்டும். விபரீதகாலதோஷம் நீங்க நவக்கிரகங்களையும் கும்பிடலாம். இறுதியில் சிவாலயங்களில் சிவயோகத்திலிருக்கும் சண்டேசர் திருமுன் சென்று மும்முறை கைகொட்டித் தோத்திரம் சொல்லிச் சிவ தரிசனபலம் நல்கப் பிரார்த்திக்கவேண்டும். வைரவரையும் தொழுக. பின்னர் கொடிமரத்தின் பக்கத்திலோ அல்லது அம்மன் சந்நிதி பெரிய மண்டபத்திலோ வந்து மும்முறை விழுந்து வணங்கிவிட்டு வடக்கு நோக்கி உட்கார்ந்து தரிசித்த பிரதான மூர்த்தியை மனதில் தியானித்து ஐந்தெழுத்து மந்திரம் 108க்குக் குறையாமல் ஜபித்துத் திருநீறு பூசிச்செல்க.

இறுதியில் இக்கோயில் மாடன் தம்பிரானைத் தொழவேண்டு வது மிக முக்கியம். சாத்தாவிற்குரிய தோத்திரம், தேவார, திரு வாசகம் சொல்க. பலரும் ஒன்றும் சொல்வதில்லை. அது சரியல்ல. பல பெரிய கோயில்களிலும் பக்கங்களிலும் ஏழைகளான ஜனங்கள் பிச்சை கேட்பார்கள். அவர்கட்கு யாதேனும் கொடுப்பது கடவு ளுக்கு மிக்க சந்தோஷம். சிலர் கோயில்களில் ஏராளம் பணம் செலவு செய்வர். ஆனால் ஏழைகளுக்கிரங்குவதில்லை. சிலர் ஏழை களுக்குக் கொடுப்பர். ஆனால் கோயில்களுக்கு ஒன்றும் கொடுப்ப தில்லை. இருவர் செயலும் சரியல்ல. ஏழைகளுக்கு உதவுவது போல் ஆண்டவனுக்கும் வழிபாடு செய்யவேண்டுவது கடமை யாகும். எல்லா நாளும் போகவேண்டும். இயலவில்லையானால் விசேட காலங்களிலாவது செல்லவேண்டும். சிலர் 5 நிமிடத்தில் சுவாமியைக் கும்பிட்டு மீள்வர். இது போதாது. அரை மணி நேரம் நாடோறும் செலவு செய்க. இல்லறத்தார் மனைவி மக்க ளோடு செல்லுதல் கூடுதல் புண்ணியம் என்பர். சிலர் வியாபாரம், உத்தியோகம், கிருஷி முதலிய வேலைகள் உண்டென்று சொல்லி ஆலயத்திற்குச் செல்லாமல் இருக்கின்றனர். எவ்வளவு வேலை யிருந்தாலும் 24 மணி நேரத்தில் ½ மணி நேரம் கிடையாமலிராது.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு"
"ஒருக்காலும் திருக்கோயில் சூழாராகில்" தேவாரம்.

சிலர் எவ்வளவு தடை நேரிட்டாலும் போகாமலிரார். சைவ மதாசாரியர்கள் ஆலய தரிசனம் அவசியமென விதித் தனர். கோயிலில் போகாமல் கடவுளைக் கும்பிடமுடியாதாவென்பர். அது உயர்நிலையிலுள்ளவர்கட்கியலும். சாதாரண மக்களுக்கு மனஅமைதி வராது. கோயில், கொடிமரம் இவைகளைக் காணும் போதும் மணியோசை கேட்கும்போதும் கடவுள் நினைவுண்டாகும்.

*தீபாராதனை:—* கோயில்களில் எல்லாவித மேளங்களும் பஜனை ஆடல் பாடல்கள், வாசனைப்பொருட்கள், கட்டழகிகள் முத லிய மனதைக் கவரும் பொருட்கள் இருந்தாலும் அவைகளை மறந்து தீபாராதனை வேளையில் ஈசனைக்கும்பிடப் பழகுவது கோயில் களில்தான் இயலும்.

கோயில்களில் செய்யத்தகாத வேலைகள்:— செருப்பு, குடை கொண்டு போதல், மலஜலம் கழித்தல், துப்பல், சூதாடல், வியபிசாரம், வீண்பேச்சு, வெற்றிலை போடல், சண்டையிடல் முதலியன.

---

## பக்தி.

பக்தியென்றால் ஆண்டவனிடம் வைக்கும் அன்பு. இறைவன் திருவடியடைதலே முத்தியாம். முத்திபெறும் வழிகள் நான்கு. அவை: சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகும். இவற்றைக் கர்மம், பக்தி, யோகம், ஞானமென்பர்.

சரியையைத்தாத மார்க்கமென்பர். ஆண்டவன் திருமேனி கொண்டெழுந்தருளியிருக்கும் கோயிலின் அசுத்தத்தைப் போக்கி விளங்கும்படி திருமெழுக்கிட்டு, குற்றமில்லாத, திருவிளக்கிட்டு அழகிய நந்தவனங்கள் வைத்துப், பூக்கள் எடுத்துப் பொலிவாகிய மலரால் இண்டை முதலிய மாலைகள் கட்டி, இறைவன் திருமேனியில் சாத்திச், சிவபிரான் கீர்த்தியை வாயார வாழ்த்தி அடியார்களைக் கண்டால் அடியேன் செய்யவேண்டிய கடமைகள் எவை? அவை யாவென அருளவேண்டுமென வணங்கி அவர் அருளிச் செய்யும் பணிவிடையும் செய்வதாம். மனக்கவலை தீரவேண்டுமானால் கடவுளைத் தொழவேண்டும். அதனால் முன்னைய வினை தீரும் என்றும் பிறவி நீங்குமென்றும் திருவள்ளுவர் கூறுவர். கர்மம், யோகம், ஞான மார்க்கங்களினும் பக்தி மார்க்கமே பெரிதென்று பெரியார் பலரும் கூறுவர். எல்லாவுயிர்களும் இறைவனையடைய எளிதான வழி பக்தியே.

"பக்தி வலையிற்படுவோன் காண்க"

"முத்தியாக ஒரு தவம் செய்திலை
அத்தியாலடியார்க் கொன்றருளிலை
தொத்துநின்றலர் சோற்றுத்துறையர்க்கே
பக்தியாய்ப்பணி யாய்மட நெஞ்சமே"

தேவாரம்.

அறுபத்துமூன்று சிவனடியார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும், கபீர், இராமதாஸ், துருவன், பிரகலாதன், அனுமன் முதலிய பெரியார்களும் தெய்வபக்தி செய்து முத்திபெற்றார்கள். விவேகானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் இராமலிங்க அடிகள் முதலியோரும் பக்தி பெரிதென்றார்கள். உள்ளமுருகின பக்தி பெரிதென்றார்கள். உள்ளமுருகின பக்தியால் இறைவனருளை எளிதிற்பெறலாம்.

> "உள்ளமுருகிடில் உடனுவரல்லது
> தெள்ள எளியரென்றுந் தீபற"

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளேபுக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்" பக்தர்கள் ஆண்டவனையும் அவனடியார்களையும், ஒன்றுபோல் கருதவேண்டும். பக்தர்களுக்கு விதித்த சிறந்த வழிபாடு மானிடபூஜையென்று சுவாமி விவேகானந்தர் கூறுவர்.

ஆசையற்ற பக்தியே மேலென்று கீதை உபதேசிக்கின்றது. சாதாரண ஜனங்கள் தத்தம் குறைகளை முறையிட்டு வேண்டியவைகளைத்தரும் பொருட்டு இறைவனை வணங்குகின்றனர். இந்துக்கள் மட்டுமல்ல இஸ்லாமியர்களும், கிருஸ்தவர்களும் பக்தி பெரிதென்பர். பாமர ஜனங்கள் பகவானைத்தொழுது பக்தர்களாகி விடுகின்றனர். பண்டிதர்களோ வீணாக வாய்ப்பறையடிக்கின்றனர். புராணங்களிற் கூறப்படும் பல புண்ணியவான்களும் பக்தி செய்து புருடார்த்தங்கள் பெற்றார்கள். மனவலிமையுள்ளார்க்குப் பக்தி எளிதாம். பக்தி பயனுடைத்தாயிருக்கவேண்டும். மேல் பாவஞ்செய்யாமலும் நல்லொழுக்க முடையவராயும் இருக்க வேண்டும். கொடிய சிறு தெய்வ வழிபாடு அவசியமில்லை. மூர்த்தி பேதம் நினைக்கவேண்டாம்.

எல்லோரையும் நல்வழிப்படுத்துவது அவரவர்களின் மனச்சாக்ஷிப்படி நடப்பதே. கடவுள் கோயிலில் மட்டுமா இருக்கிறார்? எங்கும் நிறைந்தவரன்றோ? ஆகையால் நம் முன்னும் பின்னும் வீட்டிலும் காட்டிலும் நம்மைப்பார்க்கிறார். நம் எண்ணமும் பேச்சும் செயலும் யாவும் கடவுள் அறிகிறார், என்றெண்ணி பக்தர்கள் நடக்கவேண்டும். மீனாட்சியம்மன் கோயிலில்தான் இருக்கிறாள் என்றெண்ணற்க.

பக்தியைத் தாழ்ந்தபடியென்றும் உயர்ந்தபடியென்றும் இரண்டாகப் பிரிக்கலாம். ஆண்டவனுக்குச் சில பொருட்களெல்லாம் நிவேதித்துவிட்டுத் தனது ஆசைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பிரார்த்திப்பதும், ஒன்றும் கொடாமல் எல்லாம் தனக்கு வேண்டுமென்று பிரார்த்திப்பதும் கீழ்த்தரப் பக்தியாம்.

இந்திரிய விடயங்களான இன்பத்தை விரும்பாமல் கன்மங்களெல்லாம் ஆண்டவனிடம் அர்ப்பிக்கும் பக்தி உயர்ந்ததாகும். இது மேலான பக்தியென்று விவேகானந்தர் கூறுகின்றார். ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் பக்திநிலையை ஐந்து உவமைகளால் சிவானந்த லகரியில் விளக்குகின்றார். அங்கோலமரத்தின் வித்துக்கள் பக்குவமாம்பொழுது இரவில் மரக்காம்பினின்றும் மூட்டில்விழும். காலையில் கதிரவன் வெம்மைக் கஞ்சியதாய் மரத்தில் தத்தம் காம்புகளில் பற்றிவிடும். அவ்வாறே சில பக்தர்கள் இறைவனைப் பற்றிக்கொள்வர். இரும்பு ஊசிகள் காந்தக்கல்லின் மருங்கிற் செல்லும்போது இயற்கையான காந்தசக்தியால் இழுக்கப்பட்டு அதில் சேர்ந்துவிடும். உயிர்களும் அவ்வாறே ஆண்டவனையடையும். கொடிகள் மரத்தையே பற்றி நிற்பது போன்று இறைவனையே பற்றிக்கொள்வர். சிந்துநதி தன் மார்க்கத்தில் எவ்வளவு இடையூறுகள் வந்தாலும் பொருட்படுத்தாமல் கடலில் சேருவதுபோல் அடியார்கள் எவ்வளவு இடையூறுகள் நேரிட்டாலும் கடவுளையடைவர். எல்லாவற்றிலும் சிந்து நதியின் போக்குப்போன்றது. மேலான பக்தி நிலையாகும்.

கண்ணப்பன், குகன் முதலியவர்களின் பக்தி விசேடமானது. நாரதர், சாண்டில்லியர் முதலியவர்களும் பக்தியே மேலானதென்பர். பக்திக்கு ஆண், பெண், உயர்ந்த ஜாதி, தாழ்ந்தஜாதி பணக்காரன், ஏழைகள் என்ற வேற்றுமையில்லை. யாவர்க்கும் இறைவனிடம் அன்பு செலுத்தலாம்.

துன்பத்தால் பீடிக்கப்பட்டவர்களும் ஆன்மஞான இச்சையுள்ளவர்களும், இகலோக பரலோக சுகம் வேண்டுமென்ற இச்சையுள்ளவர்களும், ஞானிகளும் என்னை வணங்குகின்றனர். எங்கெந்த உருவத்தில் இச்சிக்கின்றாரோ அந்த பக்தர்களின் பக்தியை நான் திடப்படுத்துகிறேன்.

(பகவத்கீதை)

மானிடப்பிறவி சிவத்தொண்டுக்கென அறைகின்றனர். அன்போடுருகி அகம் குழைந்தால் ஆண்டவனையடையலாம். அகந்தையொழியவேண்டும். பக்தர்கட்கு ஆலயதரிசன காலத்தில் கண்ணீர் வருதலியல்பு. தெய்வம் அன்பு வடிவமன்றோ? அன்பே சிவமென்றார் பெரியாரும். நாயகி தன் தலைவனிடம் வைக்கும் அன்புபோன்று நாமும் கடவுளிடம் அன்புசெலுத்தல் வேண்டும். கடவுள் பக்தியால் தவமும், பாவம் நீங்குதலும், பேரானந்தமும் பெறலாம்,

"பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருந்தலாம்
பருகலாம் பரமாய தோரானந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே" (தேவாரம்)

---

# பக்தியைப்பற்றிய பெரியார் கூற்றுகள்.

## சுவாமி பரமானந்தரின் கருத்து.

சுதந்திரனான கடவுள் என் பக்தர் கையில் சிக்கியிருக்கிறேன் என்கிறார்.

"I remain bound to my devotees"

நம்பினவர் காப்பாற்றப்படுவார். "He will bless you and protect you from all evils"

குழந்தையைப்போல் களங்கமற்று அவரிடம் கேட்க.

நீ உண்மையான பக்தனாயிருக்கவேண்டுமானால் உலகியல் காரியங்களிலிருந்து விலகுக. எது வந்தாலும் மனம் கலங்கலாகாது.

மனச்சுத்தம், கபடமின்மை, சுயநலம் கருதாமை, எல்லாவுயிரிடத்தும் அன்பு இவை பக்திக்கு அவசியம். உண்மை பக்தியால் மனச்சுத்தமுண்டாம்.

"Root out all selfish desires and you will reach the goal"

துன்பம் வரும்போதெல்லாம் கடவுளை நினைப்பார்கள். பாண்டவரின் தாய் குந்திதேவி எனக்கு எப்போதும் துன்பமும் மனவருத்தமும் தந்துகொண்டேயிருப்பாய் கடவுளே! உன்னை நான் மறவேன் என்றாள்.

மோக்ஷம் வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன். ஆனால் பக்தியைக் கொடுக்கமாட்டேன். என்னவென்றால் பக்தனுக்குக் கட்டுப்படுவேன்.

The Lord says I can give salvation but I do not give Bhakti. By giving Bhakti (devotion) I become bound to my devotees.

துன்பம் வரும்போது பிரார்த்திக்க Therefore we must not give way to anxiety if trouble comes but only pray, pray with great earnestness.

நாம் உலகத்தாயின் மக்கள். நம் பலன் அவளிடம் இருக்கிறது. தைரியமாய் வாழ்ந்து தைரியமாய் இறக்க.

We are children of divine mother. Pray to her like a little child and she will protect you.

பக்தர்கள் அச்சத்தையறவே நீக்கி விடுக. "நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்"

பைபிள்:— உத்தமன் இரட்சிக்கப்படுகிறான்.

1. Who walketh uprightly shall be saved.
2. The fear of the Lord is the beginning of wisdom.
3. For whom the Lord loveth he correcteth even as a father the son in whom he delighteth.

I. Naradiya Bhakti:— Communion with God by love, devotion and self-surrender.

II. Bhakti:- According to Ramanuja it is neither blind attachment nor mere emotionalism. It is steady remembrance (meditation) marked by direct and continued perception.

III. Bhakti:- A passive, relationless identity excludes the joy of adoration and devotion but Bhakti is the very soul and heart and summit of a more complete union. (Sri aurabindo)

---

## மந்திர ஜபம்.

### துன்பம் நீங்கல்.

இந்துக்கள் பலவித துன்பங்களினால் உழல்கின்றனர். இந்தியாவின் சராசரி வயது 23. மேனாட்டாரின் சராசரி வயது 50 க்கு மேலாகும். பாதகண்டத்தில் உண்டாகும் நோய்களுக்கோ, கர்ப்பிணிகளுடையவும, குழந்தைகளுடையவும் மரணத்திற்கோ கணக்கில்லை. செல்வநிலை மிகவும் குறைவு. இதனைப்போக்கும் வழி சுகாதார தத்துவப்படி உடம்பைப்பேணி நன்றாய் முயற்சித்து வேலைசெய்வதோடு ஆலயதரிசனமும் மந்திரஜபமும் செய்வதாகும்.

மந்திரம் என்றால் என்னைக்காப்பாற்றுவது என்பது பொருள். யார் ஜபிக்கிறார்களோ (மனனம் செய்கிறார்களோ) அவர்களைக்காப்பாற்றும். கடவுள் நாமத்தை உருவிடுவதே ஜபமாம்.

தெய்வங்களின்முன் பக்தியுடன் இருடிகளால் செய்யப்பட்ட துதிகள் தான் மந்திரங்களென்று யாஸ்கமுனி கூறுகின்றனர்.

மந்திரஜபத்தால் பக்தன் அகண்ட பரிபூரண நிலையை அடைவான்.

ஐந்தெழுத்து மந்திரம்:— ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசு சுவாமிகள் சைவமதம் விட்டு ஜைனமதம் புகுந்தார்கள். மீண்டும் சைவத்தில் புகுந்தனர். தமக்கை திலகவதியம்மையார்.

திருநீறு நல்கி, ஐந்தெழுத்து மந்திரம் காதில் ஓதி தூயராக்கினர். ஜைனமதத்தில் தான்பட்ட துன்பத்தையும், சைவத்தில் சிவபெருமான் திருவருளையும் வியந்து தேவாரங்கள் பாடினர். ஜைனர்கள் இவர் சைவத்திற் சென்றதையறிந்து சமணமுனிவர்களது தூண்டுதலால் மகேந்திரவர்மன் என்னும் பல்லவ வேந்தன் அப்பர்சுவாமிகளைக் கொலைசெய்யக் கட்டளையிட்டான. அவ்வாறு சுண்ணும்புச் சூளையில் வைத்து தீயிட்டனர். ஏழுநாள் அதிலிருந்தார். பஞ்சாக்ஷர மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தார். சாகவில்லை. தீ பேரின்பமாயிருந்தது. ஜைனர்கள் வந்து பார்த்தபொழுது மகிழ்ச்சியாயிருப்பதுகண்டு பாயசத்தில் நஞ்சுகலந்து கொடுத்தனர். ஐந்தெழுத்து மந்திரமோதிக் குடித்தார். மாளவில்லை. மதயானையை ஏவினர். கண்மூடி மந்திரம் ஜபித்துக்கொண்டு ஆண்டவனைத் தியானித்திருந்தார். யானை அவரை வலம்வந்து பாகனைக்கொன்றது. பின்னர் கல்லோடு சேர்த்துக் கயிற்றால் கட்டிக் கடலில் தள்ளினர். இறைவன் நாமமாகிய ஐந்தெழுத்து மந்திரம் ஜபித்துப்பிழைத்தார். கல் தெப்பமாகி அடிகளைக் கரையேற்றினது. இறைவன் நாம ஜெபத்தால் எத்துணை அதிசயங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இதனையறிந்த பல்லவ மன்னன் சுவாமிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன்.

"கல்லினோடெனைப் பூட்டிய மண் கையர்
ஒல்லைநீர் புகநூக்க வென் வாக்கினல்
நெல்லுநீள் வயல் நீலக் குடியான்
நல்ல நாமம் நவிற்றி யுய்ந்தே னன்றே"

என்று அடிகள் தனக்குற்ற துன்பத்தை அரன் நல்ல நாமம்நவிற்றி உய்ந்ததாய்க் கூறுவது காண்க.

"கல்துணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நல்துணையாவது நமச்சிவாயவே" (அப்பர்தேவாரம்)

இவ்வளவுமாட்சிமையுள்ள மந்திரம் இந்துக்கள்எல்லோருக்கும் பொதுவென்று சிவபெருமான் அருளியிருக்கின்றனர். இந்து சமயத்தவரான எல்லா ஜாதியார்க்கும் ஆண் பெண் வேற்றுமை

யில்லாமல் ஜபிக்கலாம். கொலைபாதகனும், பாவிகளும், பதிதரும் எல்லோரும் ஒன்றுபோல் ஜபிக்கலாம் என்று வாயு ஸம்ஹிதையில் கூறப்படுகின்றது.

"கொல்வாரேனும் குணம் பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே"

சுருங்கின எழுத்துக்களும், விசேடப்பொருள்களும், முத்தி நல்குவதும், ஐயமற்றதுமான மந்திரம் "ஓம் நமசிவாய" என்னும் பஞ்சாக்ஷரமாகும்.

இராவணன் கைலை மலையைத்தூக்கியபொழுது பரமேசுவரன் கால்விரலால் ஊன்றவே பாதாள உலகில் ஆழ்ந்தனன். கடவுள் கிருபையைப்பெற வீணையில் ஸாமகானமும், அதிலும் முக்கியமாக ஐந்தெழுத்தும் பாடி நன்மைபெற்றான்

"பண்டைய ராவணன் பாடி உய்ந்தது"
"இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல் மேல்
தலங்கொள் கால்விரற் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே" (தேவாரம்)

மார்க்கண்டன் ஐந்தெழுத்தை ஜபித்து சிவனைப் பூசித்ததால் காலனைவென்று சிரஞ்சீவியானனென்று புராணம் கூறுகின்றது.

சைவசமயாசாரியர் நால்வர்களும் ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகளும் ஐந்தெழுத்து மகிமையைப் பாடியிருக்கின்றனர்.

நமது துன்பங்களையெல்லாம் ஓட்டுவதும் அதுவே. எத்தகைய இடையூறு வந்தாலும் பிறரிடம் சரண்புகவேண்டாம்.

"இடுக்கண் பட்டிருப்பினும் இரந்து யாரையும்
விடுக்கப் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற் கீழ்கிடக்கினும் அருளினுமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே" (தேவாரம்)

ஐங்தெழுத்துத்தத்துவம்:— இம்மந்திரம் நமச்சிவாய என்பதாம். சிவனுக்கு வணக்கம் என்பது பொருள். சிகாரம் சிவனையும், வகாரம் சக்தியையும், யகாரம் ஜீவான்மாவையும், நகாரம் திரோதாயியையும், மகாரம் மாயைமுதலிய மலங்களையும் குறிக்கும்.

அதாவது மாயாமலம்நீக்கி ஜீவான்மாவிற்குத்திரோதானத்தை நீக்கித் தனது சக்தியால் அனுக்கிரகித்து முத்திநல்கும் சிவனோடு ஐக்கியமாவதை உணர்த்துகின்றது. இது எல்லா மந்திரங்களுக்கும் ஆதாரமானதால் "வேத இருதய மந்திர"மென்பர்.

கர்யம் வைத்திருக்கும் பெட்டியில் காயம் எடுத்த பின்னரும் சிறிது நாள் அதன் மணம் மாறாது. அவ்வாறு ஜீவன் முக்தர்களுக்கும் முன்னைய வாசனாமலம்போக ஐங்தெழுத்து மந்திரஜபம் வேண்டும். நெருப்பு இரும்பைத் தன்னிறமாக்குவதுபோல் ஈசுவரன் இந்த மானதபூஜையால் ஜீவான்மாவை சர்வக்ஞத்துவம் முதலிய குணங்களைக் கொடுத்து பேரானந்த நிலையை நல்குவர்.

சிவமூல மந்திரம்—ஓம் நமசிவாய
கணபதி மந்திரம்—ஓம் கணபதயே நம:
தேவிமந்திரம்:— ஓம் உமாதேவ்யை நம:
முருகன் மந்திரம் ஓம் சரவணபவாய நம:
சாஸ்தா மந்திரம் ஓம் சாஸ்திரு மூர்த்தயே நம:
விஷ்ணு மந்திரம் ஓம் நமோ நாராயணாய:

மந்திரம் ஜபிக்கும் முறை:— பல் துலக்கிக் கைகால் சுத்தி செய்து திருநீறணிந்து வடக்கோ கிழக்கோ நோக்கியிருந்து 108, 1008 தடவை ஜபிக்க. மனம் அமைதியாயிருக்க வேண்டும். தற்காலத்தில் மனம் ஒன்றுபடாமல பலரும் ஜபிக்கின்றனர். அது அதிகப் பலனளிக்காது.

கெட்ட எண்ணங்களை மனதினின்றும் அகற்றவேண்டும். தினமும் ½ மணி நேரத்திற்குக் குறையாமல் ஜபித்தல் நலம். வீடுகளில் ஜபிப்பதைவிட கோயில்களிற் கூடுதல் பலனுண்டு. உள்ளம் உருகிக் கண்ணீர் மல்கி ஜபித்தல் விதியாம். விரைவில் ஜபிக்கலாகாது. மனம் அதில் ஊன்றியிருத்தலவசியம். பிறர் காதில் கேளாமல் வாய்மூடி மனதில் ஜபித்தால் அதிகப்பலன்

என்பர். கொடிய இந்த யுத்தகாலத்தில் ஜபம் முக்கியம் என்று கீழ்நாட்டாரும் மேனாட்டாரும் ஒன்றுபோல் வற்புறுத்துகின்றனர். குடும்பஜபம் கணவனும், மனைவியும், 13 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளும் தனித்தனியாக வீடுகளில் ஜபித்துவரவேண்டும். இதைவிட முக்கிய வேலை வேறில்லை. பெண்களுக்கும் இம்மந்திரத்தைக்கற்பித்து ஜபிக்க வற்புறுத்தவேண்டும். தற்காலத்தில் அதன் அவசியம் மிகுதியன்றோ? சிலர்க்கு உடன் பலன்கிடைக்கும். எல்லோருக்கும நாளடைவில் பலனுண்டு. ஆதலால் இப்புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும் ஜபஞ்செய்யவேண்டுமென கேட்டுக்கொள்ளுகின்றேன். மற்றவர்களை அவ்வாறுசெய்யத் தூண்டினல் பெரும் புண்ணியமுண்டு. இதுவேநம் மதத்தின் இரகசியப் பொருளாம். பிராமணர்களும், கிருஸ்தவர்களும், மகமதியர்களும் தங்கள் மத மந்திரத்தை ஜபிக்கின்றனர். இந்துக்களெல்லோரும் தங்கள் மதமந்திரத்தை ஏன் ஜபிக்கலாகாது?

பெரியார்களிடம் உபதேசம் பெற்று ஜபித்தல் வேண்டுமென்று விதி. ஆனல் 100 க்கு 99 பேர்களும் அதற்கு முயலுவதில்லை. பெரியார்கள் கிடைப்பதுமில்லை. அவர்கள் பிறருக்குச் சொலவதுமில்லை. காலம் தாழ்த்தாமல் ஆண்டவனையே குருவாக எண்ணி இப்புத்தகத்திலுள்ள மந்திரங்களை விதிப்படி ஜபிக்கலாம். இம்மந்திரங்கள் சாஸ்திரங்களிற் கூறப்பட்டவை. தீக்ஷை பெறவேண்டுமென்று சைவ சமயம் வற்புறுத்துகின்றது. எத்தனைபேர் தீக்ஷைபெற்று உபதேசம் பெறுகின்றனர். அது நன்மை என்று எல்லோருக்கும் தெரியும். நடைமுறையில் வருவதுதான் கஷ்டம்.

எல்லா இந்துக்களும் தங்கள் குழந்தைகளுக்கு யாதேனும் ஓராசிரியரிடம் வித்தியாரம்பம் செய்கிறார்கள். அவ்வாறே ஞான தீக்ஷையாகிய மந்திரோபதேசமும் ஒருவரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும். இதைக் கவனிப்பதேயில்லை. ஆடவர்கள் உபதேசம் பெற்று தங்கள் மனைவிமார்களுக்கு உபதேசிக்கலாம். இதற்கு அதிக பணச்செலவோ, பெரிய சடங்குகளோ தேவையில்லை. முன்னிருந்தது. சடங்குகளின் காரணத்தால் தற்பொழுது அறவே நின்றுவிட்டது. எவ்விதத்திலும் கடவுள் நாமம் ஜபிக்கவேண்டும். மந்திரங்களை மறைவாக வைத்தார்கள். பிறர்க்குச் சொல்லிக்

கொடுத்தால் பாவம் என்றார்கள். ஏனென்றால் அதைக்கேட்டுக் கேவலமாக எண்ணிவிடுவோருக்குஉபதேசிக்கலாகாது என்பதுதான் விதி. தெய்வ பக்தியில்லார்க்கு சொல்லுதல் நியாயமன்று. விடாமல் ஜபிப்போமென்று உறுதிமொழி கூறுவோருக்குச் சொல்லலாம்.

"மந்த்ராணும் பரமோ மந்த்ரோ
குஹ்யாணும் குஹ்யமுத்தமம்
பவித்ரஞ்ச பவித்ராணும்
மூலமந்த்ர ஸ்ஸநாதன:"
"ஸர்வ வேதாந்த ஸாரார்த்த
ஸம்ஸா ரார்ணவ தாரக"

விரதங்கள்:— நம் நாட்டில் திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை விரதங்கள் முக்கியம். பௌர்ணமி பிரதோஷம் ஏகாதசியும் விரதநாட்களாம். ஸ்கந்த ஷஷ்டி, சிவராத்திரி, விநாயக சதுர்த்தி முதலியன வருடவிரதங்கள். விரதநாள் தவநாளாகும். நம் நாட்டுப்பெண்கள் விரதங்களை நன்கு ஆசரிப்பர். வீடு வாசல் சுத்தம்செய்து நீராடி தூய ஆடையணிந்து ஆலயங்களுக்குச் செல்வர். உணவைக் குறைத்து பட்டினி கிடக்கவேண்டும். தண்ணீர் அருந்தலாம். பலநாளும் வேலைசெய்து களைத்திருக்கும் குடல் முதலிய ஜீரணக் கருவிகளுக்கு ஓய்வுகொடுக்க வேண்டுமன்றோ? அடுத்தநாள் முதல் பலமாய் வேலைசெய்யும். சில நோய்களுக்கு பட்டினி அவசியம். மூலமந்திரம் எல்லோரும் ஜபிக்கவேண்டும். காந்தியடிகள் உண்ணாவிரதமிருந்து தவம் செய்து அரியபலன் பெற்றதைக் கண்கூடாகக் கண்டோமன்றோ? விரதங்களில் ஏழைகளுக்கு உதவிசெய்யவேண்டும். உடம்பு நல்லநிலையில் வரும். எண்ணிய காரியம் கைகூடும். பாவம் குறையும். ஆண்டவனருளும் பெறலாம். சிலர் விரதநாட்களில் 4 வேளை சாப்பிடுவர். இது உடம்பிற்குக் கேடு. பயனும் குறைவு. சீட்டாடுதல், புலாலுணவு, கட்குடி, சிற்றின்பம் நுகருதல் முதலியன ஆகா. பல முனிவர்களும், தேவர்களும் விரதங்களிருந்து பெரும் பயனையடைந்ததாய்ப் புராணங்கள் கூறுகின்றன. விரத நாட்களை இக்காலத்திற்கேற்றவாறு கையாளவேண்டும். காலையில் உணவருந்தாமல் 11 மணிக்குச் சாப்பிடுக. பின் இரவு சிற்றுண்டியருந்தலாம். இதற்கு நடுத்தரப்பலன் உண்டு. முழுப் பட்டினி உத்தம பலன்

உபவாசம் படிப்படியாய்ச் செய்யவேண்டும். ஓய்வு நேரங்களில் தேவாரத்திருவாசகங்களும் புராணங்களும் படிக்க. சங்கீதத்துடன் பஜனை செய்யலாம். அன்று மனம் வேறுவழிகளிற் போகாமல் கடவுளையே நினைக்கவேண்டும். எல்லா மதங்களிலும் விரதமுண்டு.

உ

# தோத்திரங்கள்

சிவாலயத்தில் பல மூர்த்திகளுக்கும் சொல்லவேண்டிய தோத்திரங்கள் அடியிற் கூறப்பட்டிருக்கின்றன. தெய்வ அருள் பெற்ற பெரியார்கள் பாடல்கள்தான் இறைவன் முன்னிலையில் தோத்திரங்களாகப் பாடப்படுகின்றன.

## விநாயகர்.

"சத்தி யாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவச்
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே."

## சிவபெருமான்

"வேதியா வேதகீதா விண்ணவர் அண்ணாவென்று
ஓதியே மலர்கள்தூவி ஒருங்கிநின் கழல்கள்காணப்
பாதியோர் பெண்ணைவைத்தாய்ப் படர்சடை மதியம் சூடும்
ஆதியே ஆலவாயில் அப்பனே அருள்செய்யாயே."

(தேவாரம்)

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
"பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த

செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே'' (திருவாசகம்)

''கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியை
கரையிலாக்கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற வெம் திருவை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென்கண் குளிர்ந்தனவே'' (திருவிசைப்பா)

''பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட
பாற் கடலீன்ற பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே யிடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே'' (திருப்பல்லாண்டு)

''உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்'' (பெரிய புராணம்)

## தேவி

''மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை
வரிவளைக்கை மடமானி
பங்கையச்செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவ
பொங்கழலுருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களு மருளி

அங்கையற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாயா வதும் இதுவே" (தேவாரம்)

"செழியர்பிரான் றிருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகும் சயங்கொண்டு திறைகொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவற் கணிமண மாலிகைசூட்டித்
தன்மகுடம சூட்டிச் செல்வந்
தழைவுறு தன்னரசளித்த பெண்ணரசி
யடிக்கமலம் தலைமேல் வைப்பாம்"
(திருவிளையாடற்புராணம்)

"பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே"
(மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ்.)

## முருகன்

"மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்போற்றி காஞ்சி

மாவடிவைகும் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி"

## நடராஜர்

ஆதியாய் நடுவுமாகி யளவிலாவளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## சாத்தா

லோகவீரம் மகா பூஜ்யம்
ஸர்வரக்ஷா கரம் விபும்
பார்வதீ ஹ்ருத யானந்தம்
சாஸ்தாரம் பிரணமாம் யஹம்.

## தக்ஷிணா மூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதல்
கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி
யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்
தொடக்கை வெல்வாம்."

## நந்தி

"வந்திறை யடியிற் றாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள்சிந்த வேத்திரப் படையாற் றாக்கி
அந்தியும் பகலுந்தொண்டர் அலகிடுங் குப்பை யாக்கும்
நந்தியெம் பெருமான்பாத நகைமலர் முடிமேல் வைப்பாம்"

## சண்டேசர்

"அண்டர் பிரானுந் தொண்டர் தமக்கதிப னாக்கிஅனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவுஞ்சூடு வனவு முனக்காகச்

சண்ட சனுமாம்பதம்தந்தோ மென்றங் கவர்பொற் றடமு
[டிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்"

## திருமால்.

"பச்சை மாமலைபோல் மேனிப் பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா வமர ரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருள் ளானே'

## முப்பந்தல் முதலிய அம்மன்கோவில்கள்

"சுரும்புமுரல் கடிமலர்ப்பூ ங்குழல்போற்றி
யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கையற்க ணம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி."

## திருநாவுக்கரசர்

"இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவா ரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடன்
தொடையறாச் செவ்வாயும சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாய்"

## முப்பந்தல் ஔவையார்,

"பழுதகன்ற நால்வகைச்சொன் மலமெடுத்துப்
பத்திபடப் பரப் பித்திக்கு

முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி
பெறமுக்கண் மூர்த்தி தாளிற்
றொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்பும் தேனும்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தா
ளடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.''

## அகலிகையூற்று ஆதிமுத்தானந்த சுவாமிகள்

''இல்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனுர்க்கு மடியேன்
இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாறனடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரனாரூரி லம்மானுக்காளே''

## விநாயகர்.

''வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ்ப் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகரம் மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்''

# அநுபந்தம்.

## காற்றின் செழிப்பு.

அரபிக் கடலில் ஆதியில் தோன்றி
பருவ காலத்தில் பாங்குடன் வீசும்
தென்மேல் காற்றுத் திசையெலாம் சென்று
வன்மழை பெய்து வளப்பம் நல்குமால்
ஆரை யூரில் அதுசெயும் வேலையின்
சீரைக் கேட்டால், சினமிக வருமே
மழைபெய மேகம் வந்திடுங் காலை
பழைய மலைமேல் பலமாய் அடித்துக்
கணவாய் வழியாய்க் காற்றுடன் செல்லும்
கணத்துளி மழையோ காணுதல் இல்லை
செல்வர் வீட்டில் சீனியும் பாலும்
அல்கினர் இல்லில் அடியும் பிடியுமாம்
என்னும் தன்மை இதனா லுணர்ந்தோம்
செழித்த வூரில் சிறப்பாய்ப் பெய்யும்
பொழிந்தது ஆரையில் புழுதியும் மண்ணும்
அடுத்த வூரார் அதிமழை யென்றால்
கொடிய காற்றுக் குறைவிலை இங்கே
காற்றின் போக்கை கழறுத லரிதே
தூற்றத் தொடங்கித் தூயரைப் பெருக்கும்
ஓலை வீட்டை ஒருங்கே மறிக்கும்
சீலை தூக்கிச் சேய்மை சேர்க்கும்
கிழவிகள் தெருவிற் கீழே விழுவர்
குழந்தைக ளெல்லாம் கொட்டி நகைப்பர்
உழவர் பயிரை உதிர்த்து முறிக்கும்
கிழவர் ஏங்கிக் கெட்டேம் என்பர்
சோளம் வாழை சூழ்ந்த முருங்கை
நீளமாய் வளர்ந்து நிற்க வியலா

கண்ணில் மண்ணால் காலடி தப்பி
எண்ணெய்க் குடத்தை யிட்டு விழிப்பர்
தண்ணீர் சோறும் தையல ரெல்லாம்
கண்ணீர் வார்த்துக் கதறுவர் பெரிதும்
அரிவை யொருத்தி அயலூர்க் காரி
தெருவில் வந்து தேறி நடந்தால்
அறுவை உயர்ந்து அழுவள் துயரால்
எண்ணெய் தடவிய எழிலுறும் கிருப்பு
மண்ணைத் தடவி மாற்றுதல் கண்டு
ஆடி பார்த்து அயர்வர் இளைஞர்
வண்டியிற் பாரம் வைக்கோல் வைத்து
குண்டில் மறிந்த கூட்டம் குறைவிலை
நெல்லொடு மிளகும் நிறைந்த கூலமும்
எல்லை கட்டி இசைவாய் உலர்த்துவோர்
பல்லைக் காட்டிப் பற்பல பிதற்றுவர்
மழைக்குப் பிடித்த மாண்புறு குடைகளின்
கழைகள் முறிந்து காற்றிற் பறக்கும்
புடலைப் பந்தரும் போட்ட பயிர்களும்
நடன மாடி நலிவன காண்க
அயலூர்க் * கணக்கர் ஆலவாய் வந்தபின்
புயலின் கொடுமை பொறா தோடுவர்
சுமையைத் தூக்குவோர் தொம்மென வீழ்ந்து
சுற்றிலும் பார்த்துச் சுறுக்காய் எடுப்பர்.
கண்ணில் மண்ணும் காதில் மண்ணும்
புண்ணில் மண்ணும் பொங்கலில் மண்ணும்
விண்ணில் மண்ணே மீசையில் மண்ணே
திண்ணை மண்ணே தெருவில் மண்ணே
அடுக்களைச் சமையல் ஆகாதென்பர்
நடுக்கம் பொறாது நல்லுடை வாங்குவர்
படுக்கை வேறு பார்க்கவும் வேண்டுவர்
கலவிக் கேற்ற கால மிதென்று
தலைவியைத் தேடித் தயங்கித் திரிவர்

* கணக்கர் = உத்தியோகஸ்தர்

வெளியிற் செல்ல விளக்குகள் உதவா
குளிக்கலாம் என்றால் குளிரோ அதிகம்
வங்கக் கடலில் வந்திடும் காற்று
பங்கப் படுத்திப் பதற அடிப்பினும்
எங்கள் ஊரார் ஏற்றதே யென்பர்
ஏற்ற மழையை ஏந்தி வந்து
தூற்றித் தூற்றித் துயரைப் போக்குமே
பெய்தபின் இதுபோல் பெரும்புயல் அடிக்கும்
உய்வழி இலையென ஓலாவர் மக்கள்
வீட்டைப் பெருக்கும் வேலையால் சலிப்பர்
மோட்டின் மீதே முற்றிலும் பட்டைகள்
நாட்டில் இதுபோல் நகரமும் இல்லை
பாட்டில் பாடி பயனும் உளதோ
இயற்கை யமைப்பில் இயைந்த கணவாய்
செயற்கை எவையும் செய்யவும் இயலா
ஆங்கில மருத்துவர் அறைவதும் உண்டு
ஈங்குள காற்றே இருமலைப் போக்குமாம்
பொங்கல் வந்தால் போகும் என்பர்
தங்கி ஆடி தாண்டும் என்பர்
சித்திரை மாதச் சிறந்த தென்றலை
எத்தனை வாழ்த்தினும் ஏற்குமே அம்மா
பங்குனி மாதம் பாரெலாம் புழுக்கம்
இங்கு நமக்கோ இணையிலாச் சாமரம்
குமரியிற் செல்லக் கூப்பிடும் பெரியோர்
தமரொடு ஆலவாய்த் தங்கிப் பார்ப்பீர்
கன்னித் தெய்வக் காட்சியோ குறைவிலை
மன்னிய இருவூர் மாட்சியும் ஒன்றே
ஆவின் பாலொடு அழகிய கீரை
மேவும் காய்கறி மெச்சமாம் இங்கே
கடல்வளம் அங்கே கால்வளம் இங்கே
உடல்வளம் இங்கே ஊர்வளம் அங்கே
கயல்வளம் அங்கே கயற்கணி இங்கே
புயல்வளம் அங்கே பூரணை இங்கே
நிதிவளம் இதுவோ நிலைவளம் இதுவே.

நூலாசிரியன்.

# பொன்பாண்டியத் தேவர்.

பாண்டிய மன்னன் மகிழ்ந்து சிந்தாமணிக்கு ஜமீந்தாராக நியமித்தார். சிவெலிப்பதிமுதல் சிந்தாமணிவரை 26000 ஏக்கர் உள்ள 7 குளப்புரவு நிலம் தானம் கொடுத்தார். பெரியவீர பாலமார்த்தாண்டவர்மன் காலத்தில் திருவாங்கூருக்கு வந்து இராஜத்துரோகிகளை வென்று மன்னர்க்கு உதவிபுரிந்தாராம். 1000 படை வீரர்களுக்குத் தலைவன். 7 குளப்புரவு நிலங்கள் மன்னர் பிரான் தானமளித்தார். மாதவலாயத்தில் குதிரைப் படைகளும் யானைப்படைகளும் இருந்தன. அவையின் மேற்பார்வை இவர்க்குளது. ஆரைவாய்மொழிக் கோட்டையின் மேற்பார்வையும் பார்த்துவந்தார். பாண்டியன் கொடுத்த செப்பேடும் 923 ல் மார்த்தாண்டமன்னன் கொடுத்த சீட்டும் அக்குடும்பத்தாரிடம் இன்று முள. அவரது ஊருக்குப் பாலமார்த்தாண்டபுரம் எனப் பெயரிட்டனர். அவருக்குப் பட்டம்வைத்த மதுரை மீனுகூழியினுடையவும் சொக்கலிங்க மூர்த்தியினுடையவும் கோயில் தாழக்குடிக் கிழவூரில் உளது.

தெற்கூர் பெருமாள்புரம் தர்மகர்த்தர் உயர் திரு நா. சங்கரநாராயணபிள்ளை யவர்கள் முப்பந்தல் கோயிலும் மெய்நின்றவிநாயகர் கோயிலும் காரியங்கள் பார்த்துவருகின்றார். சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் தேசப்பற்றும் உடையவர்கள். இந்நூலை வெளியிட சமூகபண்டிலிருந்து பொருளுதவி ஊக்கப்படுத்தினர்.

ஆரைவாய்மொழி வாலிபர் சங்கத்தார் நல்லவேலைகள் செய்து வருகின்றனர். இளைஞர்கள் ஊக்கமுடையவர்கள். நாட்டிற்கேற்ற வேலைகள் செய்ய விருப்பமுடையவர்கள். சமத்துவம் சகோதரத்துவம் பரோபகாரம் முதலிய உயரிய நோக்கங்கள் உண்டு. கூட்டங்களும் நடாத்துவர்.

இந்துசாம்பவர்:— சாம்பவர் சமூகத்திற்கு மாரியம்மன், உச்சினிமாகாளியம்மன் கோயில்களும் கோளை இந்துமிஷன் பாடசாலையும் உள.

லண்டன்மிஷனில் பேர்பெற்ற ரிங்கிள்டாப் துரைமகனார் இவ்வூரில் வந்திருந்தனர். 130 ஆண்டுகளுக்கு முன்னராகும். இதை விசேடமாய்க்கூறுவர். லண்டன்மிஷனைச் சேர்ந்த பல ஸ்தாபனங்களும் உண்டு. 700 மக்கள் உளர். லூதர்மிஷன் ஸால்வேஷன் ஆர்மி ஸ்தாபனங்களும் உள.

"The Muslims always received very kind and generous treatment at the hands of the rulers of Travancore. So great was their attachment to the ruling family that when a Mugal Sirdhar made an irruption into Travancore in the middle of the seventeenth century, the local muslims not only refusedto join the invader but gavetheir support to the state in turning him beyond the Aramboly frontier." புதிய ஸ்டேட்மானுவல் VOL.I. 812 ஆவது பக்கம் 17-ஆவது நூற்றாண்டின் மத்தியில் முகல் ஸர்தார் படையெடுத்த போது முஸ்லீம்கள் அவனோடு சேராமல் திருவாங்கூருக்குழைத்து ஆரைவாய்மொழிக் கோட்டைக்கு வெளியில் துரத்தினர். இதில் இந்நாட்டிலுள்ள முஸ்லீம்களும் உண்டு. அப்போதே இங்கு கோட்டைக்குள் முஸ்லீம்களும் தங்கிவருகின்றனர். மற்றையூர் முஸ்லீம்களுடன் இவர்களும் சேர்ந்து துரத்தினர்.

## MID WHIFE.

---

சுகாதார இலாகாவிலிருந்து 1114 முதல் ஓர் மிட் ஒயிபை கர்ப்பப் பாதுகாப்பும் சிசுபரிபாலனமும் செய்ய ஏற்படுத்தியிருக்கின்றனர். எல்லா வீடுகளிலும் சென்று கர்ப்பிணிகளுக்குபதேசமும் பிரசவத்திற்குதவியும் இனமாய் மருந்துமளிப்பர். இதனால் சிசுமரணமும் குறைந்து வருகின்றது. பெண் மக்களெல்லாம் இது சம்பந்தமான தமிழ்த் துண்டுப் பத்திரிகைகள் வாங்கி வாசிக்கவேண்டும்.

ஆரும்புழை:— மேற்குத்தொடர்ச்சி மலையினின்றும் கிழக்கே செல்ல ஐந்துபுழைகள் உளவென்றும், இது ஆரும் புழையென்றும்

திருவாளர் சோமசுந்தரபாரதியவர்கள் M. A. B. L. கூறுகின்றனர். புழை = நுழைவாயில் (கணவாய்) ஆரைவாய் மொழிப் பெயர் ஆராய்ச்சியில் இத்தகைய யுக்தி வாதங்களையும் சேர்த்துப் படிக்க.

## நம்பிரான் விளையாட்டு.

சீர்மிகும் ஆரையில் சிறப்புடைத் திருநாள்
ஏர்பெற நடப்பது எப்போ தம்பா!
பங்குனி மாதம் பண்புடை நாளில்
இங்கு நமக்கு இணையிலாக் காட்சி
அங்கதன் அழுகை அறைகுவன் கேளாய்
மணக்குடி ஊரொடு மங்கலம் வருமால்
பணகுடி சூழ்ந்த பாண்டியூ ரனைத்தும்
நம்மூர்த் திருநாள் நம்பிரான் ஆட்டம்
விம்மிப் பார்க்க விழைகுவர் மாதே!
பாத்திரக் கடைகள் பாங்குடன் நோக்க
ஆத்திர முடனே அரிவையர் செல்வர்
மிட்டாய்க் கடைகள் மிக்கன கண்டு
தட்டுடன் வாங்கத் தாயை வினவுவர்
கடலைக் கடைகளாம் கண்ணாடிக் கடையாம்
குடலைப் பூக்கள் கோத்த கடைகளாம்
வெற்றிலை பாக்கோ விற்றுத் திரிவர்
விளம்பரம் தூக்கினோர் விரைவாய்ச் செல்வர்
இளைஞர் கூட்டம் என்னை யென்பர்
காப்பிக் கடைகள் கணக்கி லடங்கா
சாப்பிடும் கடையில் சக்கரம் குறைவே
புட்டாச் சேலைகள் கட்டாய் விற்பர்
கிட்டாப் பொருளும் மட்டாய் வருமால்
தையல் கடைகளில் தையலார் வேலையே
பையல் அங்கிகள் பாங்குடன் வாங்கலாம்

எண்ணிலாக் கடைகளும் எண்ணிலா மக்களும்
வெண்ணிலா வீசும் விழாவில் வருமால்
திருநாள் திருநாள் தெய்வத் திருநாள்
பெருநாள் பெருநாள் பெண்டுகள் பெருநாள்
ஊரெலாம் கொடிகள் உடையெலாம் புதுமை
வீடெலாம் விருந்து விளக்குகள் பலவே
தேடலென் திரவியம் திருநாட் கிலையெனில்
ஊடல் கொள்வோர் உறுபொருள் பெறுவர்
போலீஸ் வீரர் பொதுவாய் நிற்பர்
எக்ஸைஸ் இலாகா இலங்கும் ஒருபால்
ஆசிரியர் கூட்டம் அமைவுடன் பார்க்கும்
தேவத் தான திலகர் வந்தால்
ஆவது நோக்கி அமரார் ஒருபால்
கோவில் கர்த்தர் கூடவே வருவார்
அகத்திய லிங்கர் அங்கு மிங்கும்
அகத்தியம் வேண்டுவ ஆர்வமாய்ச் செய்வர்
கடையில் விற்பனைக் கணக்கு முடித்துத்
தடையில் மளிகைத் தலைவர் கூடுவர்
ஊரா ரெல்லாம் ஒருங்காய்த் திரள்வர்
சீர்பாதம் தாங்கச் சிலர்முன் வருவர்
பத்தியின் பெருமை பலத்தின் நிறைவும்
புத்தியி லொன்றல் புண்ணியம் மிகுதி
இத்தனை பயனும் இதனாற் பெறலாம்
கோயி லெங்கும் கொட்டும் முழக்கும்
சாயும் நேரம் சாமியைப் பார்க்க
தாயும் மக்களும் தட்டில் செல்வர்
பாட்டுகள் ஆட்டம் பலசொற் பொழிவும்
வேட்டைச் சாமி விரையுமுன் நிகழும்
பத்து நாளும் பற்பல தத்துவம்
பெத்தரைப் படைத்துப் பெட்புடன் காத்து
நித்த மழித்து நின்மல ராக்கி
முத்தி யருளும் முழுமுதற் கடவுளின்
சத்தியின் பெருமை சாற்றத் தகுமோ?

எட்டு நாளும் ஏற்பன நடப்பதால்
மட்டிலா மகிழ்ச்சி மக்கள் அடைவர்
ஒன்பதாம் நாளில் உயர்ந்த பரியில்
மன்பதை காத்து மாற்றலர் வெல்வர்
வேட்டை யாடி வினைகள் தீர்ப்பர்
நாட்டவர் கண்டு நலமுடன் தொழுவர்
வெற்றிலை பாக்கும் விரைசெறி பூவும்
முற்றிலும் தட்டில் முறையாய் வைத்து
கொட்டும் முழக்கும் கூட்டிக் கொண்டு
இட்டமாய் எதிர்செலும் திறமுடைக் கணக்கர்
நாட்டார் கூட்டம் நலமுறும் மன்றில்
பேட்டி வந்த பெருமை யுன்னி
பட்டும் மாலையும் பாங்குடன் வைத்த
தட்டைத் தூக்கித் தகவுடன் வருவர்
குதிரை கறங்கும் கோலம் பார்க்க
கொதித்து நிற்பர் குழந்தைகள் பலரும்
மாலை மயங்குமுன் மாடன் தம்பிரான்
மாலை சாத்தினால் வரமருள் புரிவர்
அரியும் அரனும் அமைவுடன் சேர்ந்த
அரிகர புத்திரன் அசுவத்தி லேறினன்
சைவர் பார்த்துச் சிவசிவ என்பர்
வைணவர் கண்டு வினயமாய்த் தொழுவர்
உலகத் துன்பம் ஓட்டுவா னையன்
விலகி யோடுவர் வீரம் குறைந்தோர்
ஆரை யூரில் ஆண்கள் உண்டு
வீரஞ் செறிந்த விடலைக ளுண்டு
உயரம் மிக்க உத்தமர் உண்டு
படையிற் சேரப் பலரும் உண்டு
நடையிற் சிறிதும் நலியார் உண்டு
எல்லா வீரரும் இங்குளர் என்று
பல்லோர் சொல்லப் பாதம் தூக்குவர்
சுற்றிச் சுற்றி சுழன்று வருவர்
பற்றிப் பற்றிப் பலரும் தொங்குவர்
ஒற்றுமை காட்டி உயர்த்தி நிற்பர்

விமானம் போன்றே விண்ணி லேகுமால்
அமானிடத் தன்மை அனைவரும் அறைகுவர்
சாத்தனூர் ஊர்தியில் சமர்த்தர் நால்வர்
ஆத்த மாக அடைவாய் நிற்பர்
பூரணை யன்னையும் புட்கலைத் தாயும்
ஆரணம் போற்றும் ஐயன் பாதமும்
கண்டு களிக்கும் கடலில் மூழ்குவர்
எங்கும் மங்களம் என்றும் மங்களம்
பொங்கும் மங்களம் பூரண மாகுமே.

(நூலாசிரியன்)

## தாய் மகளுக்கு ஆரையூரைக் காட்டுகிறாள்.

---

உச்சி மலை மீதில்—முருகன்
ஒப்பிலாக் காட்சியடி
மெச்சும் மலையூற்று—அடியில்
மிக்கச் சுரந்திடுமே.
பாலுக்கு ஒப்பாமே—மகளே!
பன்னீரும் தோற்றுவிடும்.
சேலை யிறுக்கிக் கட்டி—மடந்தையர்
சேர்ந்து நடப்பாரே
செப்புக் குடமெடுத்துச்—சிறுமியர்
வெப்பத்துடன் வருவார்
செப்புவர் தாய்மாரும்—உலகில்
சிறப்புகள் வருந்தினோர்க்கே
வேலவன் கோயிலதில—பெண்டுகள்
வெள்ளிக் கிழமைகளில்
பாலுடன் நெய்யும் கொண்டு—பதிவாய்
பாதத்தில் வைத்திடுவார்.
காற்றாடி மலையதிலே—கரிய
கற்பாறை மீதினிலே
கூற்றுக் கிரையானார்—நீலகண்டர்
குற்றங்கள் சாட்டப்பட்டு

குருசடிக் கோயிலொன்று — அங்கே
கும்பிடும் மக்களுண்டு
வருஷத் திருநாளில் — வணங்க
வருபவர் கணக்கிலையே
சுங்கத் தலமாகும் — சவுக்கையில்
சோதனை செய்வாரே
எங்கெவர் போனாலும்—பொருள்களை
இங்குதான் காட்டவேண்டும்
கோட்டை வாயிலின்கண் — படைவீரர்
கோட்டமும் சாட்டிடுவேன்
பாட்டினில் பெரியவளாம் — ஔவை
பாட்டியின் கோயிலைப்பார்
சித்திரை நாலகமும் — அங்காடி
பத்திகள் மாண்புகளும்
பத்தியில் பெரியவராம்— அகலிகைச்
சித்தரின் சமாதியுமே
மீனாக்ஷி கோயிலினும்— மிக்க
மேன்மையாம் கட்டிடமில்
ஆனதை பெரியவராம்— அகத்தியர்
ஆலயம் மலைமீதில்
கூனைக் கிணறுமுண்டு— கொல்லையில்
கூட்டமாய்ப் பயிர்களுண்டு
ஆனந்தமளித்திடுமே— அநேக
ஆடுகள் மாடுகளும்.

நூலாசிரியன்.

## வலிய யஜமான்.

---

ஜனறல் குமாரன் தம்பியும் புனச்சல் வலிய யஜமானும் கார்த்திகைத்திருநாள் இராமவர்ம மன்னர்பிரானுக்கு உதவியாய் இராமேசுவரம் தீர்த்தயாத்திரைக்குச் சென்றனர். (இராமேசுவரம் விற்பாட்டில் உளதென்பர்)

வலிய யஜமான் பெயர் எழுதப்பெற்ற ஓர் செக்கு கப்பிய றைப்பகுதியில் சந்தைவிளையில்உளது. சுசீந்திரம் தலைமையாசிரியர் ஸ்ரீமான் தாணுபிள்ளையவர்கள் வலிய யஜமானது குடும்பத்தைச் சார்ந்தவர். அவரைப் பற்றிய சில குறிப்புகள் தந்தார்கள். வலிய யஜமான் இருவரென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அது சரிதானோ?

## பல்பொருள்.

---

ஆரையிலும் நாஞ்சிநாட்டிலும் உள்ள வெள்ளாளர் பாண்டி யிலிருந்து வந்தவர்களும் பூர்வ குடிகளும் சோழர்காலத்து வந்த வர்களுமாவர்.

10ாம் நூற்றூண்டிலிருந்து 13ாம் நூற்றூண்டு வரையிலும் நாஞ்சிநாடு சோழர்களின் கீழ் இருந்ததென்பர்.

முன் பல படையெடுப்புக்களிலும் ஆரைவாய்மொழி முதல் கோட்டாறு உள்ளிட்ட நாஞ்சிநாட்டில் உள்ள கட்டிடங்கள் இடிக் கப்பட்டும் மக்கள் துன்புறுத்தப்பட்டும் வந்தனர். பல படை யெடுப்புக் காலங்களிலும் எதிர்த்து நின்றதால் தைரியமும் போர்த் திறமையும் பொறுப்பும் நாஞ்சிநாட்டார்க்குண்டென்று ஸ்ரீ நாகமையா ஸ்டேட்மானுவலில் கூறுகிறார்.

நாஞ்சிநாட்டார் திருவாங்கூர் அரசர்களுக்கு வேண்டி மதுரை மீனாக்ஷியும் சோமசுந்தரரும் இருக்கும் ஆரைவாயமொழியில் வைத்து முன்னாளில் சத்தியம் செய்ததாய் ஓர் கர்ணபரம்பரை வரலாறுளது. சிலர் மதுரையில் வைத்து நடந்ததென்பர்.

சித்தர்கிரி அடிவாரக்கோயிலில் தற்பொழுது தரும கர்த்தரும் தமிழபிமானியும் இந்நூல் வெளியிடப் பொருளுதவி செய்து ஊக் கப்படுத்தினவருமான திருவாளர் **சண்முகம் பிள்ளையவர் கள்** வீட்டு ஓலைப்பிரமாணத்தில் 1003 புரட்டாசி 3ாம் தேதி மீனாக்ஷி ஆனந்தவடிவின் மகள் காந்திமதியம்மாள் தியாகராசபிள்ளை மகன் மீனாக்ஷிநாதபிள்ளைக்கு செக்கர்கிரி முருகன் சொத்து முழு தும் விலையெழுதிக் கொடுத்த ஓலைப்பிரமாணத்தில் உதய மார்த் தாண்டன்புதூர் பெயர் வருகின்றது.

## மீனுக்ஷி சுந்தரர் கோயில்.

காம்பவுண்டு சுவர் நீளம் 213 அடி. அகலம் 164 அடி. கொடிமரமண்டபம் 47அ × 32அ. தெப்பக் குளம் நீளம் 115 அடி. அகலம் 100 அடி. ஸ்ரீ கோவில் 84 அ × 83 அ. ஓர் ஊரின் ஜனத்தொகைக்குத்தக்கவாறு கோயிலின் விஸ்தீரணம் இருக்கலாம். கோயிலின் விஸ்தீர்ணத்திற்குத்தக்கவாறு தெப்பக்குளமும் அமைப்பது முன்னோர்முறையாம். சோழ இராஜதானியான திருவாரூரில் கோயில் ஐவேலி; குளம் ஐவேலியன்றே? தெருவீதியும் கோயில் கணக்கை ஒட்டியதே.

## இராஜ பக்தி

### சித்திர சபை.

மீனுக்ஷியம்மன் சந்நிதியில் முகப்பு மண்டபம் அமைத்திருக்கின்றனர். அதற்குச் சித்திர சபையென்று பெயர். 16000 ரூ செலவு. கவண்மென்றினுடையவும் ஊர்காரர்களுடையவும் பொருளுதவியோடு கட்டப்பட்டது. இக்கோயிலில் பல வேலைகளுக்கும் **கவண்மென்றும்** ஊர்காரர்களும் பொருளுதவி செய்திருக்கின்றனர். 500 ரூபாயில் 4 கல் தூண்கள் உள. அதில் ஒன்றில் நமது காருண்ணிய மன்னர்பிரான் ஸ்ரீ சித்திரை திருநாளின் உருவச்சிலையை விசேடமாய்க் கல்லில் அமைத்திருக்கின்றனர். புராணசம்பந்தமான பற்பல பிரதிமைகளும் செய்திருக்கின்றனர். பண்டைக்காலச் சிற்பக் கலைவளர்ச்சியைப்போல் இக்காலத்திலும் உண்டென்று இதைப்பார்த்தவர்கள் கூறுமலிரார். சிறந்த வேலைகளாக காளி, நடராஜர், சிவகாமி, வாமனவதாரம், அகஸ்தியமுனிவர், இராஜராஜேசுவரி, ஸ்ரீ சித்திரைத்திருநாள் முதலிய உருவச்சிலைகளாகும். மண்டபத்தின் நீளம் 45 அடி அகலம் 40 அடி உயரம் 19 அடியாம். இவ்வூர் ஜனங்கள் அரசபக்தியில் சிறந்தவர்கள் என்பதற்கு மன்னர்பிரான் பெயராலமைத்த இம்மண்டபமும், ஸ்ரீ சித்திரைவிலாச நூலகமும் தக்க சான்று பகரும்.



மீனாக்ஷிசுந்தரர் கோயில்

சித்திரை சபை.

*Photo by N. C. Kuttalam.*

In front of the local temple dedicated to Meenakshi-Sundaresar there is a 'Mukha-mandapam' named 'Chitra Sabha.' It is 45 feet long 40 feet broad and 19 feet high. An amount of Rs. 16000, raised by public donation and Government contribution had to be spent towards the construction of this grand edifice. There are four granite pillars supporting the mandapam, each pillar costing Rs. 500/- On one of these pillars a beautiful image of His Highness Sri Chithra Thirunal Maharajah is carved out with rare artistic skill. In addition to this the images of Puranic personages like Kali, Natarajan, Sivakami, Vamanan, Agasthian, and Raja Rajeswari carved out on these pillars are specially note worthy, since they prove beyond any shadow of doubt that this ancient and noble art has still got its votaries amongst us. The first stone for the Chitra Sabha was laid by Devaswam Commissioner O. S. Ramaswamy Iyer Esq. on 18—1—104 & it was completed on 29—11—109. This 'Chitra Sabha' and the 'Chithira Vilas Library' are standing monuments of the loyalty which characterises the people of the locality.

## வடக்கூர் தெருக்கள்,

---

1. சந்நிதித் தெரு
2. மீனாக்ஷியம்மன் வடக்குத்தெரு
3. சிவகாமி கீழத்தெரு
4. புட்கலை (பொற்கலை) தெற்குத்தெரு
5. பூரணை மேலத்தெரு.

குறிப்பு:— இவ்வூரில் மீனாக்ஷி, சிவகாமி, புட்கலை, பூரணை ஆகிய நான்கு தேவியரின் பெயர்கள் பண்டைக்காலந்தொட்டே ஓலைப்பிரமாணங்களிலும் மக்கள் பெயர்களிலும் வழங்கிவருவதால் தெருக்களுக்கும் அப்பெயர் வைத்து அழைத்தால் செல்வம் ஓங்கும் என்பர். ரிக்கார்டுகளிலும் இவ்வாறு எழுதலாம்

# ஸ்ரீ சித்திரை மன்னர்பிரான் மாண்பு.

(சொல்லு பாப்பா என்ற மெட்டு)

பாடுவோமே பாடுவோமே
பாமனருள் புரியப் பாடுவோமே
ஆடுவோமே ஆடுவோமே
அனைவரும் சேர்ந்து கொண்டாடுவோமே

பதும நாப தாசனைப் பாடுவோமே
பாரெங்கும் புகழ் பெற்றார் பாடுவோமே
புதுமைகள் பல செய்தார் புகழுவோமே
பூர்த்தியான அறிவளித்தார் புண்ணியவானே
வேலை யில்லாத் திண்டாட்டம் விளக்கினேமே
வேண்டுவன செய்து வைத்தார் வியப்புறவே
ஆலைகளில் தொழிலமைத்தார் ஆர்வமாக
அனைவருக்கும் அன்னமாச்சு அன்புடனே
ஆலயங்கள் திறந்து வைத்தார் ஆதரவாக
அரிசனமும் அந்தணரும் சேர்ந்து நின்றாரே
பள்ளிவாசல் செய்ததைப் பாராட்டுவோமே
பலவிடத்தும் மின்சாரத்தைப் பார்க்கவேண்டுமே
பல்கலைக் கழகமதைப் பரவிடுவோமே
நல்கலன் செல்லுது பார் நாவிகருடன்
மெத்த அறிவுடைய மேன்மையாளராம்
**ஸர்.ஸி.பி. இராமசுவாமி ஐயர்** சிறந்த மந்திரியே
**சித்திரையாம் எங்கள் மன்னர்** செப்புவோமே
சீராக ஆண்டு வருவார் சிறப்புடனே. (பாடு)

நூலாசிரியன்.

ஆரைவாய்மொழி கணவாயைப்பற்றி
உயர் திரு இராமனுஜையர் அவர்கள்
(ஆர்க்கியாலஜிக்கல் சூப்பிரண்டண்டு)
இந்திய சரித்திர மாதாந்தப் பத்திரிகையில் 18 ஆண்டு
களுக்கு முன்னர் எழுதியது.

---

"Of about a dozen passes that pierce the other wise impregnable mountain—barrier of Travancore three i e the Achchancoil, the Aryankavu and the Aravaymoli passes stand out as the most Importent that connected Travancore and plains of Tinnevelly, Madura and Coimbatore.

The Aramboli pass formed the portals through the Pandayas, Cholas, Vijayanagara generals and the Madura Nayaks poured in from the other side of the ghats, time and again.

Simple fortifications of stone walls defended by a stout garrison must have served as a defence· The debris of these walls are still traceable in the ruined heeps of loose stone lying about in **situ** and the thorny belt of Karuvel trees the ragged survivor of a more effective kadaran of former days, still serve as a whole some deterrent to the smuggling activities on this Frontier station. The etymology of the name of the Aruvaymoli pass is one of interest and various interpretations have been suggested. In **ayacut** registers, the name is given with a long **a** and ஆரைவாய்மொழி may be considered as a corrept derivative of ஆரைவாய்வழி the gate way of the fortifications. If the botanical signification of ஆரை a kind of plant is taken, the

place may be considered to have derived its name from the plants which may have grown in abundance in its vicinity. "அருகன்வழி" and its meaning of the 'ways of Buddihists' who are alleged to have come through the pass entroute Ceylon appears to be a fanciful interpretation. With the short a as the name occurs in late inscriptions அருவாய்மொழி may also be considered as derived from அரண்வாய்வழி which has the connotation as ஆரைவாய் வழி noticed above. If the last syllables மொழி have to be given prominence, then a vague resemblance may be seen between this name and அருண்மொழி one of the titles of Raja Raja I, the Chola King, who was first to christen his southern conquests in his own name. மொழி may have then been paraphrased into வாய்மொழி and அருண்மொழி may have then been expanded into அருள்வாய்மொழி from which அருவாய்மொழி may have been the colloquial derivative. The Tiruvalangadu plates give this title of Arunmoli to Raja Raja I (South Indian Inscriptions Vol. III P. 391)"

இதற்கு மறுப்புரையாக அதே மாதாந்தப் பத்திரிகையில் மிஸ்டர் A. இரங்கசுவாமி சரஸ்வதி (Asst. Epigraphist) 146ாவது பக்கத்தில் எழுதியிருக்கிறார். அது வருமாறு.

"Mr. Ramanatha Iyer considered various alternative origins as ஆரைவாய்மொழி, அருகன்வழி, அருவாய்மொழி, அரண்வாய்மொழி. I think my friend has entirely missed the correct import of the expression. The latter portion of the name of the Pass is வழி instead of மொழி which Mr. Ramanatha Iyer himself suggests. But it is only with reference to the main stem of the word that he has been misled The word is found used in two places in the

Sangham literature i e in Ahananuru (281) and Purananuru (175). The 'Aravaiys, referred to in the two places do not appear to be identical. But the meaning of the word in both is the same. The word 'Arai' in Tamil means a mountain and with the addition of the termination 'way' (mouth) would mean the mouth of a mountain. It would therefore mean a mountain Pass."

திருவாதிரை மடம்:— *அகலிகையூற்றில் சிவபூசை செய்த பின்னர் இம்மடத்தில் தங்கியிருப்பர். சைவ ஆசாரத்தைக் காட்டுகின்றது.*

குட்டிப்பிள்ளை ஞானியார், *சிவதாணு ஞானியார் என்ற பெரியார்கள் இருவரும் சகோதரர்கள். சிறந்த சிவ பக்தர்கள். பலவில்வ மரங்கள் நட்டு வளர்த்து எணி வைத்து நாடோறும் வில்வம் பறித்துச் சிவபூஜை செய்தனர்.*

*திருவாவடுதுறைப் பண்டாரச் சந்நிதிகள் ஆரையூரில் சில்நாள் தங்கியிருந்தனர். இவர்களும் விருந்தளித்தார்களாம்.*

---

## *தண்ணீர்ப் பஞ்சம்.*

நேரிசை வெண்பா.

1. *ஏழாநீ ராடிவரும் எங்களது பெண்களெல்லாம்*
*மாழாமற் செய்யும வகையுளதோ—தோழாகேள்!*
*மன்னவனு மல்லாது மாநிலத்தார் போற்றுகின்ற*
*தென்னவனும் பார்வதியும் தேறு.*

2. *செத்தவரின் துட்டியிலே சேர்ந்துநீ ராடுதற்கு*
*ஒத்த குளமுளதோ ஓதுவீர்—இத்தரையில்*
*கோடையா லுற்ற கொடும் வெப்பம் தீர்ப்பதற்கு*
*வாடையி லுண்டோ வகை.*

3\. நீறில்லா நெற்றியை நித்தம்பா ழென்பார்கள்
ஆறில்லா வூருக் கழகேது?—தேறினபின்
வெட்டாறு வெட்டியோ வேறாறு தான்பார்த்தோ
முட்டாமற் செய்வீர் முறை.

4\. சுங்கான ஓடையாம் சூழ்ந்தநற் பொய்கையாம்
மங்கா வலத்துறையோ மாநதியாம்—தங்காரே
கூந்தல் குறைவதோ கோடை மலையூற்றோ
ஏந்திழையா ரெண்ணி யிசைந்து.

5\. முப்பந்த லன்னையே! முத்தாரி! மாரியம்மா!
வெப்பந்தீர் காளியம்மா! வேண்டுகின்றோம்—இப்பதியில்
பெண்டெய்வம் மிக்கிருந்தும் பேதையர் துன்புறுதல்
கண்டிருத்தல் சாலுமோ காண்.

நூலாசிரியன்.

தண்ணீர் வசதிக்காக சுங்கான் ஓடைத்திட்டம் ஸர்க்காரிலிருந்து அனுமதித்திருக்கின்றனர். மலையூற்றைப்பெரிதாக்க முயலுகின்றனர். தெருவிற்கிரண்டு குழாய்க்கிணறுகள் போடலாம் குளிக்க மூன்று குளங்கள் வேண்டும். இருக்கும் குளங்களைச் சீர்படுத்துக

## தேவசகாயம் பிள்ளை.

---

அவரது சரிதம் எழுதப்பட்ட நூற்கள். (தமிழ்)

(1) தேவசகாயம் பிள்ளை நாடக ஏட்டுப்பிரதி. (2) பாதர் எலியாஸ் இற்றலியன் பாஷையில் மாதப்பத்திரிகையில் வெளியிட்டவை, (3) பரஞ்சோதிநாதசுவாமி சரிதம் (4) வேதசாக்ஷி தேவசகாயம் பிள்ளை சரித்திரம், (தமிழ்) (5) யேசு இருதயதூதன் பத்திரிகை, (6) தேவசகாயம் பிள்ளை சரித்திரம் (மலையாளம்) பலரும் மார்த்தாண்டவர்ம மன்னர்பிரான் அவரைத்

---

கோடைமலையூற்று = கோடையில் இவ்வூர் மலையூற்றில் தண்ணீர் கண்ணீர்போல் சிறிதாய் ஊறிவரும். நூற்றுக்கணக்கான குடங்கள் வரிசையாய் வைத்திருப்பர். ஒருநாள் போனால் மறுநாள்தான் தண்ணீர் கொண்டு வரலாம்.

தண்டித்ததாய் எழுதுகின்றனர். அம்மன்னர்பிரான் ஒருவர் மதம் மாறின காரணத்திற்குத் தண்டித்திருக்கமாட்டார். சிறு உத்தியோகஸ்தர் யாரேனும் உத்தரவிட்டிருக்கலாம். மன்னர் பிரானையும் தளவாய் இராமையனையும்பற்றிக்கூறுவது சரியல்லவென்று இந்துக்களிற் பலர் கூறுகின்றனர். அன்றியும் இவ்விரு பெரியார்களும் சிறந்த புத்திமான்கள். மார்த்தாண்டவர்ம மன்னர்பிரானைப்போல் உயர்ந்த நோக்கமுள்ள அரசர் இல்லை. தேவசகாயம்பிள்ளையைத் தண்டித்ததற்கு ஸர்க்கார் ரிக்கார்டுகளில்லை. கிருஸ்தவர்கள் தங்கள் மதப்பிரசாரத்தின் பொருட்டு நூலை வாசித்தவர்களது மனம் உருகுமாறு எழுதிவைத்தனர் என்று மறுப்புரை கூறுகின்றனர். இந்திய நாட்டில் கிருஸ்தவர்களை ஆதரித்தவர்களும், கிருஸ்தவ வாழ்வில் சந்தோஷமுள்ளவர்களும் திருவாங்கூர் சர்க்காரும், திருவாங்கூர் மக்களும் திருவாங்கூர் அரசகுடும்பத்தாரும்போல் வேறு கூறவியலுமோ?

இன்றைக்கும் 16 இலட்சம் கிருஸ்தவர் இந்நாட்டில் சுகமாய் வாழ்கின்றனர். ஆகவே அரசர்பெருமானும் மந்திரிசத்தமனும்தான் அவரைத் தண்டித்தார்கள் என்பதற்கு ஏற்ற ரிக்கார்டுகள் இல்லை. இந்நிலையில் அதனை எப்படி நம்புவது? கல்வெட்டுகள், ஓலைப்பிரமாணங்கள், ஸர்க்கார் வெளியீடுகள் யாதொன்றிலும் இன்றளவும் எங்கள் மன்னர்பிரான் கட்டளையிட்டதாய்க் காட்டமுடியாது. மேலும் அவர் முஸ்லீம்கள், இந்துக்கள், கிருஸ்தவர்கள் ஆகிய எல்லாக்குடிகளையும் தன்பிள்ளைகளைப்போல் நேசிக்கும் தன்மை உடையவர். மனிதனாகிய தேவசகாயம்பிள்ளை பக்தியினாலும் தவத்தினாலும் ஞானத்தினாலும் எப்படி மகான் ஆனாரோ அவ்வாறே எங்களது மாட்சிமைமிக்க மார்த்தாண்டவர்ம மன்னர் பிரானும் முறைஜபம், பத்திரதீபம், லக்ஷதீபம், ஹிரண்யகர்ப்பம், துலாபுருஷதானம், யஜ்ஞம், அன்னதானம், பூதானம், கோதானம், வேதமந்திரபாராயணம், ஆலயத்திருப்பணிகள், திருவிழாக்கள், நித்தியகர்மம், வழியம்பலப்பணிகள், தெய்வபக்தி இவைகளால்மனிதனாகிய அவர் தேவனாய் இன்றும் விளங்குகிறார் என்று உறுதியாய்க் கூறுவேன். மனிதன் தேவனாகலாம் என்று இந்துமதசாஸ்திரங்கள்முறையிடுகின்றன. உலகசரித்திரத்தில் இவரைப்போன்ற அரசர்கள் சிலர்தாம் உளர். பெரியகர்மயோகி; உயர்ந்த ஞானி; சிறந்தபக்தன். இவரதுமகிமையை அறிந்துதான் ஸ்ரீ சித்திரைத்திருநாள் மன்னர்பிரான்

பல்கலைக்கழகத்தில் இவரது பெயரால் ஓர் ஸ்காளர்ஷிப் ஏற்படுத்தி யிருக்கின்றனர். திருவாங்கூரில் இவருக்குக் கோயில் கட்டித் திருவிழாவும் ஏற்படுத்தி வழிபடவேண்டும்.

## நினைவு.

சோணாசலம் சாத்தாவுடையான் மூப்பன் கண்டு இவிடெ ஓரடியந்திரம் ஆக கொண்டு ஆவகைக்கு இ(½) கோட்டை எள்ளும் ச(4) துலாம் பஞ்சதாறயும் ம(10) கலசம் நல்லெண்ணயும் க(1) துலாம் சந்தனக்கட்டியும் எடுப்பிச்சுங் கொண்டு (மஉ) 10 உ உச்சக்கு முன்பில் வருந்ந ஆளின்றெ கூடத்தன்னெ அருமனை நாமற்றக்கு நடு நடத்து வருகயும் வேணும் எந்நும் இப்படிக்கு திருவுள்ளத்தின்படி நினவு எழுதிய கணக்கு செண்பகராமன் மாதேவன் எழுத்து. (ஒப்பு)

## 109-ம் பக்கம் அரசர் நினைவு.

இரண்டும் மகாராஜா திருவுள்ளத்தின்படி கணக்கு செண்பக ராமன் மாதேன் எழுதியதாய்க் கையெழுத்திட்ட 2 ஓலைப்பிரமாணங்கள் மூத்த பிள்ளை வீட்டார்கள் வகை கிடைத்தன. பழைய வோலைகள்தான். புதிதாக உண்டுபண்ணினவையல்ல, ஆண்டு இல்லை. மன்னர்பிரான் பெயரும் இல்லை. ஒருநாளும் இருநூறு பணம் கடன் வாங்கியிருக்கமாட்டார். ஒருக்கால் ஐயந்தன் சங்கரன் நம்பூதிரியவர்கள் வாங்கியிருக்கலாமெனச் சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். மன்னர்பிரான் பெயர் சொல்லி யாரேனும் வாங்கியிருக்கலாம் என்கின்றனர். அன்றியும் திருவனந்தபுரத்திலிருந்து ஆரைவாய்மொழிக்கு எழுதியனுப்பவும் மாட்டார்கள். ஆதலால் இரண்டு பிரமாணங்களும் மன்னர்பிரானைச் சம்பந்தித்ததல்லவென நூலை வாசிப்போர் உணர்ந்துகொள்ளவேண்டும். ஸர்க்கார் அவசியங்களுக்கு வாங்கக்கூடும், சொந்த அவசியத்திற்கு ஒருபோதும் வாங்கவேமாட்டார்கள். மூத்த பிள்ளை பெரியபிரபு என்பதற்கையமில்லை, இவர்கள்பெரியஇராஜபக்தர்கள். பிரமாணம்இருப்பதுஉண்மைதான்

கன்னியாகுமரியிலும் ஆரைவாய்மொழியிலும் கோயிலையொட்டி பஜனை மடம் பஜனைக்காரர் தங்க ஸர்க்காரிலிருந்து கட்டியிருக்கின்றனர்.

வடக்கூர் பொய்கை விநாயகர் கோயில் தர்ம கர்த்தர்கள் உயர் திரு. ஆ. முத்துக்கறுப்ப பிள்ளையவர்களும், சி. ந. சுப்பிரமணிய பிள்ளையவர்களும் ஆவர். இவர்கள் சைவப்பற்றும் தமிழ்ப் பற்றும் உடையவர்கள், இந்நூல் வெளியிட சமூக பண்டிலிருந்து பொரு

ளுதவி செய்தார்கள். கீழத்தெரு, வீ. ஆறுமுகம் பிள்ளையவர்கள் சிவதொண்டியற்றும் இயல்பினர். மீனாக்ஷியம்மன் கோயிலில் இவர்கள் சகோதரர்கள் தொண்டியற்றியிருக்கின்றனர், சைவப் பற்றுடையார். இந்நூலியற்ற பொருளுதவி ஊக்கப்படுத்தினார்கள்.

## கோட்டை.

சண்டாசாகிபின் படையெடுப்பு முடிந்தவுடன் மார்த்தாண்ட வர்ம மன்னர்பிரான் நாட்டின் தென்கிழக்கு மூலைமலையில்லாமலிருப்பதால் பாண்டியினின்றும் படைகள் வருவதைத்தடுக்கவும் நாட்டின் பாதுகாப்பிற்கும் குமரிமுதல் ஆரைவழி மலைவரையிலும் கோட்டைகட்டினார்.

கறிக்கு மணமளிக்கும் அப்பக்கொடி இங்கு ஏராளம் உண்டு. ஓர் பாங்கு அவசியம்.

## கர்ப்பிணி மரணக் கல்வெட்டு.

முப்பந்தல் ரஸ்தாவின் அருகில் நாகர்கோவிலுக்கு 9–வது மைல் கல்லின் கிழக்குள்ள சுமைதாங்கியில் காணப்படுவது.

உ- ௯௱௰௮ ௫ பங்குனி ௴ ௨௰௩ ௨ தாணுவன் தாணுவபிள்ளைக்கு மரணதுணை. 200 வருடத்திற்கு முன்னுள்ளது. ரோடு அதற்கு முன்னமேயுளது.

குறிப்பு:– 51-ம் பக்கம் ஆலவாய் விற்பாட்டை "கல்லார்க்கும் கற்றவர்க்கும்" என்றமட்டிலும் 191–ம் பக்கம் காற்றின் செழிப்பை "பாலொடு கலந்த நீரதுபோல் பக்ஷமாய் நாமிருந்தோம்" என்ற மட்டிலும் பாடலாம்,

## Extract from the Inspection Notes of the Devaswom Commissioner Mr. O. S. Ramaswami Iyer on 18-1-114.

## ARAMBOLI DEVASWOM.

Arrangements had been made for laying the foundation stone of the proposed new Mandapam sanctioned to be constructed at a cost of about

Rs. 11000 the Villagers contributing Rs. 6000, for the work. Mr. **Agastialingam Pillai,** the chief man amongst them, who has taken of the contract for the work has been taking great interest. Most of the important people of the locality and the surrounding places had come............................ we moved on to the 'Altharai' on the north side of the temple on the bank of the tank. Here the Prathishta of a new Ganapathi Vigraham was performed solely at the expense of the Villagers.

N. B. The estimate has been revised to Rs. 16000.

Extract of latter No. A of 4—3—1103 from the Assistant Devaswom Commissioner, Suchindrum to the Devaswom Commissioner Travancore.

ARAMBOLI DEVASWOM.

There is only an allotment of over Rs. 100 in cash for the Ulsavom in this Devaswom but the public are spending every year an amount of about Rs. 800 from their pocket to enhance the grandeur of the Ulsavam. Large number of worshippers come to the temple every day and they are so enthusiastic over the proper conduct of the ceremonies in the Devaswom that they are contributing another sum of Rs. 1500 per annum towards the enhancement of pathivoo under Nitianidhanam and the grandeur celebration of Attaviseshams in the temple Mr. N. Agastia-lingam Pillai secretary to the Aramboly Thiruppani committee and an ex member of the Srimulam popular Assembly has put in a petition before me to the effect that he is prepared to undertake

the work of putting up a Mukappu Mandapam in front of the Sri Meenakshi Amman shrine on the contribution system.......................................

அடிமை வியாபாரம் இவ்வூரிலும் இருந்தது. கொல்லம் 1030ல் அடிமைத்தனம் திருவாங்கூரில் அறவே இல்லாமலாயிற்று.

பெரும் ஊதியம்:- இவ்வூருக்கு சர்க்காரிலிருந்து தண்ணீர் வசதியளித்தால் (2 லக்ஷம் ரூ. செலவு செய்து மலையில் அணை கட்டினால்) 6000 ஏக்கர் புஞ்செய் நிலங்களையும் நஞ்செய் நிலங்களாக்கிப் பூ தோறும் லக்ஷம் கோட்டை நெல் இந்நாட்டிற்குக் கிடைக்கும். பர்மாவை எதிர்பார்க்கும் கஷ்டத்தில் ஒருபங்கு சர்க்காருக்குக்குறையும். நிலம் திருத்த அதிகச் செலவே இல்லை. பூமி நன்றாய் விளையும். குடிகளுக்கும் சர்க்காருக்கும் பெரும் இலாபம். முதலில் பணச்செலவை பார்க்கலாகாது. இதுமாதிரி வசதியான பூமி திருவாங்கூரில் இல்லை. நெல் கிடையாத்திண்டாட்டம் குறையும். நல்ல உரமும் குழையும் இங்கு கிடைக்கும். சர்க்காரிலிருந்து செலவாக்கின தொகையை 2 ஆண்டுகளில் நிலங்களில் கிஸ்தியாக வசூலிக்கலாம். மேல் பல ஆண்டுகளில் பெரும் வருமானமாகும்.

இவ்வூரில் இருக்கும் துர்க்கையம்மன் கோயில் வெள்ளாளர் சமூகத்தையும், காடிமாடன் கோயில் வணிகர் சமூகத்தையும் சேர்ந்தவைகளாகும். படையாட்சி சமூகத்தார்க்கு தேவசகாயம்பிள்ளையிருந்த இடத்தின் மருங்கிலுள்ள கிருஸ்து தேவாலயம் சொந்தமாம்.

## வாழ்த்து.

வாழ்க ஐயனார் வாழ்க ஆலவாய்
வாழ்க மீன்கணி வாழ்க சுந்தரர்
வாழ்க மக்களும் வாழ்க மன்னவன்
வாழ்க செந்தமிழ் வாழ்க யாருமே.

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 2 | இந்தன | இருந்தன |
| 10 | 7 | கோமறன் | கோமாறன் |
| 13 | 14 | பகைகளை | படைகளை |
| 13 | 16 | இராசஇராச | இராசராச |
| 16 | 10 | வந்து எங்கள் மாபாவிப் படைகளெல்லாம் ஊரைச் சுற்றிவந்து எங்கள்- | மாபாவிப் படைகளெல்லாம் வந்து எங்கள் ஊரைச் சுற்றி |
| 19 | 7 | கோட்டக்கரை | கோட்டைக்கரை |
| 24 | 19 | வீடு | விடு |
| 26 | 4 | பவதி | பகவதி |
| 31 | 19 | கோட்கை் | கோட்டைக் |
| 51 | 29 | என்பொருமை | என்பெருமை |
| 54 | 1 | மெய்கண்ட | மெய்நின்ற |
| 63 | 31 | சார்ந்தாரும் | சார்ந்தாகும் |
| 64 | 27 | காலதநிலும் | காலத்திலிருந்தும் |
| 72 | 21 | பூரதநிலே | பூரநிலே |
| 77 | 1 | அசரர்களை | அசுரர்களை |
| 79 | 1 | வளர்த்தி | வளர்த்து |
| 88 | 7 | மாப்யஸேத் | மப்யஸேத் |
| 122 | 9 | சங்சிதை | சங்கிதை |
| 135 | 16 | மதத்தில் | மலத்தில் |
| 135 | 21 | ஜீவாண்மா | ஜீவான்மா |
| 135 | 23 | நிலையுளை | நிலையுண்டாகிறது |
| 136 | 14 | ஞாைனவடிவமே | ஞானவடிவமே |
| 151 | 24 | சாததான் | சாத்தன் |
| 166 | 12 | மன்னுயர் | மன்னுயிர் |
| 168 | 7 | உருவத்தில்லாவல் | உருவத்திலல்லாமல் |

| | | | |
|---|---|---|---|
| 181 | 15 | பண்டைய | பண்டையி |
| 181 | 15 | உய்ந்தது | உய்ந்தன |
| 195 | 21 | mid whife | mid wife |
| 205 | 10 | and plains | and the plains |
| 206 | 4 | Buddihists | Buddhists |
| 202 | 17 | ரூபாயில்—ரூபாவிதம் | |

குறிப்பு:- கல்வெட்டுகளிலும் ஓலைப்பிரமாணங்களிலும் சில பிழைகள் காணப்படும். உள்ளவாறு எழுதப்பட்டிருக்கின்றன. மாற்றற்க.

## பாடபேதம்.

| பக்கம் | வரி | | |
|---|---|---|---|
| **சமர்ப்பணம்.** | | | |
| | 9 | அமைந்த — ஆளும் | |
| | 10 | எல்லாம் — முழுதும் | |
| 59 | 12 | அத்தந்திரம் — சுஜனு உத்தியோகஸ்தன் என்றும் கூறலாம். | |
| 36 | 21 | இரணஇயர்—இரணயெர் (ஈரணேயோர்) | |
| 192 | 7 | உயர்ந்து—அயர்ந்து (கிழிந்து) | |
| ஷை | 31 | கலவிக்கேற்ற காலமிதென்று—கல்விக்கேற்ற காலமிதென்பர். | |
| 204 | 27 | ஸர். ஸி. பி. இராமசுவாமி அய்யர்—சத்தியிற் சிறந்த சசிவ உத்தமனே. | |
| 127 | 4 | யம்மையே | பிராட்டியே |
| 127 | 15 | மாலையும் | ஆரமும் |
| 207 | 20 | ஆடிவரும் | ஆடினல் |

# இந்நூல் வெளியிட நன்கொடை செய்தவர்கள்.

| நம்பர் | பெயர் | தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | ஆரைவாய்மொழி ஊர்வகை | 100 |
| 2. | பெருமாள்புரம் ஊர்வகை | 100 |
| 3. | ஆரைவாய்மொழி செட்டு ஊர்வகை | 75 |
| 4. | ஆரைவாய்மொழி வணிகர் சமுதாயம் | 21 |
| 5. | ஷை விசுவப்பிரம்ம சமுதாயம் | 7 |
| 6. | உயர்திரு என். அகஸ்தியலிங்கம்பிள்ளையவர்கள் | 25 |
| 7. | ஷை மு. சு. வீ. ஆறுமுகம்பிள்ளையவர்கள் | 25 |
| 8. | ஷை மீ. சண்முகம் பிள்ளையவர்கள் | 20 |
| 9. | ஷை சி. மு. சு. கிருஷ்ணபிள்ளையவர்கள் | 11 |
| 10. | ஷை மு. சு. ஆனையப்பபிள்ளையவர்கள் | 10 |
| 11. | ஷை கெ. திருவடிநாத பிள்ளையவர்கள் | 10 |
| 12. | ஷை நா சங்கரநாராயண பிள்ளை அவர்கள் | 5 |
| 13. | ஷை ஆ.மு.வி.முத்துக்கறுப்பபிள்ளையவர்கள் | 5 |
| 14. | ஷை ஆ. சு. திருவம்பலம்பிள்ளையவர்கள் | 5 |
| 15. | ஷை கெ. இராமகிருஷ்ணனுச்சாரியவர்கள் | 5 |
| 16. | ஷை வி. கோலப்பனுச்சாரியவர்கள் | 3 |
| 17. | ஸ்ரீலஸ்ரீ இக்னேஷியஸ் மரியா சுவாமியவர்கள் (இராசாவூர்) | 10 |
| 18. | உயர் திரு எஸ். ஜெ. டேதியவர்கள், மிஷன் குடியிருப்பு | 10 |
| 19. | ,, பொன்காத்தபெருமாள் நாடார் அவர்கள் | 10 |
| 20. | ,, ரா. செண்பகநாடார் அவர்கள் | 5 |
| 21. | ,, ரா. லெக்ஷ்மணப்பெருமாள்நாடார்அவர்கள் | 5 |
| 22. | ,, பெ. சிவனணஞ்ச பெருமாள் நாடார் அவர்கள் | 5 |
| 23. | ,, ரா. மாறியாடும்பெருமாள்நாடார்அவர்கள் | 5 |
| 24. | ,, வே. பண்டாரம் நாடார் அவர்கள் | 5 |
| 25. | ,, பூ. பொதுவாண்டி நாடார் அவர்கள் | 5 |
| 26. | ,, திரு கு. பல்பனப நாடார் அவர்கள் | 5 |
| 27. | ,, ஆ. சுப்பிரமணிய நாடார் அவர்கள் | 5 |
| 58. | ,, மாடசுவாமி நாடார் அவர்கள் | 5 |
| 29. | ,, வீரசூரப்பெருமாள் நாடார் அவர்கள் | 3 |
| 30. | ,, சே. மு. இப்ராஹிம் சாகிப் அவர்கள் | 5 |
| 31. | ,, ரா. பத்மநாபபிள்ளை அவர்கள் (ஆசிரியர்) | 60 |
| | மொத்தம். | 570 |

எம். எஸ். எம். பிரஸ், நாகர்கோவில்.

## இந்நூலாசிரியர்
## இயற்றிய
## வேறு நூற்கள்.

| | | ரூ. | அ |
|---|---|---|---|
| 1. | சுயோதனன். சிறந்த ஆராய்ச்சி நூல் | 0 | 12 |
| 2. | இந்துமத பாட புஸ்தகம். இந்துமதத்தின் எல்லா விஷயங்களையும் விளக்கிக் காட்டுவது. (மலையாளம்) | 2 | 0 |
| 3. | சொப்பன வாசவ தத்தம். வடமொழியில் பாஸ மகாகவி எழுதியதின் மொழிபெயர்ப்பு. உயர்ந்த நாடக நூல். | (அ | |

M. S. M. Press, Nagercoil.